# வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்



டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed; Ph.D., D.Litt., D.Ed; FUWAI

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வள்ளுவரின்
# விளையாட்டுச் சிந்தனைகள்

மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

**M.A.,M.P.Ed.,Ph.D;D.Litt.,D.Ed.,FUWAI**

**பேராசிரியர்**

**ஒய்.எம்.சி.எ. உடற்கல்விக் கல்லூரி**

**சென்னை-600035**

**ராஜ்மோகன் பதிப்பகம்**

8, போலீஸ் குவார்ட்டர்ஸ்ரோடு

தி.நகர், சென்னை-600 017

தொலைபேசி 442232

தபால் பெட்டி 4955

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | — | VALLUVARIN VILAIYATTU CHINTHANAIGAL |
| Author | — | Dr. S. NAVARAJ CHELLIAH |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | 18-10-1990 |
| Copy Right | — | RAJMOHAN PATHIPPAGAM |
| Paper Used | — | 10.9Kg. White Printing |
| Size | — | 17.5 × 12cm. |
| Type Used | — | 12 Point |
| Pages | — | 300 |
| Printer | — | GRACE PRINTERS<br>27, Subba Reddy Street,<br>West Mambalam,<br>Madras-600 033 |
| Publisher | — | RAJMOHAN PATHIPPAGAM<br>8, Police Quarters Road<br>T.Nagar, Madras-600 017 |


**Price Rs. 30-00**

# முன்னுரை

**வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்** என்று இந்த நூலுக்குப் பெயரிட்டிருக்கிறேன்.

வள்ளுவருக்கும் விளையாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று வியப்பவர்கள் அநேகம். வினா எழுப்புபவர்கள் ஆயிரம். விதண்டாவாதம் செய்து, வெறுத்துப் பேசுவோரும் பல்லாயிரம் இருப்பர்.

எனக்கு இப்படிப்பட்ட நினைவுகளும், நிலைமைகளும், நிர்ப்பந்தங்களும், ஏற்படும் என்று தெரியும். அதனால் தான் சற்று விவரமாக, ஒரு விளக்கத்தை முன்னதாகவே தந்து விட்டால், விருப்பத்தோடு இந்த நூலைப் படிப்பீர்கள் என்று தொடங்குகிறேன்.

வள்ளுவர் என்றதும் ஜடாமுடியோடு, பட்டை தீட்டிய நெற்றியோடு, பூனூல் அணிந்த திறந்த மேனியோடு, நமக்கு முன்னாளில் அறிமுகப்படுத்தினார்கள் ஓவியர்கள்.

இப்போது, அரசே ஒரு திருவுருவத்தைத் தீட்டி, ஓர் அற்புதக் காட்சியை நமக்குக் கொடுத்திருக்கிறது.

வள்ளுவர் என்றால் மதவாதி, சீர்திருத்தச் செம்மல், சிந்தனைச் சிற்பி, தர்மநெறி காட்டிய தகைமையாளர் என்று தான் நமக்குக் கற்பித்திருக்கின்றார்கள்.

மதவாதிகள் அனைவரும், எங்கள் மதக் கருத்துக்களை, பாங்காக வருணித்திருக்கும் விதத்தாலே, **'எங்களவர்'** ஆகி விட்டார் என்று ஏற்றுப் போற்றிக் கொண்டதற்கு, வள்ளுவர் பற்றி வந்திருக்கும் பல்வேறு நூல்களே சாட்சியங்களாகின்றன.

இந்தப் புருவம் நெறிக்கும் சிந்தனைக்கிடையே, புதுக் கரடி ஒன்றை நான் விட்டிருக்கிறேன்.

எப்படியென்றால், வள்ளுவர் கூறிய குறட்பாக்கள் எல்லாம், விளையாட்டுத் துறைக்கான கருத்துக்களே என்பது தான்.

எப்படி இந்த முடிவுக்குவர முடிந்தது ?

வள்ளுவரின் வாழ்க்கை பற்றி, முழுமையான வரலாறு எதுவும் இல்லை. அதனால், எழுத முனைந்த எழுத்தாளர் எல்லோரும், தங்களது இனிய கற்பனைகளை அவரவர் அறிவுக்கேற்ப அவிழ்த்து விட்டு, ஆறுதல் பெற்றுக் கொண்டனர்.

ஆனால், எனக்கு திருவள்ளுவ மாலை தான், ஒரு புதிய வழியைத் திறந்து காட்டியது. அதில் உள்ள இரண்டு வெண் பாக்கள், நன்பாக்களாக எனக்கு வழிகாட்டி, விழி திறக்க வைத்தன.

''தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினால்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வை வைத்தக் கூர்வேல் வழுதி மனமகிழ்த்
தெய்வத் திருவள்ளுவர்.

இது திருவள்ளுவ மாலையில் உள்ள 19வது பாடல் கீரந்தையார் எனும் பெரும் புலவர் பாடியது.

அறனறிந்தேம் ஆன்ற பொருள் தெரிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடுதெளிந்தேம் மான் எறிந்த
வாளார் நெடுமாறன் வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு.

திருவள்ளுவ மாலையில் உள்ள 50வது பாடல், கொடிஞாழன் மாணிபூதனார் என்னும் புலவர் பாடியது.

கூர்வேல் வழுதி எனும் பாண்டியனின் ஆணைப்படி, அவர் மனம் மகிழ, தெய்வத் திருவள்ளுவர், திருக்குறளை எழுதினார் என்றார் கீரந்தையார்.

எப்படிபட்ட திருவள்ளுவர் என்று நமக்கு விளக்கம் தருகிறார் மாணிபூதனார்.

மறன் எறிந்த வாளார், **நெடுமாறன் வள்ளுவனார்** என்கிறார் புலவர். அதாவது வாள் படையைத் தாங்கி சண்டை செய்வதில் வள்ளுவர் வல்லவர். இவர் கருங்கை ஒன் வாள் பெரும் பெயர் வழுதியுடன் போர்க்களம் சென்றும், தாமே தனித்து சென்றும். பலமுறை பகைவர் களுடன் மோதி வெற்றி பெற்றவர்.

வழுதியின் அரசிலே, உள் மந்திரத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவர். உலக அறிவும், உன்னதமான அரசியல் ஞானமும் மிகுந்தவர். தொல்காப்பியத்தையும், மூவாயிரம் எனும் தத்துவ நூலையும் கற்றுத் தேர்ந்த வித்தகர். போரிடுவதில் இணையற்றவர். அவர் பெயர் நெடுமாறன் என்றும் புலவர் பேசுகிறார்.

இப்படி நமக்கு வள்ளுவரை நல்லோவியமாகக் காட்டு கிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட திரு மந்திர நூல். பக்கம் 82-83ல் மேற்காணும் விளக்கம் உள்ளது.

வள்ளுவர் பெரும் வீரர். வாளார் என்ற பெருமை மிக்கவர். வலிமை கொண்டவர். போர்களம் கண்டவர் வென்றவர்,

அதனால் என்ன ? வள்ளுவரின் சிந்தனைகள் எப்படி விளையாட்டுக்குப் பொருந்தும் என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

போரிலிருந்து தான் விளையாட்டுக்கள் மெருகேறி பிறந்திருக்கின்றன என்பது, இன்றைய ஆராய்ச்சியாளர் களின் துணிபு.

போரிலே உள்ள வீரதீர நிகழ்ச்சிகளான குதிரை யேற்றம், யானையேற்றம், குத்துச்சண்டை, மல்யுத்தம், கத்திச் சண்டை, கனமான பொருள் தூக்கி எறிதல். தாண்டுதல், எறிதல், ஓடுதல், போன்றவை எல்லாம் இன்று போட்டியிடும் விளையாட்டுகளாக வந்திருக்கின்றனவே !

போர் நிகழ்ச்சிகளும், விளையாட்டு நிகழ்ச்சிகளும் அமைப்பில், எதிர்பார்ப்பில் ஒன்றாகத்தான் இருக்கின்றன. செயல் முறைகளில் கொஞ்சம் வண்மை, திண்மை என்றாலும், வெற்றி பெறுவது என்பது, தான் முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது.

விளையாட்டுக்களின் நோக்கம் வெற்றி தான். எதிராக இருப்பவர் எதிராளி. (Opponent) எதிரியை அதாவது பகை வரை தோற்கடிக்க திறமை, வல்லமை, யூகம், வியூகம். விவேகம், தந்திரம், தந்திறம் இப்படியெல்லாம் உண்டு.

வள்ளுவர் தமது காமத்துப்பால் பகுதியைத் தவிர, மற்ற இரண்டு அறத்துப்பால், பொருட்பாக்களிலும் சொற் சுவை நிரம்பக் கூறியவை அரசு, அமைச்சு, படை. நட்பு, குடி போன்றவை.

இப்படி எந்தப் பொருளைப் பற்றிப் பேசினாலும், 'வெட்டு ஒன்றாக, துண்டு இரண்டாக' என்பது போல வள்ளுவர் பாடினார்.

இதைச் செய். இப்படிச் செய். தவறு செய்யாதே ! தவறுக்குத் தண்டனை உண்டு. தண்டனையும் இப்படித் தான் இருக்கும் என நறுக்குத்தெறித்தாற் போல, சுருக்க மாக, அதிலும் ரத்தினச் சுருக்கமாக வள்ளுவர் பாடினார். படித்தவர்களை பண்பட வைத்தார்.

விளையாட்டுத் துறையிலே உள்ள நடைமுறை அனைத்துக்கும், வள்ளுவரின் கருத்துக்கள் அத்தனையும் அருமையாகப் பொருந்தி வருகின்றன.

அப்படிப்பட்ட ஆழ்ந்த சிந்தனைகளை அளிக்கும் குறட் பாக்களைத் தொகுத்துக் கொண்டேன் அவை எப்படி விளையாட்டுத் துறைக்கு நெருங்கி வருகின்றன. பொருந்தி வருகின்றன என்று புரிந்து கொண்டேன்.

புரிந்து கொண்ட சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள் என்று பெயரும் தந்தேன்.

ஏறத்தாழ மூன்று ஆண்டு காலமாக **விளையாட்டுக் களஞ்சியம்** மாத இதழில், தொடராக வந்திருக்கிறது. இந்தச் சிந்தனைகள்.

வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தத் தொடர், எழிலான நூலாக உருவம் பெற்றிருக் கிறது.

இந்நூல் உருவாக முயற்சிகளை மேற்கொண்ட திரு. **ஆதாம் சாக்ரட்டிசுக்கும்**, அழகாக அச்சிட்டுத் தந்த கிரேஸ் பிரிண்டர்சுக்கும் என் அன்பார்ந்த நன்றி.

சிந்தனைகளைத் தூண்டும் வகையில், ஒரு புதிய படைப்பை தமிழக மக்களிடம் தந்துள்ளேன்.

புதிய முயற்சி தான்- குறைகள் இருந்தால் எழுதுங்கள். மறுபதிப்பில் மாற்றிக் கொள்கிறேன்.

என்றும் எனது நூல்களை அன்போடு ஆதரித்து வருகிற தமிழ் கூறும் நல்லுலகப் பேரன்பர்கள் அனைவருக்கும், என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

18-10-90

லில்லி பவனம்

சென்னை-17

# பொருளடக்கம்

## முதற் பகுதி


1. கண்டேன் என் கண்கள் குளிர 10
2. வந்தவர் வள்ளுவரா ? 15
3. சிந்து பாடும் சிந்தனைகள் 26
4. தக்கார் தகவிலார் 37
5. மக்களும் மாண்பும் 44
6. விளையாடலும் வினையாடலும் 52
7. வள்ளுவரின் வியப்பு 61
8. புறமும் அகமும் 71
9. வீரமோ வீரம் 80
10. எதற்குப் பிறந்தீர்கள் மக்களே 89
11. எண்ணமும் திண்ணமும் 97
12. ஆடும் ஆடுகளமும் 107
13, வில்லும் வேலும் வாளும் வாழ்வும் 117
14, சான்றோரும் ஆடவரும் 127
15. ஆடுகளமும் ஆடரங்கமும் 136


## இரண்டாம் பகுதி


1. ஒரு சிறு முன்னுரை 149
2. சுருக்கம் 156
3. வாளார் நெடுமாறன் வள்ளுவனார் 157
4. நோயில்லாத உடல் 178
5. வலிமையில்லையேல் திறமையில்லை 190
6. விளையாட்டில் தேர்ச்சிபெற 210
7. திறனற்றோர் இகழப்படுவர் 221
8. முயன்றால் முடியும் 233
9. ஊக்கமே உயர்வு தரும் 245
10. போட்டியும் விளையாட்டும் 255
11, விளையாடும் முன்னறிவு 266
12. வெகுளியும் விளையாட்டும் 272
13. பிறருக்குக் கேடு செய்யாத பெருந்தன்மை 281
14. வாழ்க வளமுடன் 290

# விளையாட்டாக ஒரு சிந்தனை!

**வடமொழிவேதத்தால் சிறப்பு பெறுகிறது.**
**தமிழோ குறளால் சிறப்பு பெறுகிறது.**

என்று மிகவும் பெருமையுடன் பாடியிருக்கிறார், **வண்ணஞ்சரத்தனார்** என்னும் பெரும்புலவர்.

வேதத்தின் வேதமாக, வளமும் நலமும் பரணி பாடும் வாழ்க்கையின் கீதமாக; அறம் பேணும் அன்பின் நாதமாக விளங்கும் குறட்பாக்களைத், தமிழுக்குக் கொடுத்த வள்ளுவர் பற்றி, எழுதாத பேராசிரியர்களே இல்லை. வெளிவராத நூல்களே இல்லை.

என்றாலும், எல்லாவற்றையும் ஏற்றமுறப் பாடிய வள்ளுவர், விளையாட்டுக்கள் பற்றி எதுவுமே சொல்லவில்லையா என்று எண்ணிப் பார்த்தேன்.

என் சிந்தனைக் குரலுக்குப்பதிலாக வந்த குறள்கள் பற்றிய கருத்துக்களே, **வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்** என்ற நூலாக, வடிவம் பெற்றிருக்கிறது.

விளையாட்டுத்துறைத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்கு இந்நூல், ஒரு மைல் கல்லாக அமையும்.

இனி, உங்கள் சிந்தனைகளை விளையாட விடலாம்,

அன்புடன்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா.**

# 1. கண்டேன் என் கண்கள் குளிர

ஆனந்தமான அதிகாலை நேரம்!

இதமான குளிர்காற்று, பதமாக வீசி புத்துணர்ச்சி ஊட்டுகின்ற உற்சாகமான நேரம் அது!

பொதுவாக நான் எழுதிக் கொண்டிருக்கும் நேரம். வள்ளுவரைப் பற்றி எனக்குள்ளே ஆயிர மாயிரம் சிந்தனைகள். அவர் கொடுத்துச் சென்ற குறட்பாக்கள் பற்றிக் குரல்கொடுத்த ஆயிரமாயிரம் அறிஞர்களின் கருத்துக்கள் நெஞ்சில் எக்காளம் இடுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டு காலமாக. அந்த இணையற்றதோர் தெய்வாம்சம் நிறைந்த 1330

குறள்களையும், ஆய்ந்து ஆய்ந்து, எழுதி எழுதி அனுபவித்துச் சென்றிருக்கின்றனர் பலர்.

ஆயிரமாயிரம் புதிய நூல்கள் அவரைவாழ்த்தியும் வணங்கியும், உரை எழுதியும் உணர எழுதியும் பிறந்து, நிறைந்து போயிருக்கின்றன இந்தப் பூவுலகில்.

அவரை சொந்தம் கொண்டாட, சுற்றிச் சுற்றி வந்து சோர்ந்து போன கற்பனை வல்லுநர்கள் கூட்டம் கொஞ்சம் நஞ்சமல்ல,

அவரை சமணர் என்றனர். சிலர் சைவர் என்றனர். வைணவர் என்றனர். கிறித்தவர் என்றனர். அரசர் என்றனர், அறிவிக்கும் தொழிலாற்றும் வள்ளுவர் என்றனர்.

புலால் தொடாத புனிதர் என்றனர். நியாயம் உரைத்த நேரியர் என்றனர். தெரியாததை தெரிந்ததுபோல் உணர்விக்கும் தேவர் என்றனர்.

அவர் சொல்லாததே இந்த உலகில் எதுவுமில்லை என்று அனைவரும் சொல்லிச் சொல்லி, சுகம் கண்டு போய் விட்டனர்.

இந்தக் கருத்துக்களைத் தான் போற்றிக் கொண்டும், என் எண்ணங்கள் ஏற்றுக் கொண்டும், எதிர் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன.

எவ்வளவோ அவர் சொன்னார்! எத்தனையோ சொன்னார்! சுருக்கமாகச்சொன்னார். கொஞ்சம் நறுக்கென்று கொட்டுவது போல நாசூக்காகவும் சொன்னார், என்ற கருத்துக்களைத் தான், என் கவியுள்ளம் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தது.

அரசர், மனிதர், அந்தணர், கயவர், தேவர் என்று மனிதர்களைப் பிரித்து, அவரவருக்கு வேண்டிய அரிய காரியங்களையும், அற்புத கடமைகளையும் தொகுத்துச் சொன்னவர் அவர். ஆயிரமாயிரம் தொழில் முறைகளையெல்லாம் அரசரும் அறிந்து இன்புறும் வண்ணம் அமைத்துத் தந்த அறிவாளர். வாழ்க்கையின் வளமான துணையாக விளங்கிய விளையாட்டுக்களைப்பற்றி. துலங்கிய விளையாட்டுக்களைப் பற்றி அவர் ஒன்றுமே சொல்லாது போனது ஏன் ?

இந்த வினாதான் என் ஆழ்மனத்திலிருந்து பொங்கியெழுந்து, அலைகள் கூட்டமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

பல ஆண்டுகள் உள் மனதில் பல்கிப்பெருகி, பரந்து விரிந்து, விடைகாணத் தெரியாமல் வெட்ட வெளியில் எழுந்து நிற்கும் பெரியஆலமரம்போன்று. எனக்குள்ளே நின்று கொண்டு இருந்தது அந்த நினைவு.

எப்படியும் இன்று இதற்கொரு விடைகண்டாக வேண்டும் என்ற வேகத்துடன், பேனாவையும் பேப்பர்களையும் எடுத்துவைத்துக்கொண்டு எழுத உட்கார்ந்தேன்.

நெஞ்சிலே பரபரப்பு தான் நிறைந்து கிடக்கிறது. நேரடியான பதில் தரும் நினைவுகள் எதுவும் எழவே இல்லை.

கைகளிலும் படபடப்பு. எழுதத் துடிக்கும் சுறு சுறுப்பு எழுகிறது என்றாலும், எதுவும் எண்ணத்தில் இராத பொழுது எப்படி ?

நேரம் ஆக ஆக; மனதை ஒரு நிலைப்படுத்திப் பார்க்க முயல்கிறேன். கண்கள் ஒரு மாதிரியாக மூடிக் கொண்ட மோனநிலை.

வெளியுலகில் என்ன நடக்கிறது என்று தெரியாத ஒரு தூக்க நிலையில், தியான நிலையில், சாய்வு நாற்காலியில் அப்படியே சாய்ந்து கொண்டிருந்தேன்.

எத்தனை நேரம் இப்படி இருந்தேன் என்று எனக்குத் தெரியாது.

'தம்பி' என்ற குரல் கேட்கிறது.

அமைதியான, அன்பு நிரம்பிய இதமான குரல்!

ஏறெடுத்துப் பார்க்கிறேன். ஆகா! என்ன கம்பீரமான தோற்றம்! அழைத்தவரை அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் கண்கள் குளிர, அவரைத் தரிசித்துக் கொண்டிருக்கிறேன். அவரும் அப்படியே நிற்கிறார்.

## 2. வந்தவர் வள்ளுவரா!

எதிரே வந்து நின்ற முதியவரை ஏறெடுத்துப் பார்க்கிறேன். மீண்டும் பார்க்கிறேன்.

வைத்தவிழி வாங்காமல் அவரைப் பார்க்கிறேன். மனதுக்குள்ளே ஒரு பரபரப்பு. குறு குறுப்பு.

வாருங்கள் என்று அழைக்கவும் வாயில்லை! மெய்மறந்து அமர்ந்திருக்கிறேன்.

'நான் வந்து நேரமாயிற்று' என்று அவர் பேசுகிறமொழி, செந்தேனாய் எனது சிந்தையெலாம் பரவுகிறது.

சிலிர்த்துக் கொண்டேன். சிரம் தாழ்த்தி அவரைப் பார்க்கிறேன்.

'மன்னிக்கவும்' என்று தொடங்கியபடி, வர வேண்டும், வரவேண்டும் என்று வரவேற்கிறேன்.

எதிரே இருந்த ஓர் இருக்கையில் அமர்ந்தபடி, என்னைப் பார்க்கிறார்.

'உங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஒரு வேட்கையில் வந்தேன். நீங்கள் இப்படி நிலைக் கல்லாக இருக்கின்றீர்கள், என்கிறார்.

அறிமுகம் இல்லாததால் அயர்ந்து போனேன். இப்பொழுதாவது உங்களை நான் யாரென்று அறிந்து கொள்ள முயலலாமா! என்றேன்.

தடையில்லையே! விடை தர வேண்டிய விவேகம் எனக்கு இருக்கிறது. என்னைப்பற்றி நானே கூறுகிறேன். என்னை வள்ளுவர் என்று அழைப்பார்கள்.

அவர் சொல் அமுதமாக என் செவிகளில் பாய்ந்தோடியது. 'எந்த' என்று எனது கேள்வி தயக்கமாக எழுந்தது; குறள் எழுதிய கவிஞன் என்று கூறிக்கொண்டார்.

கைகுவித்தபடி அவரது கண்களைக் கூர்ந்து நோக்குகிறேன். காந்தக் கண்கள், கவர்ச்சிக் கண்கள், கற்றுத்துறைபோகிய கமலக்கண்கள், பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று யாரையும் தூண்டுகிற பழுத்த முகம்.

'உங்களை வரவேற்பதில் மகிழ்கிறேன்' என்னுடன் நீங்கள் இருப்பதை என் பெரும் பேறாகக் கருதுகிறேன். என்னையும் ஒருபொருட் டாகக் கருதி வந்தது, என் வாழ்வின் பெரும்பயன் என்று பேசுவதைப் பார்த்து, என்னை நோக்கிக் கையமர்த்துகிறார்.

'நமக்குள் உள்ள தமிழ் உறவு, தமிழ் நெஞ்சம், என்னை இங்கே இழுத்து வந்திருக்கிறது. நமக் குள்ளே பேசி மகிழ்வோம் என்கிறார் அவர்.

'உங்களைப்பற்றி நிறைய அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். சில வினாக் களை' என்று தொடங்கினேன்.

தேவையில்லை. யார் என்ன முயன்றாலும் யாருக்கும் என்னைப்பற்றிய ஐயங்கள் தீர்ந்து போகப்போவதில்லை. என்னுடைய பிறப்பிடம் தமிழகம்தான். என்னுடைய சாதி பற்றிய எந்த சிந்தனையும் வேண்டாம். நான் சொன்ன சேதி, சொல்லிவைத்த நீதி இவற்றை நீங்கள் தெரிந்து கொண்டால் போதும். மதம் (வெறி) பிடித்து ஆட்டுகின்ற எந்த மதத்திற்கும் நான் அகப்பட வில்லை. எனது மதம் (கொள்கை), என் தமிழினத்தின் தலையாய பெருமைகள் தாம் என்றார்.

ரத்தினச்சுருக்கமான பேச்சு. பித்தனையும் பேரறிஞராக ஆக்குகிற முத்தான அறிமுகம்.

நானும் ஆமாம் என்றேன். வேறு என்ன சொல்ல.

'ஏதோ எழுதிக்கொண்டிருந்தீர்கள். இடையிலே வந்துவிட்டேன். இடையூறு நடந்து விட்டதோ' என்று மீண்டும் அவர் பேசினார்.

உங்களைப் பற்றித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். எழுதிக்கொண்டிருந்தேன் என்றேன்.

இன்னுமா என்னைப்பற்றி எழுதுகிறீர்கள்? மற்றவர்கள் எதையாவது எழுதலாம். ஆனால் நீங்கள் விளையாட்டுத்துறைபற்றி எழுதுகிறவர் என்று கேள்விப்பட்டல்லவா சந்திக்க வந்தேன். நீங்களோ....

ஆமாம் அய்யா... உங்களைப்பற்றி நான் எழுதிய ஒரு முன்னுரையைப் படிக்கிறேன். உங்கள் வினாவுக்கு, அது விடையாக இருக்கும். ஆனால் அந்த அளவுக்குப் பொறுமை. உங்களுக்குப் பொறுமை இருக்குமோ என்றுதான்.

தம்பி... அப்படி அழைக்கலாமா...

தலையசைத்துக்கொண்டேன். இதை விட வேறு மகிழ்ச்சியுண்டா...!

நீங்கள் படிக்கலாம் என்றார். நிமிர்ந்து அமர்ந்து கொண்டேன். எழுதி வைத்திருந்த எனது முன்னுரையைப் படிக்கத் தொடங்கினேன்.

'உலகப்பெரும் புலவர்களில் ஒருவர் என்று மதிக்கப்படும் பெருமை பெற்றவர் வள்ளுவர். புலவர்களில் திலகம் என்று போற்றப்படும் பேறு பெற்றவர். 'இவரைப்போல் வேறு எவரும் இலர்' என்று எல்லோராலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

வள்ளுவருக்குத்தான் எத்தனை பெயர்கள்! எந்தப் புலவருக்கும் இப்படிப்பட்ட புகழ்ப் பெயர்கள் உண்டா? இல்லையே! 'தேவர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், முதற் பாவலர், பெரு நாவலர், மாதாநுபங்கி, செந்நாப் போதார், நாயனார், நான்முகனார், புலவர் என்றெல்லாம் புலமை நிறைந்த பெருமக்களால், விதந்து வள்ளுவர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு அடிகளால் எழுதப்பட்டதால், குறள் என்று இவர் அழைத்த நூலுக்கு, திரு என்ற அடைமொழி சேர்ந்துவிட்டது. தெய்வத் தன்மையுடைய திருத்தலங்கள், தெய்வங்களுக்கு முன்னே சேர்க்கப்படும் 'திரு' என்பது இந்தக் குறளுக்கும் முதலாவதாக அமைந்துபோனது, இவர் எழுதிய குறளின் மகிமைபற்றி தெள்ளத்தெளியும். தெரியும். தெளிவாகப் புரியும்.

தான் சொல்ல நினைத்த செய்திகளை, வள்ளுவர் சுவையாகச் சொன்னார். சுருக்கமாகச் சொன்னார். சிந்தையென்னும் சிம்மாசனத்திலே

மக்கள் விரைந்தோடிச் சென்று, அமர்ந்து அரசாளும் ஆற்றல் ஊட்டுவது போலக் கூறினார்.

சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய தாக மட்டுமன்றி, வாழ்க்கைக்கும் இனியதாகக்கூறி வழிநடத்திட உதவியதால் தான், அவரை **'வான் புகழ் வள்ளுவர்'** என்று வாழ்த்தினார்கள்.

வடமொழியோ வேதத்தால் சிறப்புப் பெறு கிறது. தமிழ்மொழியோ குறளால் சிறப்புப் பெறு கிறது என்றனர் வல்லுநரும் வல்லோரும். ஏன் அப்படி ஏற்றிப் புகழ்ந்தனர்?

அவரைப் பார்த்தேன். அமைதியாகத் தலை அசைத்துக் கொண்டார்.

இந்த 1330 அருங்குறள் பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின், போய் ஒருத்தர் வாய்கேட்க நூல் உளவோ' என்று பாடுகிறார் நந்தத்தனார் எனும் புலவர்.

இந்த நூலை ஏற்றமுறக் கற்றுவிட்டால், மன்னு தமிழ்ப்புலவராய் மகிமையுடன் வீற்றிருக்க லாம்! ஏனெனில், திருக்குறள் ஓதற்கரிது, உணர் தற்கு அரிது, வேதப்பொருள் மிக விளங்கி உள்ளுந் தொறும் உள்ளம் உருக்கும்' என்று பாடிப்பரவச மடைகிறார் மாங்குடி மருதனார்.

இடைக்காடர் என்ற புலவர், வள்ளுவர் குறளைப் போற்றும் விதமே வியப்பினில் ஆழ்த்து கிறது.

**கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.**

அருந்தமிழ்ப் பாட்டி ஔவையேோ அவரையும் மிஞ்சிப் பாராட்டிவிட்டார். அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள். கண்ணால் காணமுடியாத ஒரு அணுவுக்குள்ளே ஏழு கடலை அடக்கிவிட்டதுபோல, மிக நுட்பமாக வாழ்க்கை வழிமுறைகளை வகுத்துத் தொகுத்துக் காட்டிவிட்டார் வள்ளுவர், என்று பாடிய பாட்டியின் வாக்கு உண்மை தான்.

திருக்குறளுக்கு மணக்குடவர், பரிமேல் அழகர், பருதி, காளிங்கர், பரிப்பெருமாள் போன்று பத்து பேராசிரியர்களுக்கு மேல் உரையெழுதி விட்டுப் போய்விட்டனர். தொடர்ந்து இப்பொழுதும் ஆயிர கணக்கான அறிஞர்கள் உரை எழுதிக்கொண்டு, அதனால் உயர்ந்தவர்களாக வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

**"உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப**
**வள்ளுவர் வாய்மொழி மாட்டு"**

என்று செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார் என்னும் புலவர் பாடியிருப்பது உண்மையிலும் உண்மையன்றோ!

அவர் எந்த நேரத்தில் இப்படிப் பாடினாரோ, அது எல்லா காலத்துக்கும் நன்கு பொருந்துகின்ற பேருண்மையாகவே திகழ்கிறது.

திருக்குறளை தான் ஒரு நோக்கத்துடன் தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தால், அவர் எண்ணுகின்ற, எதிர்பார்க்கின்ற எல்லா கருத்துக்களும் வெளிப்படும் என்று செங்கண்ணனார் செப்பிய உண்மையோ, உண்மையிலும் உண்மை.

வள்ளுவரது குறட்பாக்களை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள் சிலர், தங்களது வட்டத்திற்குள்ளே அவரை வளைத்துப்போட முனைந்தனர். வாதாடினர். போராடினர். பொறுமையின்றி, புழுதிவாரி இறைத்துப் போனவரும் உண்டு.

வள்ளுவரை சிலர் ஜைனமதத்தினர் என்றனர். சிலர் வைணவர் என்றனர். வேறு சிலர் புத்த சமயத்தினர் என்றனர். இவர் சைவரன்றி வேறல்லர் என்று பலர் சாதித்தனர். இவர் கிறித்தவர் தான் என்று கேட்பாரும் மயங்கும்படி சிலர் கோடிட்டுக் காட்டினர்.

இப்படிப்பட்ட குறிப்புகளும், கருத்துக்களும், கூறியவர்களின் தவறில்லை. அவர்களது ஆராய்ச்சிக்கு, திருக்குறள் தந்த நுண்புலக் கருத்துக்கள் தான்.

கபிலர்பெருமான் கூறியதுபோல, புல்நுனியில் உள்ள சிறு நீர்த்துளியானது, பக்கத்திலே உள்ள

நீண்டுயர்ந்த பனைமரத்தைத் தன்னுள்ளே அடக்கி காட்டும் தகைமை போலவே, திருக்குறள் அமைந் திருக்கிறது என்று இதன் சிறப்பை எடுத்துரைக் கிறார்.

இவ்வாறு, வேதத்தையும் விரித்துக்காட்டும் பண்புள்ள குறள்களை, **'வையத்துக்குத் துணை'** என்று வாழ்த்தினார் மதுரைத்தமிழ் நாகனார் என்னும் புலவர்.

எண்ணியவர்களுக்கேற்ப எண்ணங்களை மணற்கேணிபோல் மேலும் ஊறச்செய்து இறைத் தெடுத்துக் கொள்ளும் நுண்மை பெற்ற குறள்களில் **'எல்லாம் இருக்கிறது. இதில் இல்லாதது எதுவும் இல்லை'** என்றே எல்லோரும் பாடினர். என்றும் வாடாத புகழ்மாலை சூடினர்.

**'வள்ளுவரும் தங்குறள் வெண்பாவடியால் வைத்து**
**உள்ளுவ எல்லாம் அளந்தார் ஓர்ந்து'**

என்று பரணர் என்னும் பெரும்புலவர் பாடியபடி தான், ஆராய்ச்சி முடிவுகள் பல வெளிப்பட்டிருக் கின்றன.

இந்த வையத்து மக்கள் மனதில் நினைப்பதை யெல்லாம் தாமே சிந்தித்துத் தம் குறள் அடிகளால் எழுதி அளந்து கூறிவிட்டார்.

திருக்குறளை ஆராய்ந்து ஆராய்ந்து, இது ஒரு நீதி நூல்? இது ஒரு காதல் நூல்; இது ஒரு

இலக்கிய நூல் என்றெல்லாம் கூறினார்கள் பல ஆராய்ச்சியாளர்கள்.

திருக்குறளிலே ஆடை அணிகள்; திருக்குறளிலே இயற்கை என்றெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து, நூல்கள் பல எழுதித்தள்ளினர் பல பேராசிரியர்கள்.

இந்த நூலிலே எல்லாம் இருக்கிறது. வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாக் கருத்துக்களும் வகையுடன் வளமாகக் கூறப்பட்டிருக்கின்றன என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து, எதுவுமே இல்லைதான்.

ஆனால் விளையாட்டுத் துறைக்கென்று இலக்கிய நூல்களை எழுதிக் கொண்டிருக்கும் எனக்கு ஓர் ஐயம்.

வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாமே குறளில், குறிக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு வாழ்க்கை நூல் என்றால், இதில் ஏன் விளையாட்டுக்கள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெறவில்லை?

இந்த ஒரு வினா, நான் தமிழில் நூல்கள் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே புடைத்தெழுந்துகொண்டு, எனக்குள் புதைந்தும், மறைந்தும் எழுந்தும் என் மனதிற்குள்ளே சதிராடிக் கொண்டு கிடந்தது.

விளையாட்டு என்பது வாழ்க்கையின் பிரதி பலிப்பல்லவா? அப்படியென்றால், விளையாட்டைப்பற்றி ஏன் அவர் ஒரு வார்த்தை கூட அதில் இல்லை என்று படித்துக் கொண்டே போனேன்.

இப்படிப் படிக்கும் பொழுதே அடிக்கடி அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டேன். அவரும் சலனம் எதுவும் காட்டாமல், சிரித்துக் கொண்டிருந்தார்.

நீங்கள் எழுதிய கருத்துக்களை சுவைத்துக் கேட்டேன். எல்லோரும் புகழ வேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை. எனக்குள் எழுந்த கருத்துக்கள், எல்லோர்க்கும் உதவட்டும் என்ற எழுச்சியுடன் எழுதினேன். ஏற்றுக் கொண்டும் என்னைப் போற்றிக் கொண்டும், பின்பற்றிய தமிழ் கூறும் உலகத்தார் அனைவர்க்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன் என்றார் வள்ளுவர்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருந்தோம்.

# 3. சிந்து பாடும் சிந்தனைகள்

நான் வந்தபோது நீங்கள், ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தீர்களே! அதைப்பற்றி நான் அறிந்து கொள்ளலாமா! என்று வள்ளுவர் எங்களிடையே நிலவிய அமைதியைக் கலைத்தார்.

நீங்கள் எழுதிய நிலையான களஞ்சியமாக விளங்கும் திருக்குறளைப் பற்றி, ஒரு குறிப்பைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். அதை உங்களிடம் உரைத்தால், எனக்கு விளக்கம் கிடைத்துவிடும் என்று நம்புகிறேன் என்ற எனது பதிலைக் கூறினேன்.

சொல்லலாம் என்றார் அவர்.

''அறம்விரும்புவோர்க்கு இது பேர் அறநூல்.
அரசியல் விரும்புவார்க்கு இது அரசியல் நூல்.

**ஞானம் விரும்புவார்க்கு இது ஞான நூல்.**
**கவிச்சுவை விரும்புவார்க்கு இது காவியம்.**
**காமக்கலை விரும்புவார்க்கு இது காம நூல்.**
**பேரின்பம் விரும்புவார்க்கு இது பேரின்ப ஆழி.**
**வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற இது ஒரு வாழ்க்கை நூல்''**

இப்படியெல்லாம் எழுதிச் சென்ற எங்கள் கவிஞர்களின் கருத்துக்களைப் படித்த பிறகு, எனக்குள் எழுந்த கேள்வி இது தான். என்னைப் போன்ற விளையாட்டை விரும்புவார்க்கு இது என்ன நூல் ? எங்கள் கேள்விகளுக்குரிய விடைகள் எங்கே இருக்கின்றன ?

வள்ளுவரின் புன்முறுவல் கீற்றோடியது. உங்கள் சிந்தனை சரிதான். விளையாட்டைப் பற்றி எதுவும் விளக்கமாக இல்லை என்பது தானே உங்கள் ஐயம். அவற்றை நான் வெளிப்படையாகக் கூறவில்லை என்பது உண்மைதான். ஆனால் நான் கூறாமல் விட வில்லையே ? என்றார் வள்ளுவர்.

எப்படி ? எப்படி? என்று என்னையறியாமல், என் குரல் மேலெழுந்த ஒலியில் வெளி வந்தது. வியப்பிலும் வியப்பான விடை அல்லவா அவர் தந்தது.

நீங்கள் விரும்புகிற விளையாட்டின் முக்கிய நோக்கம் என்ன என்று நான் தெரிந்து கொண்டால், உங்கள் ஐயத்தைப் போக்கிவிட முடியும்.

விளையாட்டின் நோக்கமானது, மக்களை முழு மனிதர்களாக உருவாக்குவது என்றேன் நான்.

முழு மனிதர்கள் என்றால், இன்னும் கொஞ்சம் தெளிவு வேண்டும் என்றார் வள்ளுவர்.

உடலால், மனதால், ஆன்மாவால் உயர்ந்து, சிறந்து விளங்கும் தன்மையுடையவர்களையே, முழு மனிதர்கள் என்று அழைக்கிறோம் என்று சிறிய விளக்கம் தந்தேன்.

விளையாட்டைப் பற்றி நான் கூறாமல் விட வில்லையே என்று நான் கூறினேன் அல்லவா? நாட்டில், சமுதாயத்தில் முழு மனிதர்களை உரு வாக்கும் ஒப்பற்ற வழிகளைத்தானே நானும் குறளாகக் கொடுத்திருக்கிறேன்.

நீங்கள் சற்று உன்னிப்பாகப் பாக்களைப் படித்தால் தெரியும். மனிதர்களின் மாண்புக்காகத் தானே பாடல்களை யாத்திருக்கிறேன். எங்கள் காலத்து வாழ்க்கை நிலையை, நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். எங்களுக்கு வாழ்க் கையே விளையாட்டாக இருந்தது. விளையாட்டே வாழ்க்கையாக இருந்தது.

அது என்ன வாழ்க்கை தெரியுமா? அரச வாழ்க்கை. அரசியல் வாழ்க்கை. அன்றாட செயல்களைத் திறம்பட நடத்தும் ஆற்றல் மிகு வாழ்க்கை.

ஈன்று புறந்தருதல் அன்னையின் கடன். சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன். வேல் வடித்துத் தருதல் கொல்லர்க்குக் கடன். நன்னடை நல்குதல் வேந்தர்க்குக் கடன். இப்படியாக சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் கடமை என்று இருந்தது. அதில் வீர வாழ்வுதான் விதந்து விளங்கிடும் பரிதியாகத் தெரிந்தது.

உங்களுக்குத்தான் ஆதிகால வாழ்க்கை வரலாறு தெரியுமே! அந்த வாழ்க்கையில், விளையாட்டு எப்படி இருந்தது என்று எனக்குக் கொஞ்சம் விளக்குங்களேன். அதன் பிறகு, நான் என் கருத்தைக் கூறுகிறேன் என்று நிறுத்தினார் வள்ளுவர்.

நான் எனது ஆய்வை அவர்க்கு உரைக்கலானேன்.

**''மக்கள் தாமே ஆறறிவுயிரே**
**மாவும் மாக்களும் ஐயறிவினரே''**

என்று சொல்கிறார் தொல்காப்பியர்.

ஆறறிவு உடையவர்கள் மக்கள். ஐந்தறிவுடையவர்கள் மாக்களும் மிருகங்களும். அறிவுத் தெளியாதவர்கள் மாக்கள்.

ஆதிகாலத்தில் மக்கள் என்பவர்கள், மாக்களாக மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்த போது, வாழ்க்கை என்பது போராட்டமாக

இருந்தது. அவர்கள் மிருகங்களின் பசிக்கு விருந் தான காலம் அது.

அல்லலும் அனுபவங்களும். அவர்களுக்கு ஆற்றலை அளித்தபோது, ஆவசேத்துடன் வந்த மிருகங்களுக்கு அஞ்சாமல், எதிர்த்தார்கள். சண்டையிட்டார்கள். கொன்றார்கள். அவற்றின் தசைகளை உண்டார்கள். அப்படியாக அவர்கள் மிருகங்களை ஆளத்தலைப்படுகிற அதிக ஆற்றல் மிக்கவர்களாக வாழ்ந்து சென்றார்கள்.

மரப்பொந்துகளும், புதர்களும். குகைகளும் அவர்களுக்கு ஒதுங்கும் இடமாக, உறங்கும் வீடாக இருந்த நிலை மாறியது. ஆடையின்றி அலைந்த அவலம் நீங்கியது, ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து இருக்க, வீடுகள் அமைத்துக் கொண்டு வாழக் கற்றுக் கொண்டார்கள். தாங்கள் தப்பித்துக் கொண்டு பிழைத்த தந்திரங்களைக் கற்றுத் தந்தனர். திறமைகளை வளர்த்து விட்டனர்.

அதாவது தப்பி ஓடுகிற, தாண்டிக் குதிக் கிற, மரம் ஏறிப் பிழைக்கிற, கல்லெறிந்து அடிக் கிற, நீந்திச் சென்று மறைகிற போன்ற திறமை களையெல்லாம் பெரியவர்கள் தங்களிடம் வளர்த் துக் கொண்டனர். தங்கள் குழந்தைகளுக்கும் கற்றுத் தந்தனர். அவர்களுக்குரிய வாழ்க்கையோ விளையாட்டுத் திறமைகளை வாயார வாழ்த்தி வரவேற்கும் காலமாக இருந்தது.

ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து தங்கியவர்கள், பல இனமாக பிரிந்து வாழத் தொடங்கினர். ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு தலைவன். அவன்வழி மக்கள். இப்படியே ஆங்காங்கே இடம் அமைத்து, எல்லை வகுத்துக் கொண்டு, கூட்டங் கூட்டமாக வாழத் தொடங்கிய மக்களுக்கு, விளையாட்டுப் பயிற்சிகள் வலிமைகளை வளர்த்துத் தந்தன.

பாதுகாப்புக்காக ஒன்று சேர்ந்த மக்கள், மிகுந்த பத்திரமாக இருக்க, மற்ற கூட்டத்தில் உள்ளவர்களை ஆக்ரமிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அடுத்தவர்களை அழிக்க முயன்றார்கள்.

தடுத்தவர்களைத் தாக்கினார்கள். தாக்குவதற்காகப் புதுப்புது ஆயுதங்களை படைத்தார்கள். அவர்கள் அறிவுக்குக் கூர்மையான ஆயுதங்கள் கைகொடுத்தன. உடல் வல்லமையை வளர்த்துக்கொள்ள உழைப்பு உதவியது. ஆகவே, கூட்டத்துக்குக் கூட்டம் போர்கள். மக்கள் ஆண்மையாளர்களாக மாறினர். சாதாரண மக்கள் வீட்டில் இருந்தால் குடிமக்கள். போராயுதங்களைக் கையிலேந்தி விட்டால் வீரர்கள்.

கூட்டமாக இருந்த பிரிவு, விரிந்து கொண்டது. பரந்த எல்லையை அமைத்துக் கொண்டது. சாதாரண நிலையில் இருந்த ஒரு கூட்டத்தின் தலைவன், தெய்வத்திற்குரிய சிறந்த பெருமையைப் பெற்றுக்கொண்டான். அவன் வாழும் இடம்

கோயிலாக மாறியது. மக்கள் உடல், மன்னன் உயிர் என்ற மாண்பு வழி, உயிர் பெற்றது.

தலைவன் அரசனாகிவிட்டான். அரசு புரியும் பூமி நாடாகிவிட்டது. அரசன் வழியே மக்கள் வழி. அதுவே வாழும்வழி என்று ஆயிற்று.

இப்படியாக என்று நான் பேசிக்கொண் டிருக்கும் பொழுது கையசைத்தார் வள்ளுவர். அவர் கண்களில் குறும்பான பார்வை ஒன்று பரபரத்து நின்றது. மெதுவாகப் புன்னகைத்தார்.

நீங்கள் கூறிய காலகட்டம்தான் நான் வாழ்ந்த காலம். அந்தக்காலம் தமிழர்களின் நற்காலமாக, பொற்காலமாகத் திகழ்ந்த நாகரிகக் காலம்.

பேசுகிற மொழியில் செழுமை. செய்கிற செயல்களில் முழுமை. மக்கள் உடலெங்கும் வளமை. மண்ணை மாதாவாகப் போற்றிய பெருமை. முகிழ்த்து விளையாடிய திறமை.

இப்படிப்பட்டக் காலக் கட்டத்தில்தான், என் வாழ்வும் இடம் பெற்றிருந்தது. மலர்தலை உலகம் மன்னரைச் சார்ந்தே பெருமை பெற்றது. மக்கள் மன்னருக்காகத் தங்கள் வாழ்வையே தரத் தயாரா யிருந்தனர். தங்கள் நாட்டைக்காக்க, அன்னியர் களுடன் போரிடும் வண்ணம், தங்கள் உடலைத் தயார் செய்திருந்தனர். போரிடுகிற வாய்ப்புக்

காகப் பெருமையுடன் காத்திருந்தனர். புகழுடம்பு தான் அவர்கள் பொன்னான நோக்கமாக இருந்தது.

நீங்கள் படித்திருக்கலாமே! அரசர், அமைச்சர், சேனைத் தலைவர், தூதுவர் என்றெல்லாம் பல அதிகாரங்களாக, நான் பாடியவை யாவும், போர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டுதான்.

வாழ்க்கை வளமாக இருந்தது. மக்களிடம் வளமான உடல் அமைந்திருந்தது. தினவெடுத்தத் தோள்கள் தாய் நாட்டு மேன்மைக்காக, தீரச் செயல்கள் ஆற்றும் வகையில் திளைத்துக் கிடந்தன. உள்ளமும் புகழுக்காக உயர்ந்து செழித் திருந்தது.

இப்பொழுது கூறுங்கள் நான் விளை யாட்டைப் பற்றி ஏன் பாடவில்லையென்று புரிந்திருக்குமே என்றார். ஆமாம் ்ன்றேன்.

முதலில் நான் மக்களையே மிகுதியாக நினைத்துப் பார்த்தேன். எந்தப் பொருளைப்பற்றி நான் பாடினாலும், மற்றவர்களுக்கு எளிதாகப் புரியும் வண்ணம், அமைய வேண்டும் என்பதில் நான் அதிகக் கவனம் செலுத்தினேன்.

அதாவது ஒரு கருத்து பற்றிக் கூறும்போது, அதன் இயல்பு, அதைப்பற்றிய விளக்கம், அதன்

முதன்மை, அதன் முறைமை, அதன் ஆற்றல், செயல், வகை, நயம் பயன் அதற்குமேல் நமது கடமை என்று பத்துப் பிரிவாகப் பிரித்துக்கொண்டு கூறினேன்.

பத்து நிலை என்ற எனது பற்று நிலை தான், மக்களைப் பற்றி அதிகம் சிந்திக்கத் தூண்டியது.

மக்களையெல்லாம் சான்றோர்கள் ஆக்க வேண்டும் என்ற மேலான நோக்கத்திற்காகவே குறளை நான் எழுதினேன். எக்காலத்திலும் தேறாத மக்கள் பலர் இருந்தனர். அதனால் நான் இப்படிப் பாடினேன்.

**மக்களே போலவர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாங்கண்ட தில் (1071)**

உடல் வடிவத்தால் மக்களைப் போலவே காட்சியளிப்பார்கள் கயவர்கள். மனிதர்களைப் போலவே காட்சியளிக்கின்ற கயவர்கள் அவர் களைப்போல நான் எங்கும் கண்டதில்லை.

மக்களில் இழிந்த குணம் உடையவர்களை கயவர்கள் என்றேன். இன்னும் சிலரை நான் மரம் என்றே கூறினேன். அதாவது உள்ளத்திலே ஊக்கம் இல்லாத மக்களை மரம் என்றேன்.

**உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அதில்லார்**
**மரமக்கள் ஆதலே வேறு (600)**

மரம் போன்ற மக்களும் உண்டு என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவே நான் முயன்றேன் என்றார்.

அந்த மக்களை மக்கள் என்று அழைக்காமல், குடி என்று நீங்கள் அழைத்துப் பாடியிருக்கின்றீர்கள். குடி என்றால் குடிமக்கள் என்பதான உங்கள் காலத்துப் பொருள், இன்று எப்படி மாறிப் போய் இருக்கிறது தெரியுமா என்றேன்!

எப்படி மாறிப் போயிற்று?

குடி என்றீர்கள். உங்கள் வாக்கை, தெய்வ வாக்காக எங்காலத்து மக்கள் ஏற்றுக் கொண்டு, குடிக்கும் மக்களாக ஆகிவிட்டார்கள். குடி உயரக் கோன் உயரும் என்றீர்கள் நீங்கள். குடி உயர உயர, எங்கள் அரசுக்கும் அதிக வருமானம் வரத் தொடங்கி, அரசே உயர்ந்து விட்டது.

குடிக்காத மக்களை, படிக்காத மக்கள் போல இழிவுபடுத்தப்படுகிற ஒரு சமுதாய நிலையே இன்று இந்த நாட்டில் உண்டாகிவிட்டது என்றேன்.

அப்படியா அந்தச் சொல்லுக்குப் பொருள் இருந்தது?

ஆமாம். நீங்கள் குடி என்று ஒரு முறை கூறியிருந்தால் மக்கள் மறந்திருப்பார்கள். நீங்களோ 27 முறை கூறியிருக்கின்றீர்கள். ஆகவே

அந்தக் குடி சரிதான் என்று எண்ணி, மனதுக்கு நல்ல சமாதானமாக அமைத்துக் கொண்டு, குடிப் பழக்கத்தில் குடி கொண்டு விட்டார்கள் என்றேன்.

என் சொல்லுக்கு இப்படி ஒரு நிலையா? நான் சான்றோர் என்று கூறியிருக்கிறேனே! அதை அவர்கள் அறியவில்லையா? என்று சங்கடப்பட்டார் வள்ளுவர்.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்** (69)

இப்படிப் பாடியதற்கு என்ன பொருள் என்று அவர்களுக்கு விளங்கவில்லையா என்று பெரு மூச்சுடன் கூறியதைப் புரிந்து கொண்டு, அவர் முகத்தையே பார்த்தேன். அதற்கு அவர் விளக்கம் அளிக்கத் தயாராக இருந்தார். சான்றோன் என்றால் என்ன என்று என் மனதுக்குள் பல நினைவுகள் தோன்றி அலைபாய்ந்தன.

# 4. தக்கார் தகவிலார்

ஒரு தாய், தன் மகனை சான்றோன் எனப் பலரும் புகழ்வதைக் கேட்கும் பொழுது, பெரு மகிழ்ச்சி அடைகிறாள். அப்படியென்றால், என்ன பொருள்?

வள்ளுவர் இவ்வாறு வினவியபடி, என் முகத்தைப் பார்த்தார், சான்றோன் என்றால், அறிவுள்ளவன், அறிஞன் என்பது பொருளாகும் என்றபடி, அவரைப் பார்த்தேன்.

அப்படித் தான் பலரும் கருதுகின்றனர். ஆனால், நான் கூறிய சான்றோன் எனும் சொல்லுக்கு, வேறு பல நிலையும் உண்டு.

அறிவு மட்டும் ஒருவருக்குப் போதாது. அறிவுடன் அடக்கமும், ஒழுக்கமும், பண்பு நலன், குணநலன் போன்ற அனைத்தும் ஒரு சேர இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மக்களையே சான்றோன் என்று சாற்றினேன்.

சான்றோனுக்கு மற்றொரு பெயர் என்ன தெரியுமா? தக்கார் என்பதாகும். அதற்கு முன் ஒரு குறிப்பைக் கூறுகிறேன்.

ஒரு நாட்டுக்குத் தேவை இன்னென்ன என்று ஒரு பட்டியலையே போட்டு, ஒரு குறளை எழுதி யிருந்தேன். அதை நீங்கள் படித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

**பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்**
**அணி யென்ப நாட்டிற்குஇவ் வைந்து. (738)**

ஒரு நாட்டிற்கு அழகு பிணியில்லாத மக்கள், குறைவடையாத விளைச்சல்; நிறைவான செல்வம்; மிகுந்து வருகிற இன்பம்; திகழ்ந்து வருகிற பாதுகாப்பு.

காய்த்த மரத்தில்தான் கல்லெறி விழும் என்பார்களே! அதுபோல, ஒரு நாட்டின் ஒப்பற்ற சிறப்பைக் கண்டு, மற்றவர்கள் நாடி வருவதால் தான் அதற்கு நாடு என்று பெயர் வரலாயிற்று.

ஒரு நாட்டிற்கு அழகும் பெருமையும் விளைச்சலும், செல்வமும் மட்டுமல்ல. அதை அனுபவிக்கின்ற, ஆட்சி செய்கின்ற, அறிவும் ஆண்மையும் உள்ள மக்கள் தாம். அதனால் தான் பிணியின்மை என்று பெருமையேற்றிக் கூறினேன்.

உடல் அழகும், மன அழகும், பண்பழகும் அன்பழகும் மிகுந்த மக்கள், பிணியில்லாத இனிய நிலையில் வாழ்வதைத் தான் தக்க நிலை என்றேன். அவர்களையே தக்கார் என்றும் அழைத்தேன்.

ஒரு நாட்டு மக்களை நான் இந்த முறையில் தான், இரண்டு பிரிவாகப் பிரித்துக் காட்டினேன். எப்படி? இந்தக் குறளைப் படியுங்கள்.

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்** (114)

இவர்கள் நாட்டுக்குத் தகுந்தவர்கள், தகுதி யில்லாதவர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகிறேன். அவர்கள் ஏன் அப்படி இருக்க வேண்டும்.

தந்தையும் தாயும் வலிமையுள்ளவர்களாக, வளம் சார்ந்த பண்புள்ளவர்களாக இருந்தால் தான், அவர்கள் தோற்றுவிக்கும் குழந்தைச் செல்வங்களும் செழுமையுடன் விளங்கும். தக்கா ராக இருந்தால் தானே, தக்கதான குழந்தைகள்

பிறக்கும்? நோயாளிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் 'நோஞ்சான்களாகத் தானே' இருக்க முடியும்.

அவ்வாறு உடல் ஊனத்தோடும் உயிர்ப் பிண்டத்தோடும்பிறக்கும் குழந்தைகளை, வாளால் வெட்டி வீழ்த்தி எறிவது தமிழர் மரபாக இருந்து வந்தது என்றார் வள்ளுவர்.

நமது தமிழ் மண்ணின் இந்த இனிய வாழ்க்கையை நீங்கள் இலக்கியமாக்கியிருக்கிறீர்கள். கிரேக்க மக்களோ நல்ல சரித்திரமாக்கி வைத்துச் சென்றிருக்கின்றார்கள் என்றேன் நான்.

கிரேக்கர்கள் என்றால், என்று கேட்ட வள்ளுவரின் இருபுருவங்களும், சற்று மேலேறி இறங்கி வந்தன.

தமிழர்களைப் போலவே, தக்கார்களை வளர்த்து வந்த நாடு அது. ஆனால், வரலாறு எழுதும் வழக்கமுள்ள அவர்கள், தாங்கள் வாழ்ந்ததை எல்லாம் பூமியில் பெரும் பெயர் பெற்றுக் கொள்ளச் செய்து விட்டனர். தமிழர்களின் வாழ்க்கை சிறப்புக்களெல்லாம், எழுதி வைக்காத காரணத்தால், தண்ணீர்மேல் எழுத்தாக மறைந்து போயின.

கிரேக்கர்கள் அப்படி என்ன தான் செய்தார்கள் என்று மீண்டும் அதே கேள்வியை எழுப்பினார்.

கிரேக்க நாட்டிலே, ஒவ்வொரு குடும்பத்தில் குழந்தை பிறந்ததும், அந்த நாட்டு அதிகாரிகள் தாம், முதலில் வீட்டுக்கு வருகை தருவார்கள். குறையுடலுடனோ அல்லது நோய் கொண்டோ குழந்தை பிறந்திருந்தால், அதைக் கொண்டு போய், மலை மீதில் வீசியெறியச் செய்து விடுவார்கள். அங்கே அந்தக் குழந்தை அழுதழுதுச் சாகும்.

நாட்டுக்கு நல்ல குடி மக்கள் தான் வேண்டும் என்ற இலட்சியத்தில், அவர்கள் மிகவும் குறியோடு இருந்தார்கள் என்றேன். அதனால் தான் ஒரு நாட்டுக்குத் தக்கார் வேண்டும் என்று பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன் என்றார் வள்ளுவர்.

இந்தக் குறளில். தக்காருக்குத் தகுந்த இடத்தையே அளித்திருக்கிறேன் பாருங்கள் என்று பாடிக் காட்டினார்.

**தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலார்**
**செல்வரும் சேர்வதும் நாடு (731)**

ஒரு நாட்டின் பெருமைக்குரியது வேளாண்மையும் விளைச்சலும். தக்க உடலும் மனமும் உள்ள தக்கார்கள் என்கிற குறையாத செல்வம் உடைய செல்வந்தர்கள்.

விளையும் செல்வமும், புரளும் செல்வமும், நாட்டுக்கு இரு கண்கள் போல. அவற்றை அனுபவிக்கும் அருமை தெரிந்தவர்களான **தக்கரர்கள்** நாட்டுக்கு முகம் போல.

தக்கார்கள்தாம், நாட்டுக்குத் தேவையானவர் கள். அப்படி உள்ளவர்களால் தான் நாடு வாழ் கிறது. நாடும் வீடும் பெருமையும் புகழும் பெற்று மேலோங்குகிறது. அதனால்தான் விளைச்சலை ஒரு கரையாக்கி, செல்வத்தை மறுபுறம் வைத்து, நட்ட நடுவிலே தக்காரை வைத்தேன்.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு (212)**

வேளாண்மை என்றால் இங்கே உதவி என்று பொருள். தொழிலால் மற்றும் நல்ல செயல்களால் ஈட்டிய பொருள்களை யெல்லாம், தக்காரிடத்தில் தந்து உதவவேண்டும். அது தான் உண்மையான வாழ்க்கை. உத்தமமான வாழ்க்கை என்றெல்லாம் கூறினேன் என்றார்.

அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவரது விழி களில் வீசிய ஒளிவெள்ளம், அன்றைய தமிழர்களின் அறிவியல் ஆண்மையில் பெற்ற பெருமிதத்தை. ஒளி பரப்பிக்கொண்டிருந்தது.

தக்கார்கள் தாம் எல்லோரையும் ஆண்டிருக் கின்றார்கள். அவர்களைச் சுற்றியே வாழ்க்கை முறை, சுற்றிச் சுழன்று ஓடிக் கொண்டிருந்தது.

மனதாலும் உடலாலும் வலிமையுடன் தக்கா ராக வாழ்ந்தவர்கள் எல்லோரும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற விரிந்த பண்போடு, திறந்த இதயத்தோடு வாழ்ந்தார்கள். அப்படி உலக நடை

தெரிந்து வாழாத உதவாக்கரை மக்களை, நீங்கள் செத்த பிணம் என்று கூடக் கூறியிருக்கிறீர்கள் என்று ஒரு குறளை நானும் பாடிக் காட்டினேன்.

**ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும் (214)**

வலிமையே வாழ்வு. பலஹீனம் பிணம் என்று கூறிய இந்நாளைய விவேகானந்தர் பற்றியும் அவரிடம் விரிவாகக் கூறினேன்.

நீங்கள் கூறிய முழு மனிதர் என்பதற்கும் நான் கூறிய தக்கார் என்பதற்கும் ஒற்றுமை இருக்கிறதல்லவா என்று கூறி சிரித்தார்,

ஆமாம் என்றேன் வியப்போடு

இந்த மக்களைப் பற்றிக் கூறிய என் கருத்துக்களை, இன்னும் கூறுகிறேன் என்றார். சரி என்றேன். அதுவே மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

## 5. மக்களும் மாண்பும்

வள்ளுவரிடமிருந்து வார்த்தைகள், வளமான அருவியின் அழகான துள்ளலாக வீழ்ந்து கொண்டே இருந்தன. நானும் கேட்டுக் கேட்டு வியந்தவாறு அமர்ந்திருந்தேன்.

உடலால், மனதால், பண்பால், செயலால் உயர்ந்த முழு மனிதர்களையே நான் தக்கார் என்றேன். அத்தகைய தன்மைகளும் தகுதிகளும் இல்லாதவர்களை நான் தகவிலார் என்றேன். இப்படியாக நான் மக்களை பலவாறு, பலப்பட, பல் வேறு விதமாகப் பிரித்துப் பாடியிருக்கிறேன். படித் தீர்களா என்றார்.

உங்கள் நூலை அதனால் தான். வாழ்க்கை நூல் என்று கூறுகிறார்களோ என்றேன்.

மெதுவாக சிரித்துக் கொண்டார்.

மக்கள் யாவரும் முழு மனிதர்களாக, மதிக்கப் பெறும் மாண்புள்ளவர்களாக வாழ வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், அவர்களது வாழ்க்கைச் சூழல்கள், வாழ்க்கை முறைகளையே மாற்றி அமைத்துவிட்டிருக்கின்றன.

பெய்யும் மழைத்துளிகள் விழுகின்ற இடத்திற்கு ஏற்ப மாறிக் கொள்வது போல, பிறந்த இடத்திற்கேற்ப மனிதர்களும் மாறிக் கொண்டு விடுகிறார்கள் என்பதைத் தான், நான் பல பாடல்கள் மூலமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறேன்.

மாந்தர் எல்லோரும் பிறப்பால் ஒத்தவர்கள் தாம். அவர்களுள், மக்கள் செய்வதற்கு அரியவற்றைச் செய்து சாதிக்கும் ஆற்றல் மிக்கவர்களை **பெரியர்** என்றேன். எளியவற்றைக் கூட செய்கிற திறன் இல்லாமல், அரியவற்றைச் செய்ய மாட்டாதவரை **சிறியர்** என்றேன்.

ஆகவே, பொதுவாக, ஆற்றலற்ற மக்களை சிறியர் என்றே குறித்துத் தந்திருக்கிறேன்.

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார். (26)**

எல்லா மக்களும் உருவத்தால் ஒன்று போல் தோன்றுவார்கள். அவர்களது செயல்பாடுகளை, செழும் பண்பாடுகளை வைத்து, நாம் பிரித்துப் பார்க்கலாம்.

நன்மை தீமைகளைப் பற்றி நெஞ்சில் ஏந்தி, கவலை கொண்டு நன்மைகளைக் காத்து, தீமையை அணுகாது தூரமாக நிற்கிறவர்களைப் **பண்பாளர் கள்** என்றேன். பாவத்திற்கு அஞ்சாத பாவிகளைக் **கயவர்கள்** என்றேன்.

**நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர். (1072)**

கற்றவர், கல்லாதவர் என்று மக்களைப் பகுத்துப் பார்த்தேன். அதை இந்தக் குறட்பாக் களில் கூறியிருக்கிறேன் இப்படி.

**தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார். (399)**

இன்பம் தானே வாழ்க்கையின் இலக்கு. அத்தகைய இன்பம் சொற்சுவையால் ஊறும். பொருட்சுவையால் சேரும். சிறப்புத் தகுதியால் மிகுதியாகும். புகழால் பெருகும். அறம் செய்யும் போது, பொருள் ஈட்டும்போது, அதனைத் தந்து பெற்ற உலகினர் இன்பம் பெறும்போது, இன்பம் பெருகுகிறது. அத்தகைய இன்பத்தைக் கல்வி அளிக்கிறது என்பதை அறிந்து, கல்வியின்பால் காதல் கொண்டு, கற்றுத்துறை போகின்ற மாந்தரை எல்லாம் கற்றவர் என்றேன்.

கல்லாதவர்களை நான், பயனற்ற புழுதி மண் என்று வெறுத்துப் பாடினேன். அவர்கள் உலகத்தில் வாழ்கின்றனர் என்பதைத்தவிர, யாருக்கும் பயன்

படாதவர்கள் என்ற உண்மையை உலகறியக் கூறவே, அவர்களை **களர் நிலம்** என்றேன்.

எப்படிப் பேணினும், களர் நிலத்தில் எதுவும் விளையாதது போல, கல்லாதவர்களால் எந்தப் பயனும் விளையாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

**உளரென்று மாத்திரைய ரல்லாற் பயவாக்**
**களரனையர் கல்லாதவர். (406)**

அறிவு உடையவர்களை **உடையார்** என்றேன். அது இல்லாத மக்களை **கடையர்** என்றேன்.

**உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லாதவர். (395)**

நல்லறிவும் சொல்வன்மையும் உடைய மாந்தரை **ஒளியார்** என்றேன். புல்லறிவினரை, அதாவது அறிவில்லாத மாந்தரை **வெளியார்** என்றேன். அவர்கள் வீட்டின் வெளிப்புறத்தே நிற்கும் வீதி மக்கள் என்ற பொருள்படக் கூறினேன்.

**ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணங் கொளல். (714)**

அறிவும் ஊக்கமும் உள்ள மக்களை **உரமக்கள்** என்றேன். அத்தகைய அரும்பண்பு இல்லாதவர்களை **மரமக்கள்** என்று இனம் காட்டினேன்.

**உரமொருவற்குள்ள வெறுக்கை அஃதில்லார்**
**மரமக்கள் ஆதலே வேறு. (600)**

முயற்சி இல்லாது, வாளாவிருந்து வாழ்பவர்கள் வறுமையை அடைகின்றார்கள். அப்படிப்பட்டவர்களை வறிஞர் என்றேன், அவர்களை இரப்பர் என்றும் பாடினேன்.

சிறந்த மக்களை நான் திருவுடையார் என்று சிறப்பித்தேன். உரவோர், நோற்பார், சான்றோர், ஆழ்வார், செல்வர், என்றேல்லாம் புகழ்ந்து பாடியிருக்கிறேன்.

இவ்வளவு பெருமையுடன் வாழ வேண்டிய மக்கள் பலர், பண்புகளுக்கு எதிர்ப்பாளர்களாக, இழி குணம் கொண்டவர்களாக, பண்பற்றவர்களாக, பாவிகளாக, பாழ்மதி உடையவர்களாக, வாழ்கின்றார்களே என்ற வருத்தம் எனக்குள்ளே ஏராளமாக இருந்தது.

அத்தகைய மக்கள், ஒழுக்கம் குன்றியவர்கள். உயர்ந்த குணநலம் குறைந்தவர்கள் என்பதால், அவர்களை நான் இழிந்த பிறப்பினர் என்றேன். அவர்கள் மனித குலத்திற்கு மாறாத எதிரிகள் என்ற பெயரில் பாடினேன். அப்படி பாடியபோது, வந்து விழுந்த சொற்களைக் கவனியுங்கள். செற்றார், *(313)* செருநர், *(759)* தெவ்வர், *(639, 671)* நிரந்தவர் *(821)*, மாற்றலர் *(985)*, புலைவினைஞர் *(329)* மக்கள் பதடி *(196)* இவர்களை

நான் பூரியர் (இழிந்தவர்) என்றும் சாடினேன். மனம் வாடினேன்.

மக்களை இப்படிப் பிரித்து, இனம் காட்டி யிருக்கின்றீர்கள். இருந்தாலும், மக்கள் குலம் மாற வில்லையே என்றேன்.

ஒளி என்றால் இருள் இருக்கிறது. மேடு என்றால் பள்ளம் இருக்கிறது. செல்வம் என்றால் இல்லாமை இருக்கிறது. இந்த உலகம் ஏறும் மாறும் நிறைந்தது, வீறும் கூரும் நிறைந்தது. அதனால், நாம் அதற்காக வருந்த வேண்டியதில்லை. திருந்த முயற்சிப்பது தான் தெளிந்த அறிவு. அதுவே மனிதர்களின் ஆறாவது அறிவு என்றார்.

தரம் தாழ்ந்து போகின்ற மக்களைப்பார்த்து, தாண்டிக் குதிக்கும் கோபம் தவிர்த்து, அவர்களும் நன்னெறி வரவேண்டும் என்று விரும்புகிற அவரது நல்ல நெஞ்சத்தை வியந்து பாராட்டினேன்,

நான் வாழ்ந்த காலத்தை, வேகமான காலம் என்று எண்ணியதுண்டு. இப்பொழுது உள்ள உலகமோ, இன்னும் கடுமையான வேகத்தில் அல்லவா ஓடிக் கொண்டிருக்கிறது என்று கூறிய வள்ளுவர், ஆழ்ந்த சிந்தனையுடன் வான் வெளி யைப் பார்த்தார்.

அவர் விழி போகும் நோக்கிலே, நானும் பார்க்கத் தொடங்கினேன். என்னைப் பார்த்து சிரித்தபடி அவர், மீண்டும் பேசத் தொடங்கினார்.

இயற்கைக்கு என்றும் சீரான இயக்கம் உண்டு. செப்பமான நடைமுறை உண்டு. மாறாத வழக்கம் உண்டு. அவற்றில் இதமான வேகம் உண்டு. அதனால்தான் அவைகள் அறிவுடையோரால், அற்புதமாகப் பாராட்டப்படுகின்றன.

நீர், நெருப்பு, காற்று, ஒலி, ஒளி எல்லாம் நீங்கள் அறிந்தது தானே. அவற்றின் வேகத்தைப் பாருங்கள்.

நீராக இருந்து வெள்ளமாகிப் போகிற புனலின் வேகம். அந்த வேகத்தை மிஞ்சுகிறது நெருப்பின் வேகம். நெருப்பின் வேகத்தைவிட, காற்றின் வேகம் கடுமை. காற்றின் வேகத்தைவிட ஒலியின் வேகம் அதிகம். ஒலியை விட, உள்ளத்தில் தோன்றும் நினைவுகள் வேகம், ஈடற்றது, இணையற்றது.

நெஞ்சின் நினைவை விட உயிரின் வேகம் பெரிது என்பர் பெரியோர்கள்.

அவ்வளவு ஆற்றல் வாய்ந்த அறிவு பெற்ற மனிதர்கள், அருமையாக வாழ வேண்டும் என்பது தான் என் நோக்கம். அப்படி வழி காட்டும் இயற்கையான உண்மைகளைக் கொண்டே, உலகைப் பார்த்தேன். குறளை யாத்தேன்.

நான் விளையாட்டு பற்றியல்லவா உங்களைக் கேட்டேன். நீங்கள் மக்களைப் பற்றிப் பேசினீர்கள் என்று நான் இடைமறித்தேன்.

இதுவரை தரமான மக்களைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள். அதற்குப் பிறகு தானே அவர்கள் செய்த செயல்கள் பற்றியும் ஆடிய விளை யாட்டைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடியும்.

அதற்கு முன் உங்களை ஒன்று கேட்கிறேன். செயல் என்றால் என்ன? வினை என்றால் என்ன? என்று கேட்டுவிட்டு, பதிலுக்காக வள்ளுவர் என்னைப் பார்த்தார். பதிலுக்கு நான் அவர் முகத்தைப் பார்த்தேன். அவர் பார்வையில் புதிரும் பரிகாசமும் இழையோடியது. அப்படியே பார்வைகள் தொடர்ந்தன.

# 6. விளையாடலும் வினையாடலும்

செயல் என்றால் என்ன? வினை என்றால் என்ன? என்று ஒரு வினாவை என்மீது வீசி எறிந்து விட்டு, புன்சிரிப்பில் மிதந்த வள்ளுவரை, ஏக்கத்தோடு பார்த்தேன். என் இயலாமையைப் புரிந்து கொண்ட அவர், தானே பதில் தருவதற்குத் தயாரானார்.

நன்மையோ அல்லது தீமையோ விளையும்படி ஒருவர் செய்கிற காரியத்திற்கு **செயல்** என்று பெயர். அந்தச் செயலானது பின்னொரு காலம் வரையில் முற்றி வளர்ந்து, பயன் கொடுக்கத் தொடங்கினால், அப்போது அந்தச் செயலுக்கு **வினை** என்று பெயர் வந்து விடுகிறது.

அதனால் தான் நல்வினை, தீவினை, ஊழ்வினை என்றெல்லாம் பாகு படுத்திப் பேசுகின்றார்கள்.

வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான், என்ற பழமொழி கூட இதனை ஒட்டித்தான் வந்திருக்கும் என்று நினைக்கிறேன் என்று நான் கூறிய கருத்தை. 'ஆமாம்' என்பது போல தலையசைத்து ஆமோதித்தார்.

இந்த நேரத்தில் இன்னொரு பழமொழி ஒன்றும் எனது நினைவுக்கு வருகிறது. அதற்கும் நீங்கள் விளக்கம்தர வேண்டுகிறேன் என்றேன்.

'விளையாட்டும் வினையாகும்' என்ற பழமொழி ஒன்று இருக்கிறது. அதை பலர் பலவாறு விரித்தும் திரித்தும் கூறுகின்றார்கள். அந்த ஒரு மொழியை வைத்துக் கொண்டு, எம் காலத்து மக்கள், விளையாட்டுக்களை வேண்டாத ஒன்றாக விலக்கி வைக்கவும் செய்கின்றார்கள். அதுபற்றி உங்கள் எண்ணத்தை வெளியிட வேண்டும். என்றேன்!

நீங்களே அந்தப் பழமொழிக்கு ஏற்பட்ட விளக்கத்தைக் கூறுங்கள். பிறகு நான் பதில் அளிக்கிறேன் என்றார்.

வினை என்ற சொல்லை எல்லோரும் இப்போது வம்பு, தொல்லை என்றே பொருள் கொண்டிருக்கின்றார்கள். விளையாட்டுக்குப் போனால் வம்பு வந்து விடும். வீண் விவகாரம்

ஏற்படும். பல விதமான இன்னல்கள் ஏற்பட ஏதுவாக இருப்பதால், விளையாட்டுப் பக்கமே போகக் கூடாது என்று பலர் குழந்தைகளைத் தடுத்து விடுகின்றார்கள்.

பிறகு என்றார் வள்ளுவர்.

**வினை** என்ற சொல்லுக்குத் **தொழில்** என்று ஒரு பொருள் உண்டு. இதை சங்க காலத்து மக்கள் சிந்தைமேற் கொண்டு செயல்பட்டார்கள் என்றேன்.

அது எப்படி உங்களால் கூற முடிகிறது என்றார்.

சங்க காலத்தில் புலவர்கள் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் விளையாட்டைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும் என்பது அவர்களின் பெயர்கள் மூலமாகவே அறிந்து கொள்ள முடிகிறது. **கடுவன் இளமள்ளனார், கடுவன் மள்ளனார், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்,** என நான்கு பெயர்கள், சங்க காலப் புலவர்கள் வரிசையில் இடம் பெற்றிருக்கின்றன.

இவர்கள் மள்ளர் கலையைக் கற்பிக்கும் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வறிஞர்கள் கூறியிருக்கின்றனர். (ஆதாரம் :- டாக்டர் அ. பிச்சை எழுதிய தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள் என்ற நூல்.)

தமிழகத்தில் அந்நாளில் மல்யுத்தம் அதாவது ஒருவரோடு ஒருவர் கட்டிப் பிடித்துச் செய்கிற கடும் யுத்தம் அதிகமாக இடம் பெற்றிருந்ததாக வரலாறு மூலம் அறிய முடிகிறது என்றேன்.

வள்ளுவர் அதற்குரிய விளக்கம் சொல்வதற்கு ஆயத்தமானார்.

நான் எழுதிய 133 அதிகாரங்களிலே, நான்கு அதிகாரங்களுக்கு வினை எனும் சொல் வருவது போல தலைப்புகள் தந்திருக்கிறேன்.

1. தெரிந்து வினையாடல் (52)

2. வினைத் தூய்மை (66)

3. வினைத் திட்பம் (67)

4. வினை செயல் வகை (68)

வினை எனும் சொல்லுக்கு செய்யும் செயலானது பின்னாளில் பெருகி, பயன் கொடுக்க வரும் நிலை என்று நான் முன்னரே விளக்கினேன்.

அவற்றிலே ஒரு குறிப்பிருக்கிறது. அதையும் கூறுகிறேன். தெரிந்து வினையாடல் என்றேன் வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல் வகை என்றேன்.

தெரிந்து செயல்படுதல் என்றது: எந்த செயலி லும் தூய்மையும், திண்மையும் இருக்க வேண்டும். அதற்கேற்ப செயல்படும் முறைகளும் இருந்தாக வேண்டும் என்றும் பாடினேன்.

**வினைத்தூய்மை** என்றது செய்யும் செயலில் பாவமும் பழியும் இல்லாமல் இருக்க வேண்டும். **வினைத்திட்பம்** என்றது செய்யும் செயலில் மனத் திண்மை நிறைந்திருக்க வேண்டும். **வினை செயல் வகை** என்றது பல்வேறு முறை உள்ளது என்றேன்.

நான் கூறிய வினையாடல் என்ற சொல்லும், நீங்கள் கூறுகிற விளையாடல் என்ற சொல்லும் எவ்வாறு ஒன்றி வருகிறது என்பதைப் பாருங்கள்.

வினையாடல் என்பது செயல்படுதல், செம்மை யாகச் செய்தல் அது போலவே, விளையாடல் என்பது விளைந்த, கனிந்த செயல் திண்மைகள் என்றும் பொருள் தருகிறது.

தொல்காப்பியர் அவர்களும் உலகில் இன்பம் தரத்தக்கவற்றில் தலையாயது நான்கு என்றும், அவை இன்பம், புலனே, புணர்வு, விளையாட்டு, என்று கூறியிருக்கிறார்.

விளையாட்டு மனித குலத்துடன் பிறந்து வளர்ந்து வந்த இன்பமான செயல் முறைகள் என்பதை எல்லா காலத்திலும் வாழ்ந்த மக்கள்

உணர்ந்து, அவரவர்கள் அவரவருக் கேற்ற ஆசைப் பெருக்குடன், ஆடி மகிழ்ந்து விட்டுப் போயிருக் கின்றார்கள்.

நான் வாழ்ந்த காலத்தில், விளையாட்டு என்பது தனியான ஒரு செயலாக இல்லாமற் போனது. என் காலத்து வாழ்க்கை முறைகளால், எங்கள் குழந்தைகள் தாம் விளையாடி மகிழ்ந்தனர். ஆனால், வயது வந்த மக்களோ, வீர விளை யாட்டுக்களில் தான், அதிகக் கவனம் செலுத்தி னார்கள்.

திண்மையான உடம்பை வைத்துக் கொள் வதும், காப்பாற்றிக் கொள்வதும் உண்மையான வாழ்க்கை என்றே நம்பினர்.

எங்கள் வாழ்க்கை, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை. அதனால் வீர வாழ்க்கையாகவே விளங்கி வந்தது. எம் காலத்து மக்களுக்குப் **புகழும் வீரமும்** இரண்டு கண்களாக விளங்கின.

எந்நாளும் வாழ்க்கையை போராட்டம் என்று கருதாமல், பிறருடன் புரிகிற போர் ஆட்டமாகவே அவர்கள் கருதித், தங்களைத் தயார் செய்து கொண்டனர்.

பெற்றோர்களின் கடமை பலமுள்ள மக்களைப் பெற்றுத் தருவது. கொல்லர்களின்

கடமை வேல் வடித்துத் தருவது. வேந்தருக்குச் கடமை நன்னடை நல்குவது.

வேந்தர்களின் நிழலிலே வாழ்ந்த மக்கள் வேந்தர்களின் விருப்பத்திற்கேற்ப, வீரமக்களாகவே வாழத் தலைப்பட்டனர். அதனால், அவர்கள் போர் மறவர்களாகவே திகழ்ந்தனர்.

உறுதி வாய்ந்த உரமான உடல்; உலக வாழ்வை உண்மையாக வாழ்கின்ற வளம் தரும் ஒழுக்கம் வாய்ந்த உள்ளம்; தாய் நாட்டுக்காகத் தங்கள் உயிரையும் தர முனைகின்ற நாட்டுப்பற்று நிறைந்த வேகம்.

இப்படித்தான் எங்கள் மக்களின் வாழ்க்கை, போர் வாழ்க்கையாக இருந்து வந்தது.

''தம்மை ஆள்கின்ற வேந்தன், தமக்கு நிறைய உதவிகளைச் செய்து காத்தவன். அத்தகைய, ஆண்டகையான அரசன், கண்ணீரோடு கலங்கும் வகையில், போரிலே வீர மரணம் அடைவதே பெரும் பேறு'' என்று எங்கால மக்கள் எண்ணினர். அப்படிப்பட்ட அரிய நிலையை, இறந்தாவது பெற வேண்டும் என்ற எழுச்சியுடனே மக்கள் போரில் ஈடு பட்டனர்.

**புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பிற் சாக்காடு**
**இரந்து கோட்டக்க துடைத்து (780)**

எப்பொழுதும் போர் மேகமே சூழ்ந்திருந்த காலங்களில், பொழுதுபோக்குக்காக, விளையாட்டு எனும் தனிப்பட்ட ஒரு செயலில் இறங்க நேரமின்றி, அந்த மக்கள் போரையே விளையாட்டாகக் கருதினர். அப்படியே வாழ்ந்தனர்.

அவ்வாறு அவர்கள் விளையாட்டில் ஈடு பட்டாலும், அதுவும் வீர விளையாட்டாகவே விளங்கி வந்திருக்கின்றன.

இத்தகைய ஏற்றமிகு நம்பிக்கையுடன் வாழ்ந்த மக்களின் பொழுது போக்காக விளங்கிய பல நிகழ்ச்சிகள் இருந்தன. யானையுடன் யானையை மோதவிட்டுப் போர் புரிய வைத்து, வேடிக்கை பார்த்ததும் ஒன்று. அதில் அவர்களுக்கு அச்சம் இருந்ததால், மரங்களில் ஏறியும், குன்றின் மேல் ஏறி நின்று கொண்டும் கண்டு மகிழ்ந்தனர் என்று ஒரு குறளைக் கொடுத்திருக்கிறேன்.

"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற்றன்
கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை" (858)

இனி ஒரு செய்தியை உங்களுக்கு உணர்த்தியாக வேண்டும். எம் காலத்து மக்கள், போரிடும்போது, கைக்கொண்ட ஒரு சில போராயுதங்களைக் கூறுகிறேன்.

போரிலே அதிகமாகப் பயன்பட்டவை வேல், வில், அம்பு, யானையேற்றம். குதிரையேற்றம்,

கனமான பொருட்களைத் தூக்கி யெறிதல், போன்ற நிகழ்ச்சிகள்.

நீங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றி மிக விரிவாகப் பேசியும் எழுதியும் வருகிறீர்கள். உங்கள் சொல் விளக்கம், எனக்குப் புரிய வைக்க முடியாது. அதனால், நான் நேரில் பல நிகழ்ச்சி களைப் பார்த்தால், என்னால் புரிந்து கொள்ள முடியும். அவை பற்றிய என் கருத்தையும் தெரி விக்க இயலும் என்றார் வள்ளுவர்.

நீங்கள் கூறுவது மிகவும் நியாயமே. இந்தக் காலத்து மக்களுக்கே பல விளையாட்டுக்கள் பற்றி தெரியவில்லை. விளையாட்டின் அடிப்படை விளக்கமே புரியாத போது, விளையாட்டுக்களைப் பார்க்காத நீங்கள் எப்படி விளங்கிக் கொள்வீர்கள்.

இப்பொழுதே நாம் வெளியே செல்கிறோம். பல விளையாட்டுக்களைப் பார்க்கிறோம். அதன் பிறகு, உங்கள் கருத்துக்களைக் கூறலாம் என்றேன்.

புதிய தமிழகமாகத் தோன்றுகிற இந்த மண்ணுலகம், ஒரு மாயா உலகமாகவே இருக்கிறது என்றபடி, புறப்படத் தயாரானார். அவருடன் சேர்ந்து செல்வதைப் பெருமையாகக் கருதி, ஒரு விளையாட்டுப் போட்டியைக் காட்ட பரபரப்புடன் நானும் புறப்பட்டேன்.

## 7. வள்ளுவரின் வியப்பு

வள்ளுவரின் விழிகளில் வியப்பின் சிகரம் தெரிந்தது. வழி நெடுக, விரைவாக நடந்த மக்களைக் கண்டு, மகிழ்ந்து போனார். நெகிழ்ந்து போனார்.

கூட்டங் கூட்டமாக மக்கள் என்றார். மக்கள் தொகைப் பெருக்கம், இவ்வளவு நெருக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்றேன்.

பிறப்பிக்கும் தொழிலில் மக்கள் மிகுந்த விருப்பினராக இருக்கின்றனர். சில சிறப்பான செயல்கள் ஆற்றி, சரித்திரத்தில் இடம் பிடிக்க வேண்டும் என்ற சிறு ஆசைகூட, சிந்தனைக்குள்ளே அவர்களுக்குள் எழவில்லை. உணவும், உடையும் உல்லாசமும் உள்ளதே வாழ்க்கை என்ற உணர்வு தான், இக்காலத்து நாகரிக வாழ்க்கையாக உள்ளது என்று கூறிக் கொண்டே நடந்தேன்.

நாகரிகம் என்ற சொல்லை நான் பயன் படுத்தியுள்ள பாடலை உங்களுக்கு நினைவுபடுத்து கிறேன். **நாகரிகம்** என்ற சொல்லுக்கு **கண்ணோட்டம்** என்று பொருள். கண்ணோட்டம் என்பது கண் களால் கண்டு, காண்பவரிடத்து கருணையுடன் பழகுதல் என்பதாக நாம் அறிய வேண்டும்.

இப்பொழுது நாகரிகம் என்றால், புறச்செயல் களாகத்தானே படுகிறது! உணவு, உடை, உல்லாசம் என்கிறீர்கள்! வெளியுலக வாழ்க்கை யிலே மக்கள் வீழ்ந்து கிடக்கின்றார்கள் என்பது தான் எனக்குப் புலனாகின்றது என்றார்.

**செயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டுபவர் (580)**

தம்மொடு பழகினவர், தமக்கு நஞ்சு கூட்டி இடக்கண்டும், கண் மறுக்க மாட்டாமையால், அதனை உண்டு பின்னும் அவரோடு மேவி அமைந் திருப்பர் என்பது இப்பாடலின் பொருளாகும்.

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று தமிழரின் உணவு உடை பற்றிய பழமொழியை நான் நினைவு கூர்ந்தேன்.

தமிழறிந்த புலவர்கள், அத்தகைய உடை கூட இல்லாமல், 'கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி', குளிரின்

குறுகுறுத்த பாடல் ஒன்றையும் வள்ளுவரிடம் கூறினேன்.

ஆமாம்! மக்கள் ஆடை அணிகிற விதத்தில், முற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழகம் அதேதான் என்றாலும், முற்றிலும் தமிழ் பேசுகிற மக்கள் இங்கே இப்பொழுது வாழவில்லை. அந்நிய நாட்டு மொழி, உடை, உணவு முறை, பண்பாடு மற்றும் ஆட்களின் நோக்கம் போன்ற தாக்கங்கள், தமிழகத்தை நிறையவே தாக்கித் தீர்த்திருக்கின்றன என்றேன்.

புரிகிறது. இங்கே மேனியைப் போர்த்தி விடுகிற ஆடைகள் இல்லை. மேனியை ஆங்காங்கே காட்டி மினுக்கிச் செல்கிற நிலைமைகளும் எனக்கு நன்றாகவே புரிகிறது. என்னால் ஆண் பெண் பேதத்தைக் கூட அறிய முடியவில்லை என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

இந்த காலத்து மனிதர்களாகிய எங்களுக்கே வித்தியாசம் புரியவில்லை. உங்களுக்கு கொஞ்சம் கடினமாகவே இருக்கும் என்றேன். உடை என்பது மானம் காக்கவே என்பது எங்கள் காலப் பண்பாக, பழக்கமாக இருந்தது. உடு என்றால் உடுத்தல். கை என்றால் ஒழுக்கம். ஒழுங்கானதை உடுத்துதலே உடை என்று ஆயிற்று.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு (788)**

சான்றோர்கள் கூடிய அவையிடத்தில் ஆடை குலைந்து போகிற போது, அவசரமாகச் சென்று கை உதவி, மானம் காப்பது போல என்று நான் பாடினேன்.

ஆடை குலைவது கூட அவமானம் என்ற நிலை மாறிப் போய், ஆடை கலைவதே நாகரிகம் ஆயிற்று என்று நான் இடையிட்டுக் கூறினேன். மெதுவாக சிரித்துக் கொண்டார்.

உடையில் மட்டும் மாற்றமில்லை. உணவு முறையிலும் நிறைய மாற்றம் நேர்ந்திருக்கிறது என்று கூறிக்கொண்டே வருகிறபோது, ஒரு சிறு கூட்டம் சுறுசுறுப்புடன் இயங்குவதை இருவரும் பார்த்தோம்.

தெரு ஓரத்தில் ஒரு தள்ளுவண்டி நின்றது. அதிலே உணவுப் பண்டங்களை அடுப்பில் வைத்து, தயார் செய்து கொண்டிருந்தான் ஒருவன். அந்த வண்டியைச் சுற்றித்தான் அந்தக் கூட்டம்.

கண்ட இடத்தில், கண்ட நேரத்தில், கண்டதைத் தின்னும் பழக்கம், இப்பொழுது நாகரிகமாக நிலவி வருகிறது என்றேன் நான்.

உண்மைதான். இது எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது என்று அந்தக் கூட்டத்தை வியப்போடு பார்த்தார். வேதனைக் குறிகள் அவர் முகத்தில் மெலிதாக ஓடி மறைந்தன.

ஒருவேளை உண்பவன் **யோகி**. இரு வேளை உண்பவன் **போகி**. மூன்று வேளை உண்பவன் **ரோகி** என்று தமிழ் நாட்டு உணவுப் பழக்கம் இருந்ததை அவருக்கு நினைவூட்டினேன்.

தவமிருக்கும் தக்கோர்கள் உணவை அறவே மறுக்கவில்லை. உடல் காக்க உயிர்க்காக்க ஒரு வேளை உண்டு வாழ்ந்தனர். இல்லறத்தில் ஈடுபட்டு நல்லறம் காக்கவும், நல்லுடல் பார்க்கவும் முயன்ற மக்கள், இரண்டு வேளை உணவை ஏற்றுக் கொண்டனர்.

வயிற்றுக்கு பாரமாகவும், பளுவாகவும் எந் நேரமும் வைத்திருந்து, வயிற்றை வீணாக்கி. அதனால் உடம்பையே நலியச் செய்து, உயிர் வாதை பெறுகிற மக்களை நோயாளிகள் என்று அந்நாளில் தரம் பிரித்து, தரமான வாழ்வு வாழ்ந்த தமிழக மக்களை, நினைத்துப் பார்த் தேன்.

தான் முன்பு உண்ட உணவு செரித்துப் போய், பசி ஏற்பட்ட பிறகு புசிக்கும் பொழுதுதான், உணவு சுவைக்கிறது. உள்ளமும் சுவையினை உணர்ந்து மகிழ்கிறது. அதுவே அழகான உணவுப் பழக்கம் என்ற வள்ளுவர், அந்த அழகான குறளை யும் பாடிக் காட்டினார்.

**உணலினும் உண்டது அறல் இனிது காமம்**
**புணர்தலினும் ஊடல் இனிது. (1326)**

உணவு செரிக்காமல் உண்டால், ஊறுகின்ற துன்பங்கள் ஆயிரம். அதுபோலவே, புணர்தலினும் ஊடலால் காமம் உவகை பெறுகிறது. இந்தக் காமம் உணவுக்கு உப்பாக இருக்கிறபொழுது இனிக்கிறது. உப்பே உணவாகப் போகும் பொழுது உடலையே அழிக்கிறது என்ற பொருளையும் சுட்டிக் காட்டினார். உப்பு என்றாலே இனிமை என்று ஒரு பொருள் உண்டு என்றார்.

எங்கள் காலத்தில் உணவு வகைகள் ஏராளம். அதை உண்ணுகின்ற எண்ணிக்கை அளவும் அதிகம் தான். அதனால் உடலைப் பாதிக்கின்ற நோய் களின் எண்ணிக்கையும் ஏராளம்.

எம் காலத்து மக்கள், நோய்வாய்ப் பட்டிருக் கிறேன் என்று கூறுவதை மிகுந்த நாகரிகம் என்று கருதுகின்றார்கள். நோய் வாய்ப்பட்டிருப்பதை அவமானம் என்று கருதவில்லை.

விருந்தும் மருந்தும் வாழ்வின் பயன் என்கிற இந்த மக்களை, நீங்கள் எப்படி நினைக்கின்றீர் கள் என்றேன்.

உண்மைதான். வாய் ருசியால் மக்கள் அவதிப்படுகின்றார்கள் என்பதைத் தான் இந்தத் தெருவோரத்துக் கூட்டம் தெள்ளத் தெளியக் காட்டுகிறதே என்றார் வள்ளுவர்.

அதிகமாக உணவு உண்டால், உடம்பு நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை தான் அவர்களை உணவு அடிமைகளாக மாற்றியிருக்கிறது. நாவுக்கு அடிமையானவர்கள், நம்ப முடியாத துன்பங்களில் சிக்கி நைந்து போவார்கள் என்பதற்கு இந்தக் கூட்டமே சாட்சி.

நீங்களே பாருங்கள். அவர்கள் வயிறு மட்டும் தான் விரிந்து கிடக்கிறது. குச்சி போன்ற கைகளும் கால்களும் வளைந்து நிற்க, குடை விரித்தது போல் வயிறு விரிந்து கிடக்க. குனிந்த தோள்கள். ஆனால் பளபளக்கின்ற உடைகள் என்று பேசிய வாறு பரிதாபப்பட்டார் வள்ளுவர்.

ஒரு வேளை உணவு என்றால் ஒழியாய். இரு வேளை உணவை ஏற்றுக்கொள் என்றால் ஏற்றுக் கொள்ளமறுக்கிறாய். வயிறே! உன்னோடு வாழ்தல் அரிது என்று ஒளவையார் பாடிய பாட்டை அவரிடம் கூறினேன்.

ஆமாம்! வயிற்றை வைத்துத் தானே வாழ்வின் நலமும் வளமும் தேங்கிக் கிடக்கிறது. வயிற்றை வீணடித்து விட்டால், வாழ்வின் சிறப்பும் செழிப்பும் எப்படி ஏற்படும்!

அறிவே உயர்வு, அன்பே வாழ்வு, உணவே சிறிது என்று வாழ்கிற போது தான், எல்லா இன்பங்களும் வாழ்வில் ஏற்படுகின்றன. இந்தக் குறளைக் கேளுங்கள்.

**செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும் (412)**

சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்று பாடியது ஏன்? உங்களுக்கும் வியப்பாக இருக்கிறதல்லவா என்றார்!

ஆமாம்! உங்கள் இந்தக் கருத்தை, இக்கால விஞ்ஞான வல்லுநர்கள் எவ்வளவு அருமையாக விளக்கித் தந்திருக்கிறார்கள் என்ற வியப்பில் தான் நான் இருக்கிறேன் என்றேன்.

நம் தமிழகத்தைப் போலவே சீனதேசம் என்றும் ஒன்று இருக்கிறது. அவர்கள் நம்மைப் போலவே அக்காலத்திலிருந்து அறிவிலும் வீரத்திலும், பண்பிலும் மேம்பட்டவர்களாகவே வாழ்ந்துச் சென்றிருக்கின்றார்கள். உங்களைப் போல உடல் பற்றியும், வாழ்க்கை பற்றியும் நிறைய உரைத்திருக்கிறார்கள்.

உங்கள் உணவுக்கொள்கை போலவே, அவர்கள் நாட்டுப் பழமொழியும் ஒன்று இருக்கிறது.

''கொஞ்சம் சாப்பிடுங்கள். நிறைய சாப்பிட லாம்'' என்பதுதான் அது என்றேன்!

அப்படியா! சிறிது விளக்கமாகக் கூறுங்கள் என்றார்! நான் விளக்கம் கூற ஆரம்பித்தேன்.

கொஞ்சமாக, அரை வயிறு சாப்பிடுங்கள். சாப்பிட்ட உணவு எளிதாக செரித்துவிடும். மீண்டும் சாப்பிடலாம். இப்படி செய்து வந்தால், நோய்கள் வந்திடும் வாய்ப்பில்லை. அதனால், நீண்ட காலம் வாழலாம். அதனால், நிறைய தரம் சாப்பிடும் வாய்ப்பு கிடைக்கும்.

இந்தக் கருத்தை வைத்துத்தான், கொஞ்சம் சாப்பிடுங்கள். நிறைய சாப்பிடலாம் என்ற பழமொழியை உருவாக்கினார்கள் என்றேன்.

வயிற்றுச் சுமை தாளாத சுமை, மாளாத சுமை என்று பக்கம் பார்த்துப் பேசினார் வள்ளுவர்.

அங்கே, இரண்டு பேர், பெருத்தத் தொந்தி யுடன் போவது தெரிந்தது.

வாயை வளர்த்து, வயிற்றை வளர்த்துக் கொண்டு வேதனைப்படுகிற மக்களுக்கு, இந்தத் தொந்தி வெட்கத்தைத் தரவில்லை என்றேன். அதை பெருமையாக நினைத்துப் பாராட்டுவது தான், எனக்கு புரியாத புதிராக இருக்கிறது என்றேன்.

மனிதர்களைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல, அதிலும் அவர்களின் மனோபாவத்தை மாற்ற முயல்வதும் எளிதான காரியமல்ல. அது

அவரவர் பாக்கியம் (விதி) என்று விட்டுவிட வேண்டியது தான் என்றார்.

நீங்கள் முயற்சித்திருக்கிறீர்களே என்றேன்.

ஆமாம். என்னாலும் தவிர்க்க முடியவில்லை. நமது மனித குலத்திற்கு, நாம் செய்ய வேண்டிய தலையாய கடமையாக அந்தப் பணி அமைந்திருக்கிறதே என்று எனக்கு சமாதானம் கூறினார்.

அதற்குள் திடீரென்று ஒரு சத்தம். கூட்டம் கலைந்து ஓடத் தொடங்கியது. நாங்கள் ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டோம்.

# 8. புறமும் அகமும்

சிற்றுண்டியாக சுண்டல், வடை விற்றுக் கொண்டிருந்த வண்டியைச் சுற்றி நின்று, வாய்க்கு ருசி என்று, வயிறு நிரம்புவது தெரியாமல், நின்று தீர்த்துக் கொண்டிருந்த கும்பலும், அந்தத் திடீர்ச் சத்தம் கேட்டுத் திகைத்தது.

எங்கிருந்தோ ஒரு லாரி சக்கரம் மட்டும் உருண்டோடி வந்து, சிற்றுண்டி வண்டியில் மோதி சிதறடித்தது.

வள்ளுவர் அந்த சக்கரத்திற்குரிய வண்டியை ஆசசரியமாகப் பார்த்தார். ஒரு லாரி. அதற்குள் இருந்த சரக்கு சாமான்கள் வண்டியையே உருவம் தெரியாமல் மறைத்துக் கொண்டு கிடந்தன. வந்த வேகத்தில் அது பாரம் தாங்காமல் தலைகுப்புற

விழுந்துக் கிடந்தது. அவர் என்னைப் பார்த்தார் விவரம் புரியாமல்.

இதை நாங்கள் சரக்குப் பேருந்து என்று கூறுவோம். உங்கள் காலத்தில் வண்டி இருந்தது. எங்கள் நாகரிகக் காலத்தின் முன்னேற்றக் கண்டு பிடிப்பு இது என்றேன். பெயர் லாரி என்றேன்.

அந்த லாரி வந்த வேகத்தில், குறுக்கே வந்த மாட்டு வண்டிக்காக, 'பிரேக்' போட்டு நிறுத்தப் போய், வண்டியின் மீது மோதி, சரக்கு லாரி சரிந்து சாய்த்தது.

மாட்டு வண்டியும் சேதமடைந்து போனது. லாரியில் வைத்திருந்த ஒரு சக்கரம் தான், கீழே விழுந்து, உருண்டோடிவந்து, சிற்றுண்டி வண்டியை மோதிச் சாய்ந்தது.

இந்த விபத்தில் கால் ஒடிந்து போன ஒரு கிழட்டு மாடு, மேற்கொண்ட பயம் காரணமாக, மிரண்டு கூட்டத்திற்குள் ஓடியது. நொண்டி மாட்டைக் கண்டு பயந்து, அந்தக் கும்பல் ஓடிய காட்சிகள், போட்ட சத்தங்கள், எல்லாவற்றையும் கண்ட வள்ளுவரின் முகம், வருத்தம் கலந்த புன் சிரிப்புக்கு ஆட்பட்டது.

அவரது முகத்தைப் பார்த்ததும், அவர் சுவை யாக ஒரு பாட்டைச் சொல்ல ஆரம்பித்தார்.

**பீலியெய் சாகாடு அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின். (475)**

மெல்லியதான மயில் இறகை. மிகுதியாக வண்டியில் ஏற்றினால், அந்த வண்டி கூட பாரம் தாங்காமல் அச்சு இற்றுப் போய் வீழ்ந்து படும். இந்தப் பாடல் வரி, இன்றைக்கும் என் கண் முன்னால் உண்மை என்று சான்று காட்டுகிறதே! என்றார் வள்ளுவர்.

இப்படியா பண்டங்களை ஏற்றிக் கொண்டு வருவது! அறிவற்றத்தனம் என்றும் அவர் அலுத் துக் கொண்டார்.

நீங்கள் வண்டிக்கு ஒரு பெயராக சாகாடு என்று சொல்லியிருக்கின்றீர்கள். இப்பொழுது. அவை சாக்காட்டுக்கு மக்களை அனுப்புகின்ற சாதனமாகப் போயிருக்கிறது பார்த்தீர்களா? என்று நான் அவருக்கு சாமாதானம் கூறினேன்.

அதைக் கூட நான் பெரிது படுத்தவில்லை. காலொடிந்த மாடு ஒன்று, வற்றலாகிப் பாவ மாகப் போய்விட்ட அந்த கிழட்டு மாடு ஒன்று ஓடுகிறது. அதைப் பார்த்து அந்தக் கூட்டத்தில் நின்ற மக்கள் கலைந்து ஓடிய அச்சத்தைப் பார்த்தே, எனக்குப் பொறி தட்டியது போன்றாகி விட்டது.

காளை மாட்டை அடக்கி, கன்னியைக் கைப் பற்றி, கடிமணம் புரிந்த கன்னித் தமிழ் நாட்டு இளைஞர்கள் என்று புகழ்பெற்றது தமிழினம். எம் காலத்தில் துள்ளித் தாண்டி, தொட்டவர்களைத் தூக்கியெறிந்து, கொம்பால் துளைத்துவிடும் காளைகளை அடக்கிய என் கால மக்களை எண்ணிப் பார்க்கிறேன்.

நம் தமிழகத்து மக்கள், உடல் வலிமை குறைந்து போய் கிடக்கின்றார்களா என்பது தான் எனக்குப் புரியவில்லை. வீர மக்கள் என்ற தமிழ் இனத்தின் மேன்மைப் பெயர் சொல்லிக் கொண்டு பொய்ம்மை வாழ்க்கை வாழ்கின்றார்களா இக் காலத்து மக்கள் என்றார் வள்ளுவர்.

**வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று. (273)**

பசு ஒன்று, தான் கண்டார் பயப்படுகிற தோற்றம் கொள்ள வேண்டும் என்று யோசித்து, கடைசியில், புலித்தோல் ஒன்றைப் போர்த்திக் கொண்டு வயற் காட்டில் மேய்ந்தது என்று அன்று நான் எழுதியிருந்தேன்.

இன்று பார்க்கிறேன்! வலிமையற்ற மக்கள், அச்சம் கொண்டு பயந்தோடுகிற மக்கள், இன்று வலிமையுள்ளவர்களாகப் பொய் வேடம் போட்டுப் பிழைக்கின்றார்கள். இவர்களின் **வான்** உயர்

தோற்றம் எவன் செய்யும்? (272) என்று வருத்தப் பட்டார்.

இரண்டு கால்களும் நெடுந்தூண். முதுகுத் தண்டு விட்டமாக நீண்டு கிடக்கிறது. விலா வெலும்புகள் கூடாக விரிந்து கிடக்கின்றன. அப்படிபட்ட எலும்புக் கூட்டை, சதையை புன்மை மிக்கத் தோல் காக்கிறது. அதற்குத் தான் மனித உடல் என்று பெயர். அந்த உடலின் சொந் தக்காரரர்கள் வாழ்கின்ற பொய்ம்மை வாழ்க்கை என்று ஒரு தமிழிலக்கியம் கூறுகிறது, என்று நான் கூறினேன்.

இந்த மக்களைப்பற்றி இப்படியொரு பாட்டா? என்ன பாட்டு அது? பாடுங்கள் பார்ப்போம் என்றார்.

**''நெடுந்தூண் இருகாலா, நீண்ட முதுகுத்தண்டு ஆங்கு**
**கொடுங்கால் விலா என்பு நற் கோலியுடங்கி**
**புன் தோலால் வேய்ந்த புலால் வாழ்க் குரம்பை''**

என அறநெறிச் சாரம் பாடுகிறது என்றேன்.

ஆமாம், மக்கள் வடிவமைப்பைப் பற்றி மிகவும் விளக்கமாகவே பாடியிருக்கிறது. உண்மைதான்.

அகம் குன்றி விடுகிறபோது, புறமும் குன்றிப் போகிறது. புறத் தோற்றம் பெருமையுடையதாக எப்பொழுது இருக்கும் என்றால், அகத்தில் தெளி வும் வலிவும் இருக்க வேண்டும். அகம் அச்சத்தின்

வழி ஆட்பட்டால், புறமும் தரம் குன்றிப் போகும் என்றார், அப்படிப்பட்ட ஆட்களைத் தான் இப்பொழுது பார்க்கிறோம் என்றார்.

வலிவில்லாத மக்கள் மீது வள்ளுவர் கொண்ட எண்ணம், கடுப்பாகத் தெரிந்தது. அவர் விளக்கம் இன்னும் கொஞ்சம் கடுமையாகவே எழுந்து வந்தது.

**புறங் குன்றி கண்டனைய ரேனும் அகம் குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து. (277)**

குன்றிமணியானது சிவப்பாகக் காட்சியளித்தாலும், அதன் ஒரு புறம் உள்ள கறுப்பானது, அதன் உண்மை உருவத்திற்கு மாசுக்கற்பித்தாற் போல தோன்றுகிறதே! கறுப்பு அதன் களங்கம் என்றார்.

குன்றிமணியின் **சிவப்பு** மனிதர்களின் **வீரம்.** அதில் உள்ள **கருப்பு** .மனிதர்களின் **பயங்கொண்ட மனம்.** மன வலிமையற்றவர்கள் புறவலிமையிலும் அடங்கிப்போய், பொய்மை வாழ்வு தான் வாழ்வார்கள் என்றார்.

இன்றைய வாழ்க்கை முறை அப்படி ஆகிவிட்டது. மக்களையும் ஆக்கிவிட்டது என்று நான் சமாதானம் கூறினேன்.

எப்படி என்றார் வள்ளுவர்.

உங்கள் காலத்து வாழ்க்கை, வீரமும் அறமும் சிறந்து விளங்கிய காலமாக இருந்தது. போர்ப் பயிற்சிகளே சீர்ப் பயிற்சிகளாக மக்களிடையே செழித்தோங்கியிருந்தன. அன்று போரில்லாத வீரர், வேரில்லாத மரம், சீரில்லாத உடல் போன்றது என்று சிறப்பாகப் பேசப்பட்ட காலம் அது.

வலிமையாக உடலைக் காப்பதே வரம் பெற்ற வாழ்க்கை என்ற கருத்து, மக்களிடையே அன்று மிகுந்திருந்ததால், மக்கள் வலிமையோடு வாழ உழைத்தனர்.

உடலை உருவாக்கினர், வளமேற்றினர்.

ஆனால் இப்பொழுது, உழைப்பதை மக்கள் கேவலமாகக் கருதுகின்றனர். சோம்பலே சொகுசான வாழ்க்கை. அதுவே நாகரிகத்தின் சின்னம் என்று தாங்களும் வாழ்ந்து, மற்றவர்களையும் நம்பவைக்கின்றனர்.

உழைப்பின்றி, உயர்ந்த உடை உடுத்தி, உல்லாசமாக வாழ்வதே உன்னதமான வாழ்வு என்று, வாழ்க்கைமுறைக்கு வரம்பு கட்டுகின்றனர். மற்றவர்கள் உழைப்பின் பயனை அனுபவிப்பதே அறிவுடையவர்கள் செயல் என்பதாகவும் மக்கள் பேசி, பின் பற்றி வாழத் தொடங்கினர். இதனாலே

மக்கள் வாழ்வின் மகிமை கெட்டு விட்டது என்றேன் நான்.

**மடிமை கெடுவரர்க்கண் நிற்கும்** (கடிகை) என்ற பாடல் தான் எங்களுக்குப் பொருந்துகிறது என்று பாடினேன்.

கெட்டுப் போகின்றவர்களுக்கு, சோம்பலே கூட வருகின்ற கொல்லும் துணையாகிக் கொள்கிறது என்றேன்.

ஆமாம்! நானும் மக்களுக்கு சொல்லியிருக்கிறேன். என் பாட்டை கேளுங்கள் என்றார்.

**மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளா தாமரை யினாள்.** (617)

சோம்பலுடையவர் மூதேவியாவர். சோம்பலற்றவர் தாமரையில் வீற்றிருக்கும் சீதேவியாவர். முன்னவர் இருப்பதை எல்லாம் இழப்பர். பின்னவர், எல்லாவற்றிலும் கொழிப்பர் என்று சோம்பலுக்கு உவமை கூறினேன். அந்த சோம்பல், இன்று இக்கால மக்களை ஆட்டிப் படைக்கிறதே என்றார்.

நீங்கள் பார்க்கின்றீர்களே! தங்கள் அழகான உடலமைப்பை, அவர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவே பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அந்த உடலை வளமாக வைத்துக்

கொள்ள வேண்டும் என்று நினைப்பதுமில்லை. நடப்பதுமில்லை.

நாளுக்கு நாள் உடல் மெலிந்து போகிறபோது, விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து, ஒப்பனை செய்து அதை உயர்வாகக் காட்டவே முயல்கின்றனர். அதைத் தான் பெருமை என்றும் பேசுகின்றனர்.

**அளவல்ல செய்தாங்கே வீவர்** *(289)*. அளவற்ற ஆகாத தகாதக் காரியங்களை செய்து கொண்டு, தாங்களே அழிந்துபோவர் என்று நீங்கள் பாடிய குறளை, நானும் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்பொழுது நாம் பார்த்தது ஆரம்பம் தான். இன்னும் பார்ப்பதற்கு நிறைய இருக்கிறது என்றேன்.

அதோ பாருங்கள் என்று ஒன்றைக் கை நீட்டி ஆச்சரியத்துடன் காட்டினார் வள்ளுவர். எனக்கே அது ஆச்சரியமாக இருந்தது.

*அங்கே என்ன கூட்டம்! ஆரவாரம்!*

*இருவரும் திரும்பிப் பார்த்தோம்!*

நீண்ட வரிசையில், மக்கள் கூட்டம். அவர்கள் போட்டதோ அலைகடலையும் அடக்கும் சத்தம்.

'ஒழிக ஒழிக' என்ற கூக்குரல் தான், ஓங்காரமாக ஒலித்தது.

அத்தனை பேர்களுக்கும் ஆவேசம் எப்படித் தான் வருகிறதோ! ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்தார் வள்ளுவர். என்ன கூட்டம் என்பது போல என்னைப் பார்த்தார்.

நாட்டை ஆள்வதற்கு ஆசைப்படுகிற மக்கள், ஒன்று சேர்ந்த இயக்கங்கள் இங்கே நிறைய இருக்கின்றன. அந்த இயக்கத்திற்கு அரசியல் கட்சி என்பது பெயர்.

இது அரசியல் கட்சி ஒன்றின் பேரணி. இப்படி ஆட்களை சேர்த்துக்காட்டினால்தான், தங்கள் கட்சி பெரிய கட்சி என்று பொது மக்கள் கருதுவார்கள். இதனால் பிற்காலத்தில் பணம் பண்ண முடியும்! என்று முயல்கிற முயற்சி என்றேன்.

அதெப்படி ? ''அவர்கள் வாழ்க என்று வாழ்த்தாமல், ஒழிக என்றல்லவா சத்தம் போடுகின்றார்கள்'' என்றார்.

வாழ்க என்று கூவும் போது மனதுக்கு அவ்வளவு மகிழ்ச்சி வருவதில்லை. ஒழிக என்று கத்தும் போது தான். உள்ளத்தில் பூரண திருப்தியே வருகிறது.

இந்தக் கூட்டத்தில் முக்கால் வாசிப்பேர், கூலிக்காக வந்து கத்துபவர்கள். கட்சிக்காரர்கள் அல்லர். வறுமை தான் அவர்களுக்கு வாழ்வு. கூலி வேலைக்குப் போய் உழைத்தால், கூலியாக பணம் வரும். இங்கே வந்து கூட்டத்தில் கலந்து கொண்டால், கத்துவது தான் வேலை. மாலையான பிறகு கூலி. எதைச் சொன்னாலும் செய்ய வேண்டியது அவர்கள் வேலை என்றேன்.

அதற்கு ஒழிக என்று ஏன் கத்த வேண்டும்?

அண்ணன் எப்பொழுது சாவான். திண்ணை எப்பொழுது காலியாகும் என்பது தானே நம் நாட்டுப் பழமொழி. ஒருவர் அழிவில் தான், மற்றொருவர் வாழ்வு முளைவிட ஆரம்பிக்கிறது.

அடுத்தவர் அழியும்வரைக் காத்திருக்க, இப்பொழுதுள்ள, மக்கள் விரும்பவில்லை. ஒழிக ஒழிக ஒழிக என்று கத்தி, உள்ளத்தில் சாந்தியடைகின்றார்கள். ஆமாம்! அவர்களுக்கு வேண்டியது பதவி, அதிகாரம், பணம், கேளிக்கைகள் என்றேன்.

எனக்கு ஒன்று புரிய வேண்டும். அவர்கள் போர் போர் என்றும் கத்துகின்றார்களே! எந்தப் போருக்கு, எங்கே போகின்றார்கள் என்று கேட்டார். வள்ளுவர்.

முற்காலத்து தமிழர் வாழ்வை நீங்கள் இரண்டு பிரிவாகப் பிரித்துக் காட்டியிருக்கின்றீர்கள். வீர

வாழ்வு, காதல் வாழ்வு என்பதாக, போருக்குப் போய் போரிடும் வீர வாழ்க்கை, பெருமிதம் தோன்ற இல்லத்தில் நடக்கின்ற காதல் வாழ்க்கை. வீரமும் காதலும் தான் தமிழர் வாழ்க்கை என்பதை எம் காலத்து மக்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கின்றார்கள்.

போருக்குப் போக வழியில்லை. துணிவில்லை. வசதியும் இல்லை. ஆகவே, இவர்கள் வாயிலே வீரத்தையும், வீதியிலே காதலையும் செய்து கொண்டு, தமிழர் நாகரிகத்தை' தேய்ந்து விடாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு தமிழர் வெளி நாட்டுக்கு விருந்தாளியாக போய் வந்தாலும். ''சென்று, வா; வென்று வா- வெற்றியை மொண்டு வா'' என்றெல்லாம் வீர வசனம் பேசி அனுப்பி வைப்பார்கள்.

இப்பொழுது என்ன அவசரம் வந்தது இப்படிக் கூச்சலிட என்றார் வள்ளுவர்.

நிழல் யுத்தம் என்பது உங்களுக்குத் தெரியும். எதிரில் பகைவர் யாரும் இல்லாத போதும் தானே தனியாய் நின்று, போரிடுவது போல நடிப்பதை நிழல் யுத்தம் என்போம். எதிரே யாரும் எதிரிகள் இல்லை. என்றாலும் ஆரவாரத்துடன் அவர்கள் வீதியிலே நடந்து கொண்டு ஓலமிட்டுச் செல்வது தான் புதுத்தமிழ்ச் சாதியின் பேராண்மை என்றேன்.

அதை ஏற்றுக் கொள்கிறேன். போராட்டம், போராட்டம் என்கிறார்களே! என்ன போர் என்றார் வள்ளுவர்.

எதிர் கட்சிகளுக்குத் தொந்தரவு. தரவேண்டும் என்பது தான் நோக்கம். அதற்காகத் தான் இந்தக் கூட்டம். கொஞ்ச நேரம் கத்திக் கொண்டே, குறிப் பிட்ட தூரம் வரை போய், கலைந்து போய் விடு வதற்குப் பெயர் தான் போராட்டம்.

போர் ஆட்டம் என்பது தான் போராட்டம். இங்கே போர் என்பது நிலையாக இல்லாமல், சிறிது நேரத்தில் ஆட்டம் கண்டுவிடும் என்பதன் நிலையேயாம். இப்படிக் கத்துவது தான் போர்; போர்க்களம் என்பது பொது மக்கள் நடக்கும் வீதி கள், அவர்கள், 'எமனே வந்தாலும் எதிர்ப் போம். எதிரில் வந்தால் உதைப்போம் என்று ாடுவதைக் கேளுங்கள் என்றேன்.

ஆமாம்! ஆமாம்! அவர்கள் வீரம் புரிகிறது. இஃதல்லவா ஈடு இணையற்ற வீரம்! அவர்கள் கொள்கை வேகத்தால் தான், கொடூரமான எமனையும் கூவி அழைக்கின்றார்கள். ஆகா! என் பாடலுக்கு உயிர் வந்து விட்டது. தமிழர்க்காக நான் பாடிய வரிகள் தகைமை பெற்றுக் கொண்டன என்று உணர்ச்சியுடன் பேசினார்.

**கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும்**
**ஆற்றல் அதுவே படை (765)**

எமனே எதிர்த்து வந்து முன்னால் நின்ற போதிலும், ஓடாமல், அஞ்சாமல் கூடி எதிர் நின்று போர் செய்யும் மன வலிமை உடையதே படை என்று பாடினேன் பாருங்கள். அந்தப் பைந் தமிழ்ப் படையை இன்று, இங்கு பார்க்கிறேன். என்றார். பெருமித உணர்வு பொங்கி வழிந்தது.

போரில்லாத போதும், புற முதுகு காட்டாமல், முன்னேறி வருகின்ற பெரு வீர நிலையுள்ள மக்கள் தமிழர்கள் என்று பெருமையுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, கூட்டத்தின் மத்தியில் ஏதோ குழப்பம். வரிசை குலைந்துபோனது.

ஒருவருக் கொருவர் தாக்கிக் கொண்டனர். உண்மையான கட்சித் தொண்டர் ஒருவருக்கும், கூலிக்கும் வாய்ச் சண்டை தொடங்கி, கைச்சண்டையாகி, சினிமாவில் காட்டுகின்ற முகத்தில் குத்தும் குத்துச் சண்டையாகி விடவே, கூட்டம் கலைந்தது.

கற்கள் வீசப்பட்டன. போலீஸ் போலீஸ் என்ற கூக்குரல்...குதிரை மீது அமர்ந்த காவலர்கள் பலர் வேகமாக அந்த இடத்திற்கு விரைந்து வந்து, தடியடி நடத்தினர். தாக்கினர். விரட்டி அடித்தனர்.

சிறிது நேரத்திற்குள் அந்த இடத்தில் ஆள் அரவமே இல்லாமல் போயிற்று. போர் போர் என்று புறநானூறு வீரம் காட்டிக் கத்திய கூட்டத்தைக் காணோம்.

என்ன வீரம் இந்த மக்களுக்கு! சாதாரண தடி அடியைக் கூட தாங்க முடியாத கூட்டம். இப்படிப் பஞ்சாய் பறந்து விட்டதே!

எலிக் கூட்டம் ஒன்று பாம்பின் சீறலைக் கேட்டு, பயந்தோடி மறைந்தது போல ஆகி விட்டதே! இவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லாமற் போயிற்றே என்று பரிதாபப் பட்டார் வள்ளுவர்.

**ஒலித்தக் கால் என்னா முவரி எலிப் பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும் (763)**

எலிகள் கூட்டம் படைபோல திரண்டிருந் தாலும், எதிரே வருகின்ற நாகம் சீறியவுடனே, எல்லாம் கேட்டு ஓடிப் போகும். என்ற பாட்டை, உண்மையென்றும் நிரூபித்து விட்டார்களே!

இவர்களா என் தமிழ் மக்கள், வெட்கம்! என் றார் வள்ளுவர்.

இதற்குள்ளே நீங்கள் மனத்தெம்பை இழந்து விடக் கூடாது. இதுவும் ஒரு தொடக்கம் தானே! இன்னும் நாம் போக வேண்டிய இடத்திற்கே போக வில்லை என்றேன்.

ஆமாம்! நாம் விளையாட்டு நடைபெறும் களத்திற்குத் தானே போய்க் கொண்டிருக்கிறோம். அதற்குள் இடையில் இந்த 'போர்க் கூட்டம்

புகுந்து விட்டதே' என்று வள்ளுவர் வருத்தப் பட்டார்.

இப்பொழுது நாம் நமது தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பிரிவைப் பார்த்து வந்தோம், நமது சமுதாயம் இப்படித் தான் எல்லோருக்கும் எடு பிடியாய் இருந்து கொண்டு வருகிறது.

அறிவும், திறமையும், ஆற்றலும், ஆண்மையும் நிறைய தமிழர்க்கு இருந்தாலும், அவற்றைத் தங்கள் தனிப்பட்ட முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தவே முனைகின்றார்கள். அது தவறல்ல, இருந்தாலும், தனி மரம் தோப்பாகாது என்பது போல, தனித்தனி சுயநல முயற்சிகள் இனிதான முடிவுகளைத் தராமல் ஏமாற்றி விடுகின்றன.

ஒற்றுமை குறைந்த சமுதாயமாக, மற்றவரிடம் தங்கள் இனத்தைத் தாழ்த்திக் கூறுகிற சமுதாயமாக; பெற்ற இன்பங்களைப் பிறர்க்கும் வழங்க மறுக்கும் பிடிவாதமுள்ள பின்னடைந்த சமுதாயமாக இருந்து கொண்டு வாழ்ந்து வருவதை உங்களிடம் காட்டத்தான், இந்த வழியாக உங்களை அழைத்து வந்தேன் என்றேன்.

உண்மைதான், எம் காலத்து மக்களின் நடை உடை பாவனைகளைப் போல இன்று இல்லையே! வேற்று மொழி, வேற்று உடை, எல்லாமே மாறு பட்டுத் தான் கிடக்கிறது. இதை நாம் காலத்தின் கோலம் என்று நான் அமைதி கொள்வேன். ஆனால், உள்ளத்தால் குறைந்ததுபோல,

உடலாலும் குறைந்த உயரமாக, வலிமை யற்றவராக மக்கள் தெரிகின்றார்களே! அது ஏன் என்று கேட்டார்.

அவர்கள் தங்கள் உடலை நன்கு காத்துக் கொள்வதில்லை. தம்மைப்பற்றி வானுயர புகழ்ந்து பேசுவதில் வல்லவர்கள். மற்றவர்கள் திறம் பற்றி மறந்தும் புகழ்ந்திடாமல், இருப்பதில் சமர்த்தர்கள். தமிழினம் தலையாய இனமாக வரவேண்டும் என்பதிலே! விருப்பம் இல்லாதவர்கள்; தம் உயர் வுக்கு உழைப்பதைவிட, பிறர் தாழ்வுக்கு உரிய பணிகளை அலங்காரமாய் வெற்றிகரமாகச் செய் வதில் அறிவாளிகள்.

இதற்கே அவர்களுக்கு நேரம் போதவில்லை. உலக அரங்கில் உயர்ந்தவற்குரிய உயர் பணிகளை நினைக்கவும் நேரம் இல்லை. உடல் வலிமையில் நலிவு உண்டாகிற போது, அவர்கள் கனவுகள் கற்பனைகள் எல்லாமே நாசமாகி விடுகிறதே! என்றேன் வருத்தத்துடன்.

ஆமாம், மனப்பிணி உண்டாகிறபோது, உடல் பிணியும் மிகுதியாகி விடுகிறது. பிணியால் வருந்துகிற எவனும், பெரிய அளவில் வளர்ந்து விட முடியாதுதான். உங்கள் விளக்கத்தால் ஒன்று புரி கிறது எனக்கு, தமிழர்கள் முன்னேற்றம் தடை பட்டு நிற்கக் காரணங்கள் பல உண்டு என்றாலும், அவர்களைப் பார்க்கும் பொழுது என் குறள்தான் நினைவுக்கு வருகிறது என்று என்னைப் பார்த்தார்!

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன். (605)**

விரைந்து செய்கிற வேலைகளை தாமதப் படுத்திச்செய்தல்; வேலைகளைச் செய்யாமல் காலம் கடத்துதல்; செய்தாக வேண்டிய காரியத்தை செய்திட மறந்து போதல்; செய்ய முடிகிற காரியத்தை செய்திட சோம்பல் படுதல்; நேரம் கெட்ட நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்து விடுதல். இந்த நான்கு குணங்களும் ஒருவரை எவ்வளவுதான் அறிவால் உயர்ந்தவராக இருந்தாலும், கெட்டுப் போகச் செய்துவிடும் வல்லமை வாய்ந்தனவாகும்.

உண்மை தான். நிறைய தன்மானம் பேசுகிற தமிழர்களின் தரமும் திறமும், முன்னேற்றமும் முற்போக்கும் மற்ற இனத்தைவிட மங்கிப்போய் கிடப்பதற்கு நீங்கள் கூறுகிற காரணங்கள் சரியாகத் தான் இருக்கின்றன என்றேன்.

இன்னும் இருக்கிறது என்று என்னைப்பார்த் தார். இவ்வளவு விரைவில் தமிழகத்தையும் தமிழர் களையும் புரிந்து கொண்டு விடுவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

வான் புகழ் வள்ளுவர் அல்லவா; என்று வியந்தவாறு கண்மூடி நின்றேன். என்னை ஒன்று வந்து தாக்கும் வரை! வள்ளுவர் என்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

# 10. எதற்குப் பிறந்தீர்கள் மக்களே!

வள்ளுவரும் நானும் பேசிக் கொண்டிருந்த போது, ஏதோ ஒன்று வந்து என் மீது திடீரென்று மோத, தடுமாறி வீழ்ந்த என்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார் வள்ளுவர்.

மோதிய பொருள் வேறு எதுவுமில்லை. ஒரு மனித உருவம் தான். காவலர்கள் கொடுத்த பிரம் படிக்குப் பயந்து ஓடி வந்த மனிதக் கூடு தான் அது.

பாவம்! பணத்திற்கு ஆசைப்பட்டு வந்த நடைப்பிணம். ஏன் எதற்கு என்று காரணம் தெரியாமல், கூப்பிட்டக் குரலுக்கு ஓடி வந்து,

கும்பலாகி நின்ற அந்த உருவம், என் மீதுமோதியது மட்டுமன்றி, கீழே விழுந்தும் கிடந்தது.

பரிதாபமாகப் பார்த்தார் வள்ளுவர்! தமிழ் இனம் தேக்கு மரம் போல வலிமையாய் வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. இன்று சிறு அதிர்ச்சியைக் கூட தாக்குப் பிடிக்க முடியாத துரும்பு இனமாகப் போய் விட்டது என்று துடித்தார் வள்ளுவர்.

மனிதர் என்ற பெயரை மாற்றி, ஒன்றுக்கும் உதவாத கயவராக அல்லவா மாறிக் கொண்டு விட்டனர் என்றெல்லாம் மனம் புழுங்கினார்.

தான் செய்கிற காரியம் இன்னதென்று புரியாமல், குழப்பத்துடன் செய்து கொண்டு வாழ்கின்றனரே இந்த மக்கள்! இப்படி வாழ்வதும் ஒரு வாழ்வா? எதற்குப் பிறந்தார்கள் இந்த மக்கள்? ஏன் இந்தத் தமிழ்ச் சாதியின் பெயரையும் புகழை யும் இப்படி தாழ்த்துகின்றார்கள்! வீழ்த்துகின் றார்கள்!

கேவலம்! ஒரு நாள் வயிற்றைக் கழுவ, தங்களையே கொள்கையில்லாமல், விற்றுக் கொள்கிற கோமாளி குரங்கு மக்களாகத் தானே திரிகின்றார்கள் என்ற கோபத்தில், வள்ளுவர் பாடத் தொடங்கினார்.

**எற்றிற் குரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற் குரியர் விரைந்து. (1080)**

இப்படிப்பட்ட கீழ்க் குணம் கொண்ட மக்கள், வேறு எந்தத் தொழிலுக்கும் ஏற்றவர்களாகவே இருக்க மாட்டார்கள். ஏதாவது ஒரு துன்பம் வந்து விடுகிறபொழுது, அதைத் தீர்க்கத் தெரியாமல், தங்களையே விற்று, பிறருக்கு அடிமையாகிப் போகின்றவர்கள்.

ஒரு சிறு துன்பத்தைக் கூட பொறுக்க இயலாமல். தமது மனைவி மக்களைக் கூடவிற்று விடுகின்ற வீணான மக்கள் என்று, நான் அன்று பாடினேன். இன்று என் முன்னே, விழுந்து கிடக்கின்ற இந்த மனிதரைப் பார்க்கிறேன். இந்தக் கூட்டமே இப்படித் தான் போலும் என்றார்.

> **பெற்றாளே பெற்றாள், பிறர்நகைக்கப் பெற்றாளே**
> **எற்றோ மற்றெற்றோ மற்றெற்று.**

என்று ஔவை பாடிய பாட்டையும், நான் பாடிக் காட்டினேன்,

பிறர் இகழ்ச்சியாகப் பேசி, சிரிக்கும் நிலையில் ஒருத்தி பெற்றுப் போட்டுவிட்டுப் போய்விட்டாளே என்ற கருத்தை நான் கூறியதும், அவர் சற்று கலங்கியவர் போலக் காணப்பட்டார்.

இந்த உலகம் என்பது உயர்ந்தோர் உலா வருகிற உன்னதமான இடம். இங்கு அறிவும் ஆண்மையும் உடைய மக்களுக்கே, ஆனந்த வாழ்வு

கிடைக்கும். அப்படிப்பட்ட அற்புத வாழ்வைப் பெற, நிலையான அறிவு வேண்டும்.

நிலையான தெளிவான அறிவு என்பது ஓர் அழகான மலர் போன்றது. அந்த அறிவு மலரைப் போன்று மலர்ந்து விரிந்து போகாமலும், குவிந்து குறைந்து போகாமலும் இருந்து, ஒரு நிலையாய் நிற்கிறது. இதை மக்கள் புரிந்து கொண்டு உலக அறிவுடன் திகழ வேண்டும், மகிழ வேண்டும் என்று தான் பாடிய குறளைப் பாடிக் காட்டினார்.

**உலகத் தழீஇயது ஒட்ப மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு. (425)**

அப்படி யென்றால், எங்காலத்து மக்கள், ஏற்ற முடன் வாழ, நீங்கள் கூற விரும்புகிற கருத்துதான் என்னே என்று வள்ளுவரை நோக்கிக் கேட்டேன்.

எளிது. மிக எளிது. இந்தக் குறளைக் கேளுங்கள் என்றார்.

**புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். (538)**

மக்கள் புகழ்ந்து ஏற்றுக் கொள்கின்ற, நிதியும் தருமமும் நிறைவாகச் சொல்கின்ற காரியங்களைப் புகழ்ந்து ஏற்று, அவற்றைத் தொடர்ந்து பொறுப் புடன் மறவாமல் செய்கின்ற மக்களே, எழுச்சி

யுடன் வாழ்கின்றார்கள். உயர்வான வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.

அத்தகைய அறிவார்ந்த காரியங்களை மறந்து விட்டு வாழ்கிற மக்களுக்கு, ஏழு பிறப்பிலும் விடிவு இல்லை. அவர்கள் வறுமையிலும், வாட்டுகின்ற துயரிலும் தான் வாழ்வார்கள் என்றார் வள்ளுவர்.

இதற்கு என்ன செய்ய வேண்டும் என்றேன் நான்.

அதை அறிகின்ற பட்டறிவு தான், உணர்த்த வேண்டும். இகழ்ச்சியாக எண்ணி, நல்லன செய்யாத மக்கள், கெட்டு அழிந்துபோன சான்றுகளைப் பார்த்து மாற்றிக் கொள்ள வேண்டும். பிறர் அழிந்து போனதற்கான காரணங்களைப் புரிந்து கொண்டு, அவற்றைத் தவிர்க்கும் பொழுதுதான், தடுக்கும் பொழுதுதான் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியினால் தான் வலிமை ஏற்படுகிறது என்றார்.

அந்த வலிமை மனவலிமையாகவும், உடல் வலிமையாகவும் மாறிக் கொள்கிறது என்றேன். உண்மை என்றார்.

**இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (539)**

இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன் என்றார் வள்ளுவர், அவரது முகத்திலே முடிவு

செய்து கொண்ட ஓர் உண்மையின் தெளிவு தெரிந்தது.

தமிழர்களின் தனித்திறமைகள் இவ்வாறு தாழ்வுற்றுப் போய், தவித்துக் கிடக்கின்ற தன்மைகளுக்கு, அவர்களிடம் தேய்ந்து போய்கிடக்கின்ற ஒற்றுமையின்மை, நம்பிக்கை இன்மை, ஊக்கமின்மை, உயர்வான கொள்கையின்மை போன்ற காரணங்களே தலையாய இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர்த்து வெற்றி கொள்ள முனைவதும் வெற்றி பெறுவதும் எளிது. இந்த உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின். (540)**

**(உள்ளியது - எண்ணியது)**

தான் எண்ணியதை எல்லாம் எளிதாகப் பெற முடியும். எண்ணியது இயைந்ததாக இருந்தால், சிறப்புடையதாக இருந்தால்; எல்லாவற்றையும் பெற முடியும் என்கிற நம்பிக்கையை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த உயர்ந்த நிலையை மனதில் வளர்த்துக் கொள்ளாத மக்கள், மற்றவர்களுக்கு அடிமையாகத் தான் வாழ்வார்கள் என்று பேசியபடி அவர் நடந்தார். நானும் பின் தொடர்ந்தேன்.

ஓரிடத்திற்கு வந்த போது, அது நான்கு சாலைகள் சந்திக்கும் இடமாக இருந்தது. அங்கிருந்து பார்த்த போது, அலைகடல் தெரிந்தது. அதன் அழகைக் கண்டு, என்னை கண் அசைத்துக் காண்பித்தார். அவரைப் பார்த்தபடி நானும் நடந்த போது, திடீரென்று ஒரு அதட்டும் குரல் கேட்டது.

நிமிர்ந்து பார்த்தேன். போலீஸ்காரர் ஒருவர் ஆங்காரமாக அழைக்கும் குரல் தான் அது. அவர் கையில் 'நில்' என்ற வாசகம் அடங்கிய கைப்பிடி, எங்களை நோக்கித் தான் நீட்டப்பட்டிருந்தது.

எங்கள் தவறை உணர்ந்து கொண்டோம். சாலையில் வரிசை வரிசையாகக் கார்கள் வந்து கொண்டேயிருந்தன. அதன் நீளமான காட்சி, ஒரு பெரிய ஊர்வலத்தைத் தான், மீண்டும் எங்களுக்கு நினைவு படுத்தியது.

இந்தக் கார்கள் எங்கு போகின்றன, என்றார் வள்ளுவர். இந்த இரண்டு நாட்களுக்குள் அவருக்குத் தமிழகத்தின் இன்றையத் தமிழ், நன்கு விளங்கி விட்டது.

நாம் பேசுகிற தமிழுக்கு இணையாகப் பேச ஆரம்பித்ததன் விளைவு தான், 'கார்கள்' என்று அவர் கூறிய சொல்.

சிரித்துக் கொண்டே அவருக்கு விளக்கினேன். இன்று கிரிக்கெட் என்ற விளையாட்டுப் போட்டி

ஒன்று ஆரம்பமாக இருக்கிறது. அயல் நாட்டு அணி ஒன்றுடன் நமது நாட்டு அணி விளையாடப் போகிறது.

எவ்வளவு நேரம் என்றார்.

இது நேரக் கணக்கில் ஆடுகின்ற ஆட்டம் இல்லை. இது நாள் கணக்கில் ஆடக் கூடிய ஆட்டம். எவ்வளவு நாள் ஆடினாலும், வெற்றி தோல்வி தெரியாத ஆட்டமாகவும் இது முடியும் என்றேன்.

வெற்றி தோல்வி தெரியாமல். விளையாடுவது, எதற்கு என்றார் வள்ளுவர்.

எதற்கு என்ற கேள்விகளை நிறைய எழுப்பு கின்ற விளையாட்டு தான் இது. இதைக் கண்டு மகிழத்தான், கார்களில் ரசிகர்கள் செல்கின் றார்கள்.

இன்னும் ஏன் நிற்கின்றீர்கள் என்று மீண்டும் எழும்பிய அதட்டல் குரலுக்கு மரியாதை கொடுத்து, நடக்க ஆரம்பித்தோம். நிறைய நிகழ்ச்சிகள் நடக்கப் போகின்றன. என்பதை அறியாமல் நடக்கத் தொடங்கினோம்.

# 11. எண்ணமும் திண்ணமும்

வள்ளுவரும் நானும் வழி நெடுக பேசிக் கொண்டே சென்றோம்.

மண்டிக்கிடக்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து மயங்கிப் போனார் அவர்.

உள்ளத்தில் பெருகும் அன்பும் பண்பும் குறைந்து போய், இல்லத்தில் பெருகும் பிள்ளைக் கூட்டங்களைப் பற்றியும் எங்கள் உரையாடல் தொடர்ந்தது.

வேறு வழி என்னவென்று தெரியாமல், வேறு வேலையை எப்படி தொடர்வது என்று புரியாமல், இந்த காலத்து மக்கள் இப்படி, உடல் இச்சை வேலையிலே வீழ்ந்து, மூழ்கிப் போய் கிடக்கின் றார்கள்.

இந்த மக்களுக்கு விழிப்புணர்ச்சி என்று வந்து விட்டால், உடனே பண ஆசை தான் புடைத்தெழுந்து கொண்டு நிற்கிறது. பண ஆசை மன ஆசைக்குள் விழுந்து விடுகிறபோது, மனித மாண்பு பற்றியே மறந்து போய்விடுகின்றார்கள்.

மனிதர்களை மனிதர்களாய் வாழச் செய்ய, இந்த நாளில் உதவுவது விளையாட்டுக்களாகத் தான் இருக்கின்றன என்று நான் பேசிக் கொண்டே வந்ததை, வள்ளுவர் மிகவும் கவனத்தோடு கேட்டுக் கொண்டே வந்தார்.

இப்பொழுது நாம் பார்த்தோமே கிரிக்கெட். இது மட்டும் தான் விளையாட்டா? இன்னும் வேறு உண்டா என்றார். கிரிக்கெட் அவர் மனதில் அப்படி இடம் பெற்றுக் கொண்டது போலும்!

பலாப் பழத்தில் ஈ மொய்ப்பது போல, பார்வையாளர்கள் கூட்டம் ரசிகர்களாகி, விளையாட்டு வீரர்கள் மீது மொய்த்துக் கிடக்கின்ற மோகலாகிரி தன்மையால், விரும்பத்தகாத கூட்டம், வேக வேகமான உரையாடல்கள், விவேகமில்லாத நடைமுறைகள் போன்றவை நடைபெறுவதைப் பார்த்த, வள்ளுவருக்கு, இப்படியும் ஒரு விளையாட்டு தேவைதானா என்னும் சிந்தனை எழ, அதில்ஆழ்ந்து போனார்.

இருக்கின்ற விளையாட்டுக்களில், இது ஒரு பணக்கார விளையாட்டு. வாழ்க்கையில் வசதி

யாக மேல் நிலையில் வாழ்கிற மக்களால், விரும்பப்படுகிற ஒரே காரணத்தால், இந்த அளவுக்குப் புகழைப் பெற்றுக்கொண்டிருக்கிறது.

பணக்காரர்கள் மட்டுமல்ல, பெரும் பதவியினை வகிப்பவர்களும், சில சமயங்களில் ஆட்சி பீடத்தில் இருப்பவர்களும் இந்த விளையாட்டில் கொண்டிருக்கின்ற மோகத்தால், வசதிகளைப் பெருக்கித் தருகிற காரணத்தால்; பொழுதுபோக்குவதற்கு எளிதாக நாள் முழுதும் விளையாடப் படுகின்ற சூழ்நிலையால், கிரிக்கெட் ஆட்டத்திற்கு வரவேற்பு அதிகம் என்றேன்.

மற்ற விளையாட்டுக்களைப் பற்றியும் சிறிது விளக்கமாகக் கூறினால், புரிந்து கொள்ள முயல்வேன் என்றார் வள்ளுவர்.

விளையாட்டு என்பது விருப்பத்திற்குரிய விளைந்த செயல் இயக்கம் என்பதாகப் பொருள் தருகிறது. மக்கள் தங்கள் உடலில் மறுமலர்ச்சி பெறவும், புது வளர்ச்சி கொள்ளவும் இப்படிப் பட்ட இனிய இயக்கங்களை வளர்த்துக் கொண்டனர்.

உடல் இயக்கத்தின் பொழுதே, ஒன்றாகக் கூடி வாழ்கிற ஒற்றுமை உணர்வை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டதால்தான், விளையாட்டுக்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிக் கொண்டன.

அவையே காலக்கிரமத்தில், வாழ்க்கையோடு வாழ்க்கையாக ஒன்று கலந்து போயின. இந்த ஒன்றிய நிலையால் தான், விளையாட்டுக்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து போய், மக்களுக்குப் பயனளிக்கும் மேன்மை நிலைக்கு எழுந்தன.

உதாரணமாக, மக்கள் எல்லாம் தோற்றத்தில் ஒன்று போலத் தென்பட்டாலும், எண்ணத்தில், நோக்கத்தில், வெவ்வேறுபட்ட விருப்பினர் களாகவே, அன்று முதல் இன்று வரை வாழ்ந்து கொண்டு வருகின்றனர்.

மக்களில் ஒரு சாராருக்கு கால்களை அதிகமாகப் பயன் படுத்தி விளையாட வேண்டும் என்ற வேட்கை எழுந்த போது, கால்பந்தாட்டம் என்பதாக உருவாகிக் கொண்டது.

கையால் ஆடவேண்டும், என்கிற போது கைப் பந்தாட்டம், விரலால் ஆட வேண்டும் என்ற போது கேரம்; மட்டையால் ஆடவேண்டும் என்று முனைந்த போது கிரிக்கெட், வளைகோல் பந்தாட்டம், மென்பந்தாட்டம், ஆட்களைப் பிடித்து. மடக்கி, அழுத்தி விளையாட வேண்டும் என்ற போது ரக்பி; மிருக உணர்வுகளுக்குத் தீனி போடுவது போல குத்துச் சண்டை, மல்யுத்தம்.

இப்படியாக மனித ஆர்வத்திற்கு ஏற்ப விளையாட்டுக்கள் புதிது புதிதாகப் பிறந்து கொண்டன.

அதனால் தான். ஆயிரக்கணக்கான விளையாட்டுக்கள் தோன்றி, இன்று அகிலத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன என்றேன்.

இரண்டாயிரம் காலத்திற்கு முற்பட்ட எங்கள் காலத்தைப் பற்றி இப்பொழுது எனது சிந்தனை பறந்து போகின்றது என்று வள்ளுவர், தனது பேச்சைத் தொடங்கினார்.

அக்காலத்துத் தமிழக மக்களின் வாழ்வை நாம் இரண்டு வகையாகப் பகுத்துப் பார்க்கலாம். புறத்துறை, அகத்துறை என்பதே அவை.

பொருள் தேடுவதும், போரிடுவதும் புறத்துறையாகவும்; உறவாடுவதும், ஊடாடுவதும், உள்ளத்து செழுமையையும், இல்லத்து வளமையையும் நாடுவது அகத்துறையாகவும் அமைந்திருந்தன.

எங்கால மக்களுக்கு இரண்டு வித வாழ்க்கைச் சூழல் இருந்தன. அது தான் போர்ச் சூழல். அதுவே சமுதாயச் சூழலாகவும் இருந்ததால் தான். நான் எழுதிய குறளிலும் அதனைத் தெளிவாகக் குறிப்பிட்டேன்.

**"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எஃதனிற் கூறியது இல்"** **(759)**

வாழ்க்கைக்கு வேண்டியது பொருள். அந்தப் பொருளைச் செய்க என்றேன். பொருளைத்

திரட்டுங்கள் அதுதான் உங்களுக்கு வலிமையைக் கொடுக்கும், வலிமையானது, எஃகு இரும்பினால் செய்யப்பட்ட கூரிய ஆயுதத்திற்கும் மேலான கூர்மையைக் கொண்டது.

அந்தக் கூர்மையே எதிர்க்கும் பகைவரை வேரோடு சாய்க்கும். இப்படிப் பகைமையை அழிக்கும் வீரியம் கொண்டது என்பதால் தான், பொருளைச் செய்க, என்றேன். அது எங்கால வாழ்க்கைச் சூழலாகவே அமைந்திருந்தது.

ஒவ்வொரு தேயத்து மன்னனும், தனது நாட்டை, தன்னாட்டு மக்களை அந்நியர் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கவே முனைந்து நின்றான். தம் நாட்டு மக்களை வலிமை வாய்ந்தவர்களாக மாற்றுவதற்காக முயன்றான். அதில் வெற்றியும் பெற்றான்.

மக்கள் மனதிலே வீரம் விளையாடிக் கொண்டேயிருந்தது. தங்கள் வீரத்தைக் காட்ட வேண்டும். வெற்றியை நிலை நாட்ட வேண்டும். என்ற வேக உணர்ச்சி மேலிட, போர்க்களத்தையே எண்ணி, ஏற்றம் கொப்பளிக்க மக்கள் வாழ்ந்த வாழ்க்கை நிலையைத் தான் இப்படிப் பாடினேன்.

**விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்**
**வைக்குந்தன் னாளை எடுத்து. (776)**

ஒரு தூய வீரனானவன், தான் வாழ்ந்து கழித்த நாட்களையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற போது, தன் மேல் போர்க்காயமான விழுமிய காயம் படாத நாட்களையெல்லாம், வாழ்வில் பயன்படாது வீணே கழிந்த நாள்கள் என்று நினைத்து நெஞ்சம் குலைகிறான்.

அப்படியென்றால், போர் வாழ்வே புகழ் வாழ்வு, புண்ணியம் நிறைந்த சுக வாழ்வு என்ப தாகவே வாழ்ந்தார்கள். அப்படி இருந்திருந்தாலும் பரவாயில்லை. தன் நாட்டுக்காக, தியாகம் செய்யும் தியாக உணர்வுடனே வாழ்ந்தது தான். நினைக்கும்பொழுதே நமது நெஞ்சம் செம்மாந்து களிக்கிறது.

**புரந்தார் கண்ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்து கோட்டக்க துடைத்து. (780)**

தன்னை அன்பாக ஆதரித்து, அரிய பல உதவி களைச் செய்த ஆருயிர் மன்னன், போர்க் களத் திலே சாய்ந்து கிடக்கும் தன்னைக் காண வந்து, கண்ணீர் மல்க நிற்கும் காட்சி ஒன்றே, தனக்குத் தகுதியான சாவு. பெருமையான மரணம் என்று ஒவ்வொரு வீரனும் உறுதியுடன் வாழ்ந்த காலம் தான் எங்கள் காலம்.

இதனால் தான், மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம் என்று பாடி மகிழ்ந்து வாழ்ந்தனர் என்று நிறுத்தினார் வள்ளுவர்.

உங்கள் காலம் தமிழர்களின் பொற்காலம் என்று நாங்கள் அறிகிறோம். இன்று இந்த உலகம் முழுவதும் தூரத்தில் குறைந்தும், காட்சியில் ஒன்றாகக் கலந்தும் உறவாடுகிற நிலைமையில் சுருங்கிவிட்டிருக்கிறது.

நீங்கள் கூறுகிற கருத்தை நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். உங்கள் காலத்தில், தமிழகம் போலவே கிரேக்கம் என்ற ஒரு தேசமும் இருந்தது. அந்த கிரேக்க மக்கள் வாழ்க்கையும் ஏறத்தாழ நம் தமிழக மக்கள் வாழ்க்கையைப் போலவே வாழ்ந்து சென்றிருக்கின்ற சிறப்பான வரலாறாகவே எழுதப்பட்டிருக்கிறது.

அக்கால கிரேக்க மக்களும், போர் வாழ்க்கையே புகழ்வாழ்க்கை என்று வாழ்ந்து போயிருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் என்று பிரிந்து அரசமைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டு படையெடுத்து, முற்றுகையிட்டு, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளமடக்கி வாழ முற்பட்டது போலவே, கிரேக்க தேசமும் பல சிறு சிறு நாடுகளாகப்பிரிந்து கொண்டு, அன்னிய தேசம் ஒன்றான ரோம் எனும் தேசத்திற்கு அடிமையாகும் வரை, போரிட்டுக் கொண்டேதான் வாழ்ந்திருந்தார்கள்.

அதற்காக ஒவ்வொரு நாட்டினரும், தமது குடிமக்களை குடும்பத்திலிருந்தே பிரிப்பது போல, 7 வயது முதலே இராணுவ வாழ்க்கை முறையில் வளர்த்தன. 7 வயது முதல் 60 வயது வரையிலும் அவர்களை போர் வாழ்க்கையில் ஈடுபட வைத்தனர். அவர்களும் தங்கள் வாழ்க்கையைத் தாய் நாட்டுக்காகத் தியாகம் செய்யவே தயாராக இருந்தனர்.

நீங்கள் எழுதியிருந்தீர்களே ஒரு குறள். அதற்கு உதாரணம் போலவே, அவர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

**உறினுயி ரஞ்சா மறவர் இறைவன்**
**செறினுஞ்சீர் குன்ற லிலர். (778)**

தம்மை வளர்த்து ஆளாக்கிய வேந்தன், வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினாலுங் கூட, உயிர் போகும் என்று தெரிந்தும் போருக்குப் போகின்ற வேகம் குன்றாமல் புறப்படுவான் உண்மை வீரன், என்ற நமது தமிழ் வீரம், கிரேக்க வீரர்களிடமும் நிறையவே இருந்திருக்கிறது.

பிறக்கின்ற குழந்தை பிண்டமாகப் பிறந்தாலும், அதை வாளால் கீறி, பின்னர் புதைக்கின்ற நமது மரபு, அவர்களிடமும் இருந்திருக்கிறது.

குழந்தை நோய் கொண்டு பிறந்தாலும், குறையுடன் பிறந்தாலும், அதனைக் கொண்டு போய்

மலைமேல் வீசி எறிந்து கொல்லுகின்ற மரபு, அவர் களுக்கும் இருந்தது. அதனால், வலிமையான சமுதாயம் ஒன்றை அமைக்கும் வழிமுறைகள் அந்த நாட்டினருக்கு எளிதாக இருந்தது என்றேன்.

தமிழர்களைப் போல இன்னொரு சமுதாயமா? அவர்களுக்கும் நம்மைப் போலவே புகழ் பெற்ற மரபா? வள்ளுவரின் வியப்பு மொழிகள் வெடித்து வந்தன.

ஆமாம். ஐயா! அவர்கள் போர் வெறியை சற்று புறம் போக்கத்தான் விளையாட்டுக்களைக் கண்டுபிடித்தனர். நம் தமிழ் மக்களின் போர் வேகமோ சண்டை, சாதல் என்று சாந்தமடைந்து போயிற்று.

கிரேக்கர்களின் போர் வேகம், அந்தப் போருக்கு இணையான இன்னொரு வேகமுள்ள விளையாட்டுகளுக்குப் பாதை காட்டிச் சென்றது என்றேன்.

எப்படி? எனக்கு விளக்கமாகக் கூறுங்கள் என்றார்! அவரது ஆர்வத்தின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு நானும் பேசத் தொடங்கினேன்.

# 12. ஆடும் ஆடுகளமும்

போர் செய்வதுதான் வாழ்க்கை; போரில் மடிவதுதான் வீரமரணம் என்று எண்ணிய கிரேக்க மக்கள், தங்கள் உடலை வலிமையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பியதுடன் நின்று விடாமல், பலப்பல உடற்பயிற்சிளையும் செய்தார்கள்.

அவ்வாறு தேகத்திற்குச் செய்த உடற்பயிற்சிகளை, நாடே ஒன்று சேர்ந்து, ஒரு சீராக, ஒருமித்த நெஞ்சுடன் செய்தார்கள், நல்ல உடலே நல்ல மனத்தை நல்குகிறது, வளர்க்கிறது. வாழவைக்கிறது என்ற இலட்சியத்துடன் உடலை வலிமை பெறச் செய்தார்கள்.

அழகான உடலமைப்பை அனைவரும் பாராட்டினர். அழகான உடலைப் பெற, ஆண்கள் எல்லோருமே முயன்றனர். தங்கள் உடல் அழகை

அனைவருக்கும் காட்டுவதற்காக, சில சமயங்களில் உடலில் ஆடை எதுவுமின்றி நிர்வாணமாக இருந்தும் தாங்கள் விருந்தினரை வீட்டில் வரவேற்றார்கள் என்றும் வரலாறு கூறுகிறது.

போரில் வெற்றிபெற்று வருகிற வீரனை கௌரவிப்பதற்காகவும்; போரில் இறந்துபோன வீரனைப் புகழ்ந்து மகிமைப்படுத்துவதற்காகவும்; திருவிழாக்கள் நடக்கிற சமயங்களில் தெய்வங்களைப் புகழ்ந்து அவர்களின் அருளைப் பெறுவதற்காகவும், அவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபட்டார்கள்.

கிரேக்கர்கள் தொடங்கி வைத்த அந்தக் கீர்த்தி மிக்க விளையாட்டான ஒலிம்பிக் போட்டிகளின் பிறப்பிற்காக, பல கதைகள் உள்ளன.

சுற்றி வளைத்துச் சொல்கிற எல்லா புராணக் கதைகளுமே, இருவருக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் பெற்ற வெற்றியைக் கொண்டாடவும், நினைவுபடுத்திக் கொள்வதற்காகவுமே ஒலிம்பிக் பந்தயங்கள் உருவாக்கப்பட்டன என்றே கூறுகின்றன.

போரிலே பெற்ற வெற்றியை ஆடிப்பாடி, கொண்டாடி, குதூகலமாக விளையாடி மகிழ்ந்தார்கள் என்றால், நமது தமிழ்ச் சொல்லான ஆடும், ஆடலும் என்ற இரு சொற்களும் அந்தப் பொருளையே அழகுறக் குறிப்பதாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறு பேசிக்கொண்டே வள்ளுவர் முகத்தைப் பார்த்தேன். தொடர்ந்து சொல்லுங்கள் என்பதாக அவர் விழியசைத்தார்.

என் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்களை, உங்கள் மூலம் கேட்கும்போது உள்ளம் குளிர்கிறது. காலங்களில் மாற்றம்; காலத்தின் மாற்றங்களுக்கேற்ப மக்களின் உடலில் மாற்றம், தொழில் மாற்றம், கொள்கை மாற்றம், கோட்பாட்டின் மாற்றம் எப்படி எப்படி என்பதாக நான் புரிந்து, கொள்ள உங்கள் விளக்கம் துணை புரிகிறது என்றார்.

அவரது அன்பான ஆணை, எனக்கு அளவிலா உற்சாகத்தை அளித்தது. என் விளக்கத்தைத் தொடர்ந்தேன்.

களங்களை நாம் மூன்று முக்கிய வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். பகையினைப் போக்கி, துயரினை நீக்கி, பாதுகாப்புத்தர மேற்கொள்ளும் போரினை நடத்துகிற இடம், **போர்க்களம்** என்று அழைக்கப்படுகிறது.

பதர்களை நீக்கி, நெல்மணிகளைக் குவித்தெடுக்கும் இடமாக உள்ள களம், **நெற்களம்** என்று புகழப்படுகிறது.

சோம்பலை நீக்கி. சுகத்தினை விளைத்து சுறு சுறுப்புடன் திறமைகளை வளர்க்கும் இடமான களத்திற்கு, **ஆடுகளம்** என்ற பெயர் வந்திருக்கிறது.

ஆர்வமுடன் ஆடுகின்ற, விளையாடுகின்ற ஆடுகளம் என்ற பெயர் இருப்பது சரிதான். ஆனால் நமது அருமைத் தமிழ்ச் சொல்லில், ஆடு என்ற சொல்லுக்கு வெற்றியென்ற ஒரு பொருள் உண்டு. அதைத் தான் நமது பண்டைய தமிழ்ப் புலவர்கள் அனைவரும் கையாண்டிருக்கின்றனர் என்றேன்.

எப்படிப் பாடியிருக்கிறார்கள் என்றார் வள்ளுவர்.

அடல், ஆடல், ஆடு, கொற்றம், கடத்தல் புறங்காணல், மாறழித்தல் வலம், வாகை, விறல், வெற்றி என்னும் தமிழ்ச் சொற்கள் எல்லாமே, வெற்றி என்ற பொருளையே குறித்து நிற்கின்றன.

சங்க காலத்தில் அரசாண்ட சேரமன்னர்களின் ஒருவனுக்கு ஆடுகோட்பாடு சேரலாதன் என்பது பெயர்.

அவனுக்கு ஏன் அந்தப் பெயர் ஏற்பட்டது என்றால், வெற்றியையே (ஆடு) தனது கொள்கை யாகக் (கோட்பாடு) கொண்டு, வெற்றிகளைக் குவித்து வீறுபெற்ற மன்னனாக வாழ்ந்தான் என்பதால் தான்.

இந்த ஒரு பாடல்தானா என்றார் வள்ளுவர்.

ஒருவனை மட்டும் ஆடு என்று பாடி விட்டுப் போய் விடவில்லை. பிற புலவர்களும் பாடியிருக்கின்றனர். ஒரு குடியை வெற்றிக் குடி என்று புகழ வந்த புற நானூற்றுப் புலவர், ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த என்று சிறப்பித்துப் பாடினார்.

அந்த ஆடுகுடி என்ற சொற்றொடருக்கு வெற்றிக்குடி என்றே பொருள் எழுதியிருக்கின்றார்கள் உரையாசிரியர்கள்.

**"ஆடுகொளக் குழைந்த தும்பை"**
**ஆடுகுடி**
**ஆடுகொள் வரிசை:**
**ஆடுகொள் வெற்றி**
**பெறவரிது ஆடே**
**ஆடுகொள் வியன் மார்பு"**

என்ற வரிகளெல்லாம், வெற்றி என்ற பொருளையே விரிவாகத் தந்திருக்கிறது. என்றேன்.

எங்கள் காலத்து நோக்கமும் வெற்றியை நோக்கித்தான் வீறுபெற்று நடந்தது. போர் முகமே புகழ்முகம் என்ற நோக்கில் தானே, நான் பொருட்பாலையே எழுதினேன்.

அதில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று பிரித்து, போர் வாழ்க்கைப் பண்புகளை, பெருமிதமாகக் காட்டியிருக்கிறேன் என்றார் வள்ளுவர்.

நான் விவரித்த கிரேக்கர்கள், தங்கள் காலத்து வாழ்க்கை முறையை, விளையாட்டு முறையை, விவரமாகவே எழுதி வைத்துவிட்டுச் சென்றார்கள். ஆகவே, அவர்கள் நாட்டு வரலாறு அகிலத்தில் சிறப்பாக நிற்கிறது. தமிழர்கள் தாங்களாகவே ஆண்டு அனுபவித்து விட்டுப் போய்விட்டார்கள். குறிப்பு வைக்காத காரணத்தால்தான், தமிழர்தம் சிறப்பு எல்லாம் தரையில் புதைந்த சிற்பங்களாகப் போய்விட்டன என்றேன்.

உண்மைதான். தமிழர்களின் தன்னடக்கமே அதற்குக் காரணம். இப்படி எனக்குத் தெரிந்திருந்தால், என் வாழ்க்கைக் குறிப்பினைக் கூட நன்கு எழுதி வைத்துச் சென்றிருப்பேன். இப்படி எழுதி வைத்திருந்தால், என்னைப் பற்றி ஏராளமான கதைகள் ஏற்பட்டு இருக்காதே என்று பெருமூச்சு விட்டார்.

நீங்கள் உங்கள் காலத்துப் பண்புகளைக் காத்திருக்கின்றீர்கள். என்றாலும், உங்கள் குறளில் உங்களையறியாமலேயே, அதிகமான விளையாட்டுக்கள் பற்றிய சிந்தனைகளைக் கொடுத்துச் சென்றிருக்கின்றீர்கள் அதுவே, எங்களுக்குப் போதும் என்றேன்.

விளையாட்டுக்கள் பற்றி நான் நிறைய சொல்லியிருக்கிறேனா! எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே என்றார் வள்ளுவர்.

உங்களுக்குப் புரியாமல் ஒன்றும் இல்லை. காலங்கள் அதிகமாகிவிட்டதால், கொஞ்சம் மறந் திருக்கின்றீர்கள். நான் சூழ்நிலைகளை சுட்டிக் காட்டுகிறபோது, உங்கள் நினைவுகள் தென்ற லாகத் திரும்பும் என்றேன்.

நிச்சயம் என் நினைவுகள் திரும்பும். என் குறள்கள் எல்லாம் எனக்கு மனப்பாடம் என்றார்.

ஆமாம் நீங்கள் ஒன்றே செய்தீர்கள். நன்றே செய்தீர்கள் என்றல்லவா உலகம் புகழ்கிறது. உங்கள் ஊனும் உயிரும் உயிர்த்தல்லவா இந்த தெய்வக் குறள்களை திருவாய் மலர்ந்தருளினீர்கள் என்றேன்.

உண்மைதான் உண்மைதான் என்றார்.

கிரேக்க மக்கள் போர் புரிவதற்காக, பயிற்சி களை மேற்கொண்டிருந்தார்கள். போர்க்கலன் களைக் கையாளும் பலம் பெருகுவதற்காக, பற்பல உத்திகளைக் கையாண்டார்கள்.

அவற்றின் அரிய பிறப்பாகத்தான் விளை யாட்டுக்களை உருவாக்கினார்கள். அந்த விளை யாட்டுக்களில் எல்லாம், போர்க்களத்தில் பயன்

படுத்தப்பட்ட **வில், வேல், வாள், கவசம்** போன்ற பொருட்களையே பயன்படுத்தினர்.

தமிழர் தம் வாழ்வும் போரையே தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தது. தமிழர் தம் வாழ்க்கையை சிறப்பாக விளக்க வந்த ஒரு பாடலைப் பாடுகின்றேன் என்றேன்.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே !**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே !**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே !**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே !**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே !**

**(புறநானூறு 313)**

நல்ல வலிமையுள்ள மக்களைப் பெற்றுத் தருவது தாயின் கடமை. அவனை வீரனாக்குதல் தந்தையின் கடமை. அந்த வீரனுக்கு வேல் செய்து தருவது கொல்லரின் கடமை. அவனுக்குப் போர்ப் பயிற்சிகளை அளிப்பது அரசனின் கடமை. இவ்வளவையும் பெற்று அஞ்சாது போர் செய்து, வெற்றி பெறுவது அந்த வீரனின் (காளை) கடமை என்பது பொருள்.

ஆமாம்! அந்நாளில் தமிழர்கள் தம் வாழ்க்கை, போர்த் தரத்திலும் திறத்திலும் தலைதூக்கியே நின்றது என்றார் வள்ளுவர்.

கிரேக்கர்கள் விளையாட்டில், வில்போட்டிகள் (Archery) இருந்தன. வேலெறியும் போட்டிகள் (Javelin Throw) இருந்தன. வாள் சண்டைகள் (Fencing) இருந்தன என்றேன்.

அந்த மூன்றும் தமிழர்களின் படையில் தனித்துவம் பெற்றிருந்தனவே என்றார் வள்ளுவர். இப்பொழுது எனது நினைவுக்கு வருகிறது. இந்த வில்லும், வேலும், வாளும் பற்றி என் குறளில் பல இடங்களில் பாடியிருக்கிறேன் என்றார்.

பாடுங்கள் என்று நான் கேட்பதற்கு முன்னதாகவே, தமிழரின் வீரம் பற்றி நான் பாடிய பாடல்களைக் கேளுங்கள் என்று பாடத் தொடங்கியவர் சற்று அமைதியானார்.

இந்த மூன்று ஆயுதங்களைப் போரில் பயன்படுத்துகின்ற இடங்களை நாம் பார்க்க வேண்டும்.

மிக அருகில் நின்று போரிட, வாள் பயன்படுகிறது. சற்றுத் தொலைவில் உள்ளவர்களைத் தாக்க வேல் பயன்படுகிறது. மிகத்தொலைவில் உள்ளவர்களைத் தாக்க வில் பயன்படுகிறது.

அவர் பேச்சுக்கிடையில். வாள் வாள் என்ற சத்தம் கேட்டுத் திரும்பினோம். ஒரு நாய் எங்களை நோக்கிப் பாய்ந்து வந்தது.

யாரோ அதைக் கல்லால் அடித்துக் காயப் படுத்தியிருப்பார்கள் போலும். நாங்கள் ஒதுங்கிக்

கொண்டோம். அது இன்னொரு நாயின் மீது விழுந்து கவ்வியது.

நாய்ப் போராட்டம் எங்கள் கருத்தைக் கவர்ந்ததால், எங்கள் பேச்சு தடைபட்டது

இன்றைய தமிழகத்தில் **நாய்ப் பேரும் வாய்ப் பேரும்** நிறையவே இருக்கிறது என்று சிரித்தார் வள்ளுவர்.

ஆமாம்! ஒருவரை ஒருவர் **சாய்ப்பேரும் மாய்ப் பேரும்** நிறைய இருக்கிறார்கள் என்றேன்.

தமிழர்களின் பண்பு இது என்று அவர் பேசிய விதத்தில் கேலி தெரிந்தது. முகத்தில் வேதனை தெரிந்தது.

# 13. வில்லும், வேலும், வாளும் வாழ்வும்

சாலையிலே நாய்களின் பாய்ச்சல், கூச்சல், எங்கள் பேச்சை சற்று திசை மாற்றினாலும், மீண்டும் நாங்கள் தீஞ்சுவைத் தமிழர்தம் போராயு தங்கள் பற்றிய பேச்சைத் தொடர்ந்தோம்.

ஆமாம்! வள்ளுவர், தம் குறள் பற்றிய விளக் கத்தில் ஆழ்ந்தார்.

நான் எந்தப் பொருளை விளக்கமாகக் கூறத் தொடங்கினாலும், அதற்கு, சான்றுகள் கூறிச் செல்வது தான் என் வழக்கமாக இருந்தது. அத் தகைய சான்றுகளையும் அன்றாட வாழ்வில், அனுதினமும் மக்கள் கொண்டிருந்த பழக்க வழக் கங்களிடை இருந்து தான் எடுத்துக் கொண்டேன்.

வாளும், வேலும், வில்லும் மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தால்தான், என் குறளில் அவைகள் இடம் பெற்றுக் கொண்டன என்றார்.

**வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு (882)**

மிக அருகாமையில் இருந்து பயன்படுத்தப் படுகிற ஆயுதம் வாள். அது வெளிப்படுகிற விதம், நிச்சயம் வேதனையே உண்டு பண்ணும். அப்படி வாள்போன்று வெளிப்படுகிற பகையைக் கண்டு அஞ்ச வேண்டாம். உட்பகையைக் கொண்டு உறவாக நெருங்கியிருக்கும் பகைக்கே அஞ்ச வேண்டும் என்பதே இதன் பொருள்.

வாளானது வீரர்களின் உற்ற துணை போல, என்றும் இருப்பது, மனிதருக்கும் பகை என்பதும் கூடவே தொடர்ந்து இருக்கும் ஒன்றாகும். ஆகவே, தான், வாள் (உறவு) போன்ற பகை என்று பாடிக் காட்டினேன் என்றார் வள்ளுவர்.

பெண்களின் கண்களை, வசப்படுத்துகிற ஆற்றல் உள்ளவை என்று வருணிப்பார்கள் புலவர்கள். அந்த ஒளியை வாள் ஒளிக்கு நான் ஒப்பிட்டுக் காட்டினேன்.

அதிகமாகப் பயன்படுகிற பொருட்கள், பாது காப்புடன் காப்பாற்றப்படுகிறபொழுது, பளபளப்பையும் சிலிர்ப்பையும் பெற்றிருக்கும்.

ஒரு பெண், தனது தலைவனைக் காண, ஏங்கிக் காத்திருக்கிறாள். தலைவனோ வரவில்லை. வரும் வழியைப் பார்த்துப் பார்த்து, வருந்தி வருந்தி, அழுத கண்ணுடையவளாக வாழ்கிறாள். அதனால் அவள் விழியின் வாள் போன்ற ஒளி, வற்றிப் போயிற்று என்று ஒரு பாடலைப் பாடியிருக்கிறேன்.

**வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல். (1261)**

தலைவன் பிரிந்து சென்ற நாட்களை எண்ணிப் பார்க்க, விரலில் தினம் கோடிட்டு சுவற்றில் தேய்த்ததால், விரலும் தேய்ந்து போயிற்று, அவர் வரவு பார்த்து வாட்டமுற்ற வாள் போன்ற விழிகள், சிறப்பான ஒளியிழந்து போயின.

வாளும் வலிமையும் ஒரு வீரனுக்கு அழகு. வலிமையில்லாதவனுக்கு வாள் ஒரு கேடா? இந்தக் கருத்தை வற்புறுத்துகிற என் குறள், என் கால இளைஞர்களின் ஏற்றமான வாழ்வு முறையையே விளக்க முற்பட்டது.

**வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்**
**நுண்ணவை அஞ்சு பவர்க்கு (762)**

வன்கண் என்றால் வலிமை. வலிமையில்லாதவர்களுக்கு வாள் இருந்து என்ன பயன்! அது அவனைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, படுகாயப் படுத்திவிடும். அதுபோலவே, கற்றவர் சபையில்

இருக்கப் பயப்படும் ஒருவருக்கு, நூல்களைக் கற்றதால் என்ன பயன் கிடைக்கும்?

அதனால் தான், வாளிருந்து என்ன பயன் என்று பாடினேன். படைக் கருவியைப் பயன் படுத்தத் தெரியாதவன் பேடி, பகடி, மக்களுள் பதர் என்றே கூறலாம் என்று விளக்கினார்.

**தன்னாயுதமும் தன்கைப் பொருளும்**
**பிறர்கை கொடுக்கும் பேதையும் பதரே.**

என்ற ஒரு பாடல் உண்டு என்று நானும் அவருக்குப் பாடிக் காட்டினேன்.

ஆமாம்! வலிமையில்லாதவர் கையில் உள்ள ஆயுதம், அவரது பகைவருக்குப் போய்ச் சேரும். அந்த ஆயுதமே அவர்களின் ஆயுளுக்கு முடிவாய் போய்விடும் என்ற வள்ளுவர், வேல் பற்றிப் பேசத் தொடங்கினார்.

வேல் என்பது வீசி எறியப்படுகிற போர்க் கருவியாகும். அது சற்று தொலைவிலுள்ள பகையை அல்லது பொருளைக் குறி பார்த்து எறியப்படுவதாகும்.

வள்ளுவர் தன் வேல் பற்றிய குறளைத் தொடர்ந்தார்.

**காலாழ் களரி நரிஅடும் கண்அஞ்சா**
**வேல்ஆண் முகத்துக் களிறு. (500)**

தன்னைச் செலுத்துகின்ற பாகனுக்குப் பயப் படாத கொலை வேகம் உள்ள யானை, வேல் வைத்து வீசுகின்ற போர் வீரனுக்கும் அஞ்சாமல் அவன் மீது மோதி, தன் கொம்பில் கோர்த்துக் கொண்டு வெற்றித் திமிரில் திரியும். அப்படிப்பட்ட யானை, சேற்றில் சிக்கிக் கொண்டால், சிறு நரியும் யானையை வென்று விடும்.

இந்தப் பாடலில், வேலானது, வீரன் கையில் இருக்கிறது.

> **கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்**
> **மெய்வேல் பறியா நகும்.** (774)

கையிலே படை ஆயுதமான தன் வேலினை, எதிரே பாய்ந்துவந்த யானையின் முகத்தில் வீச, அந்த யானையோ, தன் முகத்தில் ஆழமாக ஊன்றிய வேலோடு ஓடிப்போக, மீண்டும் ஒரு யானை அவ்வீரனை நோக்கி வரவே, எறிவதற்கு வேல் எதுவும் இல்லாமல், தன் மார்பிலே தைத்து நின்ற வேலினைப் பிடுங்கி, யானைமீது எறிந்து, சிரித்து மகிழ்கிறான் அந்த வீரன்.

போரிடும் மகிழ்ச்சி — வெற்றி வெறி — தன் மார்பு வேலைப் பிடுங்கி எறிகிற வேகம் —அதனால் உண்டாகும் வலி வேதனை, எல்லாவற்றையும் மறக்கச் செய்கிறது. மறந்து நகைக்கச் செய்கிறது. இது தான் தமிழரின் வேல் வீசும் வீரம் என்றார்.

**கான முயலெய்த அம்பினில் யானை**
**பிழைத்த வேல்ஏந்தல் இனிது. (772)**

இந்தக்குறளில், வேலானது வேட்டைக்காரன் கையில் உள்ளது. வேட்டைக்குச் செல்கிறான் ஒரு வீரன். அவன் நோக்கம் ஒரு விலங்கை வேட்டை யாடுவது என்பது தான்.

அதற்காக சிறிய விலங்கைக் கொன்று சிலிர்த் தெழுவதைக் காட்டிலும், உயர்ந்த வலிமையான மிருகத்தை வேல் வீசி சாய்க்க முயன்று தோற்பது, சிறந்த வீரத்திற்கு அழகு என்று இந்தக் குறள் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

முயல்மீது அம்பை வீசி, மாய்த்து மகிழ்வதை விட, யானைமேல் வேலை வீச முயன்று, தோற்பது வீரனுக்குப் பெருமை.

முடியாத கடினமான காரியத்தில் ஈடுபடுவதே பெருமைக்குரிய வீரமாகும். ஆகவே, வேலைப் பயன்படுத்துகிற வீரனின் தூய பண்பையும் கோடிட் டுக் காட்டினேன் என்றார் வள்ளுவர்,

இன்னும் ஒரு குறள். இந்தக் குறளில் வேல் மன்னவன் கையில் இருக்கிறது என்றார். வள்ளுவர்.

**வேலன்று வெற்றி தருவது மன்னவன்**
**கோலது கோடாது எனின் (546)**

மன்னவனிடம் பகையைப் போக்க வேல் இருக்கிறது. மக்களைக் காக்க கோல் இருக்கிறது. அதாவது செங்கோல் இருக்கிறது. வேலை முறையாக வீசும் போதுதான் வெற்றி கிடைக்கிறது. செங்கோலை சாய்த்திடாமல் வளைக்காமல், நீதியோடு ஆளும்போதுதான் நாட்டில் அமைதியும் செழிப்பும் கிடைக்கிறது.

ஆகவே குடிகாக்கும் கொற்றவன், முறை காக்கும் முதிர்ந்த பண்பாற்றலுடன் வாழ வேண்டும் என்று மொழிந்தேன்.

இந்தக் குறளில் பாருங்கள். வழிப்பறி கள்வனிடம் வேல் இருக்கிறது என்று சிரித்தார் வள்ளுவர்.

**வேலொடு நின்றான் இடுஎன் றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு** (552)

பொதுமக்களிடம் பொருள்தரச் சொல்லி வற்புறுத்தி வாங்குகிற மன்னவன், வழிப்போக்கர்களின் வழியில் நின்று வேலைக் காட்டி, அவர்தம் பொருள் பறிக்கும் கள்வனைவிட, அற்பமானவன்.

அதனால்தான், வழியிலே வேலொடு நிற்கும் கள்வன் அச்சுறுத்திப் பறிக்கும் இழி நிலையை, அரசனுக்கு ஏற்றிச் சொன்னேன்.

எனவே, போர்வீரன், வேட்டைக்காரன், போரிடும் வீரன், நாடுகாக்கும் மன்னவன்,

கொடுமைபுரியும் கள்வன் இவர்களிடம் இருக்கிற வேல் பற்றிக் கூறினேன் என்று கூறிய அவர். இதனை படைச் செருக்கு அதிகாரத்தில் பாடிய காரணத்தையும் கூறினார்.

படையில் வீரமும், வெற்றியும், புகழும் பெருமிதமும் தருவது வேலாயுதம்தான். அந்த வேலை வைத்தேதான், நான் படைச் செருக்கு என்று கூறினேன்.

அந்த வேல் வலிமைக்கு மேலே மனவலிமை கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதற்கு ஆதாரம். இதோ இந்தக் குறள்தான்.

வெறியோடு ஒரு பகைவன் வருகிறான். அவன் கையில் கொடிய வேல் இருக்கிறது. அவன் வீசி எறிய முற்படுகின்றான். இந்த செயல்களையெல்லாம் கண்டு கொதித்து, சினமுற்று, சீற்றமுடன் பார்க்கின்ற விழிகள், அவன் வேல் கண்டு கண்ணிமைத்துவிட்டால், அவன் வீரனல்ல. கோழை. வீர மரபிற்கே இழுக்கு என்று பாடினேன்.

**விழித்தகண் வேல்கொண்டெறிய வழித்திமைப்பின்**
**ஓட்டன்றே வன்க ணவர்க்கு** **(775)**

தமிழர் தம் மக்கள், தனிச் சிறப்பு வாய்ந்த வீர மக்கள். வேல் பாய வந்தாலும், விழியை இமைக்காத வீரம் மிக்கவர்கள் என்று விம்மும் மார்பு ஏறி இறங்க பேசி மகிழ்ந்தார்.

நீங்கள் வில்லைப் பற்றி எழுதவில்லையே என்றேன். இதோ என்று தொடங்கினார்.

சொல் வணக்கம், வில் வணக்கம் என்று இரண்டு சொற்களை ஒரு குறளில் கூறினேன். சொல் வணக்கம் உங்களுக்குத் தெரியும். மிகக் குழைவாக, பணிவாக, அடக்கமாகப் பேசும் நிலை அது.

**வில் வணக்கம் என்பது வில் வளைவது போன்றது.**
**வில் வளைய வளையத்தான்**

அதனுள் நுழைத்திருக்கும் அம்பிற்கு வேகம் பிறக்கும்,

இந்த வில் வளைந்து விட்டது என்றால், அம்பு பாய்வது உறுதி. அழிப்பது திண்ணம் என்பதால் தான்; வில்லும் வணங்கும். சொல்லும் வணங்கும் என்று பாடினேன்.

ஆனால், பகைவரின் சொல்வணக்கம் கேட்டுக் குளிர்ந்து போகக்கூடாது, பகையில் வில்லின் வணக்கம் பார்த்து, அஞ்சாமலும் இருக்கக்கூடாது. என்று வில்லாளர்களின் நுண்மையைக் கூறினேன்.

**சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க**
**வில் வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான் (827)**

அதேபோல, வில்லாளர்களை, வில்லேருழவர் கள் என்று பாடினேன். அதே போல சொல்லேருழ வர்கள் என்றும் சொன்னேன் என்றார் வள்ளுவர்.

கிரேக்கமும் தமிழகமும் வீரத்தால் ஒன்றுக்கொன்று இளைத்தவை அல்ல எனினும், வரலாறு எழுதிய காரணத்தால், அவர்கள் வாழ்க்கை உலகத்தில் உன்னதமானது என்று உலா வந்திருக்கிறது. அடக்கத்தால் வாழ்ந்து சென்ற தமிழர்களின் ஆற்றல்மிக்க வாழ்வு, சான்றில்லாமல் அமிழ்ந்து கிடக்கிறது என்றேன்.

கிரேக்க வரலாற்றினைப் பார்க்கும்போது, ஒவ்வொரு குடிமகனும் நாடுகாக்கும் போர் வீரனாகவே வாழ்ந்திருக்கிறான் என்றே அறிய முடிகிறது. அத்தகைய போர் வீரனே, வாழ்க்கையில் கலை இலக்கியரசனை மிகுந்தவனாக, விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்திருக்கிறான்.

உடலுக்குப் பயிற்சிகள், அறிவுக்கு இசையும் இலக்கணமும், போருக்கு வலிமை, நாட்டுக்குத் தியாகம் என்ற அமைப்பு கிரேக்கத்தில் இருந்தது.

அதுபோலவே தமிழகத்து வீர மக்களும் வீரர்களாக, விவேகிகளாக வாழ்ந்திருக்கின்றனர். அதனால்தான் சான்றோன் என்று தமிழக போர் வீரர்கள் அழைக்கப்பட்டனர்.

சான்றோன் என்றால் போர் வீரன் என்று தானே பொருள் என்று வள்ளுவர் கேட்டார்.

ஆமாம்! என்றேன்.

# 14. சான்றோரும் ஆடவரும்

சான்றோன் என்ற சொல்லுக்கு பொருள் விளக்கம் தருமாறு என்னைக் கேட்டு, சற்று நேரம் பொறுத்திருந்த வள்ளுவர்; முன்னரே சான்றோன் என்றால் தக்கார் என்று விளக்கம் தந்திருக்கிறேனே என்றார்.

ஆமாம். தக்கார் என்றால், சகல திறமைகளையும் உடையவர் என்ற பொருளில் கூறினீர்கள். மேலும் **சான்றோன்** என்ற சொல், **வீரன்** என்ற குறிப்பையும் உடையதாக விளங்குகிறது என்று விளக்க ஆரம்பித்தேன்.

சான்றோன் என்ற சொல்லுக்கு, 'நற்குடியில் பிறந்து, கல்வி கேள்விகளில் சிறந்து, நற்பண்புகள் நிறைந்தவர் என்று எல்லோரும் பொருள் கூறுகின்றார்கள். இது ஒரு இயல்பான விளக்கமே.

ஆனால், சான்றோன் என்னும் சொல். வீரன் என்று குறிக்க வந்த சொல்லாகவே, இலக்கியங் களில் பல்வேறு இடங்களில் வருகின்றன.

**பாசறைப் பல் சான்றீர்** என்ற ஒரு வரி இருக் கிறது. பாசறையில் இருக்கின்ற வீரர்களே என்று அதற்கு விளக்கம் தருகின்றார்கள்.

**சான்றோர் மெய்ம்மறை** என்பது, வீரனுக்குரிய உண்மை வழி என்றும், சான்றோனாக வீரனாக விளங்குகிற காளையான ஒரு இளைஞனுக்குரிய கடமை, **களிறெறிந்து பெயர்தல்** அதாவது. யானையை வென்று மீளுதல் என்பதாகப் பொருள் தருகின்றன.

ஆண் மக்களை **ஆடவர்** என்று அழைக்கின்றார் கள். ஆடு+அவர் என்று பிரிகின்ற சொற்களுக்கு, வெற்றியாளர்கள் என்ற பொருள் கிடைக்கிறது.

ஆடு என்றால் **வெற்றி** என்பது ஒரு பொருள்.

ஆண்மையுள்ள மக்களே ஆண் மக்கள். அவர் களிலும் மேன்மையுள்ளவர்கள் வீரர்கள். அவர்கள் தான் ஆடவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

அந்த வீரத்திற்கும், ஆண்மைக்கும், வெற்றிக் கும் போராடுகிறவர்கள் எல்லோரும், இந்தப் பண் புகளுக்கு சான்றாகத் திகழ்வதால் தான், சான் றோர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்று என் விளக்கத்தைக் கூறினேன்.

உண்மை தான், உண்மைதான் என்று இரண்டு முறை உரக்கவே கத்தி விட்டார்.

இருப்பது சாலையோரம் என்று அறிந்து, என் முதுகை அன்போடு தட்டிக் கொடுத்து, தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அருவியாக அவர் பேச்சுத் தொடர்ந்தது.

தமிழர்தம் வாழ்க்கையை, தொல்காப்பியப் பெருந்தகை, அக வாழ்க்கை, புற வாழ்க்கை என்று இரு பிரிவாகப் பிரித்து விளக்கம் தந்தார்.

அகத்திணை என்பது தமிழர்கள் தம் இல்லற வாழ்க்கை. புறத்திணை என்பது, மக்களின் புற வாழ்க்கையை விளக்குகிறது. அதாவது, புறத் திணை ஒவ்வொன்றிலும், அமைந்துள்ள துறை யெல்லாம், அந்த காலத்து மக்கள் நடத்திய போர் முறைகளையே விளக்கின.

அதில் நாம் ஒரு குறிப்பைக் காண வேண்டும். எங்கள் காலத்தில் இருந்த ஆடவர்க்குரிய தன்மை கள் என்ன வென்றால், ஒன்று **வீரப் பெருமை**. மற்றொன்று **உடல் உரம்**.

அவர்களது பழக்கம், வழக்கம், ஒழுக்கம் எல் லாம் **அமர் கொள் மரபு**. அதாவது போரில் பங்கு பெற்று வீர வாழ்வு வாழ்வது என்பதாகவே அமைந் திருந்தது.

தொல்காப்பியர் எனக்கும் முந்திய காலத்தில் வாழ்ந்த நல்காப்பியர் அல்லவா!

அவர் காலம், போர் வாழ்வே சீர் வாழ்வு, என்று அமைந்திருந்தது போலும். அதுவே என் காலத்திலும் தொடர்ந்தது. அதனால்தான், என் பாடல்கள் எல்லாவற்றிலும் போர்த்திறம் பற்றிப் பாடுகிற சூழ்நிலை மிகுதியாக இருந்து விட்டது.

நீங்கள் கூறிய சான்றோன் எனும் சொல்லை, நானும் பல இடங்களில் பாடியிருக்கின்றேன் என்றார்.

அவற்றில் வரும் கருத்துக்கள் எல்லாம் வீரம். அந்த வீரத்தில் பிறக்கும் பண்புகள், அன்பு மற்றும் அழகு போன்றவையை வெளிப்படுத்தும் தன்மை யிலே குறள்கள் அமைந்திருப்பதை, நீங்கள் உணரப் போகின்றீர்கள் என்று தன் குறள்களைக் கூறத் தொடங்கினார்.

நானும் பரபரப்படைந்தேன் குறள்களைக் கேட்க. தான் பெற்றெடுத்த காலத்தில் பெற்ற மகிழ்ச்சியை விட, ஒரு தாயானவள், தன் மகன், மக்கள் போற்றும் வீரனாக விளங்குகிறான் எனக் கேட்கும் போது, அந்தத் தாய் பெருமகிழ்வு பெறுகிறாள். களிப்பின் உச்சிக்கே போகிறாள்.

**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை**
**சான்றோன் எனக்கேட்ட தாய் (69)**

அப்படி மகிழ்ச்சிப் பெருக்கில், திளைத்து மகிழ்கின்ற தாய் ஒருத்தி, பசியால் வருந்தி வாடுகிற போதும், ஒரு வீர மகன் மற்ற வீரர்கள் பழித்துப் பேசுகின்ற இழிவான காரியங்களைச் செய்யமாட்டான்.

**ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை. (656)**

அதுமட்டுமல்ல. வீரர்களாகிய சான்றோர்கள், தாய்க்கு முன்னால் மட்டுமல்ல, மற்றும் வீரர்கள் விவேகிகளாக விளங்குகிற சான்றோர்கள் முன்பு, மதியை மயக்குகின்ற கள் போன்ற போதைப் பொருட்களையும் உண்ணமாட்டார்கள்.

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதா லென்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி (923)**

**உண்ணற்க கள்ளை, உணில் உண்க சான்றோரால்**
**எண்ணப்பட வேண்டாதவர் (925)**

இப்படி வள்ளுவர் கூறிக் கொண்டு வருகிற போது, நானும் வழிமறித்தேன்.

கள் போன்ற போதைப் பொருளைக் குடிக்கக் கூடாது என்று உங்கள் காலத்தில் இருந்த கட்டுப் பாடு, எங்கள் காலத்திலும் இருக்கிறது.

வீரர்கள் என்றால் உடலில் வேகம் வரு வதற்குப், போதைப் பொருட்களை உட்கொள்கிற

பழக்கம், எல்லா காலத்திலும் இருந்திருக்கிறது என்ற உண்மையை, உங்கள் குறளால் புரிந்து கொள்ள முடிகிறது என்றேன்.

எங்கள் காலத்தில் கள் இருந்தாலும், அது தருகின்ற போதையும், வருகிற வீரமும், தருகிற திறமையும் போதவில்லை என்று, புதிது புதிதாக போதைப் பொருட்களைக் கண்டுபிடித்து, உண்டு மகிழ்கின்றார்கள். அவர்களுக்குத் தண்டனையும் உண்டு என்று நான் கூறியவுடன், அவர் புன்னகைத்தார்.

வீரர்களாக விளங்குபவர்களுக்கு உண்மைதான் விளக்கமாக இருக்கும். அவர்கள் பொய் பேசுவதையே இழிவாக எண்ணுவார்கள். இதை போன்ற பல பண்புகளுக்கு உரியவர்கள் தான் வீரர்கள், என்னும் சில குறள்களைக் கூறினார்.

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு. (299)**

பொய் பேசாத பேராண்மை, வீரர்களுக்கே உண்டு. அதைவிட இன்னொரு பேராண்மை இருக்கிறது. அதுதான் பிறருடைய மனைவியை ஏறெடுத்துப் பார்க்காத, விரும்பாத, நயக்காத பண்பு. காம உணர்விலும் கண்ணியம் காக்கும் வீரம் அது.

**பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனன்றோ ஆன்ற ஒழுக்கு. (148)**

அது மட்டுமல்ல. நல்ல வீரர்களுக்கு நல்ல பண்புகள் உண்டு. அதில் ஒன்று நட்பு பாராட்டுதல்; நட்புக்கு இனிமையாக நடந்து கொள்ளுதல். இதற்கு உயர்ந்த மனப்பண்பாற்றல் வேண்டும்.

**நட்பிற்கு உறுப்பு கெழுதகைமை, மற்றதற்கு**
**உப்பாதல் சான்றோர் கடன். (802)**

நட்டார் என்றால் நண்பர். உப்பாதல் என்றால் இனிமையாகுல்.

இனிமைப் பண்புகளுடன், குண நலம் கொண்டவராகவும் சான்றோர்கள் விளங்கு கின்றார்கள். அதுவே அவர்களுக்கு இயல்பாகவும், அதிகமாகவும் உள்ள நலமாக விளங்குகிறது.

**குணநலம் சான்றோர் நலமே, பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூம் அன்று (982)**

குணநலம் குன்றியவர்கள், குறைந்தவர்கள், குணக்கேடர்கள் யாரும், மற்ற எல்லா வளங்களும், நலங்களும் பெற்றிருந்தாலும் கூட, அவர்களை சான்றோர்கள் என்று மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் நடையழகும் உடை அழகும், எல்லாமே அவர்களுக்கு ஏற்பட்ட நோய் போலத் தோன்றுமே தவிர, மேன்மையாக விளங்காது.

**அணியன்றோ நாணுடைமை, சான்றோர்க்கு, அஃதின்றேல்**
**பிணியன்றோ பீடு நடை. (1041)**

நன்மை தீமை, பாவம் புண்ணியம், உண்மை பொய், அறம், மறம், போன்றவற்றை ஆராய்ந்து, நல்லது செய்து, அல்லது அகற்றி, நேரிய வழியில் நிற்கின்ற பண்பை, சான்றோர்கள் மேற்கொண்டு விளக்குவார்கள்.

**சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி. (118)**

சாதாரண மக்கள் வீரனாகும் போது, ஆடவர் என்று பெயர் பெறுகின்றார்கள். வீரமும், விவேகமும், ஆற்றலும் ஆண்மையும் பெருகிக் கொள்கிற போது, அவர்களுக்கு அனுபவ அறிவும், செயலறிவும் மிகுந்து, **சான்றோர்கள்** என்ற பெயரையும் புகழையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

உடல் உரம் உள்ள வீரர்களுக்குத் தான், பெருந்தன்மைப் பண்புகள் பெருகும். உடல் உரம் இழந்தவர்கள், மக்கள் என்ற தகுதியையே இழந்து விடுகின்றார்கள்.

இந்த எண்ண எழுச்சியில்தான், நான் சான்றோர் என்ற சொல்லை பல இடங்களில் (12 இடங்களுக்கு மேலாக) பயன்படுத்தியிருக்கிறேன்.

நான் வீரத்தைப் பற்றி, வீரப்பண்பைப்பற்றிப் பாட, நான் மேற்கொண்டிருந்த தொழிலும், நான் போர்களத்தில் பெற்ற அனுபவங்களுமே மிகுதியாக உதவின என்றார் வள்ளுவர்.

விளையாட்டுக்களும், போர்களச் செயல் முறைகளிலிருந்து தான் பிறந்திருக்கின்றன என்ற ஒரு கருத்து விளங்கி வருகிறது என்றேன்.

பிறகென்ன? உங்கள் விளையாட்டும் எங்கள் காலத்து போர்ச் செயல்களும் ஒன்று தானே! உங்கள் வினாக்களுக்கு என்விடையாக, என்னுடைய குறள்கள் இருக்கின்றன என்றார்,

நானும் சரியென்றேன். அதற்குள் பலர் ஓடிக் கொண்டிருக்கும் காட்சி தெரிந்தது!

ஆச்சரியமாக அது என்ன என்றார்?

# 15. ஆடுகளமும் ஆடரங்கமும்

ஆயிரக் கணக்கானோர் ஓடிக்கொண்டிருந்த காட்சியைக் கண்ட வள்ளுவர், இது என்ன ஓட்டம் என்று ஆச்சரித்துடன் கேட்டார்.

இது ஒரு ஓட்டப் போட்டி, நீண்ட தூரம். ஓடுகிற போட்டி, ஆண்களும் பெண்களுமாக, தங்கள் உடல் திறனை பிறருக்கு வெளிப்படுத்தி, வெற்றி ஈட்டும் பொருட்டு, இப்படிப்பட்டப் போட்டிகளை நாங்கள் நடத்துகிறோம். என்றேன்.

இதன் முடிவு எப்படியிருக்கும் என்றார்.

ஓட்டத்தில் முதலாவதாக வருகிறவர் வெற்றியாளர் ஆகிறார். அவருக்குப் பரிசும் பாராட்டும் கிடைக்கும் என்றேன்.

இந்தப் போட்டியின் அடிப்படை நோக்கம் என்ன என்றார்.

அவரவர் உடல் தகுதியை திறமையை அறிந்து கொள்ளவும்; அதை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது போல் போட்டியிட்டு, ஆற்றல் மிகுந்தவர் யார் என்று அறிந்து கொள்ள வாய்ப்பு பெறவும் உதவுவதற்காக என்றேன்.

எங்கள் காலத்து நிலையும் இப்படித்தான் இருந்தது என்று கூறிக்கொண்டே நடந்தார். அவர் எதிரே, பசுமையாகத் தோன்றிய தரைப்பகுதியும், பச்சைப்பசேல் என்று பறை சாற்றிக் கொண்டு, நின்று நிமிர்ந்து, கிளை விரித்தாடிய மரங்கள் கூட்டமும் அவரைக் கவர்ந்திழுத்தன போலும்.

இப்போது நாம் எங்கிருக்கிறோம் என்றார்.

விளையாட்டுக்களுக்கும் உடற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை ஒரு கல்வி யாகக் கற்றுத்தரும் ஒரு கல்லூரி வாசலிலே நிற்கிறோம் என்றேன்.

விளையாட்டுக்கும் ஒரு கல்லூரியா என்று வியந்தவாறே கேட்டார் வள்ளுவர்.

நீங்கள் ஆச்சரியமாகக் கேட்பது எனக்கு ஆச் சரியமாகப் படவில்லை. இந்த காலத்து மக்களே, விளையாட்டுக்கு ஒரு கல்லூரியா என்று கேட்கி றார்கள். அந்த அளவுக்கு 'விளையாட்டு அறிவு' விரிந்து கிடக்கிறது என்றேன்.

இருவரும் நடந்து கல்லூரிக்குள் நடந்தோம். இந்தக் கல்லூரியைப் பற்றி, கொஞ்சம் விளக்கமாகக் கூறுகிறேன் என்றேன். தலையசைத்தபடி, ஆர்வமுடன் நடந்தார்.

ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்னே. விளையாட்டில் ஆர்வமுள்ள அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர். ஹரிகுரோபக் என்று பெயர். தங்களுடைய கிறித்தவ மத சேவைக்காக நம் நாட்டிற்கு வந்து, இங்கு இந்தக் கல்லூரியை ஆரம்பித்தார். இன்று, இந்தக் கல்லூரி, உலகத்திற்கு உடற் கல்வி ஆசிரியர்களை உருவாக்கி வழங்கும் பெரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

நம் தமிழகத் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரில், இப்படிப்பட்ட செழிப்புள்ள பிரதேசம் எங்குமே இல்லை என்றேன்.

நீங்கள் கூறுவது உண்மைதான்; காண்பதற்குக் கவர்ச்சி மிக்க இடங்கள், காளைகளும் கன்னியரும் வந்து, தங்கள் உடல் செழிப்புக்கும், மன வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் விளையாட்டு இடங்கள், இந்த காட்சி என் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டுகிறது என்றார்.

அரை கோடி மக்கள் வாழ்கிற நம் தலைநகரில், இதுபோல இன்னொரு இடம் இல்லையே? மக்கள் வளமையான வாழ்வுக்கு வழிகாட்டும் புகலிடக்

வேறொன்றுமில்லையே என்பதுதான் என் வருத்தம் என்றேன்.

மக்கள் ஆடுகிற விளையாட்டிடங்களை நீங்கள் எப்படி அழைக்கிறீர்கள்? அங்கே என்னவோ புது மொழியில் எழுதப்பட்டிருக்கிறதே என்றார். பல வகையான கைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்ட, கால் பந்தாட்ட இடங்கள் அவரைக் கவர்ந்து விட்டன போலும்.

விளையாடும் இடங்களை ஆங்கிலத்தில் Play Field என்று கூறுவார்கள். நமது நாட்டில் நம் தாய் மொழி தமிழைவிட, அந்நிய மொழியான ஆங்கில மொழியே, முதல் மொழியாக இங்கு விளங்குகிறது.

தமிழ் தெரிந்த சான்றோருக்கும் இங்கே மதிப்புமில்லை. மரியாதையுமில்லை. அரை குறை யாக அந்நியமொழியைத் தெரிந்த, அதில் உளறுகிற ஆட்களுக்குத்தான் மதிப்பு அதிகம், கௌரவம் அதிகம் என்றேன்.

தமிழ் மொழிக்கு, நம் தாய் மொழிக்கு இவ்வளவு தான் மரியாதையா என்றார்.

இங்கே நீங்கள் காணுகிற விளையாட் டெல்லாம், வேறு நாட்டிலிருந்து இறக்குமதி

யானவைகள் தாம். இந்த விளையாட்டில் பேசப் படுகிற சொற்கள் எல்லாம், அந்நிய மொழியான ஆங்கில மொழியிட்டப் பிச்சைகள்தாம்.

அவற்றை நம் தமிழில் சொன்னால், நம் தமிழர்களே எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். தமிழிலே சொல்ல வேண்டாம். ஆங்கிலத்தில் சொல்வதே பெருமை என்கின்றனர்.

தாய் மொழிப்பற்றில்லாத, தரமில்லாத மக்கள், நம்மிடையே இருக்கின்றார்களா? அவருக்கு அது மிக வேதனையை அளித்தது போலும். தலையை தாழ்த்திக் கொண்டார். பெரு மூச்சும் வந்தது.

தமிழ் சொற்களை மட்டுமா இகழ்கின்றார்கள்? தமிழ் மொழியில் விளையாட்டுபற்றிய சொற்கள் இருக்கிறது என்று கூறினாலும். அதை ஏற்காது, தமிழையே தாழ்த்திப் பேசுகின்றார்கள்.

100 ஆண்டுகளுக்கு முன்னே, அந்நிய மொழியில் தோன்றிய சொற்களுக்கு இணையாகவே அல்ல, முதலாகத் தோன்றும் நம்தமிழ் மொழியில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நிறைய சொற்கள் இருக்கின்றன என்று நான் கூறுவதை, நம்பாத மக்களே நிறைய பேர்கள் நம்மிடையே இருக்கின்றார்கள் என்றேன்.

நீங்கள் கூறிய ஓரிரு சொற்களைக் கூறுங் களேன். கேட்கிறேன் என்றார்.

**ஆடுகளம்.**

இங்கே விளையாட்டுக்களை விளையாடுகிற இடங்களை, விளையாட்டு மைதானங்கள் என் கிறார்கள் நம்மவர்கள். ஆங்கில மொழியில் அதை Play Field என்கிறார்கள். அதை நாம் நேரடியாகத் தமிழில் கூறினால், விளையாட்டுக் களம் என்ற பொருள் வருகிறது.

இந்த விளையாட்டுக்களத்தை நான் ஆடுகளம் என்று கூறினேன்.

ஆடுகளம் என்றால், ஆடுகிற களம். ஆடுகிற தொழில் செய்யும் களம்; பயன் கொள்ளும் இடம்; புடைபெயரும் களம் என்றெல்லாம் பொருள் உண்டு. ஆமாம். ஆடு என்கிற வார்த்தைக்கே வெற்றி என்கிற பொருளும் உண்டு.

இந்தச் சொல் புறநானூறு எனும் நூலில் வருகிறது. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் எனும் தமிழ்ப்புலவர், சோழன் நலங்கிள்ளி எனும் மாவேந்தனைப்பற்றி பாடுகிற போது ஆடுகளம் என்ற சொல்லை அருமையாகப் பயன்படுத்தியிருக் கிறார் (புறநானூறு பாடல் 28). அதில் வருகின்ற

அழகுக் காட்சியை உங்களுக்கு விவரிக்கிறேன் என்றேன். சம்மதம் தெரிவித்தார்.

சோழன் நலங்கிள்ளியே! உன்னுடைய பகைவர்கள் உனக்குப் பயந்து புற முதுகுக் காட்டி, உயிர் தப்ப காட்டுக்கு ஓடி விட்டனர். காட்டுச் சேவல் குரல் கொடுக்க, வயல்களைக் காப்பவர்கள் விழித்துக் கொள்ள; பகைவர்கள் பசி தீர்க்கக் கரும்பு கேட்க, அவர்களோ கரும்பைப் பிடுங்கி வேலிக்கு வெளியே எறிய; அதனால் குளத்தில் உள்ள தாமரைப்பூக்கள் அதிர்ச்சிபெற, அதிலிருந்து தேன் பொழிய; அந்தக் குளமே அதிர்த்தெழுந்த தால், அலைகள் புரண்டோட, கூத்தர்கள் ஆடுகின்ற ஆடுகளம் போல, அந்தக் குளம் காட்சி யளிக்கிறது என்று பாடுகின்றார்.

**"புறஞ்சிறை மாக்கட்கு அறங்குறித்து அகத்தோர்**
**புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்**
**பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்**
**ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே" (புறம் 28)**

ஆகவே, கூத்தாடுபவர்கள் நின்று ஆடுகின்ற ஆடுகளம் போல என்று கூறிய உவமைச் சொல்லே, இங்கு நாம் காணுகின்ற விளையாட்டு இடங் களுக்குப் பொருந்துகிறது என்றேன்.

உண்மைதான். கூத்தர்கள் நடனம் ஆடு கின்றார்கள். இங்கே காளையர்களும் கன்னிய

களும் பந்தினை ஆடுகின்றார்கள். இயக்கம் ஒன்று தான். பொருத்தமான சொல்லே என்றார்.

**ஆடரங்கம்**

அங்கே பாருங்கள். அந்த மண்டபமும், விளையாடுவதற்காகத் தான் பயன்படுகின்றது. மழை, வெயில், பனி, புயல் என்று இயற்கை சீறுகின்ற போது, விளையாடும் முயற்சிகளைத் தொடர்வதற்காகப், பத்திரமாகக் காத்து நிற்கும் இடம் தான் அது.

இந்த விளையாடும் இடத்தை ஆங்கிலத்தில் INDOOR என்கிறார்கள். Gymnasium என்கிறார்கள். அதற்குத் தமிழில், சுற்றிலும் பாதுகாக்கப்பட்ட விளையாட்டிடம், உள்ளே ஆடுகிற இடம் என்று அர்த்தம் வருகிறது.

இதனை விளையாட்டரங்கம், உள்ளாடும் அரங்கம் என்றெல்லாம் தமிழில் கூறுகிறோம்.

ஆனால், இந்த விளையாட்டரங்கம் என்னும் சொல்லுக்கும் மேலாக. மேன்மையான ஒரு சொல் தமிழ் மந்திரத்தில் இருக்கிறது.

திருமந்திரத்திலா என்றார் வள்ளுவர்.

ஆமாம், அந்தத் தமிழ் மாமுனிவர், தனிப் பெரும் சித்தர், திருமூலர்தான், மிக அருமையான

தமிழ்ச் சொல்லை, பலமுறை தனது அரிய நூலான திருமந்திரத்தில் பெய்திருக்கிறார்.

உலகெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவன்; அவனது அருள் செயல் எல்லாம் விளையாட்டாகவே கருதப்படுகிறது.

அந்த விளையாட்டு என்கிற கூத்தை அவன் ஆடுவதால்தான், அவனுக்குக் கூத்தன், நடராசன் என்றும் பெயர்களுண்டு.

அவன் ஆடுகின்ற ஆனந்தக் கூத்துக்குரிய இடத்தை ஆடரங்கம் என்று கூறுகிறார் திருமூலர்.

**தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்**
**தேனுந்தும் ஆனந்த மாநடம் கண்டீர்.**
**ஞானம் கடந்து நடம் செய்யும் நம்பிக்கு அங்கு**
**ஆனந்தக் கூத்தாட ஆடரங்கம். ஆனதே (2678)**

ஆனந்தம் ஆடரங்கம் ஆனந்தம் பாடல்களே *(2679)*

அம்பலம் ஆடரங்கு ஆக *(2713)*

இவ்வாறு பல பாடல்களில் ஆடரங்கம் என்ற சொல் வந்திருக்கிறது.

இந்த இரண்டு சொற்களுக்கும் உள்ள பொருள் நுணுக்கத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெளிப்புறத்தில், எந்த விதமான அரணமைப்பு இல்லாத வெளியிடத்தில், நிகழப் பெறுகிற விளையாட்டு இடத்திற்கு **ஆடுகளம்** என்ற பெயரும்;

சுற்றிச் சுவரமைப்பும் மேற்கூரையும் கொண்டதாகத் திகழும் விளையாட்டு இடத்திற்கு **ஆடரங்கம்** என்ற பெயரும் எவ்வளவு அருமையாகப் பொருந்தி வருகிறது பார்த்தீர்களா என்றேன்.

பரந்த இடத்தில் நிகழும் போர்க்களத்தை நாங்கள் **அடுகளம்** என்றோம். இங்கே பரந்த இடத்தில் போரிடுவது போல விளையாடும் இடத்தை **ஆடுகளம்** என்பது பொருத்தம் தானே என்றார்.

என் மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இப்படி கொஞ்ச நேரம் அமரலாமா என்று கேட்டுக் கொண்டே ஓரிடத்தைத் தேடினார்.

அதோ அங்கே செல்லலாம் என்று, நிழல் மிகுந்த இடம் ஒன்றைக் காட்டினேன்.

தமிழ் கூறும் நல்லுலகத்தின் தரையில் அமர்கிற போது, என் நெஞ்சம் ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கிறது. இந்த மண்ணில் மீண்டும் வந்து, இந்த புண்ணிய பூமியில் நடக்க, உட்கார, நான் பெற்ற பேறு, பெரும் பேறுதான் என்றார் வள்ளுவர்.

தமிழில் சுவைதான் இருக்கிறது. தமிழ்ப் பேச்சோ தரம் கெட்டது போல், பல மொழிகளால் பாழாகிப் போனது. உடை, உணவுப் பழக்க வழக்கங்களும் மாறிக் கொண்டன.

தமிழ் நிலமும் தரம் மாறிக்கிடக்கிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வந்த வள்ளுவர், தரையின்மீது அமர்ந்தவுடன், சுற்று முற்றும் மீண்டும் ஒரு முறை பார்த்தார்.

ஏதோ சிந்தனையில் ஆட்டபட்டவர் போல, கண்களை மூடிக் கொண்டார். ஓய்வு தேவை போலும்!

அவரது ஓய்வு நமக்கு சாதகமாக அமைந்து விட்டது. நானும் அவரை ஒரு முறை பார்த்துக் கொண்டேன். அவர் பற்றிய ஒரு வாழ்க்கைக் குறிப்பு, எனது சிந்தனையில் புயலாகப் புகுந்து விளையாடியது.

அந்தச் சிந்தனையின் சிலிர்ப்பை உங்களிடம் பகிர்ந்து கொள்ள, இதுவே தக்கத் தருணம் என்பதால், அவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பை, இங்கே கூறி விடுகிறேன்.

**(முதற் பகுதி முடிகிறது)**

# வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள்

## இரண்டாம் பகுதி

## ஒரு சிறு முன்னுரை

இந்த இனிய நூலை எழுதுவதற்காக வள்ளுவரை எனக்காகப் பயன்படுத்திக் கொள்ள முனைந்தேன். முயன்றேன். முடியவில்லை. நான் தான் அவரால் பயன்பட்டுக் கொண்டேன்.

கண்கள் படும் இடத்தில், கைக்கெட்டுகிற தூரத்தில், திருக்குறளை வைத்துக் கொண்டேன். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நூலை எடுத்தேன். குறளைப் பிரித்தேன். படித்தேன்.

குறள்களை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த் தேன். செய்திகளைத் திரட்டிப் பார்த்தேன். நுணுக்கங்களை விரட்டிப் பார்த்தேன்.

எத்தனைதான் முயன்றாலும், ஒவ்வொரு முறை குறளைப் படிக்கிற போதும், ஒவ்வொரு

புதிய சிந்தனை, புதுமையாகப் பிறந்தது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆழமாக எண்ண எண்ண, அதற்குள்ளே சீராகச் சுரக்கும், தேனாப் பிறக்கும் உணர்வுகளை, என்னால் எழுதிக் காட்ட முடியவில்லை. அதற்கு வள்ளுவர் பாடிய குறள்தான், என் மன ஆற்றா மையைமாற்றி அமைத்தது. அமைதியை அளித்தது.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு. (396)**

மணற்பாங்கில் நீர் வேண்டுவோர், மணலைத் தோண்டுகிறார். அவர் எவ்வளவு ஆழமாகத் தோண்டுகிறாரோ, அதற்கேற்ற அளவே நீர் கிடைக்கும்.

மணற்கேணியின் ஆழம் போலவே, தோண்டு வோரின் முயற்சிக்கு ஏற்பவே, நீரின் பெருக்கு நிறையும்.

அதுபோலவே, வள்ளுவரின் குறளாகிய மணற் கேணியில், முயற்சியுடன் தோண்டியவர்கள், ஊறிய நீரை உள்ளம் உருகி, உவப்பில் பருகி, உயர்ந்த நூல்களைப் படைத்துப் போயினர்.

நானும் அத்தகைய ஆசையில் தான், என் துறைப்பக்கம் வள்ளுவரை இழுத்தேன்.

தெய்வ பக்தி நிறைந்தவர்களின் இழுப்புக்கு தெய்வம் இளகி, இறங்கி வருவதாகக் கூறுவார்களே, அது போல, திருவள்ளுவரும், தேக உருவின்றி, தெய்வ ஒளியாக வந்து, எனக்கு சிந்தையில் கருத்துப் பெருக்கத்தைத் திறந்து விட்டார்

அந்தத் தெய்வச் சுரப்பின் திறந்த மடைதான், இந்த நூலாகப் பிறந்து வெளி வந்திருக்கிறது.

வள்ளுவர் தந்தக் குறள் எல்லாம், ஞானப் பழங்கள்.

ஞானம் என்பது முற்றிய அறிவின் முதிர்ச்சியாலும் வரும். கருவிலே திருவுடையாராகின்ற பேற்றாலும் வரும்.

வள்ளுவரின் ஞானம், இந்த இரண்டின் இணைப்பாகவே இருக்க வேண்டும். இல்லையென்றால், இந்த இரண்டாயிரத்து அறுநூற்று அறுபது வரிகளில், இரண்டாயிரம் ஆண்டு காலமாக, எத்தனையோ கோடி மக்களின் சிந்தனைச் சாம்ராஜ்யத்தினை ஆண்டு கொண்டிருக்க முடியாதே!

வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள் என்பதுதான், இந்த நூல் தரும் கருத்துக்கள்.

வள்ளுவர் வாழ்க்கை வீர வாழ்க்கையாக, போர்க்களங்களில் வெற்றியை விளைத்து மகிழ்ந்த வாழ்க்கையாக அமைந்திருந்தது என்று நான்

அறிந்த போது; வீரப் பண்புகளே விவேகமாக மாறும் என்று கருத்துக்குப் பொருத்தமான சான்றாக, வள்ளுவர் விளங்குகிறார்.

சாதாரணமான உயிர் ஜீவிகளை **மனிதர்** என்கிறோம். ஆண்மையும் ஆற்றலும் உள்ளவர்களை **வீரர்** என்கிறோம். வீரச்செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுபவர்களை **ஆடவர்** என்கிறோம்.

ஆடவராக இருப்பதுடன், அரும் பண்புகளிலும், தூய்மையானவர்களாக விளங்குபவரை **சான்றோர்** என்கிறோம்.

இத்தகைய எழில் நலங்கள் மிகுந்த பொழிலாக, பண்புகள் நிறைந்த கோயிலாக, வள்ளுவர் விளங்கியிருந்ததால்தான், அவரது குறள்களும் பண்புகளின் பேரூற்றாக விளங்கி வருகின்றன.

வள்ளுவர் தீயதையெல்லாம் சாடுகிறார். அறம் அல்லாதனவற்றை யெல்லாம் அகற்றுமாறு ஆணையிடுகிறார். பண்பாடற்ற செயல்களை செய்யக் கூடாது என்பதை விட, நினைப்பதே பாவம் என்று நெருப்பாகப் பேசுகிறார்.

அவர் எந்தக் கருத்தைக் கூற வந்தாலும், அதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். அவர் கருத்தை நிலைப்படுத்தக் கூறுகிற உவமைகளை

யெல்லாம், போர், போர்க்களம், போர்ச் செயல்கள், போர்ப் பண்பாடுகள். இவற்றிலிருந்து எடுத்துத்தான் கையாண்டிருக்கிறார்.

வீரமான கருத்துக்களும் வீரமான உவமை களும் குறளில் நிறைந்து விளங்குவதால்தான், குறளில் உணர்ச்சிகள் கூடிக் கிடக்கின்றன.

அந்தக் குறளிலே உயிர் இருக்கிறது. உயிர்ப்பு இருக்கிறது. உவப்பு இருக்கிறது. உண்மை இருக் கிறது. அதிலே உலகமே இருக்கிறது.

இதுவரை வள்ளுவரை ஆய்ந்தவர்கள் எல்லாம், அவர் கருத்தில் தோய்ந்தவர்கள் எல்லாம், வள்ளுவரை ஞானியாகப் பார்த்தனர். மதப் பண்பாடு மிக்க மேலோராகப் பார்த்தனர்.

ஆனால், நான் வள்ளுவரை வீரராகப் பார்த் தேன். விவேகியாகப் பார்த்தேன். சான்றோராகப் பார்த்தேன்.

போர் நிகழ்ச்சிகள்தான் விளையாட்டு நிகழச்சி களாகப் பிறந்திருக்கின்றன. அன்று போர் வீரர்கள் கொண்ட கோலத்தை, செய்த செயல்களைத்தான், இன்று விளையாட்டு வீரர்களும் செய்கிறார்கள்.

ஆனால், சிறுமாற்றம்.

போரில் போராட்டமுண்டு, மரணமுண்டு. வெற்றியுண்டு. விளையாட்டிலும் போராட்டம் உண்டு. மரணம் போல செயல் இழப்பு உண்டு. வெற்றி உண்டு.

போரில் செயல்கள், தந்திரங்கள், தாக்குதல்கள், பகைவர் வலி அறிதல், ஒற்றறிதல், தூது விடுதல், போன்றவைகள் உண்டு.

விளையாட்டுக்களில், மேற்காணும் போர்ச் செயல்கள் எல்லாம் மெருகேறியிருக்கின்றன. மென்மை பெற்றிருக்கின்றன.

போரில் வாழ்வா சாவா என்பதுதான் தலை தூக்கி நிற்கும். விளையாட்டிலும் வாழ்வா சாவா என்ற தாக்கும் உணர்வு எழுச்சியுடன் நின்று போராடச் செய்யும்.

எனவே, வாளர் நெடுமாறன் வள்ளுவனார் என்று புகழ்பெற்ற வள்ளுவரின் குறள்களை ஆராய்ந்து, அவர்தம் கருத்துக்களை இங்கே விளக்கமாகத் தந்துள்ளேன்.

வள்ளுவர் என்னிடம் வருவதுபோலவும், அவருடன் நான் உரையாடி மகிழ்வதுபோலவும், அவரே அவரது குறள்களைக் கூறி விளக்கம் தருவது போலவும் ஒரு கற்பனைச் சூழலை அமைத்துக் கொண்டு, இந்த நூலை எழுதியுள்ளேன்.

வள்ளுவர் பேசுவதாக உள்ள கருத்துக்கள் எல்லாம் எனது கருத்துக்களே.

ஆன்றோர்கள், குறளின்மேல் நீங்காக் காதல் கொண்டவர்கள். எனது கருத்துக்களில் தவறு காண்பாராயின், தயவுசெய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

தவறான கருத்துக்கள் என்று தக்க முறையில் கூறினால், திருத்திக் கொள்ள நான் தயங்க மாட்டேன். நன்றியுடன் ஏற்றுக் கொள்வேன்.

என்னுள்ளே வள்ளுவர் குடிகொண்டு வாழ்கிறார். இருபது ஆண்டுகளாக, திருக்குறளை ஆய்ந்து, இப்படி ஒரு நூலை எழுதவேண்டுமென்ற எனது ஆசை தான் நிறைவேறியிருக்கிறது. வள்ளுவரைத் தொழுது செய்கிற பூசை முடியவில்லை. அது முடியாது. வாழ்நாள் வரையிலும் தொடரும்.

இப்படி ஒரு நூலை எழுதுமாறு என்னை, இயக்கி, முயற்சிக்க வைத்து, முழுமை காணச் செய்த இறைவனுக்குரிய நிழலடிகளைத் தொழுகிறேன். அவரது கருணைப் பெருங்கொடையை கண்டு, உண்டு, மகிழ்கிறேன்.

வள்ளுவர் பற்றிய வரலாறு தொடர்கிறது.

# இரண்டாம் பகுதி

## (முதல் பகுதியில் வந்த கருத்துச் சுருக்கம்)

[நான் எழுத அமர்ந்து, வள்ளுவர் பற்றியே, ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது, வள்ளுவர் வருகிறார். தன்னை யாரென்று எனக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

தான் எழுதிய திருக்குறளில், நிறைய விளை யாட்டுச் சிந்தனைகள் இருக்கின்றன என்று விளக்கம் தருகிறார்.

மக்கள் வகை, மாண்பு வகை, வாழ்க்கை முறை, தக்கார் தகவிலர், சான்றோர், நாகரிகம், என்றெல்லாம் விளக்கி, அவர் காலத்து வாழ்க்கை முறையை, அழகாக விளக்குகிறார். அத்துடன், இக்காலத் தமிழக நிலையை அறிந்து கொள்ள, என்னையும் அழைத்துக் கொண்டு, பல இடங் களுக்குப் போகிறார்.

விளையாட்டுக் கல்வியைக் கற்பிக்கும் கல்லூரி ஒன்றின் ஆடுகளத்திற்குள்ளே சென்று, ஆங்கே ஓரிடத்தில் அமர்ந்து, ஓய்வாக, இருக்கிறபொழுது இந்த இரண்டாம் பகுதி ஆரம்பமாகிறது.]

# 1. வாளார் நெடுமாறன் வள்ளுவனார்!

வள்ளுவருக்கும் விளையாட்டுக்கும் என்ன தொடர்பு உண்டு, எப்படி சம்மந்தம் இருக்கிறது என்றெல்லாம், எனக்குள்ளே நான் கேட்டுக் கொண்டு, அதற்கான விடையை அறிந்து கொள்ள, திருவள்ளுவர் பற்றிய நூல்களையெல்லாம் தேட ஆரம்பித்தேன்.

கையில் கிடைத்த நூல்களையெல்லாம், குறு குறுக்கும் உணர்வுகளுடன் புரட்ட ஆரம்பித்தேன். செய்திகளைத் திரட்ட ஆரம்பித்தேன்.

செய்திகள் எல்லாம் குறிப்பாகவே இருந்தன. விளக்கமாக இல்லை. சந்தேகம் எழுப்பக் கூடியன வாகவே அமைந்தன. சான்றுகளாக இல்லை. புராணமாக இருந்தன. புரியும்படியாக இல்லை.

இந்த நிலையில், எனது சிந்தையைக்கவரும் படியான; குறிப்புக்களைத் தந்தது திருமந்திரம் எனும் தெய்வாம்சம் மிகுந்த நூல்.

அந்த நூலில் தந்துள்ள கருத்துக்களை நான் அப்படியே எடுத்துத் தந்திருக்கிறேன். அதன்பின் என் விளக்கத்தையும் தந்திருக்கிறேன்.

## திருவள்ளுவர் பெயரும் காலமும்

''பாண்டிய நாட்டில் கி. மு. 50 முதல் கி. பி. 30 வரை அரசாண்ட கருங்கை ஒள்வாள் பெரும்வழுதி காலத்தில், உள் மந்திரத் தலைவராய் இருந்து, வள்ளுவர் எனும் பட்டம் பெற்று, வழுதியின் வேண்டுகோட்கிணங்கி திருக்குறள் எனும் நீதி நூலைப் பாடியவர் வரளார் நெடுமாறன் வள்ளுவனார் ஆவார்.

''தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் எப்பாலும்
வைவைத்தக் கூர்வேல் வழுதி மனமகிழ்த்
தெய்வத் திருவள்ளுவர்.''

என்ற கீரந்தையார் பாடலினால், வழுதியின் கட்டளைப்படி, வழுதி மனமகிழத், தெய்வத் திருவள்ளுவர் திருக்குறளைப் பாடினார் என்பது பெற்றாம்.

''அறனறிந்தேம் ஆன்ற பொருள் தெரிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன் எறிந்த
வாளார் நெடுமாறன் வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாங் கேட்டு.''

என்ற கொடி ஞாழன் மாணிபூதனார் பாட்டால் திருவள்ளுவருடைய இயற்பெயர் **நெடுமாறன் வள்ளுவர்** என்பது பெற்றம்.

திருவள்ளுவர் தம் இளவயதில் தொல் காப்பியம் என்னும் இலக்கண நூலையும், தமிழ் மூவாயிரம் எனும் தத்துவ நூலையும் நன்கு கற்றவர். அரசியல் ஞானமும் உலக அறிவும், மிகுதியும் உடையவர். வாள் படையைத் தாங்கிச் சண்டை செய்வதில் இணையற்றவர். இவர்கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியுடனும் தனித்துப் பல தடவைகளில் பகைவர்களுடன் மலைத்து, வெற்றி பெற்றவர். அதனாலன்றோ, **மாறன்எறிந்த வாளார் நெடுமாறன் வள்ளுவனார்** என்று கொடி **ஞாழன் மாணிபூதனார்** கூறலாயினார்.

திருவள்ளுவர் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரை வாழ்ந்தவர்.''

(திருமந்திரம் மூவாயிரம், முதற்பகுதி பக்கம் 82-83)

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சென்னை-108.

7வது மறுபதிப்பு, செப். 1984.

**பெயரும் பெருமையும்**

வள்ளுவரின் பெயர் நெடுமாறன் என்றும்: அவர் வாளெடுத்து போர் புரியும் தொழிலில் வல்லவரென்றும்; அரசருக்கு உதவுகின்ற உள் மந்திரத் தலைவராகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர் என்றக் குறிப்பையே, இங்கு நாம் முக்கியக் குறிப்பாகக் கொள்ள வேண்டும்.

தமது வாழ்நாள் தொழிலாக மேற் கொண்டு வாழ்ந்த வீரத் தொழிலில் விளைந்த அனுபவமும்; அதனால் அடைந்த ஞானம் மிகுந்த தெய்வ அறிவும் நிறைந்தவராக இருந்தமையால் தான். இத்தகைய விவேகமுள்ள சிறந்த நூலை வள்ளுவரால் இயற்ற முடிந்தது.

**வள்ளுவர் வாழ்க்கை**

வள்ளுவரின் வாழ்கையைப்பற்றி விளக்க வந்தவர்கள் எல்லோரும், அவர் ஆதிக்கும் பகவனுக்கும்பிறந்தவர்; மைலாப்பூரில் வாழ்ந்தவர். இவர் வேளாளர் ஒருவரிடம் வளர்ந்தவர். ஏலேலசிங்கன் எனும் வர்த்தகனிடம் நூல் வாங்கி, நெசவுத் தொழில் செய்து இல்லறம் நடத்தியவர்.

வாசுகி எனும் பெண்ணை மணந்து வாழ்ந்தவர். ஏலேல சிங்கர் மற்றும் அழகாநந்தர் முதலியோர் வேண்டுகோளால், திருக்குறளை அருளிச் செய்து, சங்கப்பலகை மீது ஏறி நின்று, சங்கத்தவரை வென்று, திருக்குறளை அரங்

கேற்றியவர், அதன்பின் திருமலைக்குத் திரும்பி வந்து தன் மரணம் பற்றித் தெரிவித்தவர்.

தான் இறந்து போனால், தன் தேகத்தை அலங்கரிக்காது, அடக்கம் செய்யாது, ஊர்ப் புறத்தில் எரியுமாறு கட்டளையிட்டுப் பரிபூரண மடைந்தவர் என்ற கதைகள் எல்லாம் வள்ளுவருக்கு நிறைய உண்டு

இவரது தந்தை 'யாளிதத்தன்' எனும் வேதியன் என்பது ஒரு கதை. இவர் மதுரையில் வசித்திருந்த தாகவும் கூறுவர்.

(அபிதான சிந்தாமணி, பக்கம் 849-850)

**நமது ஆய்வுக்கு வழிகாட்டி**

நமது நம்பிக்கைக்கும் ஆய்வுக்கும் உரிய கருத் தாக, உண்மைக் குறிப்பாக விளங்குவன. முன்னர் இடம்பெற்ற இரண்டு பாடல்கள் தான்.

திருக்குறளின் சிறப்புப்பாயிரமாக விளங்கும் திருவள்ளுவமலையில், கீரந்தையார் எழுதியதாக உள்ள 19வது பாடல்.

கொடி ஞாழன் மாணிபூதனார் எழுதியதாக உள்ள 50வது பாடல்.

வள்ளுவர் உருவம் நமக்குத் தெரியாத தாயினும், அவருக்கு ஒரு உருவம் கொடுக்க முனைந்

தார்கள் எல்லோரும், அவரை மதவாதி போலவே காட்டி விட்டனர்.

நீண்ட ஜடாமுடி தலையில் நிமிர்ந்து நிற்க; நெற்றியிலே பட்டை ஒளிர, முகத்திலே நீண்ட தாடியும், செறிந்த மீசையும் மிளிர, மார்புப் பகுதியின் குறுக்கிலே பூணூலையும் மாட்டி, வள்ளுவரை ஒரு வித்தியாசமான அமைப்பிலே காட்டி விட்டனர்.

அவரின் உண்மையான தொழில் எப்படி இருந்தது என்பதை அறியாததாலோ; அல்லது அவரை அப்படிக் காட்டித் தங்கள் பக்கம் மதத் துறைக்கு இழுத்துக் கொள்ள முற்பட்ட அவசரத் தாலோ, தெரியவில்லை. அவருக்குக் கொடுக்கப் பட்ட வடிவமும் உருவமும், முற்றும் பொருந்தாத ஒன்றாகவேப் போய்விட்டது.

**வள்ளுவர் வீரரே!**

வள்ளுவர் மிகுந்த வீரம் உடையவர். ஆற்றல் நிறைந்தவர். அவர் சிந்தையும் செயலும் எப்பொழுதும் போர் நினைவுகளிலும், வீரச்செயல் களிலுமே நிலைபெற்று இருந்தன என்பதற்கு, அவர் பாடிய பாடல்களைக் கொண்டே நிச்சய மாகக் கூறலாம்.

வள்ளுவர் தாம் எழுதிய குறளை மூன்று பகுதி களாகப் பிரித்து, அறத்துப்பால், பொருட்பால்,

காமத்துப்பால் என்று பெயர் கொடுத்து, சுவை யான செய்திகளை எல்லாம் சுருக்கமாகச் சொன்னாலும் கூட, அவர் அதற்காக மேற் கொண்ட உவமைகள், சான்றுகள் எல்லாம், போர், சண்டை, அதற்குப் பயன்படும் சொற்கள். கையாளும் ஆயுதங்கள் என்பதாகவே அதாவது மிகுதியாகவே அமைந்திருப்பதை நாம் சான்றாக ஏற்றுக் கொள்ளலாம்.

அதற்கும் முன்னதாக, வள்ளுவர் வீரராகத் திகழ்ந்தார். அந்த வீரத்தின் முற்றிய நிலையே விவேகமும், மிகுந்த ஞானமும் வளர உதவியது என்பதற்கும், நாம் பல தத்துவ ஞானிகளையும், வீரர்களையும் பார்த்தே புரிந்து கொள்ளலாம்.

**வீரர்களே ஞானிகள்**

கிரேக்கர்களின் கீர்த்தி மிக்கக் காலத்தில்தான், விளையாட்டுப் பந்தயங்களான ஒலிம்பிக் பந்தயங் கள், உயர்ந்த புகழுடன் நடத்தப்பட்டன.

அந்தப் போட்டிகளில் பங்கு பெற்ற வீரர்கள் எல்லோருமே, உடல் பலம் மிக்கவர்களாக விளங்கினர். அவர்கள் கலந்து கொண்ட போட்டி கள் எல்லாமே, கடுமை மிகுந்த வலிமையையே அடிப்படையாகக் கொண்டு விளங்கின.

அதனால், போட்டியிட்ட வீரர்கள், உடல் பலத்துடனே திகழ்ந்தனர். அவர்களும் மகிழ்ந் தனர். பார்வையாளர்களும் பரவசமடைந்தனர்.

கிரேக்க மாமேதைகள், தத்துவ ஞானிகள், பேரறிஞர்கள் என்று புகழப்பட்ட அனைவருமே, இந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டவர் என்றே வரலாறு கூறுகிறது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியிலே, பெரிய சரித்திர ஆசிரியராக விளங்கிய **கிரடோடஸ்**; தத்துவ மேதையான சிந்தனைச் சிற்பி **சாக்ரட்டீஸ்**; பெருங்கவியாகத் திகழ்ந்த **பிண்டார்**; சிற்ப மேதை **பிடிலஸ்** போன்றவர்கள், பந்தயங்களிலே பங்கு பெற்று உலா வந்தனர் என்பது வரலாறு.

பேரறிஞர் என்று புகழப்பட்ட **பிளேட்டோ** என்பவர், தனது இளமைக் காலத்தில், மல்யுத்தப் போட்டியில் வென்று ஒலிம்பிக் வீரராகத் திகழ்ந்தார்.

சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீசின் சிறந்த மாணவன் பிளேட்டோ. பிளேட்டோ எனும் பட்டப் பெயர் இவருக்கு வந்தது எப்படி? **அரிஸ்டோகிளிஸ்** என்று பெயர் கொண்ட இவருக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது?

இவருக்குப் பரந்த தோள்கள் இருந்ததால் தான், பட்டப் பெயராக பிளேட்டோ என்று வந்தது.

இவற்றை ஏன் இங்கே இவ்வளவு விளக்கமாகக் கூறுகிறேன் என்றால், உடல் வலிமைமிக்கவர்களே

மன ஆற்றல் மிக்கவர்களாகவும், மாமேதைகளாகவும் விளங்கியிருக்கிறார்கள் என்பதை சுட்டிக் காட்டத் தான்.

## வள்ளுவரும் வலிமையும்

வள்ளுவர் சிறந்த சிந்தனைச் சிற்பியாகவும், சீர் மிகுந்த கவிஞராகவும் விளங்கக் காரணம், அவர் உடலை வலிமையாக வைத்திருந்ததால் தான். அவரது உடல் வலிமை, அவர் செய்து வந்த போர்த் தொழிலுக்குப் பெரிதும் உதவியது.

அரசருக்கு உதவிய அரும்பண்பால் எழுந்த அனுபவங்கள்; போர்க்களம் தந்த புதிய எழுச்சிகள்; பிறவியிலே பேரூற்றாகச் சுரந்த ஞானம். இவ்வளவும் சேர்ந்துதான், வள்ளுவரை, இவ்வாறு ஞானியாகப் பாடவைத்தது.

ஆமாம். வள்ளுவர் ஒன்றே செய்தார். அதையும் நன்றே செய்தார்.

## குறள்களுக்குக் கரு

வள்ளுவருக்குப் போரின் மீது என்றும் விடாத வேட்கை இருந்தது; அவர் உள்ளமும் உணர்வும் போர்க்களத்தின் மீதே பரந்து கிடந்தன; அவரின் சிந்தனை எல்லாம், தாய் நாட்டின் மீதும், தன்மானமுள்ள குடிமக்கள் மீதும் இருந்ததே, அவரின் அருமையான கவிகளுக்கு, அடிப்படை

பொருளாக அமைந்தன, கருவாகத் திகழ்ந்தன என்பதை, அவரது குறள்கள் எல்லாம், நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்குகின்றன.

வள்ளுவரின் குறள்களை நாம் ஆழ்ந்து படிக்காமலேயே, அவரது உவமைகள் நமக்கு, நல்ல பல சுவைகள் நல்குவதை அறிய முடியும். ஏனெனில், எந்தக் கருத்தையும் இனிதாகவும் எளிதாகவும் எடுத்துரைக்க, அவர் உவமையைத் தான் அதிகமாகக் கையாளுவார்.

ஒருவருக்கு, உள்ளத்தில் எந்தக் கொள்கை ஆழமாகப் படிந்திருக்கிறதோ, பதிந்திருக்கிறதோ, அந்தத் தன்மையாகவே உவமைகள் அமைந்து விடும்.

கவிஞன் காமச் சுவையை அதிகம் விரும்பு கிறவனாக இருந்தால், அவன் கொடுக்கின்ற உவமையெல்லாம், காமப்பாங்காகவே கொட்டும்.

கவிஞன் கடவுள் பக்தனாக இருந்தால், அவன் தருகின்ற உவமைகள், கடவுள் தொடர்புள்ள தாகவே வந்து விழும்.

கவிஞன் வீரனாக இருந்தால், அவன் கவிதை களில் வேகம் இருக்கும். மோதுகின்ற வேட்கையின் தொனி மிகுந்திருக்கும். சொல்கின்ற உவமைகளில் தீரமும், போரிடும் காட்சி ஆரவாரமும் அங்கே மிகுந்து கிடக்கும்.

வள்ளுவர் ஒரு வீரர், உண்மையான மாவீரர் என்பதற்கு, அவர் சொல்லிச் சென்ற உவமைகளே நமக்கு சான்றாக விளங்குகின்றன.

வள்ளுவர் காதலைச் சொன்னாலும் சரி, கல்வியறிவைச் சொன்னாலும் சரி, அரசர் பண்பைச் சொன்னாலும் சரி, அன்னையின் அன்பைச் சொன்னாலும் சரி, அவர் கூறிய உவமைகளில் எல்லாம், படை, குடி, பகை, தூது, வாள், கதவுகள் என்று, போர்பற்றிய விளக்கமாகப் பெருகி வருகிற சொற்களாகவே சொல்லிச் சென்றதை நாம் காணலாம்.

## உவமை உமிழ்கின்ற உண்மை

கல்வியின் மேன்மையை, கற்றவரின் பெருமையை வலியுறுத்த வந்த வள்ளுவர், காட்டுகிற உவமையைப் பாருங்கள்.

> **வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்**
> **நுண்ணவை அஞ்சு பவர்க்கு (726)**

நுண்ணறிவு மிக்கவர்கள் நிறைந்த சபையைக் கண்டு அஞ்சுகின்ற ஒருவருக்கு. நூலொடு என்ன தொடர்பு உண்டு என்று சொல்ல வந்த வள்ளுவர், வேறு எந்த உவமையையும் தராமல், வாளைப் பற்றிக் கூறுகிறார்.

வலிமையில்லாதவர்களுக்கு வாள் இருந்து என்ன பயன்? நூலுக்கு வாளையும், அவைக்குப்

போர்க்களத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர்.

வாள் அக்கால மக்கள் உடலின் ஒரு அங்கமாகத் திகழ்ந்தது போலும்.

இந்த உவமையைக் கூறியவுடன், அவர் இதயம் நிறைவு அடையவில்லை போலும். இன்னும் கொஞ்சம் விவரமாக, விளக்கமாக, வேகமாகக் கூறவேண்டும், என்பது அவரது விருப்பம் போலும்.

ஒளிபொருந்திய கூர்வாளைப் பிடித்திருக்கும் பேடியைப் போல என்று சற்று கோபமாகவே பேசுகிறார்.

பகையகத்தில் கூர்வாளைப் பிடித்துக் கொண்டிருக்கும் பேடியால் போரிட முடியுமா? அது போலவே, கற்றோர் அவை முன்னே கால் நடுங்கிக் கொண்டிருக்கும் கற்றவன் நிலையும் என்கிறார்.

பேடி என்பது எவ்வளவு வன்மையான சொல்.

அந்த அளவுக்கு, வள்ளுவரின் நெஞ்சம் வீரம் மிகுந்ததாக விளங்கியிருக்கிறது. போர், பகை, வாள், என்றதும் அவரது பேருணர்ச்சி வேகம் பெற்றுக் கொண்டுவிட்டது.

**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சுமவன் கற்ற நூல். (727)**

பொல்லாத பகைபற்றி எண்ணும்போது தமிழ் உணர்ச்சிகள் புயலாவது இயல்புதான் ஆனால்......

மெல்லிய உணர்வும், மேன்மைச் சுவையும் நிறைந்த காதலைப்பற்றி நினைக்கும் பொழுதிலும், போர், வீரம் பற்றி நினைவு வந்தால், அது என்ன சிந்தனை ?

காதலை விளக்குகிற காமத்துப்பாலில், தவித்துப் போயிருக்கும் தலைவி, தளர்ந்து போயிருக்கும் தலைவி, தணல் போன்ற நினைவு களால் தயங்கித் தீரா வேதனையில் திளைத்துக் கிடக்கும் தலைவி, மற்றும் தலைவன் இவர்களின் எண்ணங்களை விளக்கும்போது கூட. போர்க்களம், தூது, படை, பகை, பூசல், கதவு, கள்வன், வெற்றி என்றெல்லாம் பேசுகிறாரே வள்ளுவர் ! இந்தச் சிந்தனை எந்த எண்ணங்களின் எதிரொலியாக இருந்திருக்க வேண்டும்

**போர்க்களமும் பூகம்ப மனமும்**

போர்க்களத்தில் பகைவரும் பயப்பட்டுப் பின்வாங்குவதற்குக் காரணமான என் வலிமை, இந்தப் பெண்ணின் ஒளி பொருந்திய நெற்றியைக் கண்டு அழிந்துவிட்டதே என்று ஒரு தலைவன் புலம்புகிறான். மயங்குகிறான்.

மனம் புலம்பும் போதும், வீரம் விளையாடும் போர்க்களம் தான் அவருக்கு உவமையாக ஓடிவந்து நிற்கிறது.

**ஒண்ணுதற் கோஒ ! உடைந்தே, ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்குமென் பீடு. (1088)**

ஞாட்பு என்றால் போர்க்களம், பீடு என்றால் வலிமை.

**தூதும் படையும்**

போர் என்றால், பகைவர் இருப்பர், தூது போகும் படையும் திரளும். அது சொல்லுகின்ற காரியத்திலும் ஈடுபடும், சொல்ல இயலாத துன்பங்களையும். திரட்டிக்கொண்டு வந்துவிடும்.

இந்த நிலையை, ஒரு தலைவியின் துயரத்திற்கு உவமையாகக் காட்டுகிறார் வள்ளுவர்.

குழலோசை காற்றில் மிதந்து வருகிறது. அதைக் கேட்கும் தலைவிக்கு ஆனந்தமாய் சுவைக்கிறது. இன்று காதலன் அவனருகில் இல்லை. அந்த சோகமான சூழலில், குழலோசை வருகிறது. அது அவளின் மனவேதனையை மிகுதிப்படுத்துகிறது.

இந்தச் சூழ்நிலையை சொல்லுகிறார் வள்ளுவர் இப்படி.

முன்பெல்லாம் இன்பம் தந்த ஆயனுடைய குழலோசை, இப்பொழுது தீயைப் போலச் சுடக்கூடிய மாலைப் பொழுதுக்கு தூதுவனாகிவிட்டது. அதுமட்டுமல்ல. அந்த இசையே என்னைக்

கொல்லுகின்ற படையாகவும் ஆகிவிட்டது என்று பாடுகிறாள் தலைவி.

> **அழல் போலும் மாலைக்குத் தூது ஆகி, ஆயன்**
> **குழல் போலும் கொல்லும் படை. (1228)**

**பகையும் மிகையும்**

உள்ளம் கலங்கச் செய்யும் நிகழ்ச்சியைக் கூட, **உள்ளம் உடைக்கும் படை** என்றல்லவா கூறுகிறார்.

தலைவனைப் பிரிந்து. துன்ப நிலையில் தவிக்கிறாள் தலைவி. அவள் வாய், சதா அரற்றிக் கொண்டிருக்கிறது.

காலையில் கொஞ்சம் கட்டுப்பாட்டிற்குள் காதல் அடங்கிக்கிடக்கிறது. மாலையானதும் அது மலைபோல் உருவெடுத்து, வாட்டுகிறது என்பது அவள் புலம்பல்.

அதனைக் கூற வந்த வள்ளுவர், அந்த மாலைப் பொழுதுக்கு நான் எவ்வாறு பகையானேன் என்ற சொல்லைப் பயன்படுத்துகிற அழகே அழகு.

> **காலைக்கு செய்த நன்று என்கொல், எவன்கொள்யான்**
> **மாலைக்குச் செய்த பகை. (1222)**

**கொலைக்களம்**

வெறும் பகை என்று மனத் துன்பத்தை விளக்கி விடுவதில், வள்ளுவருக்கு, திருப்தி ஏற்பட வில்லை போலும்.

துன்பம் தருகின்ற அந்த மாலை நேரத்தை உயிரைக் கொண்டுபோக, கொலைக் களத்திற்கு வருகிற கொலைஞர் போல என்று காட்டுகிறார்.

கொடுமை நிறைந்த இடமான **கொலைக்களம்.** கொடுமை நிறைந்தவர் **கொலைஞர்.** கொல்லும் தொழிலைக் கொண்டவர்.

இந்தக் காட்சிகளைக் கண்டு கண்டு பழகிய, வள்ளுவருக்கு, இந்த உவமையே, இதய திருப்தி யாக வந்து நின்றிருக்கிறது.

**காதலர் இல்வழி மாலை, கொலைகளத்து**
**ஏதிலார் போல வரும். (1221)**

இந்தக் குறளுக்கு இப்படியும் விளக்கம் தருகின்றனர்.

படைத்தலைவரில்லாத செருக்களத்தில். கொல்லும் தொழில் கொண்ட பகைவர்போல, செவ்வானத்துடன் மாலைப்பொழுது வருகிறது. வானம் என்பது போர்க்களம். மாலை என்பது கொலைப்பகைவர்.

வள்ளுவரின் வீர நெஞ்சுக்கும், தீர நினைவுக்கும் இது எடுப்பான எடுத்துக்காட்டாக இருக்கிறதல்லவா !

## பூசலும் கோட்டைக்கதவும்

போர் என்றால் பூசல் தானே அடிப்படை. அந்த சண்டையையும், தன் உவமைக்குள் கொண்டு வரத் தவறவில்லை. அதையும் மிக அருமையாக ஒரு குறளில் கூறுகிறார்.

**பாடுபெறுதியோ நெஞ்சே கொடியோர்க்கு என்**
**வாடு தோள் பூசல் உரைத்து. (1237)**

தலைவி, தன் நெஞ்சைப் பார்த்து, இப்படிக் கூறுகின்றாள். ஓ நெஞ்சே! இந்தத் தோழி, என் தலைவரைப் பார்த்து, கொடியவர் என்று கூறுகிறாள். அதனால், நீ தலைவரிடம் சென்று, என் மெலிகின்ற தோள்களின் பூசலை உரைத்து, மேம்பாடு எய்திட வழி காண மாட்டாயோ?

பூசல் என்றால் சண்டை என்று பொருள்.

சண்டை போட்டால் தான் வழி பிறக்கும் என்ற கொள்கையை, இங்கு மிக அழகாகப் புகுத்திக் காட்டுகிறார் வள்ளுவர்.

தலைவியின் நெஞ்சமோ, கோட்டைக் கதவு போன்ற வலிமையுடன், காக்கப்பட்டு வருவதாகும். அந்தக் கதவை உடைத்துத் தானே, கோட்டைக்குள் புகமுடியும்.

அந்த அருமையான குறளைப் படியுங்கள்.

**காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (1251)**

நிறை என்ற கதவு. நாணம் என்ற தாழ். அந்தக் கதவினை உடைத்து விடுகிற வலிமை கொண்டது குந்தாலி என்னும் கோரசெடறி.

பகை நாட்டின் கோட்டையை முற்றுகை யிட்டு, கோட்டைக் கதவை முட்டி உடைத்து. உள்ளே புகுகின்ற படைகளைப்போல, தாளிட்ட நெஞ்சக்கதவை, காதல் நினைவுகள் உடைக் கின்றன என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவரின் போர் நெஞ்சம் புரிகிறதல்லவா !

தீச்செயல்கள் மட்டுமல்ல ; தான் என்ற தருக்கி னாலும், உடலைக் கவனிக்காமல், காக்காமல் விட்டு விடுகிற காரியத்தாலும், உடலில் தங்கியுள்ள வலிமை, இளமை, அழகு, ஆக்கம், செழிப்பு, வாழ்க்கை, பெருக்கம் எல்லாம், வந்தது போல் போய் விடுகின்றன.

அவை எப்படி வந்து போகின்றன தெரியுமா ?

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளந் தற்று. (332)**

கூத்தாடும் இடத்திற்கு வேகமாகக் கூட்டம் வந்து சேரும். கூத்து முடிந்ததும், கூட்டம் உடனே கலைந்து போய்விடும்.

கூத்தாடும் இடமாக மனிதரையும், கூடுகிற கூட்டமாக செல்வத்தையும் இந்தக் குறளுக்கு பொருள்கூறி, உவமையைக் காட்டுவார்கள்.

செல்வம் என்பதற்கு இளமை, வளமை, அழகு, ஆக்கம், செழிப்பு என்றெல்லாம் பொருள் இருக்கிறது என்பார்கள்.

ஒருவருக்குப் **புண்ணியம்** இருக்கும் அளவுக்குத் தான் பொருள் தங்கியிருக்கும் என்பார்கள். அது போலவே ஒருவருக்குக் கண்ணியம் இருக்கும் அளவுக்குத்தான் அவரது உடலில் இளமை, அழகு, வளமை, நல்ல வாழ்க்கையெல்லாம் தங்கியிருக்கும் என்று நான் கூறியபொழுது, ஆமாம்! அப்படித் தான் அது அமையும் என்றார் வள்ளுவர்.

ஒருவருக்கு உடல் வலிமையும் இளமையும் இருக்கிறபோது தான் மகிழ்ச்சியும் இன்பமும் பெருக்கெடுத்தோடும்; அந்த வாழ்க்கையைத்தான் ஒளிமயமான வாழ்க்கை என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

வலிமையையும் இளமையையும் இழந்துபோன ஒருவரால் சிரிக்கக் கூட முடியாது. அவரது வாழ்க்கை, இருள் மயமானதாகும். அதாவது, பகல் கூட அவருக்கு இருளாகவே இருக்கும். இந்தக் குறள், நான் கூறிய இந்தக் கருத்தைத்தான் சித்தரித்துக் காட்டுகிறது.

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள். (999)**

உள்ளம் மகிழ்ந்து இன்பம் அடைய இயலாதவர்க்கு, இந்தப்பரந்த உலகம், இருள்இல்லாத பகல் பொழுதிலும், இருளில்தான் கிடக்கும்.

ஆமாம். வலிமையற்றவர்கள் வாழத் தெரியாதவர்கள். வாழ்வாங்கு வாழ முடியாதவர்கள். அவர்கள் வாழ்க்கையே இருளாகத்தான் ஆகும். மருளாகத் தான் போகும். மயங்கும் கலங்கும் என்றார் வள்ளுவர்.

**அளவளாவு இல்லாதான் வாழ்க்கை, குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று. (523)**

கரையில்லாத குளம் ஒன்றில், நீர்ப்பெருக்கு நிறைந்து வந்தாலும், அங்கே தங்க முடியாதல்லவா! குளம் வறண்டு தான் கிடக்குமே தவிர, நிரம்பிக் காட்சியளிக்க முடியாது.

அதுபோலவே, உடலில் உண்டாகிற இளமையையும், உண்டாக்குகிற வளமையையும் காத்து வாழாதவர்கள் வாழ்க்கையும், வறண்ட குளமாக, எதையும் விளைவிக்காத நிலமாக, பதர்கள் குவிந்து கிடக்கும் களமாகத் தான் விளங்கும்.

இதை இந்தக் காலத்து விளையாட்டு வீரர்கள், இதயத்தில் கொள்ள வேண்டும் என்றார் வள்ளுவர்.

வலிமை மிகுதியில்லாத உடல் உள்ளவர்களைப் பார்த்தாலே தெரிந்து விடுகிறது. வலிமையை வளர்த்துக் கொள்ளும் வழிகளைச் செய்யாமல், அந்த வலிமையற்ற நிலையை மறைத்து, வலிமையுள்ளவர்கள் போல் நடிப்பவர்கள் தான், மிகுதியாக இருக்கிறார்கள் என்றேன் நான்.

ஆமாம். புலியின் தோலை மேலே போர்த்திக் கொண்டு, வயலில் போய் மேய்கிற பசு, வசமாக சிக்கிக் கொண்டால், அதன் கதி என்ன ஆகும்?

**வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.** (273)

வீரர்கள் புலியாக ஏன் வேடம் போட வேண்டும்? புலியாகவே வலிமையில் ஆகிவிடலாமே! பொய் வேடம் என்றும் நிலைக்காது. வெற்றி யையும் கொடுக்காது.

உடல் வலிமையே ஒப்பற்ற வலிமை என்று ஏற்றியும் போற்றியும் வாழ்வது வீரர்கள் கடமை. இந்தக் கருத்துக்களைத் தான் நான் என் குறட்பாக்களில் கூறினேன் என்றார் வள்ளுவர்.

அப்படிப்பட்ட அருமையான உடல் வலிமையை எவ்வாறு, காக்க வேண்டும் என்று கேட்டேன்.

இருக்கிறது என்றார். அவரது கருத்துக்களைக் கேட்கத் தயாராகிக் கொண்டேன். விளையாட்டுச் சிந்தனைகள் எனக்கு விருந்தாக அல்லவா சுவை யூட்டிக் கொண்டிருக்கின்றன. கவிஞரின் முன்னே சுவைஞனாக அமர்ந்து கொண்டு, ரசிக்கவும் ருசிக்கவும் தயாரானேன்.

# 4. நோயில்லாத உடல்

உடல் வலிமையை எவ்வாறு காக்க வேண்டும் என்று கேட்டீர்கள். வலிமையைக் காப்பது எளிது தானே என்றார் வள்ளுவர்.

கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை என்று பாடியிருக்கிறாள் ஔவைப் பாட்டி என்று நான் ஆரம்பித்தேன்.

உலகத்தில் மிகவும் கொடியது வறுமை தான். வறுமை என்றால் என்ன? வற்றிய நிலை. வறண்ட நிலை. குறைந்துபோன கொடிய நிலை.

வறுமை என்றால் செல்வம் இல்லாத நிலை என்று தானே எல்லோரும் எண்ணுகிறார்கள். பணமும் பொருளும்தான் அவர்களுக்கு முதல் நினைவாகத் தோன்றுகிறது.

வறுமை என்பது வலிமை இல்லாத நிலை என்று யாரும் எண்ணுவதில்லையே? ஏன் என்று தான் எனக்குப் புரியவில்லை.

வலிமையில் வறுமை ஏற்படுகிறபோது தான், பொருள் வறுமையும் புகழ் வறுமையும், வாழ்வில் சுவை வறுமையும் மிகுதிப்படுகிறது. வலிமை குறைகிற போதுதான், வலிமையின்மை ஏற்பட்டு அதன் தொடர்பான நோய்களும் துயரமும் கூடுகின்றன என்றார் வள்ளுவர்.

நோய் தொடாத உடல் என்று எந்த உடலும் இல்லை. ஆனால், உள்ளுக்குள்ளே உறைந்து கிடக்கும்; ஒடுங்கிக் கிடக்கும் நோய்களை, மேலே எழவிடாதபடி, அழுத்தி வைத்து ஆட்சி செய்யும் திறன் ஒவ்வொருவரிடமும் உண்டு. அந்த அற்புத நிலையைத் தான் வலிமை என்று நாம் வாயாரக் கூறுகிறோம்.

நோய் என்றாலே துன்பம் என்று பொருள். அந்த நோயை நான் சுமை என்றும், குற்றம் என்றும், இன்னும் பல்வேறு பெயரிட்டும், என் குறள்களில் பாடியிருக்கிறேன்.

நோய் ஏன் ஏற்படுகிறது என்று உங்களுக்கு விளக்குவதற்கு முன்னதாக, நோய் என்னும் சொல்லுக்குரிய பொருளைப் பற்றி விளக்கினால், நன்றாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

நோய் என்றால் குற்றம் என்றும் கூறலாம். அந்தப் பொருள் வருமாறு பாடிய குறளைக் கேளுங்கள்.

**இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல் என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய் (851)**

பிற உயிர்களோடு பொருந்தாமை என்னும் தீயகுணத்தை வளர்க்கும் குற்றத்தை, இகல் என்று கூறுவோர் நூலோர் என்று இந்தக் குறளுக்குப் பொருள்.

இதில் பாரிக்கும் நோய் என்றேனே, இங்கே இந்த நோய்க்கு குற்றம் என்பது தான் பொருள். குற்றம் செய்கிறபோது தானே துன்பம் நேரிடுகிறது என்பதை விளக்கமாக இங்கே கொள்ளலாம்.

நோயை துன்பம் என்று பல இடங்களில் குறித்துப் பாடியுள்ளேன். அதற்குரிய சான்றினைப் பாருங்கள்.

**இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும். (853)**

மாறுபாடு என்று சொல்லப்படும் துன்பம் செய்யும் நோயை ஒருவன் தன் மனத்தினின்றும் நீக்கிவிட்டால், அதனால், அழியாமைக்கு உரிய புகழை உண்டாக்கும். இங்கே, இந்த நோயே துன்ப நோய் ஆகிறது அல்லவா !

**ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் (848)**

குறைந்த அறிவுள்ளவன், அறிவுடையவர்கள் சொல்வதைக் கேட்கவும் மாட்டான். தானாக இவையெல்லாம் செய்யக் கூடியவை என்று அறிந்து கொள்ளவும் மாட்டான். இவனது உயிர், உடலை விட்டுப் பிரியும் வரை, இந்த நிலத்திற்கு சுமை போன்ற ஒரு நோயாவான். அதாவது அவனது பாவயாக்கையானது, இந்தப் பெரும் பூமிக்குப் பாரமாக இருக்கிறது.

ஆகவே, நோய் வந்தால் ஒருவருக்குக் குற்றமாகவும், சுமையாகவும், துன்பமாகவும் பரந்து விரிந்து. பாழ்படுத்தி நிற்கிறது. இனி, நோய் ஏற்படுகின்ற நிலைகளையும் நாம் சற்று ஆராய்வோம்.

ஒருவருக்கு நோய் என்பது, வருவதற்கே வாய்ப்பில்லை. ஏனெனில், அவர் தமது அறிவால், முன்னறிந்து காக்கின்ற வல்லமை கொண்டவராக விளங்கும் ஆற்றலால்.

இதுதான் அறிவார்ந்த நிலை என்று நான் கூறுவேன்.

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்** **(429)**

வரப்போவதை அறிந்து, காக்க வல்ல அறிவுடையவர்க்கு நோய் உண்டாவதில்லை ; வருவதும் இல்லை.

நோய் வருகிறது என்றால் எப்படி வருகிறது தெரியுமா ? உடல் நடுங்க, மனம் நடுங்க, உற்றாரும் உறவினரும் நடுங்க அல்லவா வருகிறது ! நோய் அச்சம் தருவதுடன் நில்லாமல், ஆட்டிப்படைத்து. அலைக்கழித்து, அழகுடலை மாய்த்து. ஆருயிரையும் அழித்து விடுவதால் தான், அதனை அதிர வருவதோர் நோய் என்று பாடினேன்.

முன்னெச்சரிக்கையாக இருந்தால், நிச்சயம் நோயைத் தடுத்து நிறுத்தலாம், நோய் வராமலே காக்கலாம் என்றேன் நான். ஆனால் அந்த நோய் எப்படி ஏற்படுகிறது என்பதைக் கூறினால் தானே என்று நான் பேசும்போது, அவசரப்படுகின்றீர்களே என்றார்.

அவசரமே அனைத்து நோய்களுக்கும் துன்பத்திற்கும் காரணமாகிவிடுகின்றது.

மனிதர்க்கும் மிகவும் வேண்டுவது நிதானம் தான். அந்த நிதானம் தவறி, மிகுதியாகும் போது அவசரமும் பதட்டமும் ஏற்பட்டுவிடுகிறது. நிதானம் குறையும்போது, மந்தமாகி விடுகிறது. சோம்பல் ஏற்பட்டுவிடுகிறது.

உடலில் உண்டாகிற செயல்கள் எப்பொழுதும் மிகுதியாகிறபோது, அல்லது குறைகிறபோது நோய் ஏற்பட்டுவிடுகிறது என்பதைக் கூறியிருக்கிறேன். அதற்குரிய விளக்கத்தையும் இப்பொழுது தருகிறேன்.

**மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று (941)**

குறைந்தாலும், அல்லது அதிகமானாலும், மருத்துவ நூலோர் எண்ணிய மூன்றும் நோயையும் துன்பத்தையும் உண்டாக்கும் என்பது இதன் பொருள்.

அந்த மூன்று என்பது எது? வளி முதலா என்ற சொல்லை நீங்கள் கவனிக்க வேண்டும்.

வளி என்றால் காற்று. வளி முதலா என்றால், காற்று, நீர், நெருப்பு என்ற மூன்றும், நம் உடம்பில் நீங்காது நிறைந்திருக்கிறது.

உடம்பிலே காற்று குறைந்தாலும் அல்லது மிகுதியாகப் போனாலும்; அது போலவே உடம்பில் வெப்ப அளவு அதிகமாகிவிட்டாலும் அல்லது குறைந்து போனாலும். உடல் நோயால் பாதிக்கப்படுகிறது.

இந்தக் காற்று, நீர், சூடு என்பதைத் தான் ஆயுர்வேதமானது, வாதம், பித்தம், சிலேட்டுமம் என்று கூறுகிறது.

பித்தம் நிறைந்து போனால் வாந்தி; வாதம் நிறைந்து போனால் வீக்கம். சிலேட்டுமம் நிறைந்தால் வெடிப்பு இளைப்பு என்றெல்லாம் நோய்கள் மிகுதியாகிக் கொண்டேபோகும்.

அத்துடன் இன்னும் ஒன்று. உண்ணும் உணவு களில்கூட, அளவு தேவை. உண்ணும்உணவு அளவில் குறைந்தால், உடலில் இளைப்பு, களைப்பு தோன்றும். அதிகமாகிப் போனால், ஆயிரம் நோய்களை அழைத்து வந்து விடும் என்கிறார் வள்ளுவர்.

காற்று தான் முதலாவது என்று நீங்கள் கூறிய கருத்தை நான் கவனித்தபோது, களிப்பில் ஆழ்ந்து போனேன் என்று நான் எனது பேச்சை ஆரம்பித்தேன்.

நீங்கள் கூறிய வளி என்ற உயிர்க்காற்றை மிகுதியாக மூச்சிழுத்து ; தேவையான அளவைத் தேடிக்கொள்ளத்தான், இத்தகைய விளையாட்டுக் களை, எங்கள் காலத்து மக்கள் விளையாடு கின்றார்கள்.

உயிர்க்காற்றானது உடலில் உயிராக மட்டும் உலவவில்லை. உடம்பின் உள்ளே உயிர்ப்பான நடைமுறைகளை விரைவுபடுத்த, செம்மைப் படுத்தி சீர் செய்ய, சிறப்பாகக் காரியங்களை நடத்தி, தேகத்தைத் திறம் மிகுந்ததாக ஆக்க உதவுகிறது என்றேன்.

இந்தக் கருத்தையும் உங்கள் குறள் ஒன்றில் திணித்திருக்கின்றீர்கள் என்றேன். எப்படி என்றார் வள்ளுவர் ஆச்சரியமாக.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றிக் கெடும். (479)**

இந்த அளவறிந்து என்ற சொல் தான், அற்புதமான சொல்லாக உங்கள் குறளில் வந்து விழுந்திருக்கிறது.

எதற்கும் ஒரு அளவு உண்டு. அது அவசியம் வேண்டும். ஒரு அளவு என்ன என்பதை, ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அந்த அளவினை அறியாது வாழ்கின்ற ஒருவனது வாழ்க்கை, இருப்பது போல் தோன்றி, இறுதியில் இல்லாததாகிப் போய்விடும்.

இதன்பொருள் சரிதான். இந்த சொல் அற்புத மான சொல் என்று ஆரம்பித்தீர்களே என்று என்னைக்கேட்டார் வள்ளுவர்.

நமது முன்னோர்கள் மூச்சுப் பயிற்சியையே முக்கியமாகக் கருதி, பேணி, ஒழுகிவந்தனர். காற்றின் பெருமையை அவர்கள் கண்டறிந்து கொண்டதால், அதை உட்கொள்ளும் முறை களுக்கும் அளவு என்று ஒன்றை அளந்து வைத்துக் கொண்டனர்.

காற்றை உள்ளே இழுக்கும் செயலுக்கு பூரகம் என்றனர். இழுத்த காற்றை நுரையீரலுக்குள் இருத்தி வைத்து அடக்குதலுக்குக் கும்பகம் என்றனர்.

பின்னர் காற்றை வெளியே விடுவதற்கு **இரேசகம்** என்றனர்.

இந்த நமது முறையை அறியாத நம் மக்கள், அன்னியர்கள், ஆங்கிலேயர்கள் கூறுகின்ற சுவாச முறையைக் கேட்டு' ஆகா ஓகோ' என்கிறார்கள்.

உள்ளே காற்றிழுக்கும் போது, 16 மாத்திரை நேரம் (மாத்திரை-நொடி) இழுத்து; 16 மாத்திரை நேரம் உள்ளே அடக்கி வைத்து, பிறகு எட்டு மாத்திரை நேரம். மெதுவாகக் காற்றை வெளிவிட வேண்டும்.

இந்த அளவு முறையை அறிந்து, பயிற்சி செய்யாதவன் வாழ்க்கை, இருந்தும் இல்லாதது போல், கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து விடும் என்றேன்.

அதெப்படி அவ்வளவு தெளிவாக உங்களால் சொல்ல முடிகிறது என்று என்னைக் கேட்கும் போது, அவரது உள்மனக் குறும்பை. பளிச்சிடும் விழிகளில் என்னால் பார்க்க முடிந்தது.

காற்றை மட்டுமா நமது முன்னோர் உணர்ந்து கொண்டனர்? அதைப் பத்தாகப் பிளந்தும். அளந்தும் பார்த்திருக்கின்றார்களே!

1. உயிர்க்காற்று 2. மலக்காற்று

3. தொழிற்காற்று 4. ஒலிக்காற்று

5. நிரவுக்காற்று  6. தும்மற்காற்று
7. விழிக்காற்று  8. கொட்டாவிக்காற்று
9. இமைக்காற்று  10. வீங்கற்காற்று

இந்த பத்து வகைக் காற்றைப் பயிற்சிகள் மூலம், பயன்படுத்திக் கொண்டால், குரங்காகிய மனதை அடக்கலாம். உடம்பாகிய கோட்டையை உயர்வாகக் கட்டிக் கொள்ளலாம்.

கடைசியாக ஒன்று. நமது சித்தர் திருமூலர் கூறுகிறார் பாருங்கள். யோகப் பயிற்சிகளை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து செய்தால், காற்றினும் வேகமாக நடக்கவும், காரியங்களை இயக்கவும் முடியும்.

எட்டாண்டுப் பயிற்சிகள் செய்தால், நரை திரைகள் தோன்றாது. ஒன்பது ஆண்டுகள் பயிற்சிகளில் ஒப்பற்ற பேறுகளைப் பெறமுடியும் என்று திருமூலர் தருகிற தந்திரத்தைப்பாடுகிறேன்

**ஏழு ஆனதிற் சண்ட வாயுவின் வேகியாந்**
**தாழா நடை பல யோசனை சார்ந்திடும்**
**சூழான ஓரெட்டில் தோன்றாது நரைதிரை**
**தாழான ஒன்பதிற் தான்பர காயமே.**

**(திருமந்திரம் 627ம் பாட்டு)**

அளவறிந்து என்ற சொல்லுக்கு நீங்கள் கூறுகிற விளக்கத்தைக் கேட்டு நானே சற்று அயர்ந்து விட்டேன். உங்கள் உடல் பற்றிய ஆய்வும் அதன் அரிய வளர்ச்சிக்கு உதவுகிற காற்றையும், மிகுதி

யாகத் தருகின்ற உடற்பயிற்சியையும் நீங்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றீர்கள். உங்கள் கருத்தைப் புரிந்து கொள்ளவே நானும் இந்தக் கேள்வியைக் கேட்டேன் என்றார்.

உங்களுக்குத் தெரியாததையா என்னிடம் கேட்டீர்கள்? அதையும் தெரிந்து கொண்டு தான், நான் விளக்கம் தந்தேன் என்றேன்.

உண்மைதான். நமது உடல் ஒப்பற்ற அமைப்பு கொண்ட உயர்ந்த படைப்பாகும். அதற்கு அளவான உணவும், அளவான பயிற்சிகளும் கட்டாயம் வேண்டும்.

நாம் உறங்கும் போது கூட, நமது உடல் சக்தியை இழந்து கொண்டுதான் இருக்கிறது. வேலை செய்யும் பொழுதோ, மிகுதியாக செலவாகும் என்று நான் சொல்லாமலே விளங்கும்.

செலவு என்ற சொல்லை நாங்கள் அழிவு என்றும் கூறுவோம். உடலில் இழக்கிற சக்தியை, நாம் மீண்டும் சேகரித்துக் காத்துக் கொள்கின்ற செயலை நாம் மேற் கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்ளாத போது தான், உடல் நலிகிறது. நோய்க்கு ஆளாகிறது, அடிமையாகிறது, அவதிப் படுகிறது. என்று கூறிய வள்ளுவர், நமது மக்களுக்கு நான் கூறும் அறிவுரை இது தான் என்று என்னைப் பார்த்தார்.

புதிய குறள் ஒன்று சொல்லப் போகிறீர்களாக என்றேன். இல்லை. பழைய குறள். புதியபொருள் என்றார்.

நெடுங் கடலும் தன்நீர்மை குன்றும்
தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

மண்ணுலகில் பெரும்பகுதியைக் கொண்டு விளங்குகின்ற பெருங்கடல் கூட தண்ணீரின்று குறைப்பட்டு போகக்கூடும். எப்போது? மேகங்கள் மழையாக நீரைப் பெய்யாது போகிற போது.

அதுபோலவே, உடல் என்ற கடலுக்கு, பயிற்சி என்கிற மேகம், சக்தி என்ற மழையைப் பொழியாவிட்டால், உடலும் குறைவாகும். நோய்க்கு ஆளாகும். நொந்து நைந்து போகும்.

ஆகவே விளையாட்டு வீரர்கள் நோயில்லா உடல் காத்து வலிமையாகத் தினம் வளர்த்து, வெற்றிகளைப் பெறவேண்டும் என்றார்.

வலிமையிருந்தால் தானே திறம் வரும் என்றேன்?

உண்மைதானே!

வாருங்கள் பேசிக் கொண்டே போகலாம் என்றார்.

# 5. வலிமையில்லையேல் திறமையில்லை

ஒருவருக்குப் பகைவராக விளங்குபவர், வேறு யாருமே இல்லை. அவருக்குப் பகைவர் அவரே தான்.

ஒருவரது உடல் வலிமையை அழிக்க, வேறு யாரும் வந்து எதுவும் செய்துவிட முடியாது. அவரது உடல் வலிமை அழிய அவரே தான் காரணமாகிக் கொள்கிறார்.

ஒவ்வொருவரது ஆக்கமும் அழிவும் அவரது நினைவால், கனவால், நிகழ்த்துகிற செயல்களால் தான் அமைகிறது திமிர்கிறது.

தசைகளும் எலும்புகளும் நரம்புகளும் உருவாக்கிய உடலை, அந்த உடல் உருவாக்குகிற உணர்ச்சிகள் தாம், ஆட்டிப்படைக்கின்றன. உடல் செழிக்கவும், சிறக்கவும் உதவுகின்றன. அது

போலவே, உடலை வளர்க்கவும், தளர்த்தவும், அழிக்கவும், அவை துணைபோகின்றன.

எனவேதான், ஒருவரின் வலிமையை வீணாக்கும் மூன்று காரியங்களை முறியடிக்க வேண்டும் என்று பாடினேன் என்று பேசினார் வள்ளுவர்.

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய். (360)**

காமத்தைக் காதல் எனலாம். வெகுளியைக் கோபம் என்றும், மயக்கத்தை போதை என்றுகூட நாம் கூறலாம்.

காதல் உணர்வும் செயலும், உணவுக்கு உப்பு போன்றது. உப்பு அளவாக இருக்கும்போது, உணவில் சுவை கூடும் உப்பு அதிகம். ஆனால், உணவு பாழாகிவிடும். உப்பில்லா பண்டம் குப்பையிலே என்ற பழமொழியையும் நீங்கள் கேட்டிருப்பீர்களே!

காமத்தில் உழன்றவர்கள், துன்பத்தில் தான் மிதப்பார்கள் என்றார் வள்ளுவர்.

'விந்து விட்டவன் நொந்து கெட்டான்' என்று ஒரு பழமொழி இருக்கிறதே என்றேன்.

கோபமோ உணர்வுகளின் கொந்தளிப்பு உணர்ச்சிகளோ நாடிகளை, நரம்புகளை புடைத்

தெழச் செய்து, புயல் போன்ற நிலையை, உடலுக்குள் புகுத்தி, பூகம்பமாக்கி விடுவதால், இரத்தம் சுண்டவும், இதயம் துடிக்கவும் போன்ற பாழ்நிலைகள் பிறந்து விடுகின்றன.

அதனால் தான், வெகுளியின் வேலை வலிமையை மாய்க்கும்.

மயக்கமோ போதையால் உண்டாவது. கள் குடித்தல் போன்ற காரியங்களால் விளைகிற மயக்கம், மூளையைத் தாக்கி, நரம்புகளின் வலிமையை வளைத்து, தளர்ச்சியை யூட்டி விடுகின்றது.

ஆகவே, இந்த மூன்று காரியங்களையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளாதவர்கள், நோய்க்கு ஆளாக மாட்டார்கள். வலிமையில் வாழ்வாங்கு வாழ்வார்கள்.

இன்னும் இந்தக் குறிப்பை, விளக்குகிறேன் கேளுங்கள் ஒருவருக்கு வேண்டாதது விழைவு வெறுப்பு அறியாமை என்பவை நான் எனும் **அகங்காரம்**; எனக்கு இதுதான் வேண்டும் என்று சுயநல வேகமும் தாகமும் நிறைந்த **ஆசை**; ஆசையில் மற்றவரது பொருட்களை அபகரிக்க என்னும் **வேட்கை**; **வெறி**; கிடைக்காத பொழுது கொப்புளிக்கும் **கோபம்** இவைதான் உடலை அழித்து, வலிமையைக் குறைத்து, வளர வொட்டாமல் வீழ்த்துபவை என்றார் வள்ளுவர்.

இப்படி வலிமை குறைந்து, வேதனைகளை அனுபவிக்கிறோமே; அப்படிப்பட்ட வேண்டாத செயல்களை விலக்கிவைப்போம், விட்டு விடுவோம் என்று யார் நினைக்கிறார்கள்? முயற்சிக்கிறார்கள்?

ஒரு செயலில் துன்பம் படப்பட, அதிலே அதிகமான ஆசையும் விருப்பமும் கொண்டு மீண்டும் மீண்டும் அதையே செய்துதான் அழிந்து போகிறார்கள் மனிதர்கள். இதுதான் மனித நீதியாக, மரபாக, மறையாத பழக்க வழக்கமாக வந்து கொண்டே, வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இதுதான் எனக்கு அதிக வருத்தத்தை அளிக்கிறது என்றார்.

**இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற்று உயிர் (940)**

வலிமையே வாழ்வு என்ற கொள்கை வழி மாறும் போது, பலமின்மை வீடு அமைத்து, மெத்தை விரித்து, படுத்துக் கொள்கிறது.

வலிமைக்கு இணையாகக் கூற இங்கு எதுவுமே இல்லை. வலிமை இல்லை என்றால் வாழ்வே இல்லை என்பதைத்தான், வறுமை என்பது போல, இன்மை, இல்லை என்றே குறிப்பிட்டேன்.

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னாதது. (1041)**

வலிமை இன்மை போல, துன்பம் தரக்கூடியது உலகில்வேறு எதுவுமே இல்லை. அந்த வலிமையின்மையே துன்பத்திலும் துன்பமானது.

பொருளில்லாத வறுமையாளர்க்கு பின்னாளில் நல்ல வாழ்வு அமைய வாய்ப்புண்டு. ஆனால் உடலில் வலிமையில்லாமல் வாழும் வருமையாளருக்கே, வாழ்வே அழிந்து போகும் நல்ல வாழ்வு வரும் என்கிற நம்பிக்கைகூட இல்லாமல் போய்விடும்.

இந்த நிலை எல்லோருக்கும் பொருந்தும். செல்வ வசதி உள்ளவர்கள், வலிமையில்லாதவர்களாகஇருந்து விட்டால்; பொருள் வளம் இல்லாதவர்கள் வலிமையுள்ளவர்களாக இருந்து விட்டால் அவர்கள் நிலை எப்படி இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

நான் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன் அவரது சொற்கள் வேகம் பெற்று வெளியே வந்தன.

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர். (973)**

வலிமையில்லாதவர்கள், உயர்ந்த பொறுப்பில் பதவியில் அல்லது உயர்ந்த நிலையில் வாழ்ந்தாலும், அவர் மேலானவர் அல்லர். வலிமை நிறைந்தவர்கள்,

கீழான நிலையில், பதவியில் இருந்தாலும், அவர்கள் கீழானவர் அல்லர்.

வலிமையுடையவர்களே செயற்கரிய காரியங்களையெல்லாம் செய்யமுடியும் வலிமையற்றவர்களோ, தமக்கு உரிய காரியத்தை கூட செய்து கொள்ளமுடியாமல், ஆள்தேடி அலைவார்கள்.

அதனால்தான், வலிமையால், அதன் வழிவருகிற திறமையால் மக்கள் மாறுபட்டுத் தெரிகின்றார்கள் வேறுபட்டு வாழ்கின்றார்கள்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான் (972)**

பிறப்பிலே எல்லா மக்களும் ஒன்று போல்தான் தெரிகின்றார்கள். ஆனால், உடல்வலிமையில் அதனால் விளைகின்ற ஒப்பற்ற திறமையில்; அந்தத் திறமையில் எழுகின்ற செயல்முறைகளில் வேறுபாடு நிச்சயம் தெரியும். அப்பொழுது வலிமையும் திறமையும் உள்ளவர்கள் வாழ்த்தப்படுவார்கள் வணக்கத்திற்கு உரியவராகவும் ஆகிவிடுகின்றார்கள்.

ஆமாம் ஒவ்வொரு மனிதரும் அவரவர் செய்யும் தொழிலில் வேற்றுமை தெரிகிறது. செய்கிற தொழிலில் வேகம் தெரிகிறது. விவேகம் புரிகிறது. இறுதியில் பெறுகிற வெற்றியின் திண்மையும் புரிகிறது.

திறமையுடையவர்கள் சிறப்புகளுக்கு உரியவ ராகின்றார்கள் திறமையற்றவர்கள் மற்றவர் களால் இகழப்படுகின்றார்கள். இந்த உலக நியதியைத் தான், இந்த குறளில் எழுதியிருக் கிறேன்

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு. (752)**

பொருள் இல்லாதவரைத் தான் எல்லோரும் இகழ்ச்சியாகப் பேசுவர் ஏளனமாக எண்ணுவர் என்று தான் மக்கள் நினைக்கின்றார்கள்.

செல்வர் என்பதற்குப் பொருள் செழிப் புள்ளவர், ஆக்கம் நிறைந்தவர், அழகு மிக்கவர், மதிப்பெருக்கம் கொண்டவர், வாழ்க்கையில் வளரும் பண்பினர் என்றெல்லாம் இருக்கிறது.

இந்தப் பண்புகளையெல்லாம் மறந்து விட்டு, பணம் தான் பெரிது, பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும் பணம் பாதாளம் வரையிலும் பாயும் என்றெல்லாம் பேசுவது தான், எனக்கு விந்தையாகப்படுகிறது.

நோய் உள்ளவர்களை நொடிக்கொருதரம் நொந்து புலம்புபவர்களை; குடும்பத்தில் உள்ளவர் களையும் கவலைக்குள் ஆழ்த்தி, கண்ணீர் விடச் செய்கிறவர்களை, யார்தான் மதிப்பார்?

வலிமையின்மை மரணத்திற்குச் சமம் அல்லவா!

அதனால் தான், வலிமை இல்லாதவர்களை உலகம் ஏசும். இகழும் ஏளனமாகப் பேசி மகிழும். அதே நேரத்தில் வலிமையுள்ளவர்களை, வாழ்த்தும், வணங்கும். வரிசையில் வந்து நின்று புகழ்பாடும் அவர் சொல்லும் ஏவலுக்கு செவி சாய்க்கும் தலைதாழ்த்தும் தன்மையிலும் தண்மையிலும் அணிசேறும்.

அப்படிபட்ட வலிமையும், அதனால் விளையும் திறமையில்லாதவர்கள் செயல்கள் எப்படி இருக்கும் என்பதையும் விளக்கமாகக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

பலம் இல்லாதவன், திறமையற்றவனாகி விடுகிறான். அவனுக்கே அவன் மேல் உள்ள நம்பிக்கை, கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து போவதையும், மற்றவர்கள் தன்னை இகழ்வதையும் அறிந்து கொள்கிறபோது, அதிலிருந்து தப்பி வெளிவர, வேறுபல முறைகளைச் செயலாக்கத் தொடங்குகிறான் அவனது தாழ்வு மனப்பான்மை, அவனை மேலாக நினைக்கத் தூண்டுகிறது. ஆனால் மந்த அறிவோ அவனை உளறச் செய்து கேவலப்படுத்தி விடுகிறது.

திறமையில்லாமல், தன்னைத் திறம் உடையவன்போல் பேசி மகிழ்வதும்; திறமைசாலி என்று தன்னைப் பிறருக்குக் காட்டிக் கொள்வதும், திறமையற்றவர்க்கு கைவந்த கலையாகும்.

தான் கல்விப் பெருக்கம் கொண்டவன், தொழில் நுணுக்கம் நிறைந்தவன், தேர்ந்தவன், எதிலும் வல்லவன் என்று செருக்குடன் பேசி, அவன் மற்றவர்கள் மத்தியிலே, நடிக்கிறான். அந்த நடிப்பு அவனை இழிவுக்குள்ளாக்கி, துன்பங்கள் பலவற்றிலும் ஆழ்த்தி விடுகிறது.

எதையும் காண செய்ய அவனுக்கு வழி யில்லாமற்போவதால், அவன் அவனாக எதையும் காணவும் மாட்டான். பிறருக்குப் புரியாது என்று காணாத பலவற்றைக் காட்டுவான். தானே கண்டது போலவும் தலைகனத்துடன் பேசுவான்.

மற்றவர்கள் உண்டு என்பதை இவன் இல்லை யென்பான் அவனை நான் ஒரு பேய்க்கு ஒப்பிட்டுப் பாடியிருக்கிறேன்.

**உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும். (850)**

மனித உருவில் காணப்படும் பிணம்மட்டுமல்ல. அத்தகைய பண்பிலிகள், பூவுலகத்தில் வாழ்கிற பேயென்றே கருதப்படும்.

இந்த வலிமையற்ற பேய்களுக்கு, அறிவு தான் குறைவு என்றால், உடல் வலிமை குறைந்துபோகக் காரணம் என்ன என்றேன்.

காமம் என்றேன் அல்லவா! அந்தக் காரியத்தில் கரைகாணா இன்பம் தேடுவதால் தான்; உடலில்

வலிமை குறையக் குறைய, உடல் உறவு என்பதில் நீங்காத வேட்கையும் வெறியும் ஏற்பட்டுவிடுகிறது.

அதனால் தான் பெண் விழைவார்க்கு நாணமும் இல்லை. மானமும் இல்லை. ஈனமும் இல்லை என்பார்கள் பெரியோர்கள். இதைப் பின்பற்றி, நானும் பாடியுள்ளேன்.

**பேணாது பெண்விழைவான் ஆக்கம், பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும். (902)**

தன் உடல் நலத்தைப் பேணாது, ஆண்மையைக் காக்காது, ஆற்றலைப் போற்றாது, வலிமையை உணராது, பெண்ணை விரும்புபவன், ஆக்கமும் ஊக்கமும், வலிமையும் பெருமையும், அழிந்து மற்றவர்கள் முன்னே வெட்கப்பட்டு நிற்கும் நிலையை அடைவான்.

பெண்களைத் தேடி அலைபவர்கள் திறமையாளர்கள் ஆகமுடியாது. பெருமையுடையவர்களாக. உயர்வதும் முடியாது.

அவன் அழகற்றதொரு பொருள்போலவே. மற்றவர்களால் கருதப்படுகிறான். அந்தக் காட்சி ஓர் அவலக் காட்சியல்லவா! (தனக்கு இல்லாத) தன் அழகை அதிகரித்துக் கொள்ள, ஒரு பெண், எந்த விதமான துன்பத்தையும் பொறுத்துக் கொள்வாள் என்ற பழமொழிபோல, இல்லாத தன் திறமையை புகழ்ந்து பேசிக் கொண்டு

அவமானப்பட, எந்த பலஹீனனும் தயங்க மாட்டான் என்றேன் நான்.

உண்மை தான். அப்படிப்பட்ட ஆளைப்பற்றி, ஒரு உவமை மூலம் சொல்லியிருக்கிறேன் கேளுங்கள்.

**கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல். (840)**

வீரர்கள் நிறைந்திருக்கும் இடத்திற்குள், வீரமும் திறமையும் வலிமையும் அற்ற ஒரு பேதை புகுவது எப்படி என்றால், தூய்மையில்லாத பொருளின்மேல் (நரகல்) காலை வைத்து, மிதித்து விட்டு, அந்தக் காலைக் கழுவாமல், பஞ்சணைமீது வைத்ததற்கு ஒக்கும்.

எப்படி இந்த உவமை!

நல்ல திறனற்றவர்கள், நரகலுக்குச் சமம் என்றதற்கு மேலாக கூற ஒன்றுமே இல்லை ஐயா! உங்கள் வலுவான உவமை, வாழும் மனித இனத்திற்கு, மாண்பான வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்று நான் பாராட்டினேன்.

இரண்டாயிரம் ஆண்டுகள் என் பாடல் இருந்தும், யாரும் பின்பற்றியதாகத் தெரியவில்லையே.

இங்கே விளையாடுவோர், ஆட ஆரம்பித்து, சிறிது நேரத்திற்குள்ளேயே, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறார்களே! பார்க்க பாவமாக இருக்கிறது.

உடல் வலிமையை வளர்ப்பது முதல் பாடம். அதன் வழி திறமையைக் கற்றுக் கொள்வதோ இரண்டாவது பாடமாக இருக்க வேண்டும், என்று வள்ளுவர் சொல்லியதை இடைமறித்தேன்.

திறமைகளைக் கற்றுக் கொள்ளும் முறைகளைக் கற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கேட்டதற்கு, என்னைப் பேச வைத்து விடுவது என்று தீர்மானித்து விட்டீர்கள் போலும் என்று சிரித்துக் கொண்டார்.

ஞானதீபமாக அந்த சிரிப்பு எனக்குத் தெரிந்தது.

**விளையாட்டை கற்கும் விதம்!**

உடலில் வலிமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்! வலிமையான நிலைதான் வளமான நிலையாகும்.

வளமான மண்ணிலே, பதமான சூழ்நிலை இருக்கும். பயிர்கள் விளையும் இதமான நிலையும் ஏற்படும்.

அதுபோலவே, வளமான உடலில்தான் ஆர்வம் எழும். ஆற்றல் மிகும் திறமைகள் ஊறும். தேர்ச்சிகள் பெருகும். திண்மையான விளைவுகள் தேங்கும் என்று வள்ளுவர் பேசிக் கொண்டே வந்தார்.

அவரின் ஆற்றொழுக்கான பேச்சை, அமுதமாக ரசித்து நானும் கேட்டுக் கொண்டே வந்தேன்.

இக்காலத்து விளையாட்டுக்கள் பற்றி எனக்கு நன்கு புரிகிறது என்றார்.

இந்த விளையாட்டுகளுக்கு அடிப்படைத் தேவை உடல்வலிமைதான். அந்த வலிமையைக் காத்துக் கொண்டு, கற்றுக் கொள்ளும் முறைகளை, நீங்கள் தெளிவாக விளக்க வேண்டும் என்றேன்.

மனித வாழ்வின் மேன்மையே அறிவில்தான் திகழ்கிறது. அறிந்து கொள்வதைத்தான் அறிவு என்கிறோம்.

தானே அறிந்து கொள்வது ஞானம் ஆகும். இது பிறவியிலேயே பெறும் பாக்கியமாகும்.

ஒவ்வொரு நிலையிலும் உணர்ந்து, புரிந்து, அறிந்து கொண்டு, அறிவை மேப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்தகைய அருமையான அறிவை, அனுபவங்கள் மூலமாகப் பெறலாம். கறறுத் தேர்ந்த பெரியோர்கள் வழியேயும் பெறலாம்.

நூல்கள் பலகற்று, நுண்மையான மதிநுட்பம் பெற்ற நுண்மாண் நுழைபுலத்தோர் இடம்

சென்று, கற்கும்போதுதான், சிறந்த அறிவு சேர்ந்து, மிகுதியாகி, வளர்கிறது.

அப்படிப்பட்ட அறிவை எப்படிப் பெற வேண்டும் தெரியுமா?

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லாதவர் (305)**

செல்வம் உடையவர்கள் முன்னே சென்று. பணிந்து நின்று, பணம் கேட்கும் ஏழைபோல; அறிவுச் செல்வம் நிறைந்த ஆன்றோரிடம் சென்று, அடங்கி நின்று, வணங்கி, அறிவினைப் பெற வேண்டும்.

அப்படி அறிவைப் பெறுகின்றவரே செல் வந்தராகிறார்! அடக்கமில்லாமல். வணக்கமில்லா மல், ஆணவக்காரர்களாக இருப்பவர்கள், கடைய ராகின்றார்கள்.

ஏனென்றால், கல்விச் செல்வம், உலகத்துச் செல்வம் எல்லாவற்றிலும் உயர்ந்த செல்வமாக உலகில் மதிக்கப்படுகிறது.

கற்றவர்க்குரிய சிறப்பைப் பற்றி ஒரு பாடல் என்றேன். பாடுங்கள் கேட்போம் என்றார்.

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னனுக்குத்**
**தன்தேயம் அல்லால் சிறப்பில்லை கற்றோருக்குச்**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

என் பாடலைக்கேட்டு, உண்மைதான் என்றார். அதுமட்டுமல்ல. 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' என்பது நம் தமிழகத்துக் கொள்கையாக இருந்தது என்று வள்ளுவர் வாயூறிக் கூறினார்.

அதனால், அப்படிப்பட்ட அறிஞர்களை அவமதிக்காது, அவர்களைப் போற்றிப் புகழ்ந்து, கற்க வேண்டும் என்று பாடினேன்.

**ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை.** (891)

அறிவாற்றல் மிக்க ஆன்றோரை இகழ்வது என்பது ஆன்ற பாவங்களில் தலையாயதாக அமையும். அவர்களின் அன்பைப் பெற்றுக் கொண்டால், எண்ணிய எல்லாவற்றையுமே பெறமுடியும்.

அப்படி ஒழுகுவது, அருமையாக நடந்து கொள்வது, போற்றிச் செய்கின்ற காரியங்களில் எல்லாம் புகழ் மிக்க ஒன்றாக அமையும்.

ஆகவேதான், குருவை திருவாக மதிக்க வேண்டும். எண்ணங்களால் துதிக்க வேண்டும். அப்பொழுதுதான், உண்மையான அறிவு ஊற்றாக வெளிப்படும் என்றார்.

எப்படி என்றேன் பேதமையுடன்.

**நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.** (373)

எவ்வளவுதான் நூல்கள் பலவற்றைத் திரட்டி வைத்துக் கொண்டு தேர்ச்சி பெற வேண்டு மென்று தீராத வேட்கையுடன் ஒருவர் படித் தாலும், அவற்றை உள்ளத்தே வாங்கிக் கொண்டு, உண்மையுடன் பதித்து. வளர்த்துக் கொள்கிற போதுதான், அறிவு மிகுதியாக வளரும்.

பொய்யாக, பிறருக்காகப் படிக்கின்ற போது, அறிவு விரிவடைகிற தெளிவு, அங்கே மங்கிப்போய் விடுகிறது.

உண்மை அறிவு இன்னும் சிறப்பாக வளர, நெஞ்சில் நுண்மையையும், நினைவில் திண்மை யையும் பதித்துக் கொள்ள வேண்டும். அங்குதான், அறிவு வளர்ச்சி நீரோட்டமாகப் பரந்து தேரோட்டமாகிச் சிறப்பு பெறுகிறது.

இப்படிக் கற்கும் வேகமும் வெறியும் மிகுதி யானால், என்ன, ஏது, எவ்வளவு என்று அளவு தெரியாமல் போய்விடும்.

அளவு இல்லாமல் போனாலும், அளவு கடந்து போனாலும், அடுத்துத் தொடர்வதில், ஆன்ற தெளிவு தோன்றாது. மாறாகக் குழப்பமே மனதில் மண்டிக் கொள்ளும். மாளாத சூனிய உணர்வு களே அண்டிக் கொள்ளும்.

ஆகவே, எதையும் அளவு அறிந்து கற்க வேண்டும். இங்கே அளவு என்பது, தன் அறிவு

நிலை, குரு போதிக்கின்ற இனிய நிலை, அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனநிலை என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

குழந்தைக்கு சீரணிக்கக் கூடிய உணவினைக் கொடுப்பது தாயின் கடமை. குழந்தைமேல் அதிக ஆசை வைத்து, கடினமான உணவுப் பொருட்களைத் தருகிறபோது, குழந்தைக்குப் பசி அடங்குவதற்குப் பதிலாக, வயிற்று வேதனை உண்டாகி விடுவதுபோல, கற்கும் அளவும் நன்கு தெரிந்தாக வேண்டும்.

சிறுகச் சிறுக சிறிய கருத்துக்களைப் புரிந்து கொண்டு, பிறகு நுண்மாண் நுழைபுலக் கருத்துகளுக்குள் நுழைய வேண்டும்.

**ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (725)**

முடிந்தவரை தெளிவாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான், அறிவுடையோர் கூடியுள்ள சபைகளிலும், பிறர் பேசும் கருத்துக்குப் பதில் கூறவும், மாற்றுக் கருத்துக்களை வளமாக எடுத்து உரைக்கவும் முடியும் என்பதே என் குறளின் பொருள் என்று கூறிமுடித்தார் வள்ளுவர்.

இதுவரை, கற்கும் முறையைக் கூறினேன்.

இனி, நீங்கள் கேட்ட விளையாட்டுத் திறமையைக் கற்று, தேர்கின்ற முறைகளை

யும் கூறுகிறேன் என்று தன் பேச்சைத் தொடர்ந்தார்.

இதுகாறும் அறிவு பெறும் முறைகள் எவ்விதம் அமைய வேண்டும் என்று கூறினேன். இனி ஒவ்வொருவருக்கும் அடிப்படையாய் அமைந்திருக்கும் திறமைகள், வளர்ச்சி பெறக்கூடிய வழி முறைகளை, எவ்விதம் பேணிப் பெருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறேன்.

திறமையை வளர்க்க முயல்கிறபோது, மூன்று பேய்க் குணங்களை ஒருவர் விட்டொழிக்க வேண்டும்.

தானென்ற செருக்கு; எதற்கெடுத்தாலும் வருகின்ற அடக்க முடியாத கோபம்; சிறுமை தருகின்ற காம உணர்வு. இம் மூன்றையும் முடிந்த வரை தடுத்து ஒதுக்குகிறபோது, திறமை தானே வளர்ந்து கொள்ளும்.

ஒவ்வொரு விளையாட்டிற்கும் அடிப்படைத் திறமைகள் (Basic Skills) என்று பல உண்டு என்றேன் நான்.

ஆமாம். இங்கே பந்து விளையாட்டுக்கள் பலவற்றையும் நானும் பார்த்து வந்தேனே! அவற்றைப் பார்த்த பிறகு தான் நான் கூறுகிறேன்.

இந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவும் பணிவு, துணிவு, கனிவு இவற்றிற்கு

எதிராக உள்ளவை தான் தற்பெருமை; கோழமை மிகுந்த கோபம்; நலிவூட்டுகிற காமம்.

**செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமிதம் நீர்த்து. (431)**

இந்த மூன்று தீக்குணங்களை தெளிவாக ஒதுக்கிவிடுபவர்க்கு, திறமைகள் பெருக்கம் பெற்று, பெருமிதத்தை உண்டாக்கும்.

அது மட்டுமல்ல. அந்தத் திறமைகளை வளர்க்கின்ற முயற்சிகளிலும், மும்மரமாக ஈடுபட வேண்டும். பாடுபட வேண்டும். அதில் பக்குவமான வழிகளை, பண்பான நெறிகளைப் பின்பற்ற வேண்டும்.

பின்பற்றும் வழிமுறைகளைப் பின்பற்றி, தெரிந்த திறமையை பயன்படுத்தி, தெரியாத திறமைகளை வளர்த்துக் கொள்ள முயற்சிப் போருக்கு, அது எளிதாக அமையும். ஏற்றமுடனும் வளரும். இதோ இந்தக் குறளைக் கேளுங்கள்.

**தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணி செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல். (462)**

அரிய திறமைகளும், தெரிந்த திறமையைப் பயன்படுத்தி பயிற்சி செய்ய, பெரிதும் வளரும்.

ஆனால், செய்யக் கூடிய பயிற்சியை செய்யாமல் விட்டுவிடுபவர்கள்; செய்யக் கூடிய

பயிற்சியைத் தவறாக செய்பவர்கள் இருவரும், தங்கள் திறமையைத் தாங்களே அழித்திக் கொண்டு விடுகின்றார்கள்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும். (466)**

எங்கள் உடற்பயிற்சியிலும் இந்தக் கருத்து அதிகமாக வலியுறுத்தப்படுகிறது என்றேன்.

சொல்லுங்களேன் என்றார்.

உடற்பயிற்சி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தவறாக உடற்பயிற்சி செய்பவர்கள், தேவைக்கு அதிகமாக செய்பவர்கள், தீமையையே அதிகம் அடைகின்றார்கள். ஆகவே தான் அளவாக பயிற்சிகள் செய்தாக வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றார்கள்.

ஆமாம்.

அடிக்கடி, உரிய முறையில் திறன் நுணுக்கங்களைக் கற்கும்போது தான், ஆற்றல் மிகுந்த திறமை நிறைய கிடைக்கிறது என்று கூறியபோது, என்னைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் மறைந்துகிடந்த அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியாமல் திகைத்து நின்றேன்.

# 6. விளையாட்டில் தேர்ச்சி பெற!

வீடியோ படம் ஓடிக்கொண்டிருந்தது.

விளையாட்டுக்கள் பற்றிய படம். மேல் நாட்டு கால்பந்தாட்ட வீரர்களுக்கும், நம் நாட்டு ஆட்டக் காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போட்டி ஒன்றினைக் காட்டும் படம்.

வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார் வள்ளுவர்.

நிழற்படம், புகைப்படம், பேசும்படம், திரைப் படம், வீடியோ படம் என்று, இந்த நாளில் விஞ்ஞானம் கொண்டு வந்திருக்கிற விந்தைகள் பற்றி நான் விளக்கம் கூறக் கூற, அவர் வியப்பு மேலிட்டு, புன்னகை புரிந்தார்.

ஆகா! மனித மூளையின் ஆற்றலுக்கு ஈடு இணை இல்லை பார்த்தீர்களா! எங்கள் காலத்தில்,

ஆளுக்கு ஆள், நேருக்கு நேர் என்ற நிலைமை தான், இருந்தது.

இன்று எங்கோ இருக்கிறவர்களை, நாம் இங்கிருந்துகொண்டு பார்க்கிறோம். மகிழ்கிறோம்.

மெய்ப் பொருள் காண்பது தான் அறிவு என்று நான் பாடினேன். இப்போது மெய்ப்பொருளில் உட்பொருள் கண்டிருக்கின்றார்களே இந்த மாந்தர்கள்!

நுட்பத்திலும் திட்பம். அந்தத் திட்பத்திலும் தேர்ச்சி. தேர்ச்சியிலும் எழுச்சி. இந்த அறிவு கொண்டு வந்திருக்கும் ஆராய்ச்சியும்; அது பிறப்பித்துத் தந்திருக்கும் பெருமை மிகு பொருட்களும், மனித குலத்தின் மாண்பையல்லவா, வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றன என்று பேசிய வள்ளுவரை, பேராச்சரியத்துடன் பார்த்தேன்.

நடந்து போன நிகழ்ச்சிகளை, இறந்த காலம் என்று நாங்கள் கோடிட்டுக் காட்டினோம். ஏன் அப்படிக் கூறினோம் தெரியுமா! இறப்பு என்பது இறுதியாக நடக்கும் நிகழ்ச்சி. அதற்குப் பிறகு, எதுவுமே நடக்காது என்பதை உறுதியாகக் குறிக்கவே, இறந்த காலம் என்றோம்.

ஆனால், அப்படி ஒரு காலம். எந்த நிகழ்ச்சிக்கும் இங்கே இருக்காது போலும். கண்

முன்னே காண்பது போல, காட்டி மகிழ்விக்கிறதே! பெருமைக்குரிய காரியம் என்றார்.

இந்தப் போட்டி, பந்தைக் கால்களால் மட்டும்; உதைத்து ஆடுகிற ஆட்டம். எதிரே இருக்கும் இலக்கிற்குள் பந்தை அடித்துவிடுகிற அணியானது, வெற்றி பெற்று விடும். அதற்காக, பல விதிமுறைகள் உண்டு. அந்தக் கட்டுப் பாட்டிற்குள் தான், ஆட்டத்தை ஆடி முடிக்க வேண்டும் என்று விளக்கம் கூறினேன்.

அந்த ஆட்டக்காரர்கள் ஓடுகிற திறன், ஓயாமல் களைக்காமல் ஆடுகிற ஆற்றல், அவர்களின் தேர்ச்சியை, திறமையைக் காட்டுகிறதே! கவனித்தீர்களா என்று, என்னைப் பார்த்துக் கேட்டார்.

ஆமாம் என்றேன்.

நம் நாட்டுக்காரர்களின் முகத்தில் அயர்வும், ஓட்டத்தில் தளர்வும் தெரிகிறதே கவனித்தீர்களா என்ற போது, அவரின் கண்ணோட்டத்தின் நுண்மையைக் கண்டு, அதிர்ந்து போனேன்!

படக் காட்சியில், ஒரே சத்தம். பார்வையாளர்களில் பலர் எழுந்து நின்றும், சிலர் குதித்துக் கொண்டும் கூச்சல் போட்டு, கைதட்டி ஆரவாரிக்கிற சத்தம் கேட்டு உற்று நோக்கினோம்.

வெளிநாட்டு அணியினர், நம் நாட்டு வீரர்கள் காக்கும் இலக்கிற்குள் பந்தை அடித்து, வெற்றி பெற்றதற்குத் தான், அந்த விண்ணதிரும் சத்தம்.

அவர்களின் ஆற்றல் உங்களுக்குப் புரிகிற தல்லவா! அவர்களுக்கு, வெற்றி விரைந்து வந்து முன்னே விளையாடுகிறது பார்த்தீர்களா! ஏனென்றால், அவர்கள் காட்டுகிற முனைப்பும் முயற்சியும் தெரிகிறது அப்படி என்றார். எப்படி என்றேன் நான்!

தான் நன்கு தெரிந்து கொண்ட, தன்னின தக்கார்களுடன், செய்ய விழைகிற காரியத்தை, நன்கு ஆராய்ந்து முடிவு செய்து; அத்துடன் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்க வல்ல மக்களுக்கு, காரியம் எதையுமே சாதித்து வெற்றி பெற முடியும். அவர்களுக்கு அரிய பொருள் என்று எதுவுமே இல்லை.

நான் அன்றே பாடியிருக்கின்றேனே என்று, அந்தக் குறளைப் பாடிக் காட்டினார்.

**தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணிசெய்வாருக்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல். (462)**

எண்ண வேண்டும். அந்த எண்ணத்தில் தெளிவு வேண்டும். அந்தத் தெளிவுக்கு இலக்கு வேண்டும். இலக்கின் தன்மை, நுண்மை, வன்மை, கடுமை என்பதையும் புரிந்திட வேண்டும். அதனை

அடையும் ஆராய்ச்சி அறிவு வேண்டும் அறிவுக்கு உருவம் தருகிற முயற்சி, முனைப்பு, பயிற்சி, என்றெல்லாம் இணைக்கிற போது தான், செய்கிற தொழிலில் தேர்ச்சி நிறையும்.

இது விளையாட்டுக்கும் பொருந்தி வருகிறதல்லவா!

வெறும் விளையாட்டு என்று, வேடிக்கையாக நினைத்திடும் பேர்களின் வாழ்வும், வேடிக்கையாகவே ஆகிவிடுவதுதான், இந்த ஆட்டம் நமக்கு காட்டுகிற பாடம் என்றார் வள்ளுவர்.

நம் நாட்டவர் உழைப்பில் நாட்டம் குறைந்தவர்கள், எல்லாம் தாமாகவே வந்துவிடும் என்று எண்ணுகிற இதயம் உள்ளவர்கள். எங்களை விட, யாரும் கெட்டிக்காரர்கள். அல்ல என்று கர்வம் கொள்கிற இறுமாப்பு நிறைந்தவர்கள்.

நம் நாட்டுக்காக விளையாடுகின்றோம். நம் வெற்றியில் தான் நம் நாட்டின் மதிப்பும் கௌரவமும் நிழலாடிக் கொண்டிருக்கிறது. அதற்காக எத்தனை ஆக்கப்பூர்வமான உழைப்பு வேண்டும் என்பதை, கொஞ்சமும் எண்ணிப் பார்க்காதவர்கள்.

அவர்களுக்கு நமது நாடு கொடுக்கிற உற்சாகம், வசதி பொருள் நிலை எல்லாம், அவர்

களை மேலோங்கி நிற்கவைக்க முடியவில்லையே என்றேன் சற்று ஆதங்கத்தோடு.

நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. நீங்கள் விளையாட்டுக்களை இந்த நாட்டில் வளர்த்து விட பல வசதிகளை செய்து தருகிறீர்கள். வாய்ப்புக்களை உண்டாக்கித் தருகின்றீர்கள். இருந்தாலும், வெற்றிக் கனி, எட்டாக் கனியாகவே இருக்கிறது என்பது தானே உங்கள் மனக்குறை?

ஆமாம் என்று தலையாட்டினேன்.

''ஏறுகிற வரையில் தான் ஏற்றிவிட முடியும்'' என்கிற பழமொழி ஒன்று இருக்கிறது தெரியுமா?

தெரியும் என்றேன்.

அந்த நிலைமை தான் இந்த நாட்டில் இருக்கிறது. மரம் ஏற விரும்புகிறவனுக்கு, அருகில் உள்ள ஆர்வக்காரர்கள், கை எட்டுகிற உயரத்திற்குத்தான், தூக்கிவிட முடியும். கூடவே மரத்தின் உச்சிக்குக் கொண்டு போகமுடியுமா?

அதுபோலவே, ஒருவன் செய்கிற காரியத்திற்கு, உதவி செய்பவர்கள், எல்லா வசதிகளை மட்டுமே செய்து தரமுடியும். கூடவே இருந்து அவன் செய்கிற காரியத்தையும் செய்ய முடியுமா? அப்படி யாராவது செய்தாலும், அல்லது செய்ய வேண்டுமென்று விரும்பினாலும். அந்தக் காரியம் நிறை

வேறவும் நிறைவேறாது. உருப்படவும் உருப்படாது.

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று**
**போற்றினும் பொத்தப் படும். (468)**

தக்க வழிகளால் ஒரு காரியத்தை செய்ய முயலாத முயற்சி அற்ற ஒருவனுக்கு, பலர் கூடி வந்து உதவி செய்தாலும் அந்தக் காரியம் பலன் தராது அழிந்து போகும். ஆமாம், பொத்தப்படும் என்றேன் பாருங்கள்! அதாவது புரையோடிப் போகும் என்றேன்.

புண் ஒன்று புரையோடிப் போனால், பழுது பட்ட அந்த அங்கத்தை, அகற்றி எறிய வேண்டியது தானே?

ஒழுங்காக முயற்சி செய்யாத உங்கள் ஆட்டக் காரர்களை ஆட்டத்தை விட்டே அகற்றிவிட வேண்டும். விளையாட்டில் அக்கறையும், ஆர்வமும், முயற்சியும், உழைப்பும் காட்டாத வீரர்கள், புரையோடியபுண்ணைப் போன்றவர்கள்.

அந்த அகற்றும் காரியத்தைச் செய்கின்ற தலைவர்கள் நம் நாட்டில் குறைவு என்றேன்.

உங்கள் இழப்புக்கும், இளிவுக்கும் இதுதான் காரணம் என்றார் வள்ளுவர்.

ஒருவர் தவறு செய்கிறார் என்றால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தக்க வழிகளைப் பின் பற்ற வேண்டும் என்று இடித்து, அறிவுரை கூற வேண்டும். இந்த வேலையை, இவன் சிறப்பாக செய்து முடிப்பான் என்றே தேர்ந்து உதவ வேண்டும். உதவிக் கொண்டு இருக்கின்ற பொழுதே, அவனது முன்னேற்றத்தையும் அறிந்து, பின் தொடர்ந்து பேண வேண்டும்

அப்படி செய்யாத தலைவர்கள் தாம், வெற்றியின் அழிவுக்கு வித்திட்டு, வேலியிட்டுக் காக்கும், உள்பகைவர்கள் ஆவார்கள்.

உடம்பில் மறைந்து கிடந்து ஊறு செய்கின்ற பயங்கர நோய்களுக்கும், அப்படிப்பட்டத் தலைவர் களுக்கும் வேறுபாடே இல்லை.

அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும், கெடுக்கும் பகைவர்கள் இல்லாமலேயே கெட்டுப் போவார்கள். தீயன கண்டு, துள்ளி எழுந்தும் தடுத்து நிறுத்துவார்க்கும், பகைவர்கள் இருந் தாலும், இல்லாமல் அழிவார்கள்.

**இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே**
**கெடுக்கும் தகைமை யவர் (447)**

தோல்வியை நம்மவர்கள் ஏற்கிறார்கள் என்றால், நம்மிடையே தேவையான திறமை

குறைவு என்பது புரிகிறது. அது ஏன் எப்படி என்றும் புரிகிறது. அதைத் தீர்த்து வைப்பது எப்படி என்பதில் தான் குழப்பம் என்றேன்.

இதில் குழப்பம் எங்கே இருக்கிறது! வீடு ஒன்று இருக்கிறது. அது நிலைத்து நிற்க வேண்டுமாயின், உறுதியான தூண் வேண்டும். தூண் சரியாக இல்லையென்றால், வீடும் தூள் தூளாகி இடிந்து விழும் அல்லவா!

வாணிகம் செய்கின்ற ஒருவன் இருக்கிறான். அவனுக்கு மூலப் பொருள், ஆதாரமான முதல் இருக்க வேண்டுமல்லவா! வெறுங் கையால் முழம் போட முடியுமா? போடுபவன் பைத்தியக்காரன் அல்லவா!

முதல் இருந்தால் தானே ஆதாயம் பெற முடியும்! செய்யும் தொழிலில சிறப்பும், பெருமையும், பலனும் வெற்றியும் பெற முடியும்!

அதுபோல்தான் உங்கள் விளையாட்டுத் துறையும்.

உடல் என்ற மூலதனத்தை வளர்ப்பாரின்றி, விளையாட்டு என்ற வியாபாரத்திற்குப் போனால், பலன் என்ற வெற்றியை எப்படி ஈட்ட முடியும்?

வீடு என்கிற உடல் உறுதியாக இருக்க, உழைப்பு, நோக்கம், நாட்டுப்பற்று என்ற தூண்கள் உறுதியாக இருக்க வேண்டும்.

உழைக்காத வீரர்கள், உதிய மரம் போன்றவர்கள். எப்பொழுதும் ஒடிந்து விழக் கூடியவர்கள். இந்த நிலைமைதான், இங்கே, இந்த படத்தில் என்னால் காணமுடிகிறது. இதைத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பு இலார்க்கும் இல்லை நிலை. (449)

முதல் என்றால் மூலதனம். ஆதாரம் பொருள். மதலை என்றால் தூண். வீடு நிலை பெற உதவுவன தூண்கள் தாம்.

எங்களவர்களை மாற்ற முடியாதோ என்றேன்.

ஏன் முடியாது? அவர்கள் செய்கிற இடத்தைப் பொறுத்துத் தான், அவர்கள் வாழ்க்கை முறை இருக்கிறது. அந்த வாழ்வு முறையைப் புரிந்து கொண்டால், எளிதாக மாற்ற முடியும் என்றார் வள்ளுவர்.

அதற்குள் வீடியோ படம் நின்று போனது. மின்விசிறியும் ஓடாமல் நின்றது. நாங்கள் இருந்த இடமும் இருள் சூழ்ந்ததாகி விட்டது.

வாருங்கள் வெளியே போய் பேசலாம் என்று அழைத்தார். நல்ல இடத்தில் நின்று போய் விட்டதே என்ற மனக்குறையுடன் நானும் வெளியே வந்தேன்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரம், எங்களுக்கு எவ்வளவோ உதவி தான் செய்கிறது.

அதை சரியாக இயக்காமல், சதி செய்வது போல, காரியங்களை செய்கிற வேலைக்காரர்கள் எங்களிடையே நிறைய பேர் இருக்கிறார்கள். அந்தக் குறைப்பாட்டின் அவதியைத் தான், நாம் இங்கு அனுபவிக்கிறோம் என்று, இருள் ஏற்பட்ட காரணத்தை விளக்கினேன்.

# 7. திறனற்றோர் இகழப்படுவர்

ஒளியிருந்த அறையில் நாம் இருந்தோம். நம் பார்வையில் திகைப்பு இல்லை. தெளிவு இருந்தது. வெளிச்சம் குறைந்து இருளாகிப் போனபோது, முதலில் நாம் மருண்டோம். மயக்கநிலை பெற்றோம். சிறிது நேரம் கழிந்த பிறகு, அந்த இருட்டை நம் கண்கள் பழகிக் கொண்டன. இருட்டிலும் ஒளியைப் பார்த்தோம் என்று, வள்ளுவர் தம் பேச்சைத் தொடங்கினார்.

நீங்கள் சொல்வது புரியவில்லையே என்றேன்.

நல்ல காரியத்தை ஒளி என்று கொள்வோம். தவறான காரியத்தை இருள் என்று கொள்வோம்.

சரியான காரியத்தைச் செய்கிறபோது, மனதில் திகைப்பு வருவதில்லை. செயலிலும்

சிந்தையிலும் தெளிவு இருக்கும். பொலிவும் இருக்கும்.

ஆனால், தவறான காரியம் செய்வது என்பது, திடீரென்று இருட்டில் இருப்பதுபோல. முதலில் திகைத்து, இருளை அனுசரித்து, பார்க்கப் பழகிக் கொள்வதுபோல, தவறான காரியத்தை செய்யத் தொடங்குகிறபோது தடுமாறி, பின்பு அதையே சரியென்று ஏற்றுக் கொள்வதைத் தான், நான் குறிப்பிட்டேன் என்றார்.

எதற்கு இந்தப் பீடிகை என்று எனக்குப் புரியாமல் இருந்ததை, புரிந்து கொண்ட அவர், தொடர்ந்து பேசினார்.

விளையாட்டுக்கு உழைப்பும், முயற்சியும், எதிர்நோக்கும் இலட்சியமும் வேண்டும் என்று நீங்கள் கூறினீர்களே, நினைவிருக்கிறதா? அந்த உழைப்புக்கு அஞ்சுபவர்கள், அவர்களுக்குள்ளேயே தவறு செய்கிறார்கள் என்பதைத் தான், குறித்துக் காட்டினேன்.

உழைப்பு நன்று. உழைப்பை வெறுப்பது தவறு. உழைக்க மறுப்பது கொடுமை. உழைப்பது போல் நடிப்பது உலகப் பெருங் கொடுமை.

இப்படித்தான், நம் வீரர்கள் நடிக்கிறார்கள் போலும். அந்தப் பேதமையான செயல் தான்,

பெருமை மிகுந்த புகழ் கொடுப்பதை விட்டு, எல்லோரும் இகழ்கின்ற இழிநிலைக்கு இட்டுச் செல்கிறது.

பொய்படும் அன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். (836)

தான் செய்கின்ற தொழிலின் தன்மையும், முறைமையும், மேன்மையும் அறியாது போகிறவன் பேதையாகிறான். அதாவது அறிவற்றவன் ஆகிறான். அவன் தொடங்குகிற எந்த காரியமும் முடிவடையாமல்போகும் பொய்யாகும். அன்றியும் அவன் குற்றவாளியாகியும், இகழ்ச்சி அடைவான். இதுதான் என் குறளின் கருத்தாகும்.

அது மட்டுமா! தான் மேற்கொள்கிற விளையாட்டுத் தொழிலை, மேலும் மேலும் கற்றுக் கொள்ளாமல், ஒருவர் செய்து தவறு கொண்டே வருகிறபோது, அவர் தொழிலில் சிறப்பு அடையவும் மாட்டார். அவர் ஏற்கனவே கற்று வைத்திருக்கிற திறமையின் மேலும், அறிவின் மேலும், மற்றவர்க்கு சந்தேகம் தான் ஏற்படும்.

இத்தகைய இழிநிலை விளையாட்டாளர்க்கு வரலாமா?

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (845)

'இருந்த வெள்ளத்தை, வந்த வெள்ளம் அடித்துக் கொண்டு போனது' என்று பழமொழி ஒன்றை நீங்கள் கேட்டிருக்கலாம்.

இருக்கின்ற திறமையை வளர்த்துக் கொள்ளாமல் வாழ்நாளை வீணடித்துக் கொண்டிருக்கும் வீரர்களின் நிலைமை, அவர் மேற்கொள்கிற முயற்சியின்மையால், எல்லாம் அழிந்து போகும்.

எவ்வளவோ அறிவுரைகளைக் கூறினாலும், எங்கள் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் எதையும் ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலையே நீடித்துக் கொண்டிருக்கிறது என்றேன்.

அப்படியிருப்பது அறிவுடைமையாகாது. அது அழிவிற்கே ஆட்படுத்தும்.

சொந்தப் புத்தியும் இல்லை, சுயபுத்தியும் இல்லை என்றால், அவன் சமுதாயத்திற்கு ஒரு சாபக்கேடு. அவன் வாழும் வீட்டிற்கு, வந்திருக்கும் பெரும் நோய் என்றே கூறலாம். அவன் வாழுகிற நாள் வரைக்கும், அவன் ஒரு நோய் போல இருந்து தான் மடிவானே தவிர, நாடு காக்கும் நல்ல மகனாக, வீரனாக, விவேகியாக வாழவே மாட்டான்

இதோ இந்தக் குறளைப் படியுங்கள். புரியும் என்றார்.

**ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவுமோர் நோய்.** **(848)**

தனக்கு நன்மையானவற்றைப் பிறர் போதித்து ஏவுகிற போதும் செய்யமாட்டான். தானாகவும் உணர்ந்து தெளிய மாட்டான். செய்யும் தொழிலை சிந்திக்கவும் மாட்டான். அவன் தான் ஒரு அழிவு நோய் போன்றவன் என்று விளக்கினார் வள்ளுவர்.

நீங்கள் கொஞ்சம் கோபமாகவே கூறியிருக்கின்றீர்கள் என்றேன்.

ஆமாம். திறமை இருக்கிறது. தனக்கு திறமை இருக்கிறது என்ற உண்மையும் தெரிந்து இருக்கிறது. அந்தத் திறமையை வளர்த்துக் கொண்டால், வாழ்க்கையில் புகழும், பொருளும், பெருமையும், உயர்வும் உண்டு என்ற நிலைமையும் புரிகிறது. அப்படிப்பட்ட நிலையில் திறமையை மென்மேலும், தேர்ச்சியுடன் வளர்த்துக் கொள்ள வேண்டாமா? அதை விட அவருக்கு என்ன வேலை இருக்கிறது?

அதனால் தான், திறமை இல்லாதவர்களை, எல்லோரும் ஏளனமாகப் பேசுவர். அதே சமயத்தில், திறமை மிகுந்த செல்வர்களை, எல்லோரும் சிறப்பு செய்வர். எதிர் வந்து வாழ்த்துவர் என்றேன்.

இங்கே நான் செல்வர் என்றது, திறமைச் செல்வம் மிகுதியாக உடையவரை.

**இல்லாரை எல்லாம் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு. (752)**

ஆகவே, திறனற்றோரை, எல்லோரும் இகழ்வர் என்று தெரிந்தும், தேர்ச்சி கொள்ளாத ஒருவரை, நாம் எப்படி கூறவேண்டும் தெரியுமா? பேய் என்று தான்.

உலகத்தார் ஏற்றுப் போற்றி, உழைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிற உண்மை ஒன்றை, இல்லையென்று ஏற்றுக் கொண்டு, தொல்லையென்று தள்ளி, சோம்பேறியாக வாழ்பவர்கள், இந்த உலகத்தில் நடமாடும் பேய்கள் என்று நான் கூறியதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.

**உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும். (850)**

அலகை என்றால் பேய். நடமாடும் பேயாக நான் உவமித்துக் காட்டியிருக்கிறேன் என்று வள்ளுவர் சற்று வேகமாகவே பேசினார்.

திறமை இல்லாதவரை, திறமையை வளர்க்கும் நோக்கம் அற்றவரை, நோய் என்றும்,

பேய் என்றும் கூறியிருக்கின்றீர்கள். உங்கள் உள்ளம் புரிகிறது. உழைப்பை ஆதரிக்கும் உன்னத நோக்கம் புரிகிறது என்றேன்.

ஆமாம்! உழைப்பதை துன்பம் என்றால், தன் வாழ்வை உயர்த்த முற்படும் செயல்களைத் துன்பம் என்றால், அவர்கள் என்னதான் செய்ய விரும்புகின்றார்கள் என்பதுதான் எனக்கும் புரிய வில்லை.

யார் உண்மையில் உயர்வார்கள்? உயர்ந்த நிலையைப் பெறுவார்கள்? ஊர் புகழும் மேன்மையை எய்துவார்கள் என்றெல்லாம் நான் பாடியிருப்பதைக் கூறினால் உங்களுக்குப் புரியும் என்றார்.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பைப் படாத வர் (623)

இடும்பை என்றால் துன்பம் என்று பொருள். அந்தத் துன்பத்திற்கே துன்பம் விளைவிப்பவராய், துணிந்து முயற்சிப்பவர்கள் உயர்ந்து விடுகின்றார்கள்.

வெள்ளம் போல துன்பம் வந்தாலும், அவர்கள் உள்ளம் அதைப் பற்றி அலட்சியப் படுத்துகிறபோது, வந்த துன்பம் வடிந்து போய் விடுகிறது. விரைந்து அழிந்து விடுகிறது. அவர்

களது கலங்காத நெஞ்சமும், கரை காணா இலட்சியமும், கடமை உணர்வும், துன்பத்தைத் துளி கூட நெருங்க விடாமல், நெருக்காமல் ஆக்கிவிடுகிறது.

கடமையில் பற்று இருந்தால் போதும். கலக்கமே வராது. கவனமும் சிதறாது. காரியமும் பதறாது. அந்த மன ஒருமைப்பாடு விளையாட்டு வீரர்களுக்கு முக்கியமாக வேண்டும். அந்த அரிய நிலை தான், அவர்களை தேர்ச்சி பெற்றவராக உயர்த்தும் என்று வள்ளுவர் கூறிக் கொண்டிருந்த போது, இடைமறித்தேன் நான்.

எங்கள் வீரர்கள் வெற்றி என்றால், விழுந்து புரண்டு, துள்ளிக் குதித்து மகிழ்வார்கள். தோல்வி என்றால் துவண்டு, தணிந்து, குப்புறப்படுத்துக் கலங்குவார்கள் என்றேன்.

இப்படிப்பட்ட பண்புகள், இன்னல்களையே விளைவிக்கும். ஏற்றத்தைத் தராது.

இப்படி மாறுபட்ட கொள்கை கொண்டவர்கள், தேர்ச்சி பெறமாட்டார்கள். இகழ்ச்சியையே பெறுவார்கள்.

இகல் என்ற சொல்லுக்கு மாறுபாடு என்று பொருள். அந்த சொல்லை வைத்து, ஒரு அதிகாரத்தையே எழுதியிருக்கிறேன். ஒருவர் பிறருடன் பொருதுகின்ற வலிமையை தொலைத்

தற்கு ஏதுவாக உள்ள மாறுபாடு என்று அதற்குப் பொருள்.

உங்கள் வீரர்கள், இந்த மாறுபாட்டுக்குள் தான், மதிமயங்கிக் கிடக்கின்றார்கள் போலும். இந்த பண்பானது, தீய பண்புகளைத் தீவிரமாக வளர்க்கும் நோய் என்றே பாடியுள்ளேன்.

எத்தனையோ வீரமும் விவேகமும் உள்ளவர்கள் கூட, இந்த மாறுபாட்டு அறிவை மேற்கொண்டு விட்டால், அவர்கள் வாழ்க்கை முறை, வலிமை முறையே தவறிப் போகும். அழிந்து போவதும் விரைவில் நடக்கும். அவர்கள், இழந்ததை எந் நாளும் பெறவே முடியாது.

**இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து** (856)

ஆகவே, திறமையே பெருமைக்குரிய சிறந்த வழி. அதன் வளர்ச்சிக்கு உழைப்பதே உயர்ந்த மதி. அதனைத் தொடர்ந்து உயிர் போல் காத்து, எதிர்ப்படும் உடல் துன்பங்களையும், மனத் துன்பங்களையும். இன்பமாகக் கருதிக் கொண்டு, உழைப்பவரின் வாழ்வே உற்சாகம் நிறைந்ததாகக் காணப்படும்.

முயற்சியுடன் பயிற்சி செய்வதைத் துன்பம் என்றால், அந்தத் துறைக்கு வந்திருப்பதே அறி வற்ற செயல் அல்லவா!

ஆகவே உடல் வருத்தி செய்கின்ற பயிற்சி களை, துன்பம் என்று கொள்ளாமல், இன்பம் என்று எண்ணி செய்கின்றவர் எப்பொழுதும் துன்பமே அடைய மாட்டார்கள் இகழ்ச்சியையும் சந்திக்க மாட்டார்கள்.

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன் (629**

துன்பத்தை இன்பமாய் துணிந்து ஏற்கும் பண்புகளை வளர்ப்பது விளையாட்டுக்கள் தாம். அந்தத் துறையில் ஆர்வமுடன் வந்து, செய்தற் குரிய பயிற்சிகளை சிரமம் ஏற்று செய்ய வேண்டும்.

இந்த நினைவு ஏற்பட்டாக வேண்டும் என்று நீங்கள் கூறிய கருத்தை ஏற்றுக் கொளகிறேன். நீங்கள் பல போட்டிகளைப் பார்த்துக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். பலதரப்பட்ட வீரர்களின் இயக்கங்களையும் கண்டிருக்கின்றீர்கள். இந்த நிலைமை பற்றி, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்பதையும், தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நிச்சயமாக! தனது திறமையின் மேல் நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை செயல் மூலமாகவே வெளிப்படுத்த வேண்டும். பேச்சின் மூலம் பெரிதாகக் காட்டிக் கொள்வதில் புண்ணியமே இல்லை.

அடக்கம் மனதில் வேண்டும். ஆண்மை மிகு முயற்சிகள் செயலில் வேண்டும். அப்படி இல்லாமல், தன்னைப் பற்றி பெருமையடித்துக் கொள்வதும், வியந்து பேசுவதும், கர்வம் கொள் வதும், வேண்டாத செயல்களாகும். அதனால் தான், குற்றம் களைகின்ற குணம் வேண்டும் என்று பாடினேன்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை, நயவற்க
நன்றி பயவா வினை. (439)

எக்காலத்திலும், தன்னை மிக உயர்வாக எண்ணி, வியந்து தற்பெருமையுடன் மதித்துக் கொள்ளக் கூடாது. அது போலவே, நன்மைகள் நல்காத செயல்களையும் விரும்பக் கூடாது.

இவ்வாறு வாழ்கின்ற நோக்கம் உள்ளவரே, விளையாட்டுக்களில் திறமைபெற முடியும். வெற்றி பெற முடியும். என்றார்.

வீடியோ பார்த்துக் கொண்டிருந்த அறையில், மீண்டும் வெளிச்சம் வரவே, உள்ளே நுழைந்தோம்.

உட்கார்ந்து பேசலாமே என்றார். அவர் திருவாய் வழங்குகிற தெள்ளமுதக் கருத்துக்களை,

கேட்க விழையும் கிளர்ந்தெழு நெஞ்சுடன் போய், அவர் அருகில் அமர்ந்து கொண்டேன்.

எதுவும் முயன்றால் முடியும். முடியாதது எதுவுமில்லை. என்று வள்ளுவர் பேசத் தொடங்கினார்.

இந்த நம்பிக்கை எங்களுக்கு எப்பொழுது வரும்? எப்படி வரும்? என்று நீங்கள் கூறவேண்டும். உங்கள் அறிவுரை எங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உயர்ந்த ஆற்றலையும் வழங்கும் என்று நான் கூறியபோது, ஆமாம் என்று விழியாலே ஆமோதித்துவிட்டு, பேச ஆரம்பித்தார்.

# 8. முயன்றால் முடியும்

வெற்றிக்கு முயற்சி தான் முதல்படி. அந்த முயற்சி, மனித குலத்தில் தான் மிகுதியாக இருக்கிறது.

மிருகங்கள் பசிக்காகவும், பாதுகாப்பு நேரத்திலும் தேவைக்காக முயற்சிக்கின்றன. தேவைதீர்ந்ததும், அவை அமைதியாகிவிடுகின்றன.

மனிதன் அப்படியல்ல. உணவு, உடை, உறையுள் போன்ற மிக முக்கியமான தேவைகளுக்காக, முயற்சிக்கிறான். முனைப்புடன், முதிர்ந்த நினைப்புடன், செயல்வேக இணைப்புடன், முயற்சிக்கிறான்.

அதனால், மனிதர்களுக்குள்ளே, முழுதான முத்தாய்ப்பு நிறைந்த முடிவுநிலை ஒன்று, முகிழ்த்துக் கொண்டே இருக்கிறது.

அது என்ன நினைவு என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் என்று என்னைக் கேட்டார்.

முயற்சிக்கலாம். வந்தால் வெற்றி. வரா விட்டால் தோல்வி என்பதாகத் தான் எல்லோரும் நினைக்கின்றார்கள். நானும் அப்படித் தான் நினைக்கின்றேன் என்றேன்.

"அடுத்தடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்பது தான் எங்கள் கொள்கையாக இருக்கிறது என்று, ஔவைப் பாட்டியின் பாட்டைப் பாடினேன்.

''அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்'' என்பது நம்நாட்டுப் பழமொழி அல்லவா! மனிதன் முயற்சித்தால், முடியாதது ஒன்றுமில்லை என்ற கருத்தை, நான் எவ்வளவு அழுத்தந் திருத்தமாகப் பாடியிருக்கிறேன் கேளுங்கள்

**அரியஎன்று ஆகாத இல்லை பொச்சாவாக்**
**கருவியாற் போற்றி செயின். (537)**

முயற்சி செய்தால், முடியாத காரியம் என்று எதுவுமேயில்லை. அந்த முயற்சியை, மனம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்ட மனம்,

அந்த நினைவைப் போற்றிக் கொண்டிருக்க வேண்டும். அந்தப் போற்றுகின்ற, மனம் தான், தினமும் நினைவில் ஊற்றாகச் சுரக்கின்ற ஆற்றலை வழங்குகிறது.

அதனால் 'தான்' மனித மனத்தை 'பொச்சாவாக் கருவி' என்று புதுப்பெயரிட்டு அழைத்தேன்.

பொச்சாவாமை என்றால், மறவாமை என்பது பொருள். மறவாத மனம். அந்த மனத்தை, நான் கருவி என்றேன். காரியம் ஆற்றுகின்ற பெரும்பேறு கொண்டது. பெரும் சீரும் கொண்டது மனம்.

அந்த மறவாத மனமானது, போற்றி ஒரு காரியத்தை செய்கிறபோது, செய்து முடிக்க முடியாத காரியம் என்று எதுவுமே இல்லை என்பது தான், எங்கள் காலத்து கொள்கையாக இருந்தது.

இது எப்படி முடியும் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு பதில் எளிது. மிகவும் இனியதானது அது. எல்லோராலும் செயல்படக் கூடியது தான்.

மனதில் எண்ணிக்கொண்டுள்ள காரியத்தை, ஏற்றமாய் செய்து வெற்றியைக் குவிக்க முடியும். எப்பொழுது தெரியுமா? அந்த நினைவில் சோர்வு வரக் கூடாது. கருதியது கருத்தை விட்டு அகலுத்

கூடாது. உள்ளத்தில் அந்த எண்ணம் உள்ள தாகவே, செயலுக்கு உரியதாகவே இருக்க வேண்டும்.

உள்ளியது எய்தல் எளிதுமன், மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். (540)

உள்ளியது என்பது உள்ளத்தின் அடித்தளத்தி லிருந்து உருவாகி வருகின்ற இலட்சியம் என்று தானே நீங்கள் குறித்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

ஆமாம். உள்ளத்தில் உதிப்பது எல்லாமே, நீங்கள் கூறியது போல கொள்கையாகி விடாது. எழுகிற அது கோபுரமாகவும் உயர்ந்து விடாது. எழுகிற எண்ணம் சிறப்பாக இருக்க வேண்டும். உயர்ந்த கொள்கை கொண்டதாக விளங்க வேண்டும். பிறருக்குப் பயனளிப்பதாகவும் அமைந்திடல் வேண்டும்.

அப்படிப்பட்ட எண்ணம் வெற்றி பெறாமற் போனாலும், உயர்வு பெறுகின்ற எண்ணமான முயற்சியை எப்பொழுதும் கைவிட்டு விடக்கூடாது.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596)

விளையாட்டில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் உயர்ந்தது தான். அந்த உழைப்பும்,

மனஉறுதியும் வேண்டற்பாலது தான். முயற்சிகள் எல்லாமே வெற்றிக் கனியை வழங்கிவிடுவதில்லை. அது முனைமுறிந்த போதிலும், முயற்சியை விட்டு விடக் கூடாது என்பது தானே உங்கள் அறிவுரை என்றேன்.

ஆமாம். ஆமாம். அதுவே தான்.

எந்த முயற்சிக்கும் உழைப்புக்கும் அதற்குரிய பலன் நிச்சயமாக உண்டு. அதாவது, உழைப்பின் அளவுக்காவது, உகந்த கூலி கிடைக்கும்.

தெய்வம் வந்து உதவும் என்றாலும், ஒரு காரியம் முடியாது போகிறது என்று வைத்துக் கொள்வோம். ஆனாலும், தனது உடம்பை வருத்தி, செய்த செயலுக்கேற்ற கூலியாவது நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்குப் பெயர் தான் நல்முயற்சி என்பதாகும்.

**தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும். (619)**

குன்றாத முயற்சி ஒருவரை, குன்றிலிட்ட விளக்காக ஆக்கிவிடும். அதற்காகவே, மெய்யை வருத்தவேண்டும். அந்த முயற்சியின் பெருமையை, நிச்சயம் மற்றவர்க்கு உணர்த்தி விடும். அந்த மகிமையைப் பெறுகிற மார்க்கம் ஒன்று தான். ஒன்றே ஒன்று தான்.

**கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை படைத்தது இவ்வுலகு. (578)**

இந்த உலகத்தையே உரிமையாக பெறக் கூடிய வாய்ப்பும், வல்லமையும், தன் கடமையிலே கண்ணும் கருத்துமாகக் கொண்டு உழைப்பவர்க்குக் கிடைக்கும்.

விளையாட்டுக்கு இந்தக் கருத்து, எவ்வளவு பொருந்தி வருகிறது பார்த்தீர்களா?

உழைப்பை மதிக்கிற மக்களைவிட, உழைப்பை வெறுக்கிற மக்களே இந்த உலகில் அதிகம். உழைப்பை மறுப்பதே, நாகரிகம் என்பது தான், எங்காலத்துக் கொள்கை என்றேன் இடைமறித்து.

விளையாட்டு என்பது நுணுக்கம் நிறைந்த காரியமாகிறது. அந்த நுணுக்கத்தில், நுண்திறன் களில், மனம் நுழைந்து, ஒன்றித்து ஈடுபடுகிற போது தான், எதிர்பார்க்கும் பயன்கள் விளைந்து வருகின்றன.

அப்படி உழைப்பில் ஈடுபடுகின்றவர்களைச் சுற்றிலும் உள்ளவர்கள் சுற்றத்தார், நண்பர்கள், நயப்பவர்கள் எல்லோரும், அவர்களின் மனதை அலைக்கழித்துவிடவும், சோர்வடையச் செய்யவும் கூடிய வகையில் தான் பேசுவார்கள். சில சமயங் களில் ஏசுவார்கள்.

விளையாட்டையே வெறுக்கின்ற அளவுக்கு விவாதிப்பார்கள். அந்த சமயங்களில், மனதை சலனத்திற்கு ஆளாக்காமல், தான் கொண்ட இலட்சியத்திலே குறியாக இருப்பவர்கள் தான், உலகில் உயர்ந்த நிலையை அடைகின்றார்கள். உலகோர் மதிக்கும் உயர்ந்த ஒரு தலைமையைப் பெறுகின்றார்கள். உலகம் போற்றி, மறவாமல் நினைத்து மகிழும் செம்மை நிலையை எய்துகின்றார்கள்.

உண்மை தான் என்றேன்.

குளத்தளவே ஆகும் நீரின் உயரம். நிலத்தளவே ஆகும் பயிரின் தன்மை. மனத்தளவே ஆகும் பண்பும். அன்பும். அதுபோலவே, உழைப்பளவே உயரும் பேரும் புகழும்.

அதனால் தான் மறவாத மனம் என்று பாடினேன். மனத்திலே எண்ணுகிற எண்ணம் போல் தான் எதுவும் நடைபெறும் என்பதால் தான், நமது முன்னோர்கள், மனம் போல் வாழ்வு என்றார்கள்.

என்ன எண்ணம் மனதில் எழுகிறதோ, விளைகிறதோ, வளர்கிறதோ, அதற்கேற்ற செயல்கள் தான் நிகழும். இந்தக் கருத்தை, மனதில் பதித்துக் கொள்கிற போது தான், விளையாட்டு வீரர்கள், தங்கள் குறிக்கோளில் வெற்றிகாண முடியும். சாதனை படைக்க முடியும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணிய
திண்ணியர் ஆகப் பெறின். (666)

எண்ணியதைப் பெற, திண்ணியர் ஆக வேண்டும் என்றேன். ஆமாம். மனதில் மாறாத உறுதியுடையவராக விளங்க வேண்டும். அதுவே, உடலில் வலிமையை உண்டாக்கும் என்பதையும் அறிய வேண்டும், என்று வள்ளுவர் கூறி வந்த போது, மீண்டும் இடைமறித்தேன்.

தற்போது, விளையாட்டுப் போட்டிகளின் போது, வீரர்கள் எவ்வாறு செயல் படுகின்றார்கள் என்பதை ஆராய்ச்சி செய்த அறிவியல் வல்லுநர்கள் பயிற்சியாளர்கள், நீங்கள் கூறிய கருத்துக்கு ஏற்றாற் போலவே, கூறியிருக்கின்றார்கள்

சிறப்பாக விளையாடுவதற்கு உடல் திறன், 20 விழுக்காடு இருந்தால் போதும். மன உறுதியும், திண்மையும் 80 விழுக்காடு வரை தேவைப்படு கிறது. பதறாத மனதும், சிதறாத நினைவும், கலங்காத குறிக்கோளும், கண்ணோட்டம் அகலாத நுணுக்கமும் தான் விளையாட்டில் மேன்மையை அளிக்கின்றன, வெற்றியை வழங்குகின்றன என்ற அவர்கள் கருத்தை, இங்கே நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்றேன்.

அது தான் அறிவான அணுகு முறை என்றார். அத்துடன் நின்று விட்டால் போதாது. அது பாதி

கிணறு தாண்டிய நிலைக்கு ஆளாக்கி விடும். தான் ஏற்றி வந்த வீரனை, போர்க்களத்தில் தள்ளி விட்டு, ஓடிப் போகும் அறிவில்லாத குதிரையின் நிலைக்குக் கொண்டு போய் விடும்.

**அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா மா (814)** என்று நீங்கள் அழகாகப் பாடியிருக்கின்றீர்கள் என்று அந்தக் குறளைக் கூறினேன்.

ஆமாம். முடியும் என்று மனதில் உறுதி கொண்டு விட்ட பிறகு, ஒருவர் இரண்டு காரியங் களை கட்டாயம் செய்தே ஆக வேண்டும்.

ஒன்று. மனதில் சோர்வு கொள்ளக் கூடாது இரண்டு. காலம் தாழ்த்தக் கூடாது.

மனத் தளர்வு வந்து விட்டால், செயல் தளர்வு தானாகவே வந்து விடும். செயலில் தளர்ச்சி என்றால், காரியத்தை செய்யும் ஆர்வம் எழாமல், காலத்தைத் தள்ளிப் போடச் செய்யும்; கடமை யையும் துறந்து விடச் செய்யும்.

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல். (668)**

தூக்கம் என்றால் தூங்கிப் போதல். நான் தூங்குக, (672) தூங்காமை (383) என்று குறளில் பாடிய போதெல்லாம், காலம் தாழ்த்துதல் என்ற பொருளில் தான் கூறியிருக்கிறேன் என்றார்.

காலம் தாழ்த்துகிற போது, காரியத்தின் வீரியமே கெட்டுப் போகிறது. காலம் தாழ்த்துகிற போது, வேறு சில முக்கியமான, துன்ப மிகுதியான காரியங்கள் வந்து இடையிலே புகுந்து, செயல்களைத் திசை மாற்றி விடுகின்றன. ஆகவே, எதையும் நன்றே செய், அதையும் இன்றே செய் என்று முயற்சிக்கும் போது தான், முடியும் வாய்ப்பை அடைகிறது என்றேன் எங்கள் விளையாட்டுப் பயிற்சிக்கு இது மிகவும் பொருந்தி வருகிறது என்று கூறினேன். தலையசைத்து ஆமோதித்தார்.

தொடக்கம் ஒரு செயலுக்கு இருந்தால், அதற்கென்று ஒரு முடிவு வந்து தான் ஆக வேண்டும். அந்த செயல் இனிதே நடைபெறாமல், தொடராமல் இருக்க, பல துன்பங்களும் துயரங்களும், முட்டுக் கட்டைகளாக வந்து தான் தீரும்.

முயன்றால் முடியும் என்று நம்பிக்கை கொண்டு, பயிற்சி செய்பவர்கள், இடையூறுகளைத் தவிர்க்க வேண்டும் அஞ்சாது அடுத்து வருகிற முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும். தோல்வி வருவது போல் சூழ்நிலை அமைந்தால், அதனை ஆராய்ந்து, அப்புறப் படுத்தி, வெற்றி காண வேண்டும். இது தான், சாதனையாளர்களின் செயல் முறையாகும்.

**முடிவு இடையூறும் முற்றி ஆங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல் (676)**

முடிவை எதிர் பார்த்து முயலுவது அறிவுடைமை தான்.

ஆனால், எதிர்பார்த்த படியே எல்லாம் நடக்கும், கிடைக்கும், இன்பமளிக்கும் என்றெல் லாம் செயல் படுவது, பல சமயங்களில் சிந்தையை ஒடிக்குமே தவிர, சிலிர்ப்பினைத் தராது.

ஆகவே, ஒரு குறிப்பை நாம் இங்கே உணர்ந்து கொள்வோம்.

வேண்டியதை, விரும்பியவாறு பெற முடியும். எப்பொழுது என்றால், செய்கின்ற காரியத்தை, தவமாக எண்ணி செய்கிற போது தான்.

தவம் என்றால் எனக்கு விளங்க வில்லை என்றேன்.

ஐம்புலன்கள் காட்டுகின்ற ஆசைவழி போகா மல் அடக்குதல்; அறிவுமயமான ஒழுக்க நெறி களில், பழக்க வழக்கங்களில் ஒழுகுதல்; முயற்சியின் முனை முறிக்க வரும் துன்பங்களைப் பொறுத்து, அவற்றை வெற்றிக் கொள்ளும் வலிமையான மன நிலையை வளர்த்துக் கொள்ளுதல். இந்த இனிய பண்புகளைத் தான், தவம் என்றேன் நான்.

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும். (267)**

ஆகவே, ஒரு காரியத்தை முயன்றால் முடியும். அதற்கு தவம் செய்வது போன்ற தாளாத முயற்சிகளும், அகலாத ஆர்வமும், தொடர்ந்து துணிந்து செல்கிற முனைப்புமே வேண்டும்.

இனி, உங்கள் அடுத்த வினாவை விடுக்கலாம் என்றார்.

உள்ளேயிருந்து வானொலி அலறும் சத்தம் கேட்டது. அதை நிறுத்து என்று நான் சத்தமிட்ட போது, ஏதோ செய்தி போல இருக்கிறதே! நாமும் கேட்கலாம் என்றார்.

இருவரும் கேட்கத் தயாரானோம்.

# 9. ஊக்கமே உயர்வு தரும்

செய்தி அறிக்கையொன்று எதிர்பார்த்தபோது அது இருவரின் உரையாடலாக வெளிவந்தது. வானொலிப் பெட்டியின் முகம் பார்த்து, இருவரும் அமர்ந்து கொண்டோம்.

கிரிக்கெட் ஆட்டத்தினை பற்றிய உரையாடல் அது.

ஒரு குரல் : இந்தியப் பிரதமர் நேருவின் நூற்றாண்டு விழாவை ஒட்டி உலக அளவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், இந்தியா இறுதிப் போட்டிக்குக்கூட வராமல் இடமிழந்து போனதே! அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

இன்னொரு குரல் : இந்திய விளையாட்டு வீரர்களுக்குத் திறமை இருக்கிறது. ஆனால்,

உண்மையான ஊக்கம் இல்லை. அதனால் தான் தோற்றுப் போனார்கள்.

வானொலியை நிறுத்திவிட்டு, வள்ளுவரின் முகத்தைப் பார்த்தேன். ஏதோ கேட்க நினைக்கிறீர்கள். கேளுங்கள் என்றார்.

வீரர்களுக்குத் திறமை இருக்கிறது. ஆனால், ஊக்கம் இல்லை என்கிறார்களே! இந்தத் திறமைக்கும் ஊக்கத்திற்கும் என்ன வேறுபாடு என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திறமை என்பது. செயலில் சீர்மையும் செழிப்பும் கொண்டது. அது, பழக்கத்தால், பயிற்சியால் பெருகி வரும் பேறுடையதாகும்.

**சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்**

என்கிற பாடல் ஒன்றை, நான் அவரிடம் பாடிக் காட்டினேன்.

ஆமாம். தொடர்ந்து பழகுகிற பயிற்சியின் சிறப்பினால், ஒருவரிடம் இருக்கும் அடிப்படைத் திறன்கள், ஆற்றல் பெற்று வளரும். அழகாக, அருமையாகச் செய்யும் பெருமையைப் பெறும்.

ஆனால், ஊக்கம் என்பது வேறு.

ஊக்கம் என்பது வலி, முயற்சி, மன எழுச்சி, என்று நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

அதாவது, 'மனம் மெலிவின்றி, வினை செய்தற்கண் கிளர்ச்சி உடைத்தாதல்' என்பது அதற்குப் பொருளாக அமைந்திருக்கிறது.

நான் கூறிய வலிமையும், வற்றாத முயற்சியும், வானுயரும் மன எழுச்சியும் ஆகிய மூன்றும், உள்ளத்திலிருந்து தானே வருகின்றன.

அதனால்தான், ஊக்கம் என்பதற்குப் பதிலாக உள்ளம் என்ற சொல்லை, என் குறளில் பெய்திருக்கிறேன் பாருங்கள்.

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும். (592)**

உள்ளம் என்பதற்கு இங்கே ஊக்கம் என்பது பொருள். ஆகவே, உள்ளத்தில் ஊக்கம் இருந்தால் அதன் பெயர் உள்ளம். அப்படி ஊக்கம் இல்லாத உள்ளம், வெறும் பள்ளம் என்று நான் முடித்தேன்.

ஆமாம். படுகுழி என்றுகூட நாம் கூறலாம்.

கையிலே உள்ள பொருள், கண் இமைக்கும் முன்னரே கரைந்து போகலாம். காணாமற் போகலாம். கைவிட்டுப் போகலாம். ஆனால் உள்ளத்தில் உள்ள ஊக்கம் எப்பொழுதும் போகக் கூடாது என்பதுதான் எல்லோரிடமும் இருக்க வேண்டிய பெரும் பண்பாகும் என்றார்.

அப்படி ஊக்கம் இல்லாதவரைப் பற்றி, நீங்கள் ஏதாவது, எங்கேயாவது குறித்திருக்கின்றீர்களா என்றேன்.

ஏன் இல்லை. அவர்களை மரம் என்றே கூறியிருக்கிறேன். பார்வைக்கு அவர்கள் மக்கள்போல் தான் இருப்பார்கள். ஆனால், அவர்கள் மரமக்கள். நின்று அசைகின்ற மரமாக, இருந்து மடிந்து போகும் இனமாக அவர்கள் வாழ்க்கை அமையும் என்றே பாடியிருக்கிறேன்.

உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம் மக்கள் ஆதலே வேறு. (600)

உரம் என்பதற்கு ஊக்கம் என்பது பொருள். இங்கே நாம் உரம் என்பதற்கு உடம்பில் ஊக்கம் என்றும் கொள்ளலாம்.

வெறுக்கை என்றால் செல்வம், பொன், மிகுதி என்பது பொருள்.

வெறுக்கை இல்லையென்றால் வெறுங்கை என்றுகூட நாம் கூறலாம்.

உண்மைதான்.

வெறுக்கை இல்லையென்றால் அதுவே வெறுமை. அதற்குத்தான் வறுமை என்றும் பெயர் வந்தது என்றார் வள்ளுவர்.

எந்தக் காலத்தில் வாழ்ந்தாலும், மனிதர்கள் என்பவர்கள், பொன்னுக்கும், பொருளுக்கும், மண்ணுக்கும் இடத்திற்கும்தான் மாய்ந்து மாய்ந்து அலைந்திருக்கின்றார்கள் என்றேன் மனக் கசப்புடன்.

அதனால்தான், நான் அவர்கள் மனதைமாற்ற, இப்படிப் பாடினேன். அவர்கள் புரிந்துகொண்டார் களோ, இல்லையோ என்று சோகக் குரலில் பேசினார்.

உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று (591)

எல்லாப் பொருளும் வளமும் உடையவர் என்று பெருமையாகப் பேசப்படுபவர் ஊக்கம் என்பதை உடையவராக இருந்தால்தான். மற்ற எந்தப் பொருள் இருந்தாலும்; அதை பொருள் என்று உலகத்தார் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

பொருளை ஏன் ஒத்துக் கொள்வதில்லை என்றேன்.

பொருளை உடையவர்கள், அதை இழந்து போகும் நேரம் வரும். ஐயகோ, எல்லாவற்றையும் இழந்து விட்டோமே, என்று ஏங்கிப் புலம்பிச் சாய்வர், சாவர்.

ஆனால், ஊக்கம் என்ற பொருளுடையவர்கள், எதையும் இழக்க மாட்டார்கள். அவர்கள் உள்ளத்திலே தான் வலிமை, முயற்சி, எழுச்சி போன்ற செல்வங்கள் இருக்கின்றனவே!

இந்த ஊக்கத்தைத்தான், இந்திய நாட்டவர் பெற்றிருக்கவில்லை போலும் என்றார் வள்ளுவர்.

எங்கள் விளையாட்டு வீரர்கள், பொருள், புகழ், களிப்பு, பெருமை என்று எல்லா நிலையிலும், நிறையவே பெற்றிருக்கின்றார்கள். இந்த ஊக்கம் என்பது குறைந்து போயிருப்பதால் தான், திறமை குறைந்தவர்களாகத் தோற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்று என் எண்ணத்தைக் கூறினேன்.

இந்த ஊக்கக் குறைவு, எதனால் ஏற்படுகிறது என்று நீங்கள் கூற முடியுமா என்றேன்.

மிக எளிதாகப் பதில் கூறமுடியும்.

செய்ய வேண்டிய காரியத்தை காலம் கடந்து செய்தல்; செய்ய வேண்டியதை உரிய நேரத்தில் செய்யாமல் மறந்து போதல்; செயல் பட வேண்டாத சோம்பல்; அளவுக்கு மீறிய தூக்கம் இந்த நான்கும் ஒருவரைக் கெடுக்கும் கொடும் படைகளாகும்.

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன். (605)**

காமக் கலன் என்பதற்கு விரும்பி ஏறுகின்ற மரக்கலம் என்று நீங்கள் உங்கள் காலத்து மரபில் பாடியிருக்கின்றீர்கள். எங்கள் காலத்தில், காமக் கலன் என்பது பெண்களின் தொடர்பு என்பது தாகவும் அமைந்திருக்கிறது என்றேன்.

எப்படி என்றார்.

இப்பொழுதெல்லாம் விளையாட்டு வீரர் களுக்குக் கொஞ்சம் பேரும் புகழும், பெருமையும் ஏற்பட்டு விட்டால்; உடனே குடிக்கும், கூத்திக்கும் அடிமையாகிப் போகின்றார்கள்.

இந்தக் காமக் கலனும், குடி வெறியும் சேர்ந்து கொண்டு, நீங்கள் கூறிய நெடு நீர், மறவி, மடி, துயில் என்ற நான்கையும் கூட்டி வந்து விடுகின்றன என்றேன்.

மதுவும் மங்கையும் மயக்கப் பிறந்தனவோ என்று திரும்பக் கூறிய வள்ளுவர், உண்மை தான் என்றார். இருமனப் பெண்டிர்கள், பொது மகளிர், பண்பின் மகளிர், மாய மகளிர், என்றெல்லாம் நானும் பாடியிருக்கிறேன்.

நீங்கள் கூறிய கருத்து பற்றியும் ஒரு குறளில் பாடியிருக்கிறேன்.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திரு நீக்கப் பட்டார் தொடர்பு (920)

குடி, சூது, ஒழுக்கமில்லா பெண்கள். இம் மூன்றிலும் தொடர்பு கொண்டவர்கள் எல்லா பெருமைகளையும் இழப்பார்கள் என்பது உண்மை தான்.

திரு என்று நான் ஒரு சொல்லைப் பயன்படுத்தி யிருக்கிறேன் அதற்கு என்ன என்னவெல்லாம் பொருள் உண்டு தெரியுமா உங்களுக்கு?

திரு என்றால், அழகு, செல்வம், மேன்மை, சிறப்பு, பாக்கியம், தெய்வத் தன்மை என்றெல் லாம் பொருள் உண்டு.

நீங்கள் கூறுவது போல, காமக் கலனில் கருத் துடையவர்கள், வாழ்க்கையில் மட்டுமல்ல, விளை யாட்டுத் துறையிலும் வெற்றி பெற மாட்டார்கள் என்றார் வள்ளுவர்.

ஊக்கத்தை வளர்த்துக் கொள்ளும் வழி தான் என்னவோ என்று கேட்டேன்.

**சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச் சுட நோற்கிற் பவர்க்கு (267)**

ஊக்கம் என்பது உறுதியாகப் பற்றியதை பற்றித் தொடர்வது. நெருப்பிலே போடப் படுகிற பொன்னானது, நெருப்பிலே வேக வேக, சுடர் ஒளியைப் பெற்றுக் கொள்கிறது. அதுபோல, துன்பம், தடைகள் என்ற நெருப்பிலே, ஊக்க

முடையவர்கள் விழ நேரிடுகிற போது, துவண்டு போகாமல், சோர்ந்து விடாமல், மேலும் மேலும் ஊக்கத்துடன் முயல வேண்டும். அப்பொழுது வெற்றி என்ற சுடர்முகம் பெற்றுத் திகழமுடியும்.

துன்பம் கண்டு சோராத உள்ளம், இன்பம் காணுமே தவிர, இன்னலுக்கு ஆட்படாது. அவர்களுக்கு வருகிற இன்னல்கள், இன்னல் பட்டு, பின்னங்கால் பிடரியில் படுவதுபோல, ஓடித் தொலையும். ஒதுங்கிமறையும். இந்த உண்மையை, விளையாட்டு வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும் (625)

வெற்றி சாதனைகளை விளைவிக்க வேண்டும் என்பவர்க்கு, முற்றும் சோதனைகளும், முடியாத வேதனைகளும் வந்து தான் தீரும். சேரும். அதனால் தான், அடுக்கி என்று ஒரு சொல்லை அதிலே சேர்த்தேன்.

எங்கள் தோல்விக்குரிய காரணங்களைத் தொகுத்துக் கூறியது போல், வெற்றி பெறும் வழி வகைகளையும் விளக்க வேண்டும். என்று வள்ளுவரைப் பார்த்துக் கேட்டேன்.

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. (670)

ஒருவர் எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், தான் மனமார ஏற்றுக் கொண்ட செயலில், உறுதி இல்லாதவரை உலகமே ஏற்றுக் கொள்ளாது.

ஏன் உலகம் ஏற்றுக் கொள்ளாது? அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்து போவதால் தான்.

ஆகவே, நமது உள்ளத்தை, ஊக்கமுடைய உள்ளமாக மாற்றிக் கொண்டால், உலகம் புகழும் வெற்றி, உங்கள் வீரர்களின் காலடிகளில் வந்து வணங்கும் என்றார்.

உண்மை தான் என்றேன்,

# 10. போட்டியும் விளையாட்டும்

ஊக்கம் இருந்தால், உறுதியும் சேர்ந்து இருந்தால், வெற்றி வந்து விடும் என்றுதானே நீங்கள் சொல்கின்றீர்கள் என்று, எனது சந்தேகத்தை ஆரம்பித்தேன்.

அதெப்படி முடியும்? ஊக்கம், உறுதி என்பது அடிப்படை ஆதாரம் தான். அதுவே அழகான மாளிகையாக, அற்புதமான கோபுரமாக ஆகி விடாதல்லவா!

வெற்றி பெறுவது என்பது ஒரு கலை. வெறும் திறமை ஒன்றினால் மட்டும் வெற்றி விளைந்து விடுவதில்லை.

விளையாட்டும், அதில் ஏற்படுகிற போட்டி களும் ஒரு போர் மாதிரிதானே அமைந்திருக்கிறது!

போரில் மேற்கொள்கிற எல்லா தந்திரங்களும், நுட்பங்களும், விளையாட்டுப் போட்டிகளுக்கும் வேண்டியவைகளாகத்தானே இருக்கின்றன என்ற படி என்னை நோக்கினார்.

விளையாட்டுப் போட்டிகள் தற்போது அப்படித்தான் ஆகிவிட்டன. கற்காலத்தில், உயிர் காக்கும் தற்காப்புக் கலையாக தொடங்கி; பொற்காலத்தில் ஓய்வை உல்லாசமாகப் போக்கும் ஒப்பற்றக் கலையாக மலர்ந்து; இடைக் காலத்தில் தாக்கும் கலையாக மாறி, இப்பொழுதோ, புகழ், பணம், பெருமைக்காக போராடும் களமாக, விளையாட்டுப் போட்டிகள் உருமாறிக் கொண்டன என்றேன்.

நீங்கள் சொல்வது சரியாகவே எனக்குப் படுகிறது. விளையாட்டுப் போட்டிகள் பற்றி, நீங்கள் காட்டிய வீடியோ படம், அப்படித்தான் என்னை எண்ணத் தூண்டுகிறது. எனது குறட் பாக்களில் பெரும் பகுதி போர் முறையை விளக்கு வதால், விளையாட்டுப் போட்டிகளின் எல்லா நிலைக்குமே பொருந்தும் என்பது என் நம்பிக்கை என்றார்.

இருந்தாலும் எனக்கு ஒரு சந்தேகம். உங்கள் குறள்களில் ஓரிடத்தில் கூட, விளையாட்டு என்ற சொல் வரவில்லையே? அதெப்படி, நான் ஏற்றுக் கொள்ள முடியும்? எனக்குக் கொஞ்சம் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

எம் காலத்து வாழ்க்கையில், போர்களே பெரும் பங்கு வகித்தன. போர் என்பது பெரும் விளையாட்டாக மக்களிடையே விளங்கின.

அதனால் நான், பெரும் விளையாட்டுக்களின் பிறப்பிடமாக விளங்கிய போர்கள் பற்றியே நிறையக் கூறியிருக்கிறேன். சாதாரண விளையாட்டுக்கள் பற்றி, நான் நினைத்துப் பார்க்காமல் விட்டு விட்டேன்.

தொல்காப்பியப் பெருந்தகை, உவகை என்னும் மெய்ப்பாட்டை விளக்க முனைந்த போது, செல்வம், புலனே, புணர்வு, விளையாட்டு என்று பாடினார். இவற்றை, அல்லல் நீத்த உவகை நான்கே என்று நறுக்குத் தெறித்தார்போற் குறித்துக் கூறினார்.

விளையாட்டு என்ற சொல்லுக்கு பொழுது போக்கு என்று பொருள்கண்ட காலமாக, எம் காலம் இருந்தது.

நாங்கள் விளையாட்டைக் குறிக்க, நகை என்ற சொல்லைப் பயன்படுத்தினோம். நகை என்றால், இகழ்ச்சி, இன்பம், களிப்பு, சிரிப்பு, ஆபரணம் என்று பல பொருள்கள் இருந்தாலும், விளையாட்டு என்ற பொருளிலும் விளங்கி வந்தது (ஆனந்த விகடன் அகராதி, பக்கம் 1628, 2034)

அதன் அடிப்படையில்தான் நான், விளையாட்டு என்பதைக் குறிக்க நகை என்ற சொல்லோடு இரண்டு குறள்களைப் பாடியிருக்கின்றேன்.

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள்ள பாடறிவார் மாட்டு (995)**

நகைத்து விளையாடும் இடத்திலும், இகழ்ச்சி செய்தல் இன்னலைத்தரும். பகைவரிடத்திலும் நல்ல பண்புகள் உள்ளன என்பதையறிந்து இகழ்ச்சி செய்யாதிருக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

பகைக்கும் நேரத்திலும் பண்பு காத்தல் பெருமை தரும். சிரித்து விளையாடுகிறபோதும், இகழ்வாகப் பேசுதல் சிறுமை தரும்.

**பகையென்னும் பண்பில் அதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற் பாற்றன்று (871)**

பகை என்று சொல்லப்படுகிற தீயதனை, ஒருவன் சிரித்துப் பொழுது போக்கும் விளையாட்டின் இடத்து விரும்புதலாகாது என்பது இதன் பொருள்.

நகை என்ற சொல், மகிழ்ச்சியை, மறுமலர்ச்சியை, முகமலர்ச்சியை, சிரிக்கும் தன்மையை விளக்குகின்றன என்பதற்கு, நகை ஈகை (முகமலர்ச்சி) (953); நகையும் உவகையும் (304)

நகை வகை (817) என்ற குறள்களில் சொல்லி யிருக்கிறேன்.

ஆகவே. உங்கள் கால விளையாட்டுப் போட்டிகளில் வேகமும், தாக்கும் விறுவிறுப்பும், எதிரியை சாய்க்கும் கொடுசினமும் குலாவி வருவதை நான் பார்க்கும் வாய்ப்பு கிடைத்திருப்ப தால், மிக எளிதாக, போட்டிகளுக்கு வீரர்கள் தயாராக விளங்க வேண்டும் என்பதை விளக்க முடியும் என்றார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் வல்லமைப் பற்றி விளக்கினால், மிகப் பயனுள்ள தாக இருக்கும் என்றேன்.

விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்பவர் கள், முதலில் தமது திறமை, தேர்ந்த வலிமை என்ன என்பதை, முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

உன்னையே நீ எண்ணிப்பார் என்ற தத்துவம் பொருந்தும் என்றேன்.

தாம் ஆடப்போகிற விளையாட்டின் தன்மை, அதற்கு உதவக் கூடிய திறன்கள், தம்மால் என்ன முடியும் என்று உணர்ந்து கொண்டிருக்கிற உண்மை யான வலிமை, இவை மட்டுமன்றி; தம்மை எதிர்த்து விளையாடப் போகின்றவர்களின் வலிமையை ஆராய்தல், அவர்களை எதிர்த்துப்

போராட, தமது குழுவினரின் குழு ஆற்றல் எவ்வளவு உண்டு என்பனவற்றை ஆராய்ந்து முடி வெடித்து செயல் படுகிறபோது தான் வெற்றிபெற முடியும்.

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்** (471)

வள்ளுவரிடம், இக்கால விளையாட்டில் கூறப் படுகிற சில ஆங்கில வார்த்தைகளைக் கூறிட அனுமதி கேட்டேன். சரியென்றார்.

இந்த உத்தி முறைகளைத்தான் ஆங்கிலத்தில் Tactics, Techniques, Skills என்று கூறுவார்கள். எதிர்க் குழுவின் வலிமைக்கும் விளையாட்டுத் திறமைக்கும் ஏற்ப; திட்டமிட்டு விளையாடப் போகிற தந்திர முறையை Strategy என்பார்கள் என்றேன்.

போர்க்களத்தில் வியூகம் அமைத்துப் போரிடும் முறையும், விளையாட்டில் தந்திரமாக திறங்களைப் பயன்படுத்தும் முறையும், ஒன்றுபோல்தான் இருக்கிறது என்றேன்.

தமது வலிமை, திறமை, தெரியாமல், எதிரி களுடன் போராடச் செல்கிறவன் ஊக்கமும், வீரமும் எவ்வளவுதான் மிகுதியாக இருந்தாலும், இடையிலே செயல் முறிந்து தோல்வியடைந்து வீழ்வான் என்கிற, குறிப்பையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார்,

**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். (473)**

தமது திறமைகளை எவ்வளவு என்று எப்படி தெரிந்து கொள்ள முடியும்? ஒழுங்காகப் பயிற்சி செய்கிற போது தானே தெரியும். அப்படி அறியா-மல் போட்டிக்குப் போவது, நிச்சயம் தோல்வி-யைத் தானே நிகழ்த்தும்.

இந்த மூன்று குறிப்புகள் மட்டும் போதாது, முக்கியமான கருத்தையும் நாம் முனைப்பாகக் கொள்ள வேண்டும்.

தன் வலிமை, எதிரி வலிமை, செயல் வலிமை என்பதுடன், எதிர்த்துவருபவர்களை எப்பொழுதும் ஏளனமாக நினைக்கக் கூடாது. எதிரிகளின் திறமை களை உயர்த்தி மதிப்பிட்டு, அவற்றைத் தாக்கவும் தகர்க்கவும் கூடிய வழி வகைகளைச் செய்வதுதான் அறிவுடைமையாகும்.

பிறரது உருவம் கண்டு எள்ளி நகைப்பதும், கேவலப்படுத்த முயற்சிப்பதும், செய்பவர்களுக்கே கேடாக முடியும்.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (667)**

உருண்டு வருகின்ற பெரிய தேருக்கு, சக்கரங்கள் முக்கியமானதல்லவா! அந்த சக்கரங்கள்

தேரிலிருந்து அகன்று போகாமல் தடுத்து, ஆற்றலுடன் உருளச் செய்வது எது? அதில் மாட்டியிருக்கும் சிறிய அச்சாணிகள் அல்லவா!

அச்சாணியை அறிவின்றி அகற்றி விட்டால், அழகுத்தேர் ஓடுவதற்குப் பதிலாக, உடைந்தல்லவா வீழும்!

அப்படித் தான் எதிராளிகளை, முக்கியமானவர்களாகக் கருத வேண்டும். பிறரது திறமைகளை எக்காரணம் கொண்டும், தரக்குறைவாக நினைக்கக் கூடாது, என்றார்.

பிறரைத் தரக் குறைவாக நினைக்கத் தூண்டுவது, தன்னைப்பற்றி பெரிதாக நினைத்துக் கொள்வதால் தானே ஏற்படுகிறது! என்றதற்கு, அதற்குப் பெயர் தற்பெருமை, தலைக்கனம் என்றார் வள்ளுவர்.

தன்னை யாரென்று சீர் தூக்கிப் பார்க்க இயலாதவரின் திறமையும் வலிமையும், பிறர் கெடுப்பாரின்றியே கெட்டுப் போகும். தீரத் தெரிந்து கொள்ள முடியாத திறமையாளர், திறமை முழுவதையும் தெளிவாகப் பயன் படுத்த இயலாமல், தீ பட்ட துரும்பாகத் துடித்துப் போவர். அது அவரது ஆற்றலை அழித்து, ஆண்மையை மிதித்து, வெற்றி வாய்ப்பை மடித்து, முடித்து வைத்துவிடும் வேகம் கொண்டது

அதனால் தான், வெற்றி வேண்டும் என்று விரும்புகின்ற விளையாட்டு வீரர்கள், தமக்குள்ள திறமையின் அளவை சீர்தூக்கிப் பார்த்து, தெரிந்து கொண்டு, போட்டியிட வேண்டும். இல்லையென்றால், அவரது தோல்வி அனைத்தும் அறுந்ததாக, வெற்றி முறிந்ததாக தெரிந்து போகும்.

**உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை**
**வளவரை வல்லைக் கெடும் (480)**

உளவரை என்பது உள்ளவ்ரை, இருப்பதை அறியும் வரை என்றும்; வளவரை என்பது அந்த ஆற்றலின் அளவு முறை என்றும் கொள்ளலாம். உள்ளதை உணர்ந்து கொள்ளாதபோது, வளமாக இருக்கின்ற திறமையும், எல்லையில்லாமல் கெட்டுப்போகும் என்பதை அறிய வேண்டும்.

அடுத்த குணமாக, போராடுகிற வழிமுறையை எண்ண வேண்டும்.

**வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்பிலர் பற்றார்க்கு இனிது (865)**

தனது திறமையின் அளவு என்ன? தனது திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வழி முறைகள் என்ன? பிறருடன் போராடுகிறபோது, பொருத்தமாகக் கையாளக் கூடிய உத்திகள் என்ன? பிறருக்குத் தவறுகள் இழைக்காமல், பழி

யில்லாமல் செயல்படும் வழிகள் என்ன? பண்போடு நடந்து கொள்ளக் கூடிய பாங்குகள் என்ன? என்பனவற்றை எண்ணிப்பார்க்காமல் விளையாடு கிறவன், எதிரிக்கு எளிதானவனாகி விடுகிறான்.

அவனது அறியாமை, ஆணவம், ஆற்றலின் மையை அளித்து, விரைவில் சோர்வடையச் செய்து, தோல்விக்கு எளிதில் இட்டுச் சென்று விடுகின்றன.

ஆகவே, போராடும் வழி முறைகளில், பொருத்தமான முறையைத் தேர்ந்தெடுத்து, விதிமுறைகளுக்கு இணங்கி, தவறுகள் இழைக்க முற்படாமல் விளையாடினால் வெற்றி நிச்சயம் தான்.

விளையாட்டுக்களில் ஒவ்வொரு விளையாட் டுக்கும் என்று பல ஆட்ட முறைகள் உண்டு. ஆளுக்கு ஆள் காவல் முறை. (Man to man): எல்லைக் காவல் முறை (Zonal Defence): தமக்குரிய இடத்தில் நின்றாடும் முறை (Positional play): தடுத்தாடும் முறை (Defence method): தாக்கி ஆடும் முறை (Attack method): என்றெல்லாம் நிறைய வழி முறைகள் உண்டு என்றேன்.

உங்கள் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு கருத்தை வலியுறுத்திக் கூற விழைகிறேன். வெற்றி வெற்றி என்று மக்கள் விரும்புகின்றார்கள்.

வீரர்களும் விரும்புகின்றார்கள். விளைவுதான் வேறாக உள்ளது என்பதற்கு, மாற்றாக இந்தக் கருத்து உதவும்.

**வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு. (878)**

வகையறிதல் என்பது விளையாடும் போர் முறையின் தந்திரத்தை அறிந்து கையாளுதல்; தற்செய்தல் என்பது, தனது திறமைகளை அதிகமாக வளர்த்துப் பெருக்கிக் கொள்ளுதல்; தற்காத்தல் என்பது பகைவர்கள் தமது எல்லையை அடைந்துவிடாமல், தற்காப்பு முறைகளைக் கையாளுதல்; பகைவர் என்பது எதிராளிகள்! (Opponents). அவர்களின் செருக்கு என்பது அழிவின் முன் படி.

எதிராளிகளின் முனைப்பு அழிகிறபோதே, அவர்கள் திறமைகளும் சரிவடையத் தொடங்குகின்றன.

ஆகவே, போட்டிகளுக்குப் போகின்றவர்கள், தங்களை நன்கு தயார் செய்துகொண்டு, தகுந்த முறைகளைக் கையாண்டு, மிகுதியான தகுதி நிறைவுடன் செல்கிறபோது, வெற்றி விரைந்து வந்து மகிழ்விக்கும். இந்தக் குறைகளை நீக்கிவிட்டால், நம் விளையாட்டு வீரர்கள் சிறப்பெல்லாம் பெறுவார்கள் என்று வள்ளுவர் பேசி முடித்தார்.

மகிழ்ச்சியடைந்தாலும், வேறு வினா ஒன்றை வினவ நான் தயாராகினேன். என்ன என்பது போல, என்னை ஏறிட்டுப்பார்த்தார் வள்ளுவர்

# 11. விளையாடும் முன்னறிவு

வாழ்க்கையின் வளமான ஊட்டத்திற்கும், வாழ்வு தரும் முன்னேற்றத்திற்கும் அறிவுதான் அடிப்படையாக அமைந்திருக்கிறது.

வந்தபின் காப்பது, வாடி முயன்று தவிர்ப்பது, வருத்தப்படுவது என்பதில் தான் எல்லா மக்களும், முயற்சியை மேற்கொள்கின்றார்கள். ஆனால், இது இப்படித்தான் நிகழும், இன்ன வடிவில் தான் வரும், இப்படி ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால். இந்த முறையில் தான் தடுத்தாள வேண்டும், என்று முயற்சிப்பவர்களே, முதிர்ந்த அறிவாளர்கள் என்று கருதப்படுகின்றார்கள்.

அவ்வாறு சிந்திக்காமல் வாழ்கின்றவர்கள் வாழ்க்கை, மழையால் கரைகின்ற மணல்வீடுபோல ; புயலால் வீழ்கின்ற முருங்கை மரம் போல, தீயால் எரிகின்ற துரும்புகள் போல, அழிந்துபோய் விடுகின்றது. கெடுகின்றது.

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும் (435)**

குற்றமோ அல்லது தீய காரியங்களோ எதுவும் தமக்கு நேர்வதற்கு முன்னதாகவே, காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன்னே இருக்கும் வைக்கோல் போர்போல எரிந்து அழிந்து விடும் என்று நான் பாடியிருக்கிறேனே என்று தொடங்கினார் தமிழ்த்திருமகனார் வள்ளுவனார்.

விளையாட்டுக்கும் இந்தக் கருத்து அப்படியே பொருந்தி வருகிறதே என்றேன் மகிழ்ச்சியுடன்

முன்னேற்றம் அடைந்துள்ள இக்கால நாகரீக விளையாட்டுக்களுக்கு என்னென்ன தேவை என்று நீங்கள் எதிர்ப்பார்த்துத்தானே பயிற்சியளிக்கின்றீர்கள் என்று என்னைக் கேட்டார்.

விளையாடுகிற முறையில், தமது திறமையை வெளிப்படுத்துவது மட்டும் எங்கள் முக்கிய நோக்கமல்ல. எதிர்த்து விளையாடுகின்றவர்களுடைய திறமை, எடுபடாமல் போகிற அளவுக்கு, அவர்கள் திறமையைப் பயன்படுத்துகின்ற வாய்ப்பைக் குறைத்து விடுவது அல்லது முறித்துவிடுவது என்பது தான், நாங்கள் தருகிற பயிற்சி முறையாகும்.

'இதை நீங்கள் எப்படி செய்வீர்கள் என்று விளக்குங்கள் !

எதிர்த்து விளையாடுபவர்கள் எல்லோரும் இப்படித்தான் திட்டமிட்டு, வியூகம் வகுத்து விளை யாடுவார்கள் என்பதை முன்னதாக அறிந்து

கொள்ளுதல். இதை நாங்கள் ஆங்கிலத்தில் (Anticipation) என்கிறோம். அதாவது முன்னுணரும் அறிவு என்போம்.

எதிராளிகள் இயக்கம் (Movement) இப்படித் தான் இருக்கும் என்பதை, முன்கூட்டியே யூகித்து அறிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள், சிறந்த ஆட்டக்காரர்களாக ஆக முடியும் என்பது எங்கள் நம்பிக்கை என்றேன்.

இந்த முன்னுணரும் அறிவு பற்றி எவ்வளவு தெளிவாக நான் அன்றே பாடி வைத்திருக்கிறேன் கேளுங்கள்.

**அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்.** (427)

ஒரு காரியம் இப்படித்தான் நடக்கும் என்று முன்கூட்டியே அறிந்து கொள்பவர்களே அறிவுடை யோர்கள் என்று அழைக்கப்படுவர். அப்படி அறிய இயலாதவர்கள் கல்லாதவர்கள், அறிவற்றவர்கள் ஆவார்கள்.

ஆவது என்ற சொல்லை மிகவும் ஆழமாகப் பயன்படுத்தி இருக்கின்றீர்கள் என்றேன். ஆமாம், ஒரு காரியம் நடைபெறுகின்றபோதே, அந்தக் காரியம் இப்படித்தான் நடக்கும், இப்படித்தான் முடிவுகளைக் கொடுக்கும், என்பன போன்ற—, குறிப்புக்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும்தான் ஆவது என்ற அறிவாகும்,

இந்த அறிவு எல்லோருக்கும் இருக்காது. வரவும் வராது. செயல்படுகின்ற காரியத்தில் சிந்தையை ஈடுபடுத்தி, சிரத்தையுடன் முழுமுனைப் புடன் இருப்போருக்கே இந்த அறிவு வரும். எழும்.

அதாவது, இந்த ஆவது அறியும் அறிவானது, தினம் செய்கின்ற பயிற்சி மூலம், பக்குவமான அறிவின் மூலமாகவே வளர்வதாகும். இது உழைப்பில் உருவாகின்ற உன்னதத்திருவாகும் என்று வள்ளுவர் பேசிக்கொண்டேயிருந்தார்.

நான் அவரைத் தொடர்ந்து பேச ஆரம் பித்தேன்.

கால் பந்தாட்டம் என்பது தான் உங்களுக்குத் தெரியுமே! அதை வல்லுநர்கள் பலர், கால்பேசும் மொழி என்பார்கள். அதாவது, பந்தை எப்படி இயக்கவேண்டும் என்று, விளையாடுவோரின் கால் பேசுகிறது. அந்த அளவுக்கு, கால்களும் பந்தும் நீண்ட நாட்களாக உறவாடி வருகின்றன.

இப்படிப் பயிற்சி செய்கிற திறத்தினாலே, ஒரு வர்காலில் இருக்கும் பந்து எந்தப்பக்கம் போகும், எப்படி திசைமாறும் என்பதை நன்கு விளையாடிப் பழகியவர்களின் கண்கள் புரிந்து கொள்ளும்.

அப்படிப் புரிந்து கொள்வதைத்தான் முன் உணரும் அறிவு என்று நாங்கள் கூறுகிறோம், என்றேன்.

உண்மைதான். கண்ணுக்கு அத்தகைய ஆற்றல் உண்டு, அதற்கு ஈடு, இந்த அகிலத்தில் எதுவுமே இல்லை என்று என் கண்களை கூர்ந்து நோக்கினார். நான் மண்நோக்கிக் குனிந்த போது, அவரது மணிக்குரல் எழுப்பிய குறள், என் காது களில் சங்கீதமாகப்பாய்ந்தது.

**நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்காற்**
**கண்ணல்லது இல்லை பிற (710)**

பிறருடைய கருத்தை அறிந்துகொள்கிற அளக்கும் கோலாக கண்கள் தாம் இருக்கின்றன. அவைதான் நுட்பமான அறிவை வளர்த்து விடுகின்றன.

அதுமட்டுமல்ல. கண்தான், எல்லா உறுப் பினுக்கும் மேலானது. உறுப்புக்குத் துன்பம் வந் தாலும், கண்தான் அழுது, தன் கருணையை வெளிப்படுத்தும் பாங்கு பெற்றது.

அப்படிப்பட்ட சிறப்பு பெற்றது கண்தான், பிறருடைய குறிப்பை குறிப்பால் அறிந்துகொள்ளும் கண்களை அறிவில் வாசல் என்பார்கள்! அப்படிப் பயன் படாத கண்கள், முகத்தில் உள்ள புண்கள் தாம்.

**குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண் (705)**

பிறர் இயங்குகிற இயக்கம், விளையாட்டில் முக்கியமானதாகும். மனித வாழ்க்கையே இயக்கம்

தான் என்றால், விளையாட்டோ - இயக்கங்களின் சிகரமாக அமைந்துள்ளது.

ஒருவர் எப்படி இயங்குகிறார் என்பதை, அவரது கண் இயக்கத்தைக் கொண்டும், முக பாவத்தைக் கொண்டும் புரிந்து கொள்ளலாம். அந்த அறிவைத் தான், குறிப்பு என்று நான் கூறினேன். பிறர் இயக்கத்தின் குறிப்பை அறியாத கண், கண்ணென்று எப்படி பெயர் பெற முடியும் என்பதற்காகத்தான், என்ன பயத்தவோ கண் என்று பாடினேன்.

ஆகவே, கண்ணும் நெஞ்சும் ஒன்றிப் போனால், காரியங்கள் எல்லாம் வீரியம் பெறும். சீரினைப் பெறும். சிறப்புக்களை பெற்றுத்தரும் என்றார்.

ஆனால், அறிவும் அடக்கமும் ஒன்று சேர்வதில்லை. ஆத்திரம் அகங்காரம் என்ற பல தீக்குணங்கள் வந்து, அறிவைப் பாழாக்கி விடுகின்றன என்றார் வள்ளுவர்.

# 12. வெகுளியும் விளையாட்டும்!

போர்ச் செயல்களில் இருந்து தான் விளையாட்டுக்கள் வடிவம் பெற்றன, வாழ்வு கொண்டன என்பது வரலாறு என்று நீங்கள் கூறினீர்கள். விளையாடுகின்றவர்கள் எல்லோருமே கொஞ்சம் வேகம் உடைய வீரர்களாக, சண்டை போடும் சக்தி படைத்தவர்களாக அல்லவா விளங்குகின்றார்கள், என்று வள்ளுவர் என்னிடம் கேட்டார்.

'எங்கள் வீரர்கள், வீராங்கனைகள் சண்டை போடுவது, தகராறு செய்வது, எதிர்ப்பைத் தெரிவித்து ஏகக் குரலில் சத்தமிட்டு, விளையாடாமல், வெளியேறுவது எல்லாம், உங்களுக்கு எப்படித் தெரியும்' என்றேன் மெதுவாக.

போரும் காதலும் தமிழர்களின் இரு கண்கள் என்று பரணிபாடிய தமிழ்க்குலம் அல்லவா! அதனால் தான் இந்த வேகமும் விறுவிறுப்பும் என்று ஆரம்பித்த வள்ளுவர்; நீங்கள் அழைத்துச் சென்று காட்டிய அத்தனைப் போட்டிகளிலும் தகராறுகள் நிறைய இருந்தனவே! நீங்கள் காட்டிய வீடியோ

படத்தில் கூட, கைகலப்பு இருந்ததே! என்று தொடர் நிகழ்ச்சிபோன்று, பலசான்றுகளைக் கூறி வந்தார். சான்றோர் அல்லவா அவர்.!

இந்த வேகம் ஏன்? விவேகம் அல்லவே! மகிழ்ச்சிக்காகத் தானே விளையாட்டு என்றீர்கள்! மகிழ்ச்சி என்பதற்கு மற்றொரு சொல்தானே விளையாட்டு என்று விளக்கம் தந்தீர்கள் என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

மகிழ்ச்சிக்காக ஆரம்பித்த விளையாட்டு, மனம் விரும்பும் பொழுதுபோக்குக்காக வளைந்து கொடுக்க ஆரம்பித்தது.

பொழுது போக்கும் மகிழ்ச்சியும் சேர்ந்து கொண்டு, புதுப்பாதை ஒன்றை அமைத்துக் கொடுத்துவிட்டது. அதுதான் பிறர் பாராட்டிப் பேசுகின்ற பெருமையை எதிர்பார்க்கும் பேதமை.

பிறர் புகழப்புகழ வளர்ந்த பெருமை, பின்னாட்களில் பணத்தையும் பெருக்கித்தரத் தொடங்கியது. வசதிகளின் வளர்ச்சிக் கோலம், வானம் கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்தது.

புகழ், பணம், வசதி, பெருமை, பாராட்டு என்று விளையாட்டுக்கள் வழங்கிய காரணத்தால், விளையாட்டு என்றால் வெற்றிதான் வேண்டும்.

எக்காரணம் கொண்டும், தோற்கவே கூடாது என்ற பத்தாம் பசலித்தனமான கொள்கையும், பரவலாக கூடவே ஆரம்பித்தது.

எந்த வழியைப் பின்பற்றினாலும் பரவா யில்லை. வெற்றி பெற வேண்டும். பெற்றாக வேண்டும் என்று முற்றிப் போன வெறிப்போக்கு, முளை விட்டுத் தழைக்க ஆரம்பித்தது.

அதனால் ஏற்பட்ட வேகம், வெகுளியாகி, புலி யாகிப் போராடுகின்ற புயல் குணத்தைப் பிறப்பித்து விட்டது என்றேன்.

விளையாட்டானாலும் வாழ்க்கையானாலு வழிகள் ஒன்றுதான். மக்களிடையே உள்ள வாழ்க்கை முறை இரண்டு விதமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒன்று, ஒன்று பட்டு வாழ்கின்ற ஒற்றுமை உணர்வுடன் முன்னேறுவது. இரண்டு மற்றவர்களுடன் போராடி, வெற்றிகண்டு முன்னேறுவது.

விளையாட்டுக்கள் எல்லாம், ஒற்றுமை உணர் வுடன் போராடி வெற்றி காண முற்படுகின்ற விதங் களில் தான் வடிவம் பெற்றுள்ளன. போராடுகிற சூழ்நிலை ஏற்படுகிற பொழுதே, பொங்கி எழு கின்ற போர்க்குணங்கள், புயலாகி விடுகின்றன.

அங்கே அறிவு இடம் பெயர்ந்து கொள்ள. ஆத்திரம் தலைமையேற்றுக் கொள்கிறது. உடனே

நிலைமையும் நெகிழ்ந்து நீறுபூத்த நெருப்பாகி. நிகழ்வனவற்றில் வேகத்தை நிறைத்து விடுகிறது,

வாழ்க்கையானாலும் சரி. விளையாட்டானாலும் சரி வேகம் வருகிறபோது, விவேகத்தை நிறைத்துக் கொண்டு வெகுளியைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதற்காக எத்தனையோ பாடல்களை எழுதியிருக்கிறேனே என்று ஆரம்பித்தார் வள்ளுவர். நானும் கேட்கத் தயாரானேன்.

கோபத்தைக் குணமாகக் கொண்டவன், எவ்வளவு திறமையும், ஆற்றலும் வல்லமையும் கொண்டவனாக விளங்கினாலும் அதன் அறிவை இழந்து, மிகவும் எளியவனாகி விடுகிறான். அவனையாரும் எந்த இடத்திலும் வென்றுவிட முடியும் என்ற அளவுக்கு, பலம் குன்றியவனாகி விடுகிறான். கோபப்படுகிறவன் திறமைகளில் குறைந்து போகிறான் என்று அன்றே பாடியிருக்கிறேனே.

**நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்**
**யாங்கணும் யார்க்கும் எளிது** (864)

கோபப்படுகிறபோதே, அவனது அறிவு மாய்ந்துபோகிறது. சிந்திக்கும் பாங்கு திசை மாறிப் போகிறது, செய்யும் செயலின் உண்மை வழியும், உலைந்து குலைந்து கலைந்து போகிறது. அவ்வாறு செயல் படுகிறபோது, எதிரிகளின் கை ஓங்கி விடுகிறது. எப்படி! இப்படித்தான்.

**வழி நோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்பிலன் பற்றார்க்கு இனிது** (865)

கோபப்படுகிறவன், தான் செய்கின்ற செயலின் வழிபற்றி மறந்து, முன்னுணரும் அறிவையும் இழந்து, வழிமாறி செயல்படுகிறான். தான் சாதிக்கிற, வெற்றி பெறுகிற, திறன்களையும் உரிய நேரத்தில், ஒரு முகப்படுத்தி செய்யாமல் விட்டுவிடுகிறான். கெட்டு விடுகிறான். இதனால் இவனைப்பற்றி மற்றவர்கள் இழித்துரைக்கும் நிலைக்கும் ஆளாகி பழிதனை ஏற்றுக் கொள்கி றான். அப்படிப்பட்ட பழிக்கு ஆளாவது மட்டு மல்ல அவன் பண்பு கெட்டவன் என்ற பெயரெ டுத்து பகைவர்க்கும் வெற்றி பெறுவதற்கு எளிதாக பட்டு விடுகிறான், இப்படிப்பட்ட பெயர் கெடுக்கும் கோபம் அவசியம்தானா என்றார் வள்ளுவர்.

விளையாட்டுக்கு உங்கள் குறள் எப்படி பொருந்தி வருகிறது என்று உணர்ச்சியுடன் பேசி னேன். அவர் கண்கள் குறு நகை பூத்தன.

அதனால்தான், ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்று நமது முன்னோர்கள் கூறினார்கள் போலும் என்றேன.

ஆமாம் வெகுளி வருகிறபோது, வகையறிந்து, தற்செய்து தற்காப்பு (878) திறன் மாய்ந்துபோகிறது என்று பாடினேன். அதுமட்டுமா... சினம் என்பது சினமடைந்தவரை சாய்க்கும் என்பதுடன், சேர்ந் தாரையும் கொல்லும் என்பதால், அதனை நெருப்பு என்றே பாடியிருக்கிறேன் பார்த்தீர்களா ?

**சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் (306)**

உலகத்து நெருப்பானது சுடுவது, தான் சேர்ந்த இடத்தைத் தான். ஆனால் இந்தக் கோபம் எனும் நெருப்பு, சேர்ந்த இடத்தை மட்டுமல்ல, தான் சேராத இடத்தையும் சுட்டுப் பொசுக்கி விடும், என்றார் வள்ளுவர்.

உண்மைதான். விளையாட்டுக்கள் என்பது ஒருவர்மட்டும் ஆடி மகிழ்வதல்ல. பொருதுவதல்ல. பலருடன் ஒன்று சேர்ந்து, ஒரு குழுவாக உருவாகிக் கொண்டு, விளையாடுவது தானே.

ஒருவர் கோபப்படுகிறபோது, அவரது திறமைகள், நுணுக்கங்கள். நுண் முயற்சிகள் எல்லாம் சீரிழந்து போவதுடன், சேர்ந்து விளையாடுகின்றவர்களின் திறமைகளையும் சீரழித்து விடுகிறது. அங்கே ஒற்றுமை உணர்வு பாழாகி விடுகிறது. எதிரிகளின் இயக்கத்தை அறியும் ஆற்றலும் அழிந்து விடுகிறது. அவர்களுக்கு எதிரிகள் வேறு யாரும் இல்லை. அவர்களுக்குப் பகை அவர்களே தான் என்று ஆக்கிவிடுகிறதே என்றேன்.

ஆமாம். முகத்தின் கண் தோன்றுகிற மகிழ்ச்சியையும், அகத்தின் கண் தோன்றுகிற உவகையையும் கோபம் அழித்து விடுவதுடன், திறத்துடன் சேர்ந்த செயல் எழுச்சியையும் கொன்று குலைத்து விடுகிறது, என்றார் வள்ளுவர்.

ஒருவன் கொள்ளுகின்ற கோபம் பொருளற்றது. வீணானது. தான் கொள்கின்ற கோபம், பிறரை எவ்வாறு துன்புறுத்தும்? அவர்களை எவ்வாறு வருத்தும்? இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், கோபப்படுகிறவன் எதிர்பார்க்கின்ற பயன்கள், அவனுக்கே தீங்காக அல்லவா திரும்பி வந்து விடுகிறது.

கோபம் கொண்ட ஒருவன், எதிரிலே உள்ள சுவற்றின் மீது கையால் அறைகிறான், குத்துகிறான். அதனால் என்ன பயன் ஏற்படுகிறது? கையல்லவா துன்புறுகிறது— காயப்படுகிறது, ஆகவே கோபத்தைப் பொருளாக ஆர்வத்துடன் கொள்கிறவன், காயப்பட்டு கெடுவான். அது போலவே, விளையாட்டிலும் கோபப்படுகிறவன், அவமானப்பட்டு கெடுவான்.

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று (307)**

ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன்.

கோபப்படுகிற யாரும், காரியத்தில் வெற்றி காண முடியாது. கோபப்படுகிறவன் அறிவற்ற வறிஞனாகி விடுகிறான். கோபப்படுகிறவன் திறமையிழந்த தீயனாகிப் போகிறான். அவன் இருக்கிற இடம் பகைவர் சிரிக்கிற இடமாகப் போய் விடும் என்றெல்லாம் பாடினேன்.

ஏன் அப்படிப் பாடினீர்கள் ?

அங்கே தான் வாழ்க்கைத் தத்துவமே அடங்கிக் கிடக்கிறது. கோபப்படுகிற ஒருவன், உயிருடையவனாக இருந்த போதிலும், அவன் இறந்தவனாகவே கருதப்படுகிறான். இறந்து போனவன் எப்படி வெல்லமுடியும்.

அப்படிப்பட்ட மோசமான குணங்களை வளர்த்து விடுகிற கோபத்தால், நாசமானவர்கள் நாட்டிலே நிறைய பேர்கள் உண்டு.

அதற்கு மாறாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். கேளுங்கள் என்றார்.

கோபத்தைத் துறந்தவர்களுடைய வாழ்விலும் இறப்பு வரும் என்றாலும், அந்த சமயத்திலும் அவர்களை அது வாழ்த்தும் வாழவைக்கும். அதாவது மரணத்தையே வெல்லுகின்ற மாபெரும் சக்தியைக் கொடுக்கும் என்று பாடியிருக்கிறேன்

**இறந்தார் றந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை (310)**

ஆகவே, கோபம் பாபம் என்பதாக இன்னும் நாங்கள் நினைக்கிறாம் இக்காலத்தில் விளையாட்டுத் துறையில். பல புதிய அணுகு முறையைக் கையாளுகின்றார்கள். அதாவது, எதையும் கோபப் படாமல் ஏற்றுக் கொள்வதை ஆங்கிலத்திலே Temperament) என்கிறார்கள்.

மனோதத்துவ முறையில் உடலால் பதட்டத்தை நீக்கி (Tension), மனதால் அமைதிப்படுத்தி (Calm and Cool) விளையாடச் செய்யும் பயிற்சிகளை அளிக்கின்றார்கள். அதற்கு தியானம், இறைபக்தி என்கிற வழிகளிலெல்லாம் முயல்கிறார்கள் என்றேன்.

காலத்திற்கேற்ற கோலம், கோலத்திற்கேற்ற கொள்கை, என்று சிரித்தார்.

ஆமாம் புதிய மொந்தை. பழைய கள் என்று நானும் சிரித்தேன்.

அதற்கு மனப்பக்குவம் வேண்டும் என்றார். எப்படி என்றேன். வாருங்கள் பேசிக்கொண்டே போகலாம் என்றார், நடையைத் தொடர்ந்தோம்.

# 13. பிறர்க்குக் கேடு செய்யாத பெருந்தன்மை

போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்தது தான் நமது உலக வாழ்க்கை. இதில் வெற்றி பெற்று உயர்ந்திட வேண்டுமானால், போராடித் தான் வாழவேண்டும். துன்பங்களில் நீராடி, துயரங்களில் எதிர் நீச்சல் போட்டுத் திளைக்கிற போதுதான், எதிர் பார்க்கும் வெற்றிகளையும், புகழ்தனையும் ஈட்டமுடியும். இந்த நமது வாழ்க்கையைத்தான், விளையாட்டுக்கள் எதிரொலித்துக் காட்டுகின்றன.

விளையாட்டுக்களின் நோக்கமும் முடிவும், வெற்றிகளைப் பெறத்தான். வெற்றிக்குவேண்டியது போராடும் குணம். போராடுவது என்பது பிறருடன் பொருதுவது – எதிர்த்து செயல்படுவது

பிறருடன் முனைப்பு காட்டி பொருதுவதைத் தான், உண்மை வாழ்க்கையில், போர் என்றனர். பழகும் வாழ்க்கையில் விளையாட்டு என்றனர்.

பழகும் விளையாட்டு வாழ்க்கையில், பயன் தரத்தக்க குணநலன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் .அதுவே அறிவுடைமை. அதையேஆன்ற சான்றாண்மை என்றும் கூறலாம்.

சான்றாண்மை என்னும் பெருந்தன்மையைத் தான், நான் பேராண்மை என்று பாடினேன், என்று வள்ளுவர் பேசிக் கொண்டே வந்தார்.

நமது வீரர்களும் வீராங்கனைகளும் விளை யாட்டுப் போட்டிகளின் போது நடந்து கொண்ட முறைகளைப் பார்த்ததால் ஏற்பட்ட மன வேதனையில் தான், மேற்கண்டவாறு தனது பேச்சை ஆரம்பித்தார்.

**சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு** (962)
**பேராண்மை வேண்டு பவர்**

பிறர் வெறுக்கத் தகுந்த இழிவான செயல் களைச் செய்யாதவர்களை தான் பேராண்மை மிக்க வர்கள் என்று குறித்திருக்கிறேன் பாருங்கள்.

கோபப்படுகிறவன் குணமிழந்து போய் விடு கிறான். குறுக்கு வழிகளைப் பின்பற்ற முனை கிறான். பிறருக்குப் பெருந்தீங்கு செய்தாவது, தான் விரும்புகிற வெற்றியை அடையவேண்டும் என்று விரும்புகிறான்.

பெருந்தீங்கு செய்கிற பேய்க்குணம் முளைத்து விட்டால், பெருந்தன்மை எப்படி நிலைக்கும்? பேராண்மை எப்படி வளரும்.

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின் (965)**

குடிபிறப்பால், செல்வ வளத்தால், குன்று போல் உயர்ந்த இடத்திலிருந்து வந்தவர்கள் கூட, ஒரு குன்றிமணி அளவு தரம் தாழ்ந்து செயல் பட்டாலும் கூட, அவர் குன்றிப்போய் விடுவார்கள். தாழ்ந்து போய் விடுவார்கள்.

அதனாலே, பிறர்க்குக்கேடு செய்யாமல் இருப் பதை பெருந்தன்மை என்றேன். பேராண்மை என்றேன் என்றார்.

ஒருவன் ஏன் வாழ்க்கையில் தவறு செய் கிறான்? விளையாட்டில் ஏன் தவறும் கேடும் செய்கிறான் என்றால், அவன் திறமை இல்லாத வறியவனாக இருப்பதால்தான்.

செல்வ வசதி இல்லாதவனும், விளையாட்டுத் திறமை இல்லாதவனும் ஒன்றுதான். இல்லாதவன் தன்னை, வல்லமையுடையவனாக வெளிக்காட்டி, பெருமைபெற, தீயவைகளை தூய வழி, தெரிந்த வழி என்று துணிகிறான்.

அவ்வாறு திறமையற்றவன் தீச்செயல் செய்கிற போது, அவன் மீண்டும் மீண்டும் திறமை யற்றுத் தேய்ந்து போகிறானே ஒழிய, தெளிந்த வனாக, எல்லாம் நிறைந்தவனாக முன்னேறி வர முடிவதில்லை.

விளையாட்டில் கேடு செய்கிற கீழ்மதி யாளனும், தான் செய்கிற தீச்செயலால், ஏற் கனவே இருக்கும் திறமைகளையும் இழந்து போகிறானே தவிர, தேர்ச்சி பெற்றவனாகிவிட முடிவதில்லை. கள்ளம் கொண்ட மனது, தூர்க்க முடியாத பள்ளமாகவே மாறி விடுகிறது. அதனால் தான் நான் இப்படிப்பாடி வைத்தேன்.

**இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகும் மற்றும் பெயர்த்து (205)**

தீய காரியங்கள் செய்கிற போது, உள்ள திறமைகள் எல்லாம் அழிந்து போவது மட்டுமல்ல. அந்தத் தீய செயலே தொடர்ந்து வந்து, அதாவது நீங்காத நிழலாகத் தொடர்ந்து வந்து அவனை அழித்துப் போடும் என்று ஆணித்தர மாகவே பாடியிருக்கிறேன்.

**தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடி உறைந் தற்று (208)**

தீய செயலை ஏன் நிழலுக்கு ஒப்பிட்டுப் பாடினேன்? நிழல் இருளில் மறைந்தும், ஒளியில் வெளிப்பட்டும் வரும், அதுபோல தீச்செயலானது செயல்படாத நேரத்து மறைந்தும், செயல்படுகிற போது நிறைந்தும் வெளியே வரும். ஆகவே, அது தொடர்ந்து தீயனைத் துன்புறுத்தும் என்று எச்சரித்துத் தான் பாடினேன்.

பிறகு ஏன் இந்த மக்கள் உணர மறுக்கின் றார்கள் ? எங்கள் விளையாட்டு வீரர்கள் திரும்பத் திரும்ப ஏன் தவறு செய்கின்றார்கள் என்று என் மனக்குறையை வெளிப்படுத்தினேன்.

உண்மைதான். தீயசெயல்கள் தீயைவிட கொடியதாகும். அதனால் தான், தீயவை தீயினும் அஞ்சப்படும் என்றேன். தீய செயல் செய்வது எளி தாக இருக்கிறது. நல்ல செயல் செய்ய வலிமை யான மனம் வேண்டும். நல்ல மனம் வேண்டும்.

ஆனால், நமது வீரர்கள், முயற்சியில்லாமலே, உழைப்பு இல்லாமலே, எல்லா புகழையும் எளிதாகப் பெற்றுவிட வேண்டும் என்று துடிக்கின்றார்கள். தீய செயல், பிறர்க்குக் கேடு விளைவிப்பது பாவ மான செயல் அல்ல என்றும் உண்மையாகவே நம்பு கின்றார்கள்.

பிறர்க்கு யார் கேடு செய்யமாட்டார்கள் என்றால், அவர்கள் பண்பாளர்கள் தாம். அவர்கள் எப்படி கேடுகளைத் தவிர்க்கின்றார்கள் தெரியுமா?

தம் உயிர்க்கு எந்தத் துன்பமும் வரக் கூடாது என்று எல்லோருமே விரும்புகின்றார்கள். ஆனா லும், மற்றவர்க்குக் கேடு செய்வது மகிழ்ச்சியானது என்றும் நினைக்கிறார்கள்.

தனது உயிர்க்குத் துன்பம் எப்படி வரக் கூடாதோ, அப்படியே பிறர்க்கும் ஏற்படக் கூடாது, என்று செயல்படுவது தான் பெருந்தன்மை.

பேராண்மை எனும் இந்தப் பண்பைத்தான், நான் அறிவினுள் எல்லாம் தலையாயது என்று பாடினேன்.

**அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய**
**செறுவார்க்கும் செய்யா விடல்** **(203)**

பிறர்க்குக் கேடு விளைவிக்கக் கூடாது என்பது நல்ல குணம் என்றால், பிறர் தனக்குக் கேடு செய்த போதும், திருப்பிச் செய்யாத குணத்தை எப்படி கூறலாம்? அவரே உலகிலே உயர்ந்த தெய்வ குணம் கொண்டவர் என்று கூறலாம் அல்லவா?

பெருந்தன்மை உள்ளவர்கள் பிறர்க்குக் கேடு செய்யப் பயப்படுவது ஏன் என்றால், பிறருக்குக் காலையிலே துன்பம் செய்தால், அப்படிப் பட்ட துன்பம், தமக்கு மாலையிலே வந்துவிடும் என்ற உண்மையை உணர்ந்திருப்பதால் தான்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்** **(319)**

கேடுகள் தானே வந்து சேரும். வீணே துன்பம் தரும், என்ற வாழ்வு நெறியைப் புரிந்து கொண்டவர்கள், எப்போதும் யார் வம்புக்கும் போகவே மாட்டார்கள் என்று பேசிய போது, நான் இடைமறித்தேன்.

விளையாட்டுக்களில் மோதல்கள், முரட்டுத் தனமான இடிபிடிகள், தந்திரமான தாக்குதல்கள் எல்லாம் நிறைய உண்டு, இங்கே ஆத்திரப்பட்டு,

கேடுகள் செய்வது தான் அதிகமாக நிகழ்கின்றன என்றேன்.

துன்பம் என்று தான் நன்கு உணர்ந்தனவற்றை பிறனிடத்துச் செய்யாதிருக்க வேண்டும் என்ற பண்புகளை வளர்க்கத் தான், மக்களை அழைத்து, விளையாடச் சொல்கிறோம்.

நல்ல பண்புகள் ஒருவரை வளர்க்கும், தீய பண்கள் ஒருவரை அழிக்கும். அன்பும் அருளும் இழந்து ஒருவர், பிறர்க்குக் கேடு செய்தால், அவர்கள் எந்தக் காலத்திலும் நன்கு தேறவே மாட்டார்கள். என்பதையும் வற்புறுத்திச் சொல் கிறோம்.

பொருள் எல்லாம் நீங்கி ஒருவர் வறுமையாள ராக ஆனாலும். பிறிதொரு நாளில் செல்வம் நிறையப் பெற்று, செழிப்பான வாழ்வு வாழக் கூடும். ஆனால் அருளற்று தீச்செயல் புரியும் பாவிகள், எந்தக் காலத்தும் கடைத்தேறவே மாட் டார்கள் என்று பாடியிருக்கிறேன்.

**பொருளற்றார் பூப்பர் ஒருகால், அருளற்றார்**
**அற்றார் மற்று ஆதல் அரிது** **(248)**

கேடு செய்பவர்கள் மேலும் மேலும் கீழாகத் தான் போவார்களே தவிர, மேலாக வரமுடியவே முடியாது. அதனால், தான், கேடு செய்பவர்களை

கீழ்மக்கள். கெட்டுப் போகும் பாழ்மக்கள் என்று சான்றோர்கள் கூறுகின்றார்கள்.

கடைசியாக ஒன்று. என்று வள்ளுவர் தீர்மான மாகப் பேசத் தொடங்கினார்.

தெரிந்து செய்கிறகேடு, எப்பொழுதும் கடுமை யான தண்டனைக்குரியது. அதனால் மறந்து கூட மற்றவர்களுக்குக் கேடு செய்யாதிருங்கள் என்று மக்களுக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். மறந்தும் கேடு செய்கிற போதே, அறக் கடவுளானது அவர்களை அழித்து விடுகிறது என்றால், தெரிந்து கேடு செய்கிற போது, நேர் வதெல்லாம் நோகத்தான் செய்யும். சாகத் தான் செய்யும். இந்த உண்மைகளை உணர வேண்டும்

எங்கள் விளையாட்டு வீரர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன? என்று நான் இடை மறித்தேன்.

பண்பை வளர்க்கும் விளையாட்டில்; அன்பு, அருள், இரக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை போன்ற அருங் குணங்களை செழித்தோங்கச் செய்யும் விளை யாட்டில், கேடு புரிந்து களிக்கின்றவர்கள், குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொள்ளும் கிறுக்கர்கள் ஆவார்கள். அவர்கள் சமுதாயத்தில் சண்டாளர்கள் வீதியிலே நிற்கும் முள்மரங்கள், பாதையிலே பழுத்துத் தொங்கும் எட்டிக்காய்கள். உதவாத ஊருணியின் உப்பு நீர் போன்றவர்கள்.

அவர்களை காலம் கண்டிக்கும். தண்டிக்கும் என்றார் வள்ளுவர். உண்மை தான். அப்படித் தான் எங்களுக்கு நடந்து வருகிறது என்று வாய் விட்டுக் கத்தி விட்டேன்.

நீங்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு விட்டீர் கள் என்றார் வள்ளுவர்.

தகுதியையும், திறமைகளையும், செழித் தோங்கச் செய்யும் விளையாட்டுத் துறையில், தவறுகள் செய்வதையே தொழிலாகக் கொண்டு, தலைமைப் பொறுப்பையும் ஏற்றிருக்கின்றவர்கள், என்று நீங்குகின்றார்களோ, அல்லது நீக்கப்படு கின்றார்களோ, அன்று தான், விளையாட்டுத் துறையும் இந்த நாட்டில் வளரும். விளையாட்டு வீரர்களின் ஆற்றலும் மிளிரும் என்று நான் கூறியதை உண்மைதான் என்றார்.

பேசியபடியே வீட்டிற்கு வந்து விட்டோம்.

# 14. வாழ்க வளமுடன்

எனது நிலையை உங்களுக்கும் கூறிவிடுகிறேன். விளையாட்டுத் துறையை என் வாழ்வுத் துறையாக, வழிநடைப் பயணத் துறையாக மேற்கொண்டு விட்டேன். உண்ணும் போதும் உறங்கும் போதும், எண்ணும் போதும், எழுதும் போதும், விளையாட்டுக்களின் அருமை பெருமை பற்றியே போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறேன். அதிலே ஏதாவது அலங்கோலங்கள் நடைபெறுகிறதைப் பார்க்கிற போது, என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. பொறுத்துக் கொள்கிற சக்தியும் இல்லை என்றேன் நான்.

நீங்கள் தவறுகளை சுட்டிக் காட்டி எழுத வேண்டியது தானே? தவறு செய்பவர்களைத் திருத்த முயல்வது தானே? உங்களுக்குத் தான் அந்த வாய்ப்புக்களும் வசதிகளும் நிறைய இருக்கின்றனவே என்றார் வள்ளுவர்.

இருப்பதை அறிகிறேன். இருந்தாலும் உங்கள் பாதையைத்தான் நான், சரியான பாதையாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்றேன்.

அதெப்படி? எந்தப் பாதை என் பாதை சரியானபாதை என்கிறீர்கள்?

நீங்கள் ஒரு கருத்தைப் பற்றி எழுத வருகிற போது, அதன் பெருமையைச் சொல்கிறீர்கள். அதன் நுட்பத்தை திட்பத்தை விளக்குகின்றீர்கள். தீமையைக் குறித்துக் காட்டி, அதற்குரிய தண்டனை யையும் விரித்துக் காட்டுகின்றீர்கள்.

ஆமாம்! மக்களுக்கு என்ன சொல்ல வேண்டுமோ எதை வற்புறுத்த வேண்டுமோ, அதைச் சொல்வது தான் என் கடமை, அதைத் தான் நான் என்குறள் மூலம் செய்திருக்கிறேன்.

வாழ்வுக்கு விளக்கம் தந்ததுடன். வளமாக வாழும் வழிவகைகளை நீங்கள் கூறியது போல. நானும் விளையாட்டுக்கு விளக்கம் தந்ததுடன், வளமாக விளையாடும் வழிவகைகளை விளக்கிக் கூறியதுடன், என் கடமை முடிந்ததென்று நிறுத்திக் கொள்கிறேன் என்றேன்.

உங்கள் நினைப்பு எனக்குப் புரிகிறது. பிற ருக்குப் புத்தி சொல்லப் போய், ஏன் வீண் வம்பில் சிக்கிக் கொள்ள வேண்டும் என்று ஒதுங்கிக் கொள் கிறீர்கள். அப்படித் தானே!

அதற்காக இல்லை. கோயிலுக்குள்ளே சென்று குற்றம் செய்பவர்களை, இறைவன் பார்த்துக் கொள்வான். அதுபோலவே, விளையாட்டிற்குள்ளே வந்து விதண்டாவாதங்கள் செய்கின்றவர்களை காலம் பார்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் நான், எவரது தவறுகளையும் சுட்டிக் காட்டி எழுதுவதில்லை.

நல்லதே நினைப்போம்! நல்லதே நடக்கும். என்ற நம்பிக்கை தான், உங்கள் முறையை நினைக்கத் தூண்டியது. உங்கள் வழிகளைப் பின் பற்றத் தூண்டியது.

உலகுக்கெல்லாம் வேதமாக நீங்கள் வழங்கிய சிந்தனைகளை. விளையாட்டுச் சிந்தனைகளாக எனது மனம் ஏற்றுக் கொண்டது, எங்கள் விளை யாட்டு துறைக்கு வழிகாட்டும் சிந்தனைகளாகவே இடம் பெற்றுக் கொண்டது. நாங்கள் செய்த பெரும்பாக்கியம், உங்கள் குறள்கள் எங்கள் துறைக்குக் கிடைத்தது. இனியும் தொடர்ந்து குறள்களைப் பின்பற்றி பெருமைகள் பெறுவோம் என்றேன்.

என் காலத்திற்கேற்ப எழுதிய குறள்கள். இந்தக் காலத்துக்கும் பொருந்தி வருவது வியப்பாக இருக்கிறதல்லவா!

ஆமாம் ஐயா! மனிதர்கள் எந்தக் காலத்திலும் மாறுவதேயில்லை. உடையில், உணவு வகைகளில்,

மொழிகளில், வாழும் இடங்களில், செயல் முறை களில், மாறி வாறி வந்தாலும், மனோபாவத்தில் மாறுவதேயில்லை.

மனிதர் என்றால் தவறு செய்பவர் தான் என்ற ஓர் மேனாட்டுப் பழமொழியே இருக்கிறது. (Man is err): அந்தக் கருத்து மக்கள் மனங்களிலே நின்று நிலைத்துப் போயிருக்கிறது என்றேன்.

மனிதர்களின் வாழ்கை எப்படியெல்லாம் மாறி மாறி வருகிறது பாருங்கள்.

மாக்கள், மக்கள், அமரர், தேவர் என்பதாக வருகிறது என்றார். புரியவில்லை என்றேன்.

அஃறினை எனப்படுகிற விலங்கு வாழ்க்கையை **மாக்கள்** என்றும்; ஆறாவது அறிவினைப் பெற்ற உயிரினத்தை **மக்கள்** என்றும்; பெருமைக்குரிய பண் பார்ந்த செயல்களைச் செய்து, புகழ்பெற்று, மக்கள் மனங்களிலே நிலையாக அமர்ந்து விட்டவர்களை **அமரர்** என்றும் : தெய்வத்திற்குரிய வழிபாட்டுப் பெருமையை, உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற போதே பெறும் அமரர்களை **தேவர்** என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் நயம்படப் பேசும்.

விளையாட்டுத் துறையில் இந்த மேன்மை களை எளிதாக அடைய முடியும் என்று நான் நம்புகிறேன் என்றேன்.

இந்தச் சிந்தனையின் விளைவாக எழுந்த என் குறளைக் கேளுங்கள்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும் (50)**

உலகத்திலே உண்மையிலே உறுதியாக, உழைப்பிலே என்றும் உண்மையானவராக, கொள்கையிலே குன்றாதவர்களாக வாழ்வாங்கு வாழ்கின்ற பண்பாளர்களை, தெய்வத்துக்கு இணையாக வைத்துப் போற்றப்படும். என் குறள் தரும் கொள்கை இது தான். என் வாழ்வு காட்டிய நெறியும் இவை தான் என்றார் வள்ளுவர்.

இப்படிப் பட்ட பண்பாளர்களை உருவாக்குவது தான் என் எழுத்துப்பணி என்றேன்.

''உங்கள் உள்ளம் புரிகிறது. உழைத்த உழைப்பின் மேன்மை புரிகிறது. ஒரு துறையில் ஒரு மனமாகி, உளம் சலியாது, உடல் நலியாது செய்து வருகிற உங்கள் தொண்டு காலம் காலமாக நிற்கும். மக்களை உயர்த்தும், வாழ்க வளமுடன் என்று வாழ்த்துவதில் தான் நான் பெருமிதம் கொள்கிறேன்'' என்று வாழ்த்தி, வருகிறேன் என்பது போல கை உயர்த்தி, கை அசைத்து விடை பெற்றுக் கொண்டார் வள்ளுவர்.

தூய அந்தத் திருவுருவம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வந்தது. என் கண்கள்

பெருகி வரும் நீர்ப் பெருக்குடன் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அந்த வெண்ணுருவம் புள்ளியாகி மறைந்து போனது.

யாரோ என்னைத் தொடுவது போல இருக்கவே. திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். என் மனைவி நின்று கொண்டிருந்தாள்.

எழுத உட்கார்ந்து விட்டு, இப்படி உறங்கிக் கொண்டிருக்கின்றீர்களே, என்று சிரித்தாள்.

வள்ளுவர் வந்தார். அவருடன் இத்தனை நேரமும் பேசிக் கொண்டிருந்தேன் என்று தயக்கம் கலந்த பெருமையுடன் பதிலளித்தேன்.

வள்ளுவரா? இங்கே வந்தாரா? ஆச்சரியமாகக் கேட்டாள்.

வள்ளுவரைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தேனா! அவர்தான் என் நினைவுலகில் வந்து என்னிடம் நிறைய சேதிகளைப் பற்றிப் பேசினார் என்று நான் பேசிக் கொண்டே இருந்ததைப் பார்த்த அவளின் விழிகளில் ஆச்சரியமும் ஏளனமும் தெரிந்தது.

புரிந்து கொண்டேன். இதைக் கூறினால் யார்தான் நம்பப் போகிறார்கள்?

நான் குறட்பாக்களை படித்துப் படித்து புரிந்து கொண்டதைத் தான், இங்கே வள்ளுவர் தந்த விளையாட்டுச் சிந்தனைகளாகத் தந்திருக்கிறேன்.

என்று சொல்லிப் பார்த்தேன். கொஞ்சம் படித்துப் பார்க்கிறேனே என்று கூறிய போது, எனக்கும் ஆறுதலாக இருந்தது.

'வாழ்க வளமுடன்' என்று வள்ளுவர் கூறிய வாழ்த்து மொழிகள், என் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருந்தன.

உங்களையும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்தி, இந்த இனிய சிந்தனைக் களஞ்சியத்தை உங்களிடம் படைக்கின்றேன் ஒப்படைக்கின்றேன்.

பேராண்மை தரும் இந்த சிந்தனைகளை நீங்கள் புரிந்துகொண்டு, பெறக் கூடிய பல்வேறு பேறுகள் எல்லாம் பெற்று, பெருவாழ்வு வாழ்க என்று போற்றிப் படைத்து பூரிப்படைகின்றேன்.

வணக்கம்

வாழ்க வள்ளுவர் சிந்தனைகள்!!
வளர்க வளமார்ந்த தமிழ்ச் சமுதாயம்!

□ □ □

# டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI.

**உங்களுக்காக எழுதிய உன்னத நூல்கள்**

## மத்திய அரசு பரிசு பெற்ற நூல்கள்

விளையாட்டுக்களின் கதைகள் — *15-00*

விளையாட்டுக்களின் வழிமுறைகளும் வரலாறும் — *11-00*

ஒலிம்பிக் பந்தயத்தின் கதை — *5-00*

## தமிழக அரசு பரிசு பெற்ற நூல்

தமிழ் நாட்டுச் சடுகுடுப் பாடல்களும் சடுகுடு ஆட்டமும் — *18-00*

## மனபலம் உடல் நலம், பற்றிய உடற்பயிற்சி நூல்கள்

விளையாட்டுக்களின் விதிகள் — *25-00*

தேகத்தைத் தெரிந்து கொள்வோம் — *25-00*

மறைந்து கிடக்கும் மனித சக்தி — *33-00*

குழந்தைகளுக்கான உடற்பயிற்சியும் விளையாட்டும் — *22-00*

நமக்கு நாமே உதவி — *7-00*

உடல் எடையும் உணவுக் கட்டுப்பாடும் — *8-00*

நீங்களும் வலிமையோடு வாழலாம் — *7-00*

உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புகள் — *7-00*

| | | |
|---|---|---|
| நீங்களும் இளமையாக வாழலாம் | — | 10-00 |
| நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | — | 5-50 |
| நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | — | 5-00 |
| இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள் | — | 6-00 |
| பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | — | 8-00 |
| தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | — | 5-00 |
| நீங்களும் உடலழகு பெறலாம் | — | 5-00 |
| நீங்களும் உயரமாக வளரலாம் | — | 5-00 |
| பெண்களும் பேரழகு பெறலாம் | — | 4-00 |
| உடலழகுப் பயிற்சி முறைகள் | — | 3-00 |
| எதற்காக உடற் பயிற்சி செய்கிறோம் | — | 6-00 |
| சியோல் ஒலிம்பிக் பந்தயங்கள் | — | 14-00 |
| கைப் பந்தாட்டம் | — | 4-00 |
| கால் பந்தாட்டம் | — | 4-00 |
| கூடைப் பந்தாட்டம் | — | 4-00 |
| வளைகோல் பந்தாட்டம் | — | 4-00 |
| கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் | — | 4-00 |
| சிந்தனைப் பந்தாட்டம் | — | 8-00 |
| உடற் கல்வி என்றால் என்ன ? | — | 25-00 |
| நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | — | 15-00 |
| அகில உலக ஓடுகளப் போட்டி விதி முறைகள் | — | 22-00 |
| உலக நாடுகளில் உடற்கல்வி | — | 25-00 |
| உடற்கல்வியைக் கற்பிக்கும் முறைகள் | — | 27-00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கதை . | — | 4-50 |
| பூப்பந்தாட்டம் | — | 5-00 |
| மென் பந்தாட்டம் | — | 6-00 |
| வளையப் பந்தாட்டம் | — | 2-50 |
| சடுகுடு ஆட்டம் | — | 10-50 |
| கோ கோ ஆட்டம் | — | 8-00 |

| | | |
|---|---|---|
| சதுரங்கம் விளையாடுவது எப்படி ? | — | 4-00 |
| கேரம் விளையாடுவது எப்படி ? | — | 6-00 |
| ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | — | 13-00 |
| கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | — | 6-50 |
| பொழுது போக்கு விளையாட்டுக்கள் | — | 3-50 |
| வள்ளுவரின் விளையாட்டுச் சிந்தனைகள் | — | 30-00 |
| அர்த்தமுள்ள விளையாட்டுக்கள் | — | 7-00 |
| விளையாட்டுத் துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி | — | 15-00 |
| வானொலியில் விளையாட்டுக்கள் | — | 10-00 |
| 1984ல் ஒலிம்பிக் பந்தயங்கள் | — | 8-25 |
| விளையாட்டுத் துறையில் கலைச் சொல் அகராதி | — | 10-00 |
| அனுபவக் களஞ்சியம் | — | 5-00 |
| பெண்கள் விளையாடினால் என்ன ஆகும் | — | 10-00 |
| இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள் | — | 6-50 |
| தெரிந்தால் சமயத்தில் உதவும் | — | 5-00 |
| விளையாட்டு ஆத்திசூடி | — | 5-50 |
| விளையாட்டுக்களில் விநோதங்கள் | — | 5-00 |
| வெற்றி விளையாட்டு காட்டுகிறது (நாவல்) | — | 9-00 |
| சிந்தனைச் சுற்றுலா (சிறுகதைகள்) | — | 4-50 |
| விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி ? | — | 3-20 |
| விளையாட்டு உலகில் வீரக் கதைகள் | — | 3-00 |
| வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | — | 3-25 |
| விளையாட்டு விருந்து | — | 5-00 |
| விளையாட்டு விழா நடத்துவது எப்படி ? | — | 5-00 |
| விளையாட்டு அமுதம் | — | 3-50 |
| விளையாட்டு உலகம் | — | 3-00 |
| விளையாட்டுச் சிந்தனைகள் | — | 3-00 |
| விளையாட்டுக்களில் வினாடி வினா விடை | — | 4-00 |

| | | |
|---|---|---|
| விளையாட்டுத் துறையில் பொது அறிவு நூல் | — | 4-00 |
| விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும் | — | 4-00 |
| விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் | — | 5-00 |
| வாழ்க்கைப் பந்தயம் | — | 6-00 |
| பாதுகாப்புக் கல்வி | — | 2-50 |
| Quotations on Sports and Games | — | 7-00 |
| General Knowledge in Sports and Games | — | 1-25 |
| How to break Ties in Sports and Games | — | 3-00 |
| நல்ல கதைகள் (பாகம்1) | — | 3-00 |
| நல்ல கதைகள் (பாகம் 2) | — | 3-00 |
| நல்ல கதைகள் (பாகம் 3) | — | 3-00 |
| தெய்வமலர் | — | 4-50 |
| பண்பு தரும் அன்புக் கதைகள் | — | 3-00 |
| கடவுள் கைவிடமாட்டார் | — | 2-00 |
| நல்ல நல்ல கதைப் பாடல்கள் | — | 3-00 |
| நல்ல பாடல்கள் | — | 1-75 |
| செங்கரும்பு (கவிதை) | — | 2-00 |
| மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் | — | 3-75 |
| நல்ல நாடகங்கள் | — | 2-25 |
| நவனின் நாடகங்கள் | — | 5-00 |
| நவரச நாடகங்கள் | — | 8-00 |
| சுவையான நாடகங்கள் | — | 4-50 |
| வேஷங்கள் விளையாடுகின்றன (சிறுகதைகள்) | — | 6-50 |
| மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி ? | — | 4-00 |

மேலும் விபரங்களுக்கு

**ராஜ்மோகன் பதிப்பகம்**

**8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,**

**தி.நகர், சென்னை - 600 017.**

தபால் பெட்டி எண் : **4955** தொலைபேசி : **442232**



விளையாட்டுத்துறை வரலாற்றில், தனக்கென்று ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கும் டாக்டர். எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் விளையாட்டுக்கள், கதை, கவிதை, நாவல் என்று 100க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

இவரது மூன்று நூல்கள் தேசிய விருதும், ஒரு நூல் தமிழ்நாடு அரசின் பரிசினையும் பெற்றுள்ளது.

**''விளையாட்டுக் களஞ்சியம்''** எனும் மாதப் பத்திரிகையை, 1977ம் ஆண்டு முதல் வெளியிட்டு, ஆசிரியர் பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக விளையாட்டுத் துறையில் ஆய்வறிஞர் (Ph.D.) பட்டம் பெற்றவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

இவரது விளையாட்டுத்துறை இலக்கிய சேவையை பாராட்டி வேர்ல்டு யுனிவர்சிட்டியும் டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கி கௌரவித்திருக்கிறது.